




ஸ்ரீமத் ஸ்ரீ சௌந்தரநாயகி
அம்பாள் சமேத
ஸ்ரீ ஜெயங்கொண்ட
சோளீஸ்வரர்

குடமுழுக்கு விழா மலர்

3-2-1991






கரும்புமுரற் கடிமலர்ப்பூங் குழல் போற்றி!
உத்தரியத் தொடித்தோள் போற்றி!
கரும்புருவச் சிலைபோற்றி! கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி!
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி! ஆரணநூ
புரம்சிலம்பும் அடிகள் போற்றி!

– பரஞ்சோதி முனிவர்

செயங்கொண்ட சோழீசர்க் குகந்த மங்கை
செங்கமல நாயகியாள் சௌந்த ரத்தின்
வயங்குபொன் திருவடிகள் பணிந்து வாழ்வோம்!
வாழவழி வகை செய்வாள் வணங்கி நிற்போம்!

– பரஞ்சோதி முனிவர்



307

அணிதில்லை அம்பலமா டரங்காக் கொண்டார்
ஆலால அருநஞ்சம் அமுதாக் கொண்டார்
கணிவளர்தார்ப் பொன்னிதழிக் கமழ்தார் கொண்டார்
காதலார் கோடிகலந் திருக்கை கொண்டார்
மணிபணத்த அரவந்தோள் வளையாக் கொண்டார்
மால்விடைமேல் நெடுவீதி போதக் கொண்டார்
துணிபுலித்தோ லினையாடை யுடையாக் கொண்டார்
சூலங்கைக் கொண்டார்தொண் டெனைக்கொண் டோரே!

– திருநாவுக்கரசர் தனித்திருத்தொண்டகம்

பயங்கொண்ட பலரெல்லாம் பணியக் கண்டு
பாவங்கள் பொடியாக்கி வினையை வென்று
செயங்கொண்ட சோழீசர் நேமம் கோவிற்
செழும்பொருளைத் தினந்தோறும் சிந்தை செய்வோம்!

– காப்பியக் கவிஞர் நா. மீனவன்



பொருளடக்கம்

3 0 - 1

LIST OF ADVERTISERS

முன்னுரை

உ.மு. சுப. லெ. மெ.மெ. மெய்யப்ப செட்டியார்
தலைவர், குடமுழுக்கு விழா மலர்க்குழு

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

— திருவாசகம்

நேமம் ஸ்ரீ சௌந்தர நாயகி உடனாக ஜெயங்கொண்ட சோழீசர் வீற்றிருந்தருளும் திருக்கோயிலுக்கு 1907இல் மகா கும்பாபிஷேகமும், பின் பல அஷ்டபந்தன அபிஷேகங்களும், 5.2.1961இல் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றன.

பிரதோஷ வழிபாடும், ஆடித்திங்கள் பதினெட்டாம் நாளில், நம் நேமத்தில் அனைவரும் வந்து வணங்கி வழிபாடு செய்ய கணபதி ஹோமம், நவசக்தி அர்ச்சனை, திருக்கல்யாணம், திருவிளக்கு பூசை ஆகியனவும் சில ஆண்டுகளாக நம் காரைக்குடி நகரத்தார் முயற்சியால் அனைவரது ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் நடைபெற்று வருகின்றன.

இப்போது குடமுழுக்கு நடத்துவதற்காக திருவாளர்கள் செம்பனூர் கும.நா.சுப. நாகப்ப செட்டியார், இராங்கியம் வ.நா. சிதம்பரம் செட்டியார் ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும், பள்ளத்தூர் அ.ராம.தே.அள. தேனப்ப செட்டியார், தேவகோட்டை சு.செ.பழ. லெட்சுமணன் செட்டியார், இராங்கியம் நா.அ. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோரைச் செயலாளர்களாகவும், தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு.அண. அண்ணாமலை செட்டியார் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு மற்ற திருப்பணிக்குழு உறுப்பினர்களும் பொறுப்பேற்று திருப்பணிகள் சிறப்புற நிறைவேறி குடமுழுக்கு விழா 3.2.91இல் சீரோடு நடைபெற்றது. இக்குழுவிற்கு என் தந்தை லெ. மெய்யப்ப செட்டியாரவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துப் பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

இராச கோபுரம் இல்லாதிருந்த குறை நீங்க ஐந்து நிலைகளுடன் சிறப்புச் சிறப்பு வாய்ந்த புதிய இராசகோபுரம் நிர்மாணிக்கப் பெற்றிருப்பது இக்குடமுழுக்கு விழாவுக்கே தனிச் சிறப்பாம். பழைய நகர விடுதி எல்லா வசதிகளுடனும் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. சிவாச்சாரியார்கள் குடியிருப்புக்களும் புதுப்பிக்கப் பெற்றுள்ளன.

இராஜ கோபுரம் தேவகோட்டை உ.மு.லெ. அழகப்ப செட்டியார் காரைக்குடி பெரி. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் தலைமையிலும், நகரவிடுதி கோட்டையூர் எல்.பி. குடும்பத்தார், செம்பனூர் கும.நா.சுப.நா. நாகப்ப செட்டியார், இராங்கியம் நா.அ. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோர் தலைமையிலும், சிவாச்சாரியார்கள் குடியிருப்பு தேவகோட்டை பெரிய லெட்சுமணன் செட்டியார், சேவுகன் அண்ணாமலை செட்டியார் ஆகியோர் தலைமையிலும் கட்டி முடிக்கப் பெற்றன.

பதினான்கு கோபுரங்களுக்கும் வண்ணம் தீட்டி தட்டோடு சரிபார்க்கும் பொறுப்பு தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நகர விருந்து இப்போதும் 1961

குடமுழுக்கின்போது நடைபெற்றதுபோல நா.அ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் பொறுப்பிலும், பிராமண போசனம் காரைக்குடி நா. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன. காரைக்குடி நகரத்தார் தலைமையேற்று மருந்து சாத்தினர். தேவகோட்டை பெரிய அழகப்ப செட்டியார் தலைமையில் யாகசாலை சிறப்பாக நடைபெற்றது. கோயில் மின்விளக்கு அலங்காரமும், கலைஇ இலக்கிய நிகழ்ச்சிகளும் வ.நா.சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமைப் பொறுப்பில் ஏற்பாடு செய்யப் பெற்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் கருத்தரங்கமும், பின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. நம் நேமங்கோயில் நகரத்தார் அத்தனை பேரின் பூரண ஒத்துழைப்பாலும் இப்பணிகள் இனிது நிறைவேறின.

1961இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவின்போது இராங்கியம் நா.அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் நினைவு மலராக ' நேமம் கோவில் வரலாறு' என்ற நூல் மலர்ந்தது. கீழச்சிவல்பட்டி நாராயண. நடராசன் எழுதிய அந்நூலை நா.அ. குடும்பத்தினர் வெளியிட்டனர். இம்முறை மிகச் சிறப்பான குடமுழுக்கு விழா மலர் ஒன்று வெளியிட வேண்டுமென்று, மலர்க்குழு ஒன்று அமைக்கப் பெற்றது.

திருவாளர்கள் உ.ராம.மெ.சுப.சேவு.அண. அண்ணாமலை செட்டியார், சு.செ.பள.லெ. லெட்சுமணன் செட்டியார், வ.நா.சித. சிதம்பரம் செட்டியார், உ.மு.சுப.லெ.அழ. அழகப்ப செட்டியார், சேவு.மெ.சொ. சொக்கையா செட்டியார் ஆகியோர் மலரமைப்புக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கியும், விளம்பரங்கள் பெற்றுத் தந்தும் ஒத்துழைப்பு நல்கினர்.

காரைக்குடி சுப. சித. பழனியப்பன் அவர்கள், குழு உறுப்பினர்கள் அன்பர்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் செயலாளராகச் சிறப்புடன் ஆற்றிய பணி இம்மலராய் மலர்ந்திருக்கிறது. பாடுவார் முத்தப்பர் மரபின் முதல் வகையினரான காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் க.மு.சுப.நா. சுப்பிரமணியன் அவர்கள் பதிப்பாசிரியராகத் தொகுத்தளிக்கும் கட்டுரை மலர்களும், கவிதை மலர்களும் இம்மலரை நறுமணங்கமழச் செய்கின்றன. வருகின்ற தலைமுறையினருக்கு நேமங் கோயில் பற்றியும், நகரத்தார் மரபுகள் பற்றியும் அறிந்து கொள்ள இக்குடமுழுக்கு விழா மலர் சிறந்த வரலாறாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இம்மலரை அழகுற அச்சிட்ட சென்னை "கிராபிக் சிஸ்டம்ஸ்" நம் பாராட்டுக்குரியவர்கள்.

நம் கோயில் திருப்பணிகளில் ஆர்வமுடன் தொண்டு செய்தவர்கள் பலர். இம்மலருக்கு விளம்பரங்கள் வழங்கியும், கவிதைகள், கட்டுரைகள் எழுதியும் சிறப்பித்தவர்கள் பலர். அனைவரும் நம் நன்றிக்குரியவர்கள். அன்பர்கள் அனைவருக்கும் ஜெயங்கொண்ட சோழீசர் அருள் பாலிப்பது உறுதி. வரலாற்றில் இடம் பெற்றுள்ள தென்காசிக் கோயில் திருப்பணிகள் செய்த அரிகேசரி பராக்கிரம பாண்டியன், "சேலேறிய வயல் தென்காசி யாலயந் தெய்வச் செயலாலே சமைந்தது", என்று கூறுவது போல் எல்லாம் இறையருளால் இனிது நடைபெற்றன. பக்தியின் பாலராகி, பரமனுக்காளாய், அவனருளாலே அவன்தாள் வணங்கும் புனிதப் பணிகளிலே இணைவோம்.

நன்றி!

உ
சிவமயம்

நன்றியுரை

சுப. சித. பழனியப்பன்

இக்குடமுழுக்கு மலரை வெளியிடுவதில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். இப்பணியில் நான் செலவு செய்த நேரத்தையும், உழைப்பையும் இப்பணியினால் கிட்டிய தொடர்புகள், அனுபவங்கள் இவற்றோடு ஒப்பிடும்போது எனக்குக் கிடைத்த பலன்கள் நான் நல்கியவற்றைக் காட்டிலும் பலமடங்கு உயர்ந்தவை.

"தந்தது என்னைக் கொண்டது உன்னைச் சங்கரா
யார் கொலோ சதுரர்?" என்ற திருவாசகப் பொருளை இப்பணியில் ஈடுபட்டதில் புரிந்து கொண்டேன.

கும்பாபிஷேகக் குழு ஆகஸ்ட் 1986ல் நியமிக்கப்பட்டு பல கூட்டங்கள் கூடியிருந்தாலும் 1990 அக்டோபரில் உ.மு.சுப.லெ.மெ.மெ. இல்லத்தில் குழுத்தலைவர் லெ.மெ.மெ. மெய்யப்பன் (பாப்பா)அவர்கள் முழுமையாக ஈடுபட்டுச் செயலாற்றத் துவங்கும் வரை எவ்வித முன்னேற்றமும் இல்லாமலிருந்தது. அதன்பின் 1990 நவம்பர் 5உ சென்னையில் லெ.மெ.மெ. இல்லத்தில் கூடி முழு ஈடுபாட்டுடன் பதினைந்து நாட்களுக்குள், ஒரு ஆண்டில் செயல்பட வேண்டிய அளவு செயல்பட்டு, மலர்க்குழு சென்னையிலும் மதுரையிலும் பல புரவலர்களைச் சந்தித்து பிற கோவிலார் வியக்கும் அளவிற்கு விளம்பரங்கள் சேகரிக்கப்பட்டன. இப்பணியில் தன் வயதையும், தளர்ச்சியையும் கருதாமல் அலைச்சலுக்கு உட்படுத்திக் கொண்ட நம் தலைவர் லெ.மெ.மெ. அவர்கள்; சேவு. அண.அ. அவர்கள்; சு.செ.பள.லெ. அவர்கள்; சேவு.மெ.சேவுகன் (சொக்கையா) அவர்கள்; உ.மு.சுப.லெ.அழ. (பெரிய) அவர்கள்; வ.நா.சித. அவர்கள் ஆகியோர் பொதுப்பணிக்குத் தன்னலம் கருதாமல் ஈடுபடுவதில், இளைய தலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரண மாகத் திகழ்ந்தார்கள். இவர்களை எப்படிப் பாராட்டுவது என்பது தெரியவில்லை. இவர்களோடு செயலாற்றும்போது எனக்குக் கிடைத்த படிப்பினையும், அனுபவமும் மதிப்பிற்கு அப்பாற்பட்டன. காரைக்குடி மு.ராம.சொ.பெரி. சொக்கலிங்கம் அவர்கள் இப்பணியைத் தன் சொந்தப் பணியெனக் கருதி முழு மூச்சுடன் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

நம் சமூகத்தின் முன்னோடிகளான ஆ.மு.மு. அருணாசலம் செட்டியாரவர்கள், டாக்டர் M.A.M. இராமசாமி செட்டியாரவர்கள், A.C. முத்தையா செட்டியாரவர்கள் ஆகிய மூவரும் மலர்க்குழுவினரைக் கண்டவுடனேயே மூன்று அட்டைப்படங்களுக்கும் தங்கள் நிறுவனங்களின் விளம்பரம் கொடுக்க ஒப்புக் கொண்டனர். மலர்க்குழுவின் பணி ராசியுடன் துவங்கப்பட்டது. மலர்க்குழுவினர் சற்றும் எதிர்பாராமல் திருவாளர்கள் "Western Agencies"-ன் செயலாளர் திருமிகு. A.P. குன்னிக் கண்ணன் நாயர் அவர்களைச் சந்தித்தவுடன் முன்னரே தயாராய் வைத்திருந்த ரூ. 25,000க்குக் காசோலை கொடுத்ததோடு மட்டுமின்றி, அட்டைப்படங்களில் இடமில்லாவிட்டால் அவர்கள் நிறுவனத்தின் அன்பளிப்பாக, மலரில் விநாயகர் உருவம் வெளியிடச் செய்து மலருக்கு மெருகேற்ற உடன்பட்டார்கள். இவர்களுக்கும் மற்றும் மலர்க்குழுவினரின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து விளம்பரங்கள் தந்துள்ள அனைவருக்கும் மலர்க்குழுவின் உளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன்,

விளம்பரங்கள் தந்துள்ள நிறுவனங்கள் செழுமையாக வளர்ச்சி பெற ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

விளம்பரங்கள் சேகரிப்பதில், சேவு.சேவி. ஏடகன் அவர்களும், திரு அண்ணாமலை அவர்களும், L.P. அண்ணாமலை சகோதரர்களும் செம்பனூர். நா. அவர்கள், நல்லகுமார் செட்டியாரவர்களும் தானாகவே ஈடுபட்டுச் சிறு விளம்பரங்கள் பலவற்றைப் பெற்றுத் தந்துள்ளார்கள்.

மலருக்குக் கட்டுரைகள், புள்ளி விபரங்கள், சரித்திர வரலாறுகள் ஆகியவற்றைச் சேகரித்து உருவாக்க, கீழச்சிவல்பட்டி நா. சுப்பிரமணியன் அவர்கள் முன்வந்து தன் அலுவல்களுக்கு நேரிட்ட இடையூறுகளைக் கருதாமல் மிகுந்த அக்கறையுடன் சிறந்த கட்டுரைகளைச் சேகரித்து அச்சுப் படிவங்களைச் சரி பார்த்து இம்மலர் சிறப்புற வெளிவரப் பணியாற்றியுள்ளார்கள். மலர் முழுமையாகவும், சிறப்பாகவும் அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் இவர்கள் மலர் வெளிவருவது தாமதமானாலும் பரவாயில்லை Perfection அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் மலரின் பொருள்களைத் திறம்படச் சேகரித்துத் திரும்பத் திரும்பச் சரிபார்த்து அச்சிடச் செய்துள்ளார்கள். அவர்களுடன் அச்சிடுவதில் செல்வி பதிப்பகம் சிவராமன் அவர்கள் சிறந்த யோசனைகள் கூறி உதவியுள்ளார்கள்.

மலரை அச்சிட்டுக் கொடுத்துள்ள Graphic Systems அவர்களின் பொறுமைக்கும் நீண்ட நாள் இடைவெளிக்குப் பின் திரும்பத் திரும்ப Proof எடுத்துக் கொடுத்து, சிறந்த முறையில் மலரை வெளிக் கொணர உதவியதற்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேமங்கோவில் மாப்பிள்ளைகளில் பலர் முக்கியமாக ஜெயம். N. அண்ணாமலை செட்டியாரவர்கள், AL. வடிவேலு அவர்கள்; கொப்பனாபட்டு மு.நா. அருணாசலம் அவர்கள் மலர் வெளிவருவதற்கு உதவியுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் மலர்க்குழுவினரின் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

மலர்க்குழுவின் காரியதரிசி என்ற முறையில், இக்குழுவின் தலைவர் லெ.மெ.மெய்யப்ப செட்டியாரவர்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் நடப்பு வேலைகளில் குறுக்கீடு இல்லாமல் என்னிடம் முழுப் பொறுப்பையும் ஒப்பித்தமைக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பணியில் அவ்வப்போது கலந்து கொண்டு ஊக்குவித்த V.N.C.T. அவர்களையும் சேவு. மெ. சேவு சொக்கையா செட்டியார் அவர்களையும் நன்றியோடு நினைவு கொள்கின்றேன்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

பதிப்புரை

நேமம் அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீசர் குடமுழுக்கு விழாமலர் தெய்வ மணக்கும் செய்யுள்களோடும், திருப்பெருகு சிவஞானம் உணர்த்தும் கட்டுரைகளோடும் செய்ய தமிழ்ப்பனுவலாய் மலர்கிறது. ஜெயங் கொண்டாருக்கு 5.2.1961லும் அதற்கு முன்னரும் குடமுழுக்குகள் நடை பெற்றிருக்கின்றன. ஆயின் அப்போதெல்லாம் குடமுழுக்குத் தொடர்பாய் மலர்கள் ஏதும் வெளிவரவில்லை. இம்முறை இக்குறை நீங்கச் சிறப்பான மலர் வெளியிட வேண்டுமென அனைவரும் விரும்பினர். திரு. வ.நா.சித (வி.என்.சிடி) அவர்கள் இக்கருத்தை முன்மொழிந்தார்கள். குடமுழுக்கு விழா மலர்க்குழுத் தலைவர் உ.மு.சுப.லெ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களும் செயலர் சுப. சித. பழனியப்பன் அவர்களும் மலர் தயாரிக்கும் பணியினை அளித்தார்கள்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யு மாறே"

என்னும் தமிழ் நெறியே வாழ்வியல் வழிகாட்டியாய்க் கொண்டு வாழ்ந்து, ஜெயங்கொண்டார் சிறப்புக்களை உலகோர் உணர ஏற்ற பழமொழிகளோடு இலக்கியம் படைத்த பாடுவார் முத்தப்பர் குலத்தின் முதல் வழியாய்த் தோன்றும் பேறு பெற்றதனால் "ஐயா வழியடியோம்" என்று ஜெயங் கொண்டார் குடமுழுக்கு விழாமலர்ப் பணிகளை நிறைவேற்றி யிருக்கிறேன்.

ஜெயங்கொண்டார் சதகம், நேமம் கோவில் வரலாறு, தலபுராணம், சிற்பங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியன நேமம் பற்றிய வரலாற்றுத் தொகுப்பாய் அமைந்துள்ளன.

1961ல் நடைபெற்ற குடமுழுக்கின்போது எங்கள் ஐயா எ.நா. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களோடு உடனிருந்து குடமுழுக்கு விழாப்பணிகளில் அவர்கள் செயலாற்றியதைக் கண்டிருக்கிறேன். மங்கை சௌந்தரிபாக ஜெயங்கொண்டார் திருவருளால் இன்று அவன் திருவடிகளில் சூட்டும் இம்மலர்ப்பணி வாய்த்தது. "மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்று" அருள் செய்யும் பரமனுக்கு "பாடும் பணியே பணியாய்" அருளப் பெற்ற பாடுவார் குலமரபில் தோன்றிச் செய்யும் பணி வேறுளதோ!

இம்மலர் மலர்ந்து மணம்பரப்ப அறிஞர்தம் கட்டுரை மலர்களும் கவிஞர்தம் கவிதை மலர்களும் அணி செய்கின்றன. நகரத்தார் குருபீடங்களும் சைவமும், தமிழும் வளர்க்கும் அதீன கர்த்தர்களும் சான்றோர்களும் வாழ்த்துரை நல்கியுள்ளனர். இப்பணி சிறக்க இராமசாமி தமிழ்க்கல்லூரிச் செயலர் பெரி. வீரப்பன் பி.காம் அவர்களும், முதல்வர் தெ. முருகசாமி அவர்களும், காப்பியக் கவிஞர் நா. மீனவன் அவர்களும், நம் செல்வி பதிப்பகம் வீர. சிவராமன் அவர்களும் பெரிதும் துணைபுரிந்தனர். எங்கள் கல்லூரி மாணவர் பணியும் பெரிது. அனைவர்க்கும் மலர்க்குழுவின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியறிதலை உரியதாக்குகிறேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

க.மு.சுப.நா. சுப்பிரமணியன்
பேராசிரியர் இராமசாமி தமிழ்க் கல்லூரி.

உ

சிவமயம்

ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் துணை

நேமம்
ஸ்ரீசௌந்தரநாயகி அம்பாள் சமேத
ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் அஷ்டபந்தன
<u>மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை</u>

விநாயகர் துதி

ஏரோங்கு பொழில்புடைசூழ் நேமம் என்னும்
எழிற்பதியில் மூவரும் இறைஞ்சி ஏத்தப்
பாரோங்கு வளங்கள் எலாம் பல்கச் செல்வம்
படைத்தன வணிகர்குலம் செழித்து வாழ
நீரோங்கு சடாமுடைச் செயங்கொண்டாரின்
நிலவுதிரு ஆலயத்தின் மேவுகின்ற
சீரோங்கு செயங்கொண்ட விநாயகன் தன்
திருவடித் தாமரைமலரைச் சிந்தை சேர்ப்போம்

ஜெயங்கொண்டார் பஞ்சாட்சரத் தோத்திரம்

சிவாயநம என்றதிரு ஐந்தெழுத்தைச்
சிந்தையிலே கொண்டவர்கள் ஜெயங்
கொண்டாராம்
சிவாயநம என்றதிரு எழுத்தை ஓதிச்
செயல்புரிவார் சிந்தையிலே பயங்கொள்ளாராம்
சிவாயநம என்றதிரு ஐந்தெழுத்தைச்
செப்புதிரு நாவுடையார் நயங்கொள்வாராம்
சிவாயநம திருவுருவாம் ஜெயங்கொண்டாரின்
திருவடியைத் தொழுபவர்கள் ஜெயங்
கொண்டாரே!

சௌந்தரநாயகி ஜெயங்கொண்டார் துதி

அறிவரும் வேதாகமங்களும் கூறற்கு
அரியநின் திருவடித் துணையில்
நெறிவழாது அன்பால் பூசைசெய்திறமும்
நிறைபல செல்வமும் அருள்வாய்
மறிமழு அணிந்து மால்விடை யூரும்
வள்ளலே! நேமங்கோயிலிற் சீர்
செறிசவுந்தர நாயகியுடன் விளங்கும்
செயங்கொள் சோளீச்சுரத்தானே!

சீர்வளர் செல்வச் சிறப்புறு பூவுலகின் கண்ணே எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய இறை சிவன் உமா தேவியாரோடும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் பல.அவற்றுள் "தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானே" என்றுநமது மணிவாசகப் பெருந்தகையார் விதந்தெடுத்தோதிய புகழ்சால் மங்கலப் பாண்டி வளநாட்டில் அருள்மிகு அங்கயற்கண்ணியும் அருள்நிறை அழகனும் முத்தமிழ் வளர்த்ததும், தெய்வத் தமிழும் சைவப் பொருளும் திண்ணிதின் ஒங்கி வளர்ந்து உலகெலாம் பரப்பியதும், ஆறுமுகச் செவ்வேளும் முறையே அரசுபுரிந்தருளியதும், சிவபரம் பொருளே தண்டமிழ்ப் புலமை தலைமை பூண்டு உய்வதற்கு உரிய ஒப்பற்ற பதியாக ஒளிர்வதும், மதுரையெனும் மாண்புமிக்க மூதூராகும். அப்பெரும் பதிக்கு வடகிழக்கில் சுமார் நாற்பது மைல் அளவில் உள்ளதும் முத்தமிழ் விரகர் மூவர் போற்றும் பொற்புடைப் பதிகளுமாகிய பிரான்மலை, திருப்புத்தூர்,திருக்கானப் பேர், திருப்புனவாயில், திருவாடானை,ஆகிய சிவ ஸ்தலங்களும், திருப்புகழ் பெற்ற குன்றக்குடியெனும் குகஸ்தலமும், திவ்ய பிரபந்தம் புகழும் திருக்கோஷ்டியூர் திருமயமாகிய விஷ்ணு ஸ்தலங்களும் சூழ்தர விளங்குவதும்,இரத்னமணி மகுட தன வைசியர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வணங்கிப் போற்றும் ஒன்பது நகரக்கோயில்களில் ஒன்றாய் இலங்குவதும் நேமம் என்னும் எழில்வளர் திருத்தலமாம், அப்பெரும் பதியின் தன்மையும் தொன்மையும் அளவிடற்கரியன. ஒழுக்கம், மகமை என்னும் பொருள்தரும் நியமம், நந்திபுரம், மதுநதிபுரம், செயங்கொண்டசோழபுரம்,மதுவனத்தலம், குலசேகரபுரம் என்று அமைந்துள்ள இவ்வூரி ன் பிற பெயர்கள்இவ்வூரின் வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டுச் செய்திகளையும், புராணச் சிறப்புகளையும் கூறுகின்றன.

கற்பனை கடந்த ஜோதியும், ஆதியும் அந்தமும் இல்லாத அறவாழி அந்தணனுமான சிவபெருமான், செருக்குற்று உலவிய திரிபுரங்களையும் சிரிப்பால் ஜெயம் கொண்டார். இதன் அடிப்படையிலேயே இத்திருக்கோயில் அமையப் பெற்றது என்பர் முன்னோர்.

ஜெயங்கொண்ட சோழனான ராஜ ராஜ சோழன் காலத்தில் அவன் ஆதரவுடன் இக்கோயில் அமைந்தது என்பதற்கான சிற்பச்சான்று இருப்பதனால் அவ்வரசன் பெயரிலேயே சுவாமியின் பெயர் அமைந்தது என்பார் ஆராய்ச்சியாளர்.

சௌந்தரம் என்றால் அழகு என்று பொருள். அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமாக விளங்குவதனால் அம்மனுக்குச் சௌந்தரநாயகி என்று பெயர்.

இத்தகைய பெருமை வாய்ந்த புண்ணியஸ்தலத்தில் சிவாலயத்தைச் சிவாகம முறைப்படி கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய அங்கங்கள் அழகுறப் புதிதாக கருங்கற் பணியாகச் சிற்பம் சிறக்க அமைத்தும், அம்பாள், பைரவர் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் முறையே சிற்ப நுட்ப திட்ப சித்திர வேலைகளுடன் பொற்புறுவெண்கற் பணியாகச் செய்தும் அழகிய இராஜகோபுரத்தைப் புதிதாகக் கட்டியும், கண்கவர் வனப்புடன் சீர்பெறு சிவாலயத் திருப்பணி, பிற பரிவாரக்கோயில்கள், அழகுநாச்சி அம்மன் கோயில் திருப்பணி ஆகியன கேரளசிங்க வளநாட்டில் நேமம் ஆகிய குலசேகரபுரத்தில் தேனாறு பாயும் இளநலம் உடையார்களான நேமம் கோயில் நகரத்தார்களால் சிறப்புறச் செய்து பூர்த்தி பெற்றுள்ளது.

இப்பூலோக கைலாயமெனப் போற்றக் கூடிய திவ்ய ஆலயத்தில் ஸ்ரீ சௌந்திரநாயகி உடனாய அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீசருக்கும் கணேச, ஸ்கந்த,

பைரவ சண்டீசர் முதலிய பரிவார தேவதைகளுக்கும், அழகுநாச்சி அம்மனுக்கும் நிகழும் பிரமோதூத வருடம் தை மீ 21உ 1991 பிப்ரவரி மாதம் 3உ ஞாயிற்றுக் கிழமை காலை 9—40 மணிக்கு மேல் 10—45 மணி அளவில் கனிந்தரு அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக மகாசாந்தி நடை பெறுவதால் அன்பர்கள் அனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்று உய்யும் வண்ணம் விரும்புகிறோம்.

பிரமோதூத வருடம்
தைமாதம் 5ஆம் தேதி
18—1—1991

இங்ஙனம்,
நேமம் கோயில் நகரத்தார்கள்.

நிகழ்ச்சி நிரல்

பிரமோதூத வருஷம் தை மீ

14உ 27—1—91	ஞாயிற்றுக்கிழமை	காலை 9—48க்கு மேல் 11—30க்குள்	அனுக்ஞை விக்னேஸ்வரபூஜை தனபூஜை
15உ 28—1—91	திங்கட்கிழமை	காலை10—15 மணி அளவில்	கணபதி ஹோமம்
16உ 29—1—91	செவ்வாய்க்கிழமை	காலை 8மணி அளவில்	நவக்கிரகஹோமம்
17உ 30—1—91	புதன் கிழமை	காலை 9—30 மணி அளவில்	ரக்ஷோகண ஹோமம், வாஸ்து சாந்தி ,
		மாலை 5 மணி அளவில்	மிருத்சங்கிரஹணம், லெட்சுமி பூஜை
18உ 31—1—91	வியாழக் கிழமை	மாலை 4 மணி அளவில் 5 மணிக்கு மேல் 7 மணிக்குள் 9 மணி அளவில்	அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், முதல்காலயாக பூஜை
19உ 1—2—91	வெள்ளிக்கிழமை	காலை 8 மணி அளவில் மதியம் 12—20 மாலை 6 மணி அளவில் இரவு 9மணி அளவில்	இரண்டாது கால யாக பூஜை ஆரம்பம், பூர்ணாகுதி, தீபாராதனை, மூன்றாவது காலயாக பூஜை ஆரம்பம், பூர்ணாகுதி
20உ 2—2—91	சனிக்கிழமை	காலை 8—30 மணி அளவில் பகல் 11—30 மாலை 6 மணி அளவில் இரவு 9 மணி அளவில்	நாலாவது கால யாகபூஜை ஆரம்பம், பூர்ணாகுதி, ஐந்தாவதுகால யாகபூஜை ஆரம்பம், பூர்ணாகுதி
21உ 3—2—91	ஞாயிற்றுக்கிழமை	காலை 6 மணி அளவில் 8 மணி அளவில் 9—40க்கு மேல் 10—45க்குள் மாலை 3 மணி அளவில் 6.30 மணி அளவில் இரவு 8.30 மணி அளவில்	ஆறாவது கால யாக பூஜை ஆரம்பம், பூர்ணாகுதி, **மஹா கும்பாபிஷேகம்,** மஹாபிஷேகம், திருக்கல்யாணம், பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா.

உ
சிவமயம்
ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீசர் துணை

நேமம் ஸ்ரீ சௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரஸ்வாமி திருப்பணிக் கமிட்டி

	பெயர்	விலாசம்
தலைவர்	உ.மு.சுப.லெ.மெ. மெய்யப்ப செட்டியார்	152, கண்டதேவி ரோடு, தேவகோட்டை
தேவகோட்டை		
உபதலைவர்	நா. நாகப்ப செட்டியார்	செம்பனூர் PO - 623 313
"	V.N. CT. சிதம்பரம் செட்டியார்	நாகப்பா இல்லம் 21 கமலா IIவது தெரு சின்னசொக்கிகுளம், மதுரை - 2.
செயலாளர்	நா. அ. சுப்பிரமணியன் செட்டியார்	லஷ்மி சீவல், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்
"	க.செ.பள.லெ. லெஷ்மணன் செட்டியார்	சிவன்கோவில் வடக்கு வீதி, தேவகோட்டை
"	A.RM.T. AL. தேனப்ப செட்டியார்	தேனு விலாஸ், உ.அ. தெரு, பள்ளத்தூர்
பொருளாளர்	உ. ராம.மெ.சுப.சேவு. அண. அண்ணாமலை செட்டியார்	27, சத்திரத்தார் தெரு, தேவகோட்டை
கமிட்டிமெம்பர்கள்	அ.செ.ஜெயங்கொண்டான் செட்டியார்	நகை வியாபாரம், பொன்-புதுப்பட்டி.
	PL.K. குப்பான் செட்டியார்	க.சா. ஊரணி கீழவீதி, வலையபட்டி, 622 411.
	ந.மு.லெ.மு. ராமநாதன் செட்டியார்	2. நிர் ரோடு, வலையபட்டி - 622 411.
	PL.P. அருணாசலம் செட்டியார்	5. நிர் ரோடு, வலையபட்டி - 622 411.
	சுப. நா. சுப்பையா செட்டியார்	280. A. காமராஜர் சாலை, மதுரை - 9
	PL.A. அண்ணாமலை செட்டியார்	5. நிர் ரோடு, வலையபட்டி - 622 411.
	ந.மு.சிவ.மு. லெஷ்மணன் செட்டியார்	வலைய வளைவு வீதி, வலையபட்டி - 622 411.
	மு.ந. சுப்பிரமணியன் செட்டியார்	2. நிர் ரோடு, வலையபட்டி - 622 411.
	அரு. முத்துராமன் செட்டியார்	முத்துமீனா ஏஜன்சி 42, தேர் வீதி, சேலம் 1
	கரு. ராம. அண்ணாமலை செட்டியார்	பாப்பாயி ஆச்சி ஆஸ்பத்திரி ரோடு, வலையபட்டி
வலையபட்டி	சோம இயற்பகை செட்டியார்	நாகப்பா ஆயில்மில் பொன்.புதுப்பட்டி
	AN.ST. சுப்பிரமணியன் செட்டியார்	பான் புரோக்கர், கீழராஜ வீதி , புதுக்கோட்டை,
	லெ. நாகப்ப செட்டியார்	பெருநாவலர் மரக்கடை பொன். புதுப்பட்டி
	SV. திருஞானம் செட்டியார்	வார்ப்பட்டு ரோடு, வேந்தம்பட்டி
	குப. நல்லகுமாரு செட்டியார்	காட்டூர் சடயப்பன் தெரு, சென்னை - 3
	SV. அருணாசலம் செட்டியார்	வார்ப்பட்டு ரோடு. வேந்தம்பட்டி
	சுப. ஆறுமுகம் செட்டியார்	கணேஷ் ஹார்ட் வேர்ஸ், 15.A.மோடசூர் ரோடு, கோபி செட்டி பாளையம்
வேந்தன்பட்டி	குப. ந. நாகப்ப செட்டியார்	வேந்தம்பட்டி - 622 419
	N. நாகப்ப செட்டியார்	வேந்தம்பட்டி - 622 419
	சோம. நாகப்ப செட்டியார்	வார்ப்பட்டு ரோடு, வேந்தம்பட்டி - 622 419
	குப. பனையப்ப செட்டியார்	இரட்டை முகப்பு வீதி, வேந்தம்பட்டி
	சொ. நாகப்ப செட்டியார்	வார்ப்பட்டு ரோடு, வேந்தம்பட்டி.

	பெயர்	விலாசம்
நெற்குப்பை	K.PL.S.PL. அடைக்கப்ப செட்டியார்	மெயின் ரோடு, நெற்குப்பை - 622 405
	பனை. அருணாசலம் செட்டியார்	மேலபிள்ளையார் கோவில் தெரு, நெற்குப்பை
	அரு. தியாகராஜன் செட்டியார்	நல்லூரணி கரை, தெற்கு வீதி, நெற்குப்பை
	PL. பழனியப்ப செட்டியார்	கீளகச்சேரி கூடம் தெரு, நெற்குப்பை
	லெ. ராம. ப. லெஷ்மணன் செட்டியார்	சுப்பையா கோவில் பின்புறம், நெற்குப்பை
	ப. அரு. அண்ணாமலை செட்டியார்	பரையர் கருப்பர் கோவில் வீதி, நெற்குப்பை
	ப.அரு. லெ. சேதுராமன் செட்டியார்	கீளராஜ வீதி, நெற்குப்பை
காரைக்குடி	மெ.செ.மெ. ஜெயங்கொண்டான் செட்டியார்	100, தியாகராஜன் செட்டியார் தெரு, செக்காலை காரைக்குடி
	அ.வீர.மு.சொ.கா. சொக்கலிங்கம் செட்டியார்	69, சு. ராம வீதி காரைக்குடி
	சுப. சித. சுப்பிரமணியன் செட்டியார்	தேரோடும் வீதி, காரைக்குடி
	M.RM.S. PR. சொக்கலிங்கம் செட்டியார்	MRM. வீடு. பெரியணன் செட்டியார் சந்து, காரைக்குடி
	சு.கும.மெ. பழனியப்ப செட்டியார்	22. செல்லப்ப செட்டியார் தெரு, நா. புதூர், காரைக்குடி
	சித. நா. லெ. சுப்பையா செட்டியார்	53, வடக்கு வல்லம்பர் தெரு, காரைக்குடி
	நா.நா.ப.ந. நடேசன் செட்டியார்	24, செல்லப்ப செட்டியார் தெரு, நா. புதூர், காரைக்குடி
	தி.லெ.லெ. சோமசுந்தரம் செட்டியார்	தியாகராஜன் செட்டியார் தெரு, செக்காலை, காரைக்குடி
	மெ.நா.கரு. நாகப்ப செட்டியார்	தியாகராஜன் செட்டியார் தெரு, செக்காலை, காரைக்குடி
	சு.மு. பள. நா. பழனியப்ப செட்டியார்	உரிமையாளர், திருமகள் அச்சகம், மகர் நோம்பு அக்ரஹாரம் காரைக்குடி
	சு. கும. பழனியப்ப செட்டியார்	6A, சர்ச் முதல் வீதி, இந்திராநகர், காரைக்குடி
	அ. வீர. ராம. லெ. சொக்கலிங்கம் செட்டியார்	15, அம்மன் சன்னிதி, காரைக்குடி
	அரு. ராம. முத்துராமன் செட்டியார்	அரு. அ. வீதி, காரைக்குடி
	சுப. சித. பழனியப்ப செட்டியார்	கருமுகில் மகாராஜா சூரியராவ் தெரு, ஆள்வார்ப்பேட்டை, சென்னை - 18
	சு.ச. வீரமணி	முதல் வீதி, முத்துப்பட்டிணம்
பள்ளத்தூர்	அ. ராம.அள.அளகப்ப செட்டியார்	உ.க. வீதி, பள்ளத்தூர்
	பள. சுப்பிரமணியன் செட்டியார்	103, உ.சு. தெரு, பள்ளத்தூர்
	பள. வீ. பள. காசி செட்டியார்	உ.சு. வீதி, பள்ளத்தூர்
	A.RM.T.AL. தேனப்ப செட்டியார்	தேனு விலாஸ் உ.சு. தெரு, பள்ளத்தூர்
கோட்டையூர்	லெ.பெ. அண்ணாமலை செட்டியார்	32, வெங்கடாசலம் செட்டியார் தெரு, கோட்டையூர்
	லெ. பெ. வீரப்ப செட்டியார்	32, வெங்கடாசலம் செட்டியார் தெரு, கோட்டையூர்

	பெயர்	விலாசம்
	ப. அரு. நா. சின்னநாராயணன் செட்டியார்	70. சேம்பர்ஸ் ரோடு, சென்னை - 28
	சித. நாராயணன் செட்டியார்	ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோட்டையூர்
	ப.கரு.நா.பெ.நா. ராமஸாமி செட்டியார்	கோட்டையூர்
	ப.அரு.நா.பெ.நா. நாராயணன் செட்டியார்	கோட்டையூர்
	நா. பள. நா. அளகப்ப செட்டியார்	குருநாதன் கோவில் தெரு, கோட்டையூர்
	தெ. பழ. மெ.மெ. தேனப்ப செட்டியார்	மருதமலையான் ஸ்கூல், காரைக்குடி
ராங்கியம்	வ.நா.சொ. பழனியப்ப செட்டியார்	ராங்கியம்
	நா.வ.லெஷ்மணன் செட்டியார்	ராங்கியம்
	நா. சு. சிதம்பரம் செட்டியார்	ராங்கியம்
	A. சுப்பிரமணியன் செட்டியார்	லஷ்மி சீவல், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்
அரிமளம்	செ.லெ. முத்துசெல்லப்ப செட்டியார்	செட்டியார் ஊரணி வீதி, அரிமளம் - 622 201
	செ.பெ.செ. சுப்பிரமணியன் செட்டியார்	SP.RS. வீதி, அரிமளம் - 622 101
	சோம. நடராஜன் செட்டியார்	மீனாட்சிபுரம் ரோடு, அரிமளம்
மேலச்சிவபுரி	ராம. மு. சேதுராமன் செட்டியார்	பொடுசு. ராமன் செட்டியார் வீதி, மேலச்சிவபுரி - 622 403
	ராம. மு. தியாகராஜன் செட்டியார்	பொடுசு. ராமன் செட்டியார் வீதி, மேலச்சிவபுரி - 622 403
	கரு. சிவலிங்கம் செட்டியார்	சு.சொ.வீதி, மேலச்சிவபுரி - 622 403
	அண. தியாகராஜன் செட்டியார்	மேலச்சிவபுரி
	பள. ஆறுமுகம் செட்டியார்	மேலச்சிவபுரி
	ஆ. பழ. மெ. பழனியப்ப செட்டியார்	R.M. பழனியப்பன் C/o. R.R. பார்மசி, D. 1051வது மெயின் வீதி, அண்ணாநகர், சென்னை - 600 102
	சி.ஆ. மாணிக்கம் செட்டியார்	மேலச்சிவபுரி
	சித. மாணிக்கம் செட்டியார்	வெள்ளாண்டாஞ் செட்டியார் வீதி, மேலச்சிவபுரி
	அ.ஆ. முருகப்ப செட்டியார்	பிள்ளையார் கோவில் வீதி, மேலச்சிவபுரி
கானாடுகாத்தான்	சித. ந. அளகப்ப செட்டியார்	
	சித. நா. சிதம்பரம் செட்டியார்	
	பள. தே. அள. தேனப்ப செட்டியார்	55. TKR. தெரு, கானாடுகாத்தான் - 623 103
	M.AL.M. முத்துராசப்ப செட்டியார்	ராஜாசர் வீதி
	மு.கா.அண. அண்ணாமலை செட்டியார்	தூ.கரு. தெரு, கானாடுகாத்தான் செம்பனூர்
செம்பனூர்	கும.நா.சுப.நா. மாணிக்கம் செட்டியார்	செம்பனூர் - 623 313. 11, கோகலே ரோடு, சின்னசொக்கிகுளம், மதுரை - 2
	கும. நா.நா.சா.நா. சுப்பிரமணியன் செட்டியார்	(செம்பனூர்) காரைக்குடி, சிநேகவல்லி மில்
	கும.நா.நா.சுப.கா. சுப்பிரமணியன் செட்டியார்	75. தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை இந்தியா கணபதி ஸ்டோர்
	கும.நா.சுப.நா. நாகப்ப செட்டியார்	(உபதலைவர்) செம்பனூர் - 623 313 சிநேகவல்லி மில் காரைக்குடி
	கும.நா.நா.சா.நா. குமரப்ப செட்டியார்	55. பிள்ளையார் கோவில் தெரு, காவேரிபட்டணம், தர்மபுரி Dt. 635 112

	பெயர்	விலாசம்
உலகம்பட்டி	கும.நா.சுப.நா. ராமசாமி செட்டியார்	செம்பனூர் Po - 623 313
	கும.நா. ஜெயங்கொண்டான் செட்டியார்	ரத்னா சைக்கிள் ஸ்டோர் 363, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர் - 1
	தெ.நா.நா. மாணிக்கம் செட்டியார்	உலகம்பட்டி
	தெ.பெரி.ராம. நாகப்ப செட்டியார்	உலகம்பட்டி
கண்டனூர்	தெ.அரு.சித. ராமநாதன் செட்டியார்	
கீழச்சிவல்பட்டி	எ.நா.மு.நா. முத்தையா செட்டியார்	2-61. அம்மன் சன்னதி கீழச்சீவல்பட்டி
	மெ.மு.கரு.முத்தையா செட்டியார்	மெயின்வீதி, பி. அளகாபுரி
	க.மு.சுப.நா. சுப்பிரமணியன் செட்டியார்	இராமசாமி தமிழ்க்கல்லூரி கண்டனூர் ரோடு, காரைக்குடி
தேவகோட்டை	உ.மு.சுப.லெ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார்	152, கண்டதேவி ரோடு, தேவகோட்டை
	உ.ராம.மெ.சுப.சேவு.மெ. சேவுகன் செட்டியார்	
	உ.ராம.மெ.சு.மெ. சேவு அருணாசலம் செட்டியார்	10, கண்டதேவி ரோடு, தேவகோட்டை
	உ.மு.சுப.லெ. அருணாசலம் செட்டியார்	152, கண்டதேவி ரோடு
	உ.மு.சுப.லெ.சுப. சுப்பிரமணியன் செட்டியார்	
	உ.மு.சுப.லெ.அரு. அருணாசலம் செட்டியார்	
	சுப.சேவு. மெ. மாணிக்கம் செட்டியார்	
	ப. தண்ணீர்மலை செட்டியார்	
மலர்க்குழு	உ.மு.சுப.லெ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார்	152, கண்டதேவி ரோடு, தேவகோட்டை
	அ.ராம.தெ.அள. தேனப்ப செட்டியார்	தேனுவிலாஸ் உ.அ. தெரு, பள்ளத்தூர்
	சுப.சித. பழனியப்பன்	கருமுகில் மகாராஜா சூரியராவ் தெரு, ஆள்வார்ப்பேட்டை சென்னை – 18
	S.PL. பழனியப்பன்	115. உஸ்மான் ரோடு, T. நகர், சென்னை – 17
	உ.ராம.மெ.சுப.சேவு.மெ. சேவுகன் செட்டியார்	
	உ.ராம.மெ.சுப.மெ.சேவு. அருணாசலம் செட்டியார்	10, கண்டதேவி ரோடு, தேவகோட்டை
	உ.மு.சுப.லெ.அழ. அழகப்ப செட்டியார்	
	அ.வீர.மு.வீர.பழ. முத்துவீரப்ப செட்டியார்	சு.ராம வீதி, காரைக்குடி
	நா. சுப்பிரமணியன் செட்டியார்	இராமசாமி தமிழ்க்கல்லூரி கண்டனூர் ரோடு, காரைக்குடி
	வ.நா.சொ. சிதம்பரம் செட்டியார்	ராங்கியம்
	S.M. நாகப்ப செட்டியார்	M.S.M. பார்மஸி, கோயம்புத்தூர்
	L.N. லெக்ஷ்மணன் செட்டியார்	நாகப்பா டிரேடிங் Co. மேலப்புலிவார் ரோடு, திருச்சி – 8
	அ. தியாகராஜன் செட்டியார்	அண்ணாமலை பிரிண்டர்ஸ் 38. சன்னதித் தெரு, திருச்சி – 8
	AN.S.T. சுப்பிரமணியன் செட்டியார்	கீழராஜவீதி, புதுக்கோட்டை
	உ.வீர. அருணாசலம்	டைரக்டர் கும்பகோணம் சிட்டி யூனியன் பேங்க், கும்பகோணம்.

உ

போன் : 2115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத

பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யா ஸ்வாமிகள்

ஸ்ரீ மடம் : : ஸமஸ்தானம்

காஞ்சிபுரம் - 631 502.

முகாம் :

தேதி : 15-5-91

நேமம் ஸ்ரீ சௌந்தரநாயகீஸமேத ஸ்ரீஜயங்கோண்ட சோழீச்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தையொட்டி ஒரு மலர் வெளியிடப் படுவதறிந்து ஸந்தோஷிக்கிறோம். மலர் ஆலயப் பராமரிப்பின் அருமைபெருமைகளை விளக்கும் நன்மலராக விளங்க ஸ்ரீஜயங்கொண்ட சோழீச்வரர் அருள் கிட்ட ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

வித்துவான் கயிலைமாமுனிவர்
தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், கோவை—10.

☎ 26479
பேரூர்
கோயமுத்தூர் - 641 010

பெறுநர் : திரு. நா. சுப்பிரமணியன்,
15, சவகர்தெரு, புதுநகர்,
காரைக்குடி 623 001

நாள் 5—2—91

வாழ்த்துப்பா

1. அருள்நெறி வளர்க்கும் குன்றக் குடியினுக் கணியதாகப்
பொருள்வளர் வணிகமக்கள் போற்றிடு நேமங் கோயில்
மருவிய சௌந்தரப்பேர் நாயகி மாண்பார் வெற்றி
தருகின்ற சோழீசர்க்குத் தகுதிருப்பணிகள் செய்தார்.

2. அன்புடன் குலத்தோர் போற்றி அகங்குழைந் தினிமை சேரும்
நன்மைகள் செய்யும் பண்பால் நாடெங்கும் அறங்கள் செய்வார்
பொன்பொருள் வளர்ப்பார் தெய்வப் பொலிவு சேர்சிவன் கோயில்கள்
மன்னும் நற் பணிகள் செய்வார் நகரத்தார் மரபுவாழி.

3. செந்தமிழ்ப் பாடலாலே சிவனருள் பொலியச் செய்தே
சிந்தையில் கனிவும் அன்பும் சேர்ந்திடத் தூயவாழ்வு
தந்திடும் திருக்கோயில்கள் தமிழர் தம்கலைசேர் செல்வம்
அந்தியும் பகலும் போற்றியருள் பெற அமைத்தார் முன்னோர்.

4. கலைமிகு கற்கோயில்கள் கனிவுசேர் தமிழ்ப் பாடல்கள்
நிலைபெறத் தமிழ்மன்னர்கள் நிலந்தம தளித்துப் பேணி
அலைவிலா உளத்தால் மக்கள் அமைதியாய் வாழச் செய்தார்
கொலைபுலை நீத்துச் சைவக் கொள்கையால் வளம் பெற்றார்கள்.

5. நாட்டினில் நமதுகோயில் நற்பணி நலியத்தீய
கேட்டினுக்குரியசூழல் கிளர்ந்து நல்வழி பாடின்றிப்
பூட்டிய நிலையில் பூசைப் பொலிவின்றி இருத்தல் நன்றே
ஒட்டியே கொடுமை தன்னை ஒளிபெறச் செய்வோம் கோயில்.

6. நற்பணி செய்யும் நேமநகரத் திருக்கோயில் முன்னோர்
கற்பணி யாகச் சிற்பக் கலை நிறைவுடையதாகப்
பற்பல செய்தார் இன்று பணியினுல் புதுக்கித்தூய
பொற்பமை குடநீராட்டுப் பொலிவுறச் செய்தார் வாழி.

அன்புடன்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
(ஒப்பம்)

உ

சிவமயம்

வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க

கலாமடம் பாதரக்குடி ஆதீனம் பாண்டிய நாட்டு
முதன்மை ஈசான சிவாச்சாரியாராகிய
ஸ்ரீலஸ்ரீ ரவீந்திரர் என்ற
காமாட்சி சுந்தரதேசிக சுவாமிகள் எம்.ஏ.,

நகர மடம் பாதரக்குடி /623307 ப.தே.தி.மாவட்டம்
இடம் : பாதரக்குடி நாள் : 20—1—91

அன்புள்ள நேமங்கோவில் நகரத்தார்களுக்கு நல்லாசிகள். தங்கள் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு விழா நடப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தோம்.

நகரத்தார்களின் கோத்திரக் கோயிலும் சிறப்புச் சிறப்பு உடையதுமான இக்கோயில் இராஜ கோபுரமும் நிறுவி மிகச் சிறந்த முறையில் திருப்பணி செய்திருக்கிறீர்கள்.

நகரத்தார்கள் வெளியூர்களில் தங்கியிருந்த போதும், புள்ளிகள் குறைந்த கோயிலாக இருந்தும், தமது கோயிலைத் தேடி வந்து திருப்பணி செய்திருப்பது பெரிதும் பாராட்டுக்குரியது.

கும்பாபிஷேகத்தை தரிசனம் செய்பவர்களுக்கே பன்னிரண்டு ஆண்டுகள் தவறாமல் தரிசனம் செய்த புண்ணியம் கிடைக்கும் என்றுசாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்படியானால் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்துபவர்களுக்கு எவ்வளவு புண்ணியம் கிடைக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

பொருட்செல்வம் நிலையற்றது. அருட்செல்வமே என்னாளும் நம்மைக் காப்பாற்றக் கூடியது. நமது கலாச்சார மரபுகளும், தெய்வ பக்தியுமே என்றும் நிலைத்திருக்கக் கூடியது. இதனை என்றும் மறவாமல் சீரும் சிறப்பும் பெற்று சிறந்து வாழ ஸ்ரீபழம்பதி நாதரின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீபழம்பதிநாதர் துணை.

உ

வாழ்க தமிழ்! *சிவமயம்* *வளர்க சைவம்!*

துலாவூர் ஆதீனம் — துலாவூர்

திருப்பெருந்திரு நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாசக் குருக்கள்

மடாதிபதி — நகரத்தார் பெண்கள் குரு

Thulavoor Aadheenam Thulavoor - 623 206

His Holiness, GNANAPRAKASA GURUKKAL - Madathipathi

Place : துலாவூர் Date : 3.2.91

வாழ்த்துரை

நமது நகரக்கோவில்கள் ஒன்பதில் ஒன்றான நேமம் அருள்மிகு சௌந்தர நாயகி சமேத ஜெயங்கொண்ட சோழீஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும், அருள்மிகு அழகு நாச்சி அம்மனுக்கும், ஒரே சமயத்தில் திருக்குட முழுக்கு விழா நடை பெற்றது குறித்து. மிக்க மகிழ்ச்சியடைந்தோம்.

திருக்குட நன்னீராட்டு விழா மலர் மலர்ந்து சைவ சமய மணம் கமழவும் இத்திருப்பணியில் பங்கு பெற்ற மெய்யன்பர்களுக்கும், இரத்தின தனமகுட பூபாலவைசிய சிரோன்மணிகளாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கும், மற்றும் அனைவருக்கும் எல்லா நலன்களும் எய்த ஸ்ரீமங்களாம்பிகை சமேதவாஞ்சீஸ்வரப்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நலமே தழைக!

ஸ்ரீலஸ்ரீகாசி விஸ்நாத ஞானதேசிகர்
கோவிலூர் ஆதீனம்

ஸ்ரீசௌந்தர நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் மண்டலாபிஷேகத்தன்று வெளிவர இருக்கும் குடமுழுக்கு விழா மலரும், பெரியோர்கள், மெய்யடியார்கள், அறிஞர்கள், புலவர்கள், தொண்டர்கள் தியாகிகள் ஆகியோரின் கட்டுரைகள் நிறைந்து, பக்தியையும், ஆஸ்த்திகத்தையும் மெய்வாழ்வையும் பரப்பும் மலராக மலர்ந்து வரவும், எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் திருநெல்லை அம்மன் திருவருளால் உலகத்தில் அமைதி சூழ்ந்து மக்கள் எல்லோரும் நல்ல உடல் நலனும் மன நலனும் பொருள் நலனும் அறிவு நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வர வாழ்த்துகின்றோம்.

சுற்றி சுழலும் இந்த உலகத்திலே
துன்பங்கள் நிறைந்து தோன்றுதடி
திட்டமிட்டு, தீமை புரிபவரை சௌந்தரநாயகி
திருத்தி உன்வழி மாற்றிடுவாய்!

உ

திருக்கயிலாய பரம்பரை　　சிவமயம்　　திருவாவடுதுறை-609 803
ஸ்ரீலஸ்ரீ　　(தஞ்சாவூர் மாவட்டம்)
சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்　　நாள் : 5-2-1991

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க"

வாழ்த்துரை

நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் ஒன்பது நகரக் கோயில்களில் ஒன்றாய்த் திகழ்வது நேமம். அருள்மிகு சௌந்தர நாயகி உடனாகிய அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீசர் திருக்கோயில். இத் திருக் கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா பெறுவதும் விழாவின் தொடர்பாக விழாமலர் ஒன்று மலரவுள்ளமையும் அறிந்து மகிழ்கிறோம்.

நேமம் திருக்கோயில் வரலாற்றுப் பெருமையும், திருவருட் சிறப்பும் மிக்கது. அன்பர்களின் சிறந்த முயற்சியினால் நூதனமாக இராஜகோபுரம் அமைக்கப்பெற்றும் சுவாமி அம்பாள் பரிவாரக் கடவுளர் திருக்கோயில்கள் முழுமையாகத் திருப்பணிகள் செய்விக்கப் பெற்றும் திருக்குடமுழுக்கு நிகழ்வது பாராட்டிற்குரியது.

குடமுழுக்கு விழா இனிது நிகழவும் விழா நினைவு என்றும் நிலவி இன்பம் செய்ய வெளிவரும் விழா மலர் தெய்வத் தமிழ்மணம் கமழ மலர்ந்து உலகு இன்புறவும் ஸ்ரீஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

பெறுநர் .

பேராசிரியர் திரு . நா. சுப்பிரமணியன்,
15, சவகர் தெரு,
புதுநகர்,
காரைக்குடி — 623 001

உ

சிவ சிவ

கயிலை மாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீகாசிமடம்.

திருப்பனந்தாள்-612 504
(தஞ்சை மாவட்டம்)

3120/1400

தேதி : 1-2-1991

வாழ்த்துரை

நாட்டுக்கோட்டை நகரத்தார்தம் ஒன்பது நகரக் கோயில்களில் ஒன்றாய நேமம் செயங்கொண்டசோழீசர் திருக்கோயில் குடமுழுக்கு விழா 3.2.91 அன்று நிகழ்வதும், மண்டலாபிஷேக நிறைவின் சார்பில் 'மலர்' ஒன்று மலர்வதும் அறிந்து மகிழ்ச்சி.

சலனப் பாங்கு கொண்ட மானிட மனம் ஒருமைப்பட்டு, தனைமறந்து ஈடுறும் இடம் எம்பெருமான் சன்னதியே ஆகும். அத்தகு இடத்தின் அருமையை உணர்ந்து, முன்வந்து யாவரும் ஒன்றாகிப் புனிதப் பணியை முறையே ஆற்றுவது சிறப்புமிக்கதும் இன்றியமையாததுமாகும்.

இறைவன் பொருள்சேர் புகழே கருவாய், அடியார்தம் பத்திமையே மணமாய் அழகுறும் சொர்ண மலராய் விழா மலர் பரிமளிக்கவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

சிவ சிவ

உ

சிவ சிவ

தன்கடன் அடியேனையும் தாங்குதல்

என்கடன் பணிசெய்து கிடப்பதே

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி — 623 206

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

தொலைபேசி , குன்றக்குடி 27

நாள் 9.2.91

வாழ்த்துரை

நேமம் — ஓர் அழகிய சிற்றூர். இயற்கை வளம் கெழுமிய சிற்றூர். ஊரின் நடுவில் ஓர் அழகான திருக்கோயில். இந்தத் திருக்கோயில் நகரத்தார் குடிவழித் திருக்கோயில்கள் ஒன்பதில் ஒன்றாக விளங்குகின்றது. திருக்கோயில் முழுவதும் கருங்கல் திருப்பணி. திருக்கோயிற் சிற்பங்கள் உயிர்ப் பொலிவுடன் அமைந்து விளங்குகின்றன. மதுரைத் திருக்கோயிற் சிற்பங்களுக்கு ஈடு கொடுத்து நிற்கும் சிற்பங்கள் இவை.

செந்தமிழையும் சிவநெறியையும் பேணிக் காப்பதில் நகரத்தார் சமூகம், எப்போதும் எக்காலத்திலும் முன்னிற்கும் மரபுடையது. பலநூறு திருக்கோயில் களைத் திருப்பணி செய்து, வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிய பெருமை, நகரத்தார் சமூகத்திற்கு உண்டு. இன்றும் பழைய மரபுப்படி திருக்கோவிலைக் குலமுதலாகக் கொண்டு வாழ்கின்ற சமூகம் நகரத்தார் சமூகம் என்பது நினைந்து மகிழத் தக்கது; பாராட்டத்தக்கது.

நேமம் திருக்கோயிலில் சௌந்தரவல்லி உடனாக எழுந்தருளியுள்ள ஜெயங்கொண்ட சோழீசன் மனத்துள் நிற்கும் கருத்தாகவும், கருத்தறிந்து முடிப்பவனாகவும் எழுந்தருளியுள்ள அருமையை, எளிமையை நினைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி வழிபடுவோமாக!

திருப்பணியில் பங்கு பெற்ற அனைவருக்கும் நமது இனிய பாராட்டுக்கள் ! வாழ்த்துக்கள்.

இன்ப அன்பு.

அடிகளார்

(ஒப்பம்)

• திருக்குறளே நமது பொதுமறை. • திருமுறைகளே நமது மறை.

ஓம்

நேமம் ஸ்ரீ சௌந்தர நாயகி ஸமேத ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக திருப்பணி, விழாக் குழுவினரான நகரத்தாரைப் பாராட்டி, புதுக்கோட்டை அதிஷ்டானம், சேலம் ஓம் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம் ஸ்ரீமத் ஸத் குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் வழங்கும் அருளாசிப் பாமாலை.

அன்பே சிவமா யமர்ந்து ஆதவ னொப்ப மிளிரும்
மன்னிய தவத்தால் நாளும் மேதினி நலமே காக்க
நன்னல வேள்விக ளாற்றும் நாமமிகு சாந்தா னந்தர்
பன்னல நகரத் தாரைப் பரிவுடன் போற்று வாரே.

மறைதனை நாளும் வளர்த்து மன்னிய அறங்கள் புரிந்து
குறைவிலா வகையி லென்றும் கூடிடு மாலயப் பணியை
முறைவழு வாமல் செய்து முத்தமிழ் வளர்க்கும் நல்லார்
நிறைபுகழ் நகரத்தார் பெருமை நீணிலம் அறிந்த தன்றே

அகமும் புறமும் விளங்க அமைத்திடு மறச்சா லைகள்
புகன்றிடும் புகழா லொளிரும் பொலிவுறு திருத்தலங் களுமே
சிகரமாய் விளங்கும் வண்ணம் செய்திட்ட பணிகள் எல்லாம்
நகரத்தார் பெருமை தன்னை நவின்றிடும் சான்று தாமே.

நேமமென் னும்தலந் தன்னின் நீடிய ஆலயம் புதுக்கி
சேமந்தரு குடமுழுக் காட்டி சேர்த்திடு மறத்தால் வாழும்
ஏமமார் நகரத்தா ரென்றும் ஏற்புடை நலன்கள் பெறவே
தேமொழி சாந்தா னந்தர் தென்மொழியால் வாழ்த்து வாரே.

தேவகோட் டைநகரில் வாழும் தேரிய மெய்யப் பருடனே
மேவிடும் அழகப்ப நல்லார் மேன்மைமிகு மருந்துப் பணியின்
சேவையைப் பழநியப் பருமே செம்மைசேர் ராஜகோ புரத்தை
ஆவலாய்ச் சொக்க லிங்கருமே அன்புடன் செய்து முடித்தனரே.

ஒப்பரு நகரத் தாரின் ஒன்பதாம் ஆலயந் தன்னில்
செப்பிடு நேமமதில் விளங்கும் சௌந்தர நாயகி யுடனுறை
செப்பரு செயங்கொண்ட சோழர் சீர்மைசேர் ஆலயம் புதுக்கி
ஒப்பருங் குடமுழுக் காட்டிய ஒள்ளிய நகரத்தார் வளர்கவே

ஸ்ரீபுரம் ஒப்பத் திகழும் சீரார் நேமக் கோயிலின்
நூபுரம் விளங்கும் நங்கை நுவலரும் சௌந்தர நாயகியின்
கோபுரப் பணியைச் செய்த கோதிலா நகரத்தா ரென்றும்
கோபுர தீபம் ஒப்ப கோலமாய் வாழ்க வாழ்கவே!

திரிபுரா சுரரை யெரித்து தேர்ந்ததாம் வெற்றி கொண்ட
அரியொடு அயனும் காணா ஆன்ற ஜெயங்கொண்ட சோழரைப்
பரிவுடன் சௌந்தர நாயகி பாவையுடன் போற்ற வல்லார்
திரிபிலாச் செல்வம் பெற்று திருவருள் ஓங்க வாழ்வரே

நவசால புரியில் திகழும் நவமிகு புவனையை யமைத்து
சிவந்தனைச் சிந்தையிற் கொண்டு சிறப்புறு வேள்விக ளாற்றும்
தவமிகு சாந்தா னந்தர் தருமமே உயிராய் விளங்கும்
சிவநெறி நகரத் தாரைச் சிறப்புடன் வாழ்த்து வாரே.

நிலவளம் என்றும் செழிக்க நீர்வளம் பெருகி நிற்க
குலநலங் காத்து மக்கள் கூடியே யென்றும் வாழ
அலகிலாச் செல்வ மென்றும் ஆரவே பெற்று மகிழ
உலகெலாம் போற்றித் துதிக்கும் உமையொரு பங்கன் அருள்கவே.

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்தஸ்வாமிகள்
அருளாணைக் கிணங்க
வித்வான். ப. சிகாகிரீசன்
அதிஷ்டான வித்வான்

புதுக்கோட்டை.
3/2/91

1/2/91
காஞ்சிபுரம்

துதி.

நேரிசை வெண்பா

புகழ்நேமங் கோயில் புனிதசோ ஸ்ரீசர்
தகவுடைய பாதமலர் சார்ந்தோர் – இகபரநல்
இன்பமெலாம் எய்துவர் எண்திசையும் போற்றவே
துன்பமுறார் சேர்வர் சுகம் .

அன்பன் கிருபானந்தவாரி

திரு சுப்ரமணியன்
15, ஜவகர் தெரு
புதுநகர்
காரைக்குடி 623001

நா. மகாலிங்கம், பி.எஸ்சி., எப். ஐ.இ.

தொலைபேசி : 434814
456898

101, மவுண்ட்ரோடு, கிண்டி,
சென்னை - 600 032.

7.2.91

அன்புடையீர்,

வணக்கம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஒன்பது நகரக் கோயில்களில் ஒன்றாக விளங்கும் நேமங் கோவிலின் திருப்பணி சிறப்புற நடைபெற்று வருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். பசும்பொன் தேவர் மாவட்டத்தில், காரைக்குடி வட்டத்தில் திருப்புகழ் பாடல் பெற்ற குன்றக்குடித் திருத்தலத்திற்கு அருகே அமைந்துள்ள இத்திருக்கோயிலில் ஐந்து நிலைகளுடன் கூடிய இராஜ கோபுரம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருப்பதையும், சிவாலயத் திருப்பணி பரிவாரக் கோயில்கள், அழகுநாச்சி அம்மன் கோயில் திருப்பணி ஆகியன சிறப்புறச் செய்யப் பெற்றதையும் பாராட்டுகிறேன்.

இப்பணிகளைச் செவ்வனே கவனித்து வந்த ஒவ்வொருவருக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் கடமைப்பாடு உடைத்து.

தங்களுடைய திருப்பணிகள் வளரவும் செயங்கொண்ட சோழனை ராஜராஜ சோழன் காலத்தில் அமைக்கப்பட்ட இத்திருக்கோயில் மீண்டும் பண்டைய சிறப்புடன் விளங்கவும் வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

நா.மகாலிங்கம்

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்,
15, சவகர் தெரு,
புதுநகர்,
காரைக்குடி—623 001.

செயங்கொண்டார் சதக வரலாறு

நந்நேமச் செயங்கொண்ட சோழீசருக்கு அமைந்த சிறப்புக்களுள் ஒன்று சிற்றிலக்கிய வகையில் சதக இலக்கியம் பெற்றிருப்பது. இஃது ஏனைய நகரக் கோயில்களுக்கில்லாது நேமங்கோயிலுக் கமைந்த தனிச்சிறப்பாம். அள்ளி நிதி செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர், தையல் சவுந்தரியைத் தாள் பணியும் நியமமுடைய இக்கோயில் குடியாம் சிறப்புடைய முத்தப்பரால் இந்நூல் பாடப் பெற்றது பெருஞ்சிறப்பாம்.

விளையும் பயிர் முளையிலே தெரிவதைப் போல, தம் இளமைப் பருவத்திலேயே கற்றவர் கல்விக்கு உரையாணி என்று பாராட்டப்பெற்றவர் முத்தப்பர். ஏழு நகரத்தார் எல்லாம் நமதடியார் என்று பாடிய பாடுவார் முத்தப்பர் சைவமும் தமிழும் வளர்க்கும் தனவணிக மரபுக்கே முன்னோடியாகத் திகழ்ந்த பாவலர்.

முத்தப்பர் தமது ஐம்பத்தெட்டாவது ஆண்டில் நல்ல நாளொன்றில் தொடங்கி 'செயங் கொண்டார் சதகம்' என்ற நூறு பாடல்கள் உடைய நூலினை எழுதி முடித்தார். அந்நூல் நேமத்திறைவன் ஜெயங்கொண்ட சோழீசர் மேல் பாடப் பெற்றது. அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் போல அரசரியல்பு, வணிகர் நெறி, நகர வளம் கூறும் பழைய சதக இலக்கியம் போலாது, நூறு, புராண, இலக்கிய, வரலாற்றுக் கதைகளையும் அவற்றிற்கேற்ற பழமொழி களையும் கொண்டமைந்தது ஜெயங் கொண்டார் சதகம். ஒவ்வொரு பாடலிலும் முன்னிரண்டடிகளிலும் கதைச் செய்தியும், பின்னர் பழமொழியும் இடம் பெற்றிருக்கக் காணலாம். நல்வாழ்வுக்கேற்ற பண்பு நலன்களும், அவை குறித்து மக்கள் வழக்காற்றில் உள்ள முதுமொழிகளும், அவற்றைப் பிணைக்கும் கதைச் செய்தியும், செயங்கொண்டார் புகழுமாய் இலக்கியச் சுவை நிறைந்தமைந்ததே செயங்கொண்டார் சதகம்.

செயங்கொண்டார் சதகம், முத்தப்பர் தம் கோயில் மரபுச் சிவபெருமானைப் போற்றிப் பாடும் பாடாண் பாட்டாகச் சிவபெருமான் துதி நூலாக அமைந்துள்ளது.

வெயிலுகந்த விநாயகர், குன்றக்குடி முருகன், கலைமகள் ஆகிய தெய்வங்களுக்குக் காப்பும், அதனையடுத்து அவையடக்கமும் பின்னர் சதக நூலுமாய் அமைந்துள்ளன. முத்தப்பரின் நூலறிவும், நுண்மாண் நுழைபுலமும் பாடல்கள் தோறும் சிறப்புடன் மிளிர்வதைக் காணலாம்.

குபேர நலம் படைத்தவர்களாகத் தனவணிகர் எந்நாளும் திகழ வேண்டும் என விரும்பிய முத்தப்பர், வேள்வணிகர் வீடு கட்கு வந்த இலக்குமியை என்றைக்கும் நீங்காதிரு என்று வந்தித்து உறுதி பெற்றுப் பாடிய பாடல்களே திருமகள் அருள்வேட்டலாம். இப்பாடல்களும் செயங்கொண்டார் சதகத்தோடு அரங்கேற்றப் பெற்றன.

திரு மகள் அருள் வேட்டல்

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் – வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு!

நின்மேலும் ஆணை நின்மகன்மேலும் ஆணைநின் மாக்கொழுநன்
தன்மேலும் ஆணை தமிழ்மேலும் ஆணைதவமா வணிகச்

சின்னஞ் சிறுவர் தெரியாத காளையர் என்செயினும்
பின்னும் பொறுத்திருப்பாயே! பெரிய இலக்குமியே!

நீங்காது நின்மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்றுவந்த பாற்கடல்போல் தேங்காமல்
நன்றாக நீஇருந்து நாளும் வளம்பெருக்கி
என்றைக்கும் நீங்கா திரு!

தனவணிகர் வாழ்வு உயர, நிலைபெறத் தமிழ்மேலுமாணையிட்டுப் பாடுவார் முத்தப்பர். தன்னினத்தார் மீது கொண்ட பற்றால் ஆணைகள் இட்டுப் பாடும் முத்தப்பரே தமிழ் மீது ஆணையிட்டுப் பாடிய முதற்பாவலராவார்.

தைத்திங்கள் முதல் நாளில் தைப் பொங்கலன்று நேமத்தில் நூலரங்கேற்றம் நிச்சயிக்கப் பெற்றது. மிதிலைப்பட்டி வேலுக்கவிராயர், செவ்வூர் அழகுப் புலவர், வெண்பாப் புலிக்கவிராயர், ஊனையூர்ப் பாரதியார், சுந்தர முதலியார், வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவர் முதலான பலரும் வந்து கூடினர். பாதரக்குடி சேனாபதியடிகள் கோவிலூர் முத்துராமலிங்க ஆண்டவர், கல்லாப் பேட்டைச் சிற்றரசர், சிவகெங்கை அமைச்சர் முத்தழகு பிள்ளை ஆகியோர் பரிசிலும் செய்தியும் அனுப்பியிருந்தனர்.

அரங்கேறும் நேரம் வந்தது. நகரத்தார்களில் பெரியவர் ஒருவர் முத்தப் பையா! நகரத்தார்களின் நன்மைக்காக செயங்கொண்டார் பேரில் பஞ்ச வர்க்க பூஷணம் பாட வேண்டும் என்று வேண்டினார். நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமசிவாயவே என்பதே நகரத்தார் வாழ்வியல். பாடல் பிறந்தது. இப்பாடல்களின் முதலெழுத்துக்களைச் சேர்த்துப் படித்தால் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரமாக அமையும் அழகு காணலாம்.

"நன்றே பெருக நவிலுங்கு பேரர் நகர்வணிகர்
என்றே உலகம் புகழ அவர்க்கீண் டிருநிதியம்
நின்றே நிலவ அறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றேசோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே".

"மன்னும் பெருமை பெருகிக் குபேரர் நகர்வணிகர்
என்னும் மகிமை யுறவும் வறியவர்க் கீந்திடவும்
பொன்னும் பொருளும் புவியுமுப் போகம் பொருந்திடவும்
துன்னுஞ்சோ ழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே".

"சிவனா லயமும் திருமால் பணியும் சிறப்புறத்தான்
நவமாப் புதிக்கியு மாக்கியும் மேலோர் நவிலுநல்ல
தவமா மிதெனத் தரணியி லோங்கவும் தாங்குமகத்
துவமாசோ ழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே".

"வந்தார்க் குதவும் வணிகர் குபேரனும் வள்ளலுக்கும்
பிந்தார் தனத்தி லிவரே யுலகில் பெரியரெனச்
சிந்தார் புரமிளை யாத்தங் குடியார் சிறப்புறவும்
சொந்தார்சோ ழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குமே".

"யவனங் கலிங்கந் தமிழ்சிங்க ளம்பல யாண்டுமுள்ள
புவன மெலாமிவர் வர்த்தக மோங்கவும் புண்ணியஞ்சேர்
தவமும் தருமமும் தங்க வணிகர் தரம்பெறவும்
துவசசோ ழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே".

இப்பாடல்களின் நயங்கண்டு பலரும் வியந்தனர். நூலுக்குரிய காப்பைச் சொன்னதும் ஊனையூர்ப் பாரதியார் எழுந்து நின்று அவையினரையும்

முத்தப்பரையும் சம்மதம் கேட்டுக் கீழ்க்கண்ட பாடலைச் சொல்லி விடைகேட்டார்.

"ஓங்குபத்மா சூரனைக்கண் டோடியொளிந் தார்விஜயன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினார் ஈங்கிருக்கும்
நன்னேமச் சோழீச னார்செயங்கொண் டார்என்றால்
என்னசெயங் கொண்டா ரிவர்?"

அரங்கேற்றத் தொடக்கமே கேள்வியாகப் பிறந்தது. கேள்வியும் சதக நூலைப் பற்றியதல்ல. பாட்டுடைத் தலைவனாகிய சிவபெருமானை, செயங்கொண்டார் என்ற பெயரை நகையாடுவது. பாரதியார் பாடி முடித்ததும் உடனே முத்தப்பரது மறுமொழியாக அதே யாப்பில் விடை பிறந்தது.

"என்னசெயங் கொண்டார் இவரென்றால் முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச்சமைத்த சோழீசர் – பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துசெயங் கொண்டா ரிவர்"

பாரதியார் சிவபெருமான் தோல்வி கண்ட இடங்களைத் தொகுத்துக் கேள்வியாக்க, முத்தப்பர் வெற்றிகளைத் தொகுத்து விடையாக்கினார். சிரித்துச் செயங்கொண்டாரைப் பாடும் முத்தப்பரும் பாரதியாரைச் செயங்கொண்டார். கேட்டு மகிழ்ந்த அவையோர் உள்ளங்களைச் செயங்கொண்டார்.

முத்தப்பர் சதக நூலைப் படித்து, பாடல்களுக்குப் பொருள் சொல்லி அரங்கேற்றி முடித்தார். நகரத்தார்களும், பிறரும் பரிசில்களும், பாராட்டுக்களும் வழங்கினர். அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. பாராட்டுக்களாலும் பரிசில்களாலும் அன்பாலும் மனம் மகிழ்ந்த முத்தப்பர் நகரத்தார்களை வாழ்த்திப் பாடினார்.

பரிவினையே வேண்டி யிந்நூல் பாடிவந்தோம் மிக்க
பரிசுமுள தென்றளித்தீர் பற்றி – ஒருசிலையை
வில்லாய் வளைத்தசெயங் கொண்டார் திருவருளால்
எல்லோரும் வாழ்வீர் இருந்து.

பாடுவார் முத்தப்பர் வாழ்க என்ற முழக்கத்துடன் தெய்வ வணக்கம் நிகழ்ந்தது. திருமகள் அருள்வேட்டலும், பஞ்சவர்க்க பூஷணமும் நகரத்தார் இல்லங்களின் செல்வ வளத்தையும், நகரத்தார் ஆற்றிவரும் நற்பணிகளையும் நிலைபெறச் செய்கின்றன. செயங்கொண்டார் வழக்கம் என்ற பெயராலும் வழங்கப்படுகின்ற செயங்கொண்டார் சதகம் நந்நேமச் செயங்கொண்ட சோழீசர்க்குத் தனித்த புகழ் சேர்த்து நிலவுகிறது.

(இளவரசன் நா. நடராசன் எழுதிய பாடுவார் முத்தப்பர் வரலாற்றை அடியொற்றியது).

உ
சிவமயம்

பாடுவார் முத்தப்பர் பாடிய
ஜெயங்கொண்டார் சதகம்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

காப்பு

விநாயகர் துதி

சீர்பொருந்துந் தென்னேமச் செயங்கொண்ட சோழீசர்
திருப்பேர் வாழ்த்திப்
பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலை தனிலுலகப்
பழமைச் சொல்லை
ஏர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப் புவியிலுள்ளோ
ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த கணபதிதாள்
காப்புத் தானே.

முருகன் துதி

நகரமெல்லாம் பணிந்தேத்துஞ் செயங்கொண்ட சோழீச
நாயனார் மேல்
மகரநெடுங் கடலுலக வதந்தியைச்செந் தமிழால்யான்
வழுத்து தற்கே
அகரமுத லவ்வெழுத்தென் றாதியின்முப் பால்சொன்ன
அவன்றாள் போற்றிச்
சிகரவரை மீதெழுந்த சிறந்தவடி வேலவன்றாள்
சென்னி சேர்ப்பாம்.

கலைவாணி துதி

சிலைவேளை வென்றபிரான் தென்னேம நகரில்வளர்
செயங்கொண்டார் மேல்
உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்ன சொல்லைத்
தமிழாலே யுரைப்பதற்குக்
கலைவாணி யாகியுல குள்ளமட்டும் படிக்கவந்த
கவிதை தன்னின்
மலர்வேதன் மனைவியென்றன் மனத்திலிருந் திவ்வுரையை
வழுத்து வாளே.

அவையடக்கம்

பத்தருளத் தினிற்சூரி தண்டலையென் றெமக்குரைத்த
பரமர் மீதில்
வித்தகர்முன் னுலகவழக் கத்தையெடுத் தொருநூறு
விருத்தஞ் செய்தார்
அத்தைநிக ரெனச்ஜெயங்கொண்டார் மீதில் முத்தையன்
சிற்றறி வினாலே
மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென
வசனித் தேனே.

பாயிரம் முற்றிற்று

நூல்

வான்மீகர் கதை

நல்வேட வான்மீகர் சப்தரிஷி களைச்சேர்ந்த
ராம மந்த்ரஞ்
சொல்லநா வில்லாது கற்றறியா மையின்மரா
வெனமுன் சொன்னார்
வில்விசையன் தெவ்வைவெல்லக் கணைகொடுத்த ஜெயங்கொண்டார்
விளங்கு நாட்டில்
கல்விதனக் கழகுகச டறமொழித லெனமுன்னோர் 1
கழறு வாரே.

மார்க்கண்டர் கதை

அருமறைமார்க் கண்டர்நித்தந் திருக்கடவூர் வேணியனை
யன்பாய்ப் பற்றி
வருசமன்றன் பகையடக்கித் தீர்க்காயு ளாய்ப்புவியில்
வளரா நின்றார்
தருவைநிகர் தென்னேம நகரில்வளர் ஜெயங்கொண்டார்
தமிழ்சேர் நாட்டிற்
பெருமரத்தைச் சுற்றிநின்ற வல்லியுஞ்சா காதெனவே 2
பேசு வாரே.

பஞ்ச பாண்டவர் கதை

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி செய்கொடுமை
யாற்கா டாண்டும்
உரிமையுடைத் தருமர்செய்த நன்றியினால் திரும்பவும்வந்
துலகை யாண்டார்
பருவரைவில் லாவளைத்த செயங்கொண்டாரே எவரும்
பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கு மதர்மம்அழித் திடுமெனவுஞ் 3
சாற்று வாரே.

இளையான்குடி மாற நாயனார் கதை

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன்பர்க்
குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா
வாழ்வு பெற்றார்
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் வளநாட்டின்
மறைக ளோதித்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி லென்றுலகஞ் 4
சொல்லு மாதோ.

கிரவுஞ்சமலை பிளவுபட்ட கதை

தஞ்சமெனச் சரண்புகுந்த அமரர்களைப் புரப்பதற்காச்
சரவ ணத்தின்
மஞ்சனெனத் தோன்றியவேள் வடிவேலாற் கிரவுஞ்ச
மாய்ந்த தன்றோ
செஞ்சரணத் தால்யமனை வென்றசெயங் கொண்டாரே
தேவ ரேனும்
வஞ்சநெஞ்சைப் பிளக்குமிது பொய்யல்ல வுலகில்நிச 5
வசனந் தானே.

இராமர் கதை

அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான் தரசதன்விட்
டதற்கி லாபம்
கரியோன்றா னதிகசௌந் தரியனுக்குந் தனுவினுக்குங்
கமலத் தார்க்கும்
உரியோனா கியமறைதேர் முனியன்றோ செயங்கொண்டா
ருலகந் தன்னிற் 6
பெரியோரைத் துணைக்கொளென்ற ஔவைவாக் கியத்திலொன்றும்
பிசகி ராதே.

இராமர் வனவாசஞ் சென்ற கதை

பானுகுல ராமனுக்குப் பட்டாபி ஷேகமெனப்
பகர்ந்த போது
கூனியொரு சூத்திரத்தைக் கொடுக்கஅவ னுயிரைவிட்ட
கொள்கை போல
மானணியுங் கரத்தாரே செயங்கொண்டா ரேபுவியில்
மகிமை சேர்ந்த 7
ஆனைநிழல் பார்க்கையிலே தவளைவந்து கலக்கிவிடும்
அதுமெய் தானே.

இராவணன் கதை

தொடைக்கிலங்கு மார்பனிலக் குமணன்வில் வலுவென்றான்
சொன்ன பேச்சை
அடக்கிரா வணன்நாளை யோரம்பால் நான்வெல்வே
னறியென் றாற்போல்
சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டா ரேயெதிரி
தளத்துக் கஞ்சிப் 8
படைக்குப்போ காதவர்கள் நல்லசே வகரெனவும்
பகரு வாரே.

வாலி சுக்ரீவர் கதை

பேரிலுயர் வாலிசுக்கி ரீவரிரு வரும்பகையாய்ப்
பிரிய ராமர்
காரியத்துக் காகவந்து கடலடைத்துச் சிறைமீட்ட
கணக்குப் போல
மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டா ரேயுலகில்
விளங்குஞ் சொல்லும் 9
ஊரிரண்டு பட்டதென்றால் கூத்தாடிக் கேலாப
முண்டென் பாரே.

மூதேவி சீதேவி பிறந்த கதை

செல்லோடே யிணங்குகடற் றிருவுடன்மூத் தாள்பிறந்த
செய்தி பாரில்
நல்லோடைச் சலத்தில்சில பாசிபடர்ந் திடலும்த
னஞ்ச யன்கை
வில்லோடே மோதியதோள் செயங்கொண்டா ரேவயலில்
விளைவுண் டான 10
நெல்லோடே பதருமசத் தனிலதரும் பிறந்திருக்கு
நேர்மை தானே.

சரஸ்வதி கம்பரை நீங்கிய கதை

நங்கைகலை வாணிகம்ப ரிடத்திருக்கத் தண்டிகையில்
நலமாய் வாழ்ந்தார்
அங்கவள்தான் புறம்போகக் கம்பரன்றே கூலிக்கோர்
ஆளா னாரே
செங்கையுகி ரால்வேதன் சிரத்திலொன்றைத் துணித்துவிட்ட
செயங்கொண் டாரே
சுங்கமா றியபோது சுண்ணாம்புங் கொடுக்கார்தொல் 11
புவியு ளோரே.

வாமனன் அரிச்சந்திரன் கதை

தாப்பாய்வா மனன்கையில் மாவலிதண் ணீரைவிட்டுத்
தரணி தோற்றான்
வாய்ப்பாய கோசிகன்றன் வஞ்சனையால் அரிச்சந்த்ரன்
மனைவி விற்றான்
தீப்போலே விழிகாட்டி மதனுடலை யெரித்துவிட்ட
செயங்கொண் டாரே
பார்ப்பார்க்கு வாய்போக்கொண் ணாதாண்டிக் கதுதானும் 12
பகரொ ணாதே.

திரு ஞானசம்பந்த சுவாமிகள் கதை

பண்ணாருங் கவுணியர்வி பூதியினால் வழுதிசுரம்
பாதி தீர்த்தார்
எண்ணாயி ரஞ்சமணர் திருநீற்றை மறந்துகழு
வேறி மாய்ந்தார்
பெண்ணாளைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேஉலகிற்
பெருமை சேர்ந்த 13
வெண்ணீறே வினையகற்றும் தரிப்பவர்க்குச் சிவகதியும்
மேவுந் தானே.

துரியோதனன் கதை

புள்ளாலே பொறியரவத் துசன்மடிந்தால் தருமருக்குப்
பொரும்போ ருண்டோ
துள்ளாடத் திருப்பிவிட்டுப் பின்பவனைச் செயிக்கமிகத்
தொல்லை யாச்சே
வெள்ளானைக் கிறைபணியுஞ் செயங்கொண்டா ரேபகையை
மெலிவி யாமல் 14
முள்ளாலே யெடுப்பதைக்கோ டாரியா லெடுக்கவந்த
முறைமை யாமே.

அகலிகை கதை

பண்டகலி கையையிந்தி ரன்களவாய்த் தழுவிவெளிப்
படுஞ்சா லத்தைக்
கண்டுமுனி சகியாம லிருவரையுஞ் சபித்ததனாற்
கனவீ னந்தான்
இண்டைபுனை சடையாரே செயங்கொண்டா ரேபுவியில் 15
இல்லாள் பேச்சைக்
கொண்டவன்தூற் றும்போதே கூரையொக்கத் தூற்றுமெனக்
கூறு வாரே.

தாரை கதை

கடலீன்ற சந்திரனைக் குருமனைவி கலந்தணையக்
  கருதி வாவென்று
இடவுமதி தொடலாமோ பின்வருவ தறியாம
  லிணங்கி னானே
சடையிலங்கக் கங்கையணி செயங்கொண்டா ரேமாரன்
  சரந்தாங் காமல் 16
உடைகுலைந்த பின்புசொந்த முறைமைகள்கொண் டாடுவாரோ
  வுலகு ளோரே.

காந்தக் கோட்டை யழித்த கருணாகரன் கதை

சுற்றுமதிற் கலிங்கசிந்து சூழுசிக் காந்தமெனுந்
  துருவந் தன்னை
எத்தும்விலை மாதர்களாற் பண்டுகரு ணாகரன்வென்
  றிட்டா னன்றோ
கைத்திகிரி யோன்பணியுஞ் செயங்கொண்டா ரேமிகுந்த
  கருத்துண் டான 17
புத்திமான் பலவானாம் என்றுலகோர் சொல்லுவதும்
  பொருந்தும் தானே.

தருமர் கதை

ஆளைப்போல் வருமிருகந்த தனக்கும்வீ மனுக்கும்வழக்
  கான நியாய
வேளைக்கா தரவுதர்மர் வீமனுடல் பாதிமிரு
  கத்துக் கென்றார்
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா ரேசீனி
  வெல்லம் போட்டு 18
நாழிப்பால் வார்த்தாலு நடுச்சொல்வா ரறிவுமிகு
  நடுவுள் ளோரே.

வாலி மறுசனனம் எடுத்த கதை

வழியெதிர்நில் லாதொளித்து வாலியைமா லெய்துகொன்று
  விடவே வாலி
வழியுடனே மறுசனன மெடுத்தரியை யெய்துபழி
  வாங்கி னானே
அழலுமழு வணிகரத்தார் செயங்கொண்டார் நன்னாட்டி
  லமரர்க் கேனும் 19
பழிகிழம தாகிவிட்டுப் போவதில்லை யென்றுலகோர்
  பகரு வாரே.

அம்பிகாபதி கதை

அரசன்மக ளாரையம்பி காபதிசேர்ந் ததனைமன்னன்
  அறிந்து நாள்சென்று
உருசிபிறந் தொருநாளத் தாட்சியுடன் அவனுயிரை
  யொழித்தா னன்றோ
பரசணியுங் கரத்தாரே செயங்கொண்டா ரேமிகுந்த
  பழக்க மேனும் 20
சரசமிஞ்சி ரவிக்கையிற்கை போடவொண்ணா தென்றுலகோர்
  சாற்று வாரே.

விபீடணன் கதை

கும்பகர்ண னுக்கிளையோன் தமயனுயிர் நிலைகாட்டிக்
கொல்லென் றேநி
கும்பலைக்குந் துறவுசொல்லி யிலங்கைமன்னன் வலுவைமுற்றுங்
குறைத்தா னன்றோ
செம்பிநன்னாட் டவர்புகழுந் தென்னேம நாட்டில்வளர்
செயங்கொண் டாரே 21
தம்பிபிறக் கத்தரையா மென்றிடுஞ்சொல் அரக்கனுக்கே
தகும்கண் டீரே.

கண்ணன், மலையைக் குடையாக எடுத்த கதை

கல்லான மாரியையிந் திரனனுப்ப ஆய்ப்பாடிக்
கண்ணர் அம்பு
வில்லேது மின்றியொரு கற்குடையால் வந்தமழை
விலக்கினாரே
சொல்லாருங் குழலிசவுந் தரியையிடப் பாகம்வைத்த
செயங்கொண் டாரே 22
வல்லார்க்குப் புல்லுமோ ராயுதமா மென்றுலகோர்
வழங்கு வாரே.

சூர்ப்பநகை மூக்குமுலை யறுபட்ட கதை

உறுக்குதலு நயத்தலுமார் சூர்ப்பநகை யிலக்குமண
னுயர்தோள் சேரச்
சுறுக்கிற்சென் றெடுக்கவவன் இணங்காமல் மூக்குமுலை
துணித்தா னன்றோ
மறிக்கிசைந்த கரத்தாரே செயங்கொண்டா ரேமிகுந்த
மயலுண் டாகிச் 23
சிறுக்கிமன தறியாமற் செடிதனைக்கை யாற்றூக்கித்
திரிந்த வாறே.

சீதை கதை

தேன்மொழிச்சீ தையையரக்கன் சிறையெடுத்து வனத்தில்வைத்த
செயலா லுந்தான்
ஆனமட்டும் பார்க்கவவள் கற்பழியா தக்கினியி
லமிழ்ந்து மீண்டாள்
மான்விழியாள் சௌந்தரிபா காசெயங்கொண் டாரேநின்
வளஞ்சேர் நாட்டில் 24
தான்பதிவி ரதையானால் தேவடியாள் வீட்டில்நித்தந்
தரிக்க லாமே.

அருச்சுனன் கதை

பண்டுகிணற் றினிலெறிந்த பவுத்திரத்தைத் துரோணர்சிலைப்
பாணம் போட்டுக்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த விற்றொழில்கைக்
கொண்டா னன்றோ
வண்டுவிழி யுமைபாகா செயங்கொண்டா ரேயுமது 25
வளஞ்சேர் நாட்டில்
கண்டதைக்கற் கின்றவனே பண்டிதனா வானென்றே
கருது வாரே.

நளனைப் பாம்புகடித்த கதை

நன்னுகழை வனமெரிய மேற்கிடந்த பாம்புசெத்தி
டாமல் தாங்கி
மண்ணில்விட நளன்கரத்தி லரவுகடித் தவனுடலை
வடுச்செய் தாற்போல்
வெண்ணிலவைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேகுடியின் 26
மெலிவுதீரப்
புண்ணியத்துக் குழுமெருதைப் பல்பிடித்துப் பார்ப்பரெனப்
புகலு வாரே.

ஓரரசன் மனைவி கதை

நயவேந்தன் பாரியொரு துன்மார்க்க னாசைகொண்டு
நடந்தே யாற்றி
லியல்புடனே போய்ச்சலத்தி னின்றதைச்சிந் தாமணியி
லியம்பி னாரே
கயல்விழியா ருமைபாகா செயங்கொண்டா ரேதனது 27
கணவன் போலே
அயல்வீட்டான் மகனவனு மாபத்துக் குதவானென்
றறைகு வாரே.

சேதுபதிராசன் மகள் கதை

பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன் குறித்தவிடம்
பிசகி மேலாங்
கண்ணர்பரி சோதனைக்குந் தப்பிவிதிப் படிமுடவன்
கைக்கொண் டானே
பண்ணுலவு புகழ்மேவுஞ் செயங்கொண்டா ரேமூவர் 28
பாரித் தாலும்
எண்ணெய்தனைத் துடைத்திடலா மெழுத்ததனைத் துடைப்பவர்கள்
இல்லை தானே.

குட்டரோகியின் கதை

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்கேட் டாநோயும்
பஞ்சா யோடி
விண்டுவரு கையிற்கதையைப் பொய்யென்றான் மறைந்தகுட்ட
மீறிற் றன்றோ
தண்டமிழுக் கருள்புரியுஞ் செயங்கொண்டா ரேபூதந் 29
தழும்பா தீசன்
உண்டென்ற பேருக்குண் டில்லையென்ற பேர்க்கில்லை
உண்மை தானே.

மனுநீதிச்சோழன் கதை

முன்னொருசோ ழன்புதல்வன் தேர்க்காலி லான்கன்று
முறியக் கண்டே
பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்தேர்க் காலிலிட்டுப்
பெருமை பூண்டான் 30
தென்நேம நகரில்வாழ் சௌந்தரநா யகிமகிழ்ந்த
செயங்கொண் டாரே
தன்னுயிர்போல் மன்னுயிரை யெண்ணுவர்தே வர்முனிவர்
தமக்கொப் பாரே.

இந்திரசித்தன் கதை

கண்ணார்படை தனைச்செயிக்க விந்த்ரசித்த னிகும்பலையைக்
கருதிச் செய்தே
நண்ணியயா கமுமுடியுந் தருணத்தி லிலக்குமண
னாசஞ் செய்தான்
மண்ணையுண்டோன் நனிபுகழும் செயங்கொண்டா ரேகோல
மத்தூ டாடி
வெண்ணெய்படும் வேளையிலே தாழியுடைந் திடுதல்முன் 31
வினையென் பாரே.

இராவணன் கதை

அற்புதரா மன்கைவலு முதனாட்சண் டையிலரக்க
னறிந்தும் புத்தி
சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ குலத்தோடுந்
துஞ்சி னானே
தற்பரச தாசிவனே செயங்கொண்டா ரேநல்யோ
சனையில் லாத
துற்புத்தி மந்திரியா லரசுக்கே யீனமென்ற 32
சொல்மெய் தானே.

சகரர்கள் கதை

ஆவலாய்ப் பரிதேடிக் கபிலரிசி யிடத்திற்போ
யகம்பா ராட்டித்
தாவியவெஞ் சினத்தாலே யறுபதினா யிரம்பேர்கள்
சகராள் மாண்டார்
காவலுறு தென்னேமச் செயங்கொண்டா ரேபொறுமை
கருதிச் செய்யாக் 33
கோபமே பெரும்பா மதுசண்டா ளம்மெனவுங்
கூறு வாரே.

இராக்கதன் கதை

ஆற்றையணி தேநோக்கி யொருநிருதன் றவசுசெய்ய
வவனுக் கோர்வாள்
கூற்றையுதைத் தோனனுப்பக் குறுக்கிற்சென் றிலக்குமணன்
கொண்டா னன்றோ
நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்டா ரேயனந்த
நாளா யொட்டிக் 34
காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கைக்கொண்ட
கணக்குத் தானே.

பாரதக் கதை

விதுரனும்வில் முறித்தான்கன் னனும்பாம்புக் கணைதிரும்ப
விட்டா னில்லை
யெதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப் படைத்தலைவ
ரிணங்கி னாரே
மதுரையிலிந் தனம்வளையல் விற்றசெயங் கொண்டாரே
மருவார் போரில் 35
குதிரைநட வாவிடின்மா வீரர்பறந் திடுவாரோ
கொக்காய்த் தாமே.

மணியடித்த கதை

சாத்திரவே தியர்வசிட்டர் தருமரது சத்திரத்திற்
சலச்சோ றுண்ட
மாத்திரமே லட்சமறை யோர்புசித்தா லாடுமணி
மலிந்தா டிற்றே
நேத்திரத்தா லனங்கனுட றனையெரித்த செயங்கொண்டார்
நிமலர் நாட்டிற் 36
பாத்திரத்தை யறிந்துபிச்சை யிடவேண்டு மென்றுலகோர்
பகரு வாரே.

கிருட்டினன் தருமரைப் பொய்சொல்வித்த கதை

அன்பான தருமரசு வத்தாமா வெனும்யானை
யமரில் வீழ
வன்பான புயவசுவத் தாமர்பட்டா ரெனப்பிசகி
வழுத்த லாச்சே
முன்பாத வன்னெயிற்றைப் பறித்தெறிந்த ஜெயங்கொண்டார்
முதல்வர் நாட்டிற் 37
தன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ எவருமென்று
சாற்று வாரே.

பஞ்சபாண்டவர்கள் போருக்குச் சென்ற கதை

மன்னர்துரோ ணரையோணான் கொடுபோயிற் றென்றொருசொல்
வழுத்தக் கேட்டே
பொன்னிரத மேறியம்பு வில்லெடுத்தை வருஞ்சமர்க்குப்
போனா ரன்றோ
நன்னயவே தன்சிரத்தி லொன்றுதுணித் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற் 38
சின்னப்பாம் பானாலும் பெரியகம்பா லடியென்றே
செப்பு வாரே.

அச்சுதவாணன் கதை

வேணியர னைப்பணியு மச்சுதவா ணக்குரிசில்
வெள்ளாண் மைச்சீர்
ஆணியவல் லமையால்மூ வேந்தரையுங் காவலில்வைத்
தவதி செய்தான்
பாணிமழு வணிசெயங்கொண் டாரேயெத் தொழில்களுக்கும்
பழுதுண் டேபார் 39
காணியைநட் டுக்களத்தி னிற்பதுவே நன்மையெனக்
கருது வாரே.

தக்கன் கதை

கயிலைத்தா னுவைப்போலே மறுசிவனை யுண்டுபண்ணக்
கருதித் தக்கன்
செயலற்றே செய்வேள்வி யுங்குலைந்து வேற்றுமுகஞ்
சேர்ந்தா னன்றோ
அயிலைப்போல் விழியுமைசேர் செயங்கொண்டா ரேயிந்த
அவனி மேலே 40
உயரத்தான் பறந்தாலு மூர்க்குருவி பருந்தாகா
துண்மை தானே.

தக்கன் மகத்தில்வந்த தேவர்கள் கதை

ஆணவத்தக் கன்மகத்தி லவியுணவந் திடுதேவ
ரவர்க ளெல்லாம்
நாணமொடு மானபங்க முற்றனரே வீரபத்திர
நாத ராலே
பாணிதனின் மழுவணிந்த செயங்கொண்டா ரேருசியும்
பசியும் பார்க்கு
மூணருந்தங் கருமமிழந் திடுவரென்ற பழமொழிதா 41
னுண்மை தானே.

இந்திரன் நளனைத் தூது விட்ட கதை

வனத்திறையிந் திரன்நளன்பாற் சென்றுனக்கு மாலையிடும்
மாதைத் தானென்
றனக்குவரும் படிபேசித் தமயந்தி தனையிணக்கித்
தாவென் றாற்போற்
சினக்குமர வணிந்தடியார் மனக்கவலை தீர்த்தருளுஞ்
செயங்கொண் டாரே 42
உனக்குமழை பெய்யுமிப்போ தெனக்கிரவை நீர்தாவென்
றுரைத்த வாறே.

பிரமனைச் சிவன் சபித்த கதை

கஞ்சனுக்குப் புவியுற்கோ யிலுட்பூசை யில்லையெனக்
கடிந்தீர் மீட்டுங்
கெஞ்சினபின் மறையவர்செய் பூசையெல்லா முனக்கெனவே
கிருபை செய்தீர்
பஞ்சவனுக் காய்மாறி நடித்தசெயங் கொண்டாரே
பகைவ ரைத்தான் 43
அஞ்சி நல்ல வார்த்தைசொன்னாற் பொல்லாப்பு வருவதில்லை
அவனி யோர்க்கே.

அகலிகை சாபந்தீர்ந்த கதை

முனியகலி கையைக்கல்லாய்ச் சபித்துநிவர்த் திக்கும்வழி
முறைசொன் னாற்போன்
மனுவேந்த னாகியரி நடந்திடுந்தாட் படப்பழைய
வடிவா னாளே
தனவானைத் தோழனென்ற செயங்கொண் டாரேயெவர்க்குந் 44
தலைநாள் செய்த
அனுபோகந் தொலைத்திடும்போ தமிழ்தமுஞ்சித் திக்குமென்பர்
அவனி யோரே.

விபீடணன் மகுடம் பெற்ற கதை

வளமையுள்ள ராமனைவி பீடணன்சேர்ந் திலங்கைமணி
மகுடம் பெற்றான்
தளரரக்க ருடனிருந்தே யமர்க்குவந்தா லவனையொக்கச்
சரிப்பா ரன்றோ
களபமணி தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார் 45
கனத்த நாட்டில்
நிழலருமை வெய்யிலிற்போ னாற்றெரியு மென்பதுவும்
நிசங்கண் டீரே.

அரிச்சந்திரன் கதை

செப்புமரிச் சந்திரன்றா னீசனுக்கே விலையாகிச்
சென்றே நெஞ்ச
மொப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தா லிழுக்கவனுக்
கொருபோ துண்டோ
மைப்படியுங் கண்ணிசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
வளஞ்சேர் நாட்டிற் 46
குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி நிறத்திலொன்றுங்
குறைவு றாதே.

அமராவதி கதை

வணக்கமுடன் சித்திரபுத் திரரையம ராவதிதான்
வணங்கிப் பொங்க
இணக்கமுடன் செய்யாத நியமத்தா லவட்குமெத்த
இடரெய் திற்றே
அணைக்கடலின் மேனடந்த முகில்பணியுஞ் செயங்கொண்டா
ரருள்சேர் நாட்டிற் 47
கணக்கனுக்குக் கைக்கூலி கட்டியன்றோ குடியிருக்கக்
கடனென் பாரே.

விடத்திற்குப் பயந்த விஷ்ணு கதை

கடியவிடம் பாற்கடலிற் றோன்றியபோ தருகிருந்த
காகுத் தன்றா
னெடியபயத் துடனீங்கி யுங்கருநி றம்படைத்தா
னிசம தன்றோ
கொடியிடைப் பெண் சௌந்தரியா ளிடப்பாகர் செயங்கொண்டார்
குலவு நாட்டிற் 48
படைதனக்கோ டிப்பிழைப்பார் பஞ்சமதற் கிருந்துபிழைப்
பாரென் பாரே.

பஞ்சதந்திரக் கதை

திறமுளசஞ் சீவகனைத் தமரகன்கண் டழைத்துவந்து
சிங்கத் துக்கு
மிறையுளமந் திரியாக வைத்தபின்சிங் கந்தனக்கு
மிடபத் துக்குங்
குறைவில்பகை யுண்டுபண்ணி விட்டதன்றோ செயங்கொண்டார்
குலவு நாட்டில் 49
உறவுடையன் போலிருந்துங் குளவியைப் போற் கொட்டுவர்கள்
உண்டென் பாரே.

அறிவீனன் அரசனைப் பாடிய கதை

அறம்பெற்ற சோழனைமண் ணுண்ணிமரப் பாவையென்
றதிலோர் பாட்டாய்
வெறும்பித்தன் சொல்லவந்த வேந்தர்சபை யோர்கள்பொருள்
விளங்கச் சொன்னார்
திறம்பெற்ற பரிசுகொண்டான் தென்நேம நகரில்வளர்
செயங் கொண்டாரே 50
எறும்புக்குந் தன்கையா லெண்சாண்மெய் யென்றுலகோர்
இயம்பினாரே.

கர்ணன் கிண்ணம் கொடுத்த கதை

வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்குமுன்னே
மனம்வே றாமென்
றேழைமறை யோர்க்கிடக்கை யாலேயெண் ணெய்க்கிண்ண
மீந்தா னன்றோ
ஆழிதனிற் பள்ளிகொள்ளு மால்பணியும் பொற்பாதச்
செயங்கொண் டாரே
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே யில்லையென்ற 51
நலம தாமே.

விசுவாமித்திரன் வெற்றியடையாத கதை

புகழரிச்சந் திரனிசவா னெனவசிட்டர் சொலவவனைப்
பொய்ய னாக்க
மிகவெகுண்டு சபதமிட்டே யானமட்டும் பார்த்தயர்ந்து
விசுவா மித்ரன்
செகமறிய மக்கினப்பட்டி டிருந்தத்தையா வருமறிவார்
செயங்கொண் டாரே
முகடுமுட்ட வருகோபந் துரும்புகுத்த வேலையென 52
மொழிந்த வாறே.

சுப்பிரமணியர் கதை

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப் பெண் வெயிலினிற்கு
மவதி பார்த்துத்
தண்ணுலவு வேங்கைமர நிழலாலன் றவன்வருத்தந்
தனைத்தீர்த் தாரே
விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங்கொண்டா ரேகனந்தான்
விளங்கு நாட்டிற்
பெண்ணென்றாற் பேயுமொக்க விரங்குமென வுலகுள்ளோர் 53
பேசு வாரே.

கிருட்டிணன் ஐவரைக்காத்த கதை

வள்ளல்கண்ணன் கைநாகக் கணைப்புலன்மா லறிந்தவன்றன்
மாதா வைப்போய்
பிள்ளைகண்மே னாகமொரு தரம்விடுத்து நிறுத்தெனவும்
பேசச் சொல்லித்
தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென் நேமநகர்ச்
செயங்கொண் டாரே 54
வெள்ளம்வரும் முன்னணையைக் கோலிவைப்போர் காரியங்கள்
மிகநன் றாமே.

இரணியன் கதை

ஆச்சரிய விரணியனட் டாச்சரத்தை யிகழ்ந்தான்பொல்
லாப்பெண் ணாமற்
கூச்சமறத் தள்ளியிர ணியநமா வென்றதினாற்
குலைந்தான் றேகம்
பேச்சிமுலை யுண்டமுகில் பணிசெயங்கொண் டாரேநீர்
பெருகாற் றுக்குள் 55
நீச்சறியா மைந்தரைவெள் ளங்கொண்டு (போமென்றல்
நிசங்கண் டீரே.

உருக்குமாங்கதன் கதை

நன்னிலத்தி லுருக்குமாங் கதராச னொருவிரத
நடாத்தி னானென்
றந்நகரு மவ்விரதந் தொடங்கியதால் யமனவரை
யணுகக் கூடா
தென்னயம தண்டனைசே ராதிருந்தார் செயங்கொண்டா
ரிலகு நாட்டின் 56
மன்னவனெப் படியோமன் னுயிரும்ந்தப் படியெனவும்
வழுத்து வாரே.

நளன் கதை

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி யுடன்மெலிந்தே
யம்மா னூர்வந்
திடவும்மம்மா னேவலினா லமைச்சரழைத் திடவருவ
திலைபோ வென்ற
திடநளனை மாமனெதிர் கொண்டழைக்கச் சம்மதித்தான்
செயங்கொண் டாரே 57
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ காதெனவுங்
கழறு வாரே.

சூரபத்மன் கதை

பூதலமும் பொன்னுலகு மேவல்கொண்ட சூரனரன்
புதல்வற் கஞ்சிச்
சூதமர மாயொளித்துக் கடைசியிற்செவ் வேள்கரத்திற்
றுசமா னானே
தாதவிழ்பூங் கொன்றையணி செயங்கொண்டா ரேசெடியைத்
தாண்டித் தாவிக் 58
காதமோ டினுமுயற்குக் கைத்தூக்கென் றுலகிலுள்ளோர்
கழறு வாரே.

பொய்த்தவ ஒழுக்கத்தோர் கதை

பூமிதனிற் சிலர்நீறிட் டிருகரமுங் குவித்திருகண்
பொத்திக் கொண்டே
சாமியர்கண் மேற்பொருண்மேன் மனங்கிடக்க வாயிலர
கரவென் றாற்போல்
நேமியணி வோன்றேட வரியபதச் செயங்கொண்டார்
நிமலர் நாட்டில் 59
சாமிதலை மேற்கையும் வேலிபுறத் தினிற்கண்ணும்
வைத்த வாறே.

திருவிளையாடற் புராணக் கதை

பெண்ணிறக்கத் தொங்குமம்பை வில்வேடன் எடுத்துவரப்
பெண்ணுக் காளன்
கொன்றதுநீ யென்றிழுக்க மதுரையிற்சுந் தரர்நியாயங்
கொடுத்துத் தீர்த்தார்
அண்ணல்வர னேசெயங்கொண் டாரேகா தாரக்கேட்
டதும்பொய் யாகுங் 60
கண்ணாரக் கண்டதும்பொய் தீர்க்கவிசா ரிப்பதுமெய்
காணுந் தானே.

துரியோதனன் அரசிழந்த கதை

கூறுமர வக்கொடியோன் பாண்டவருக் கைந்நிலமும்
கொடுக்கே னென்று
வீறுசொன்னான் சுடக்கொடுத்த பின்னுயிரோ டுலகமுற்றும்
விட்ட னன்றோ
நீறணிமெய்ச் செயங்கொண்டா ரேயாற்றோ டேமூடர்
நேர்போ னாலும்
போறதல்லா லோடக்கா ரனுக்கரைக்கா சுங்கொடுக்கப் 61
பொருந்தி டாரே.

விநாயகர் மாங்கனிபெற்ற கதை

வேய்க்குமகன் மூத்தபிள்ளை கரத்தினில்மாங் கனிகொடுக்க
வெகுண்ட வேலர்
வாய்க்கினிய கனிநமக்குத் தரவிலென்று கோபமுடன்
மலைமேற் சென்றார்
பாக்கியஞ்செந் தமிழ்க்குதவுஞ் செயங்கொண்டா ரேவிதைத்த
பழனந் தோறுந் 62
தாய்க்குவிளைந் தாலுமென்ன தனக்குவிளைந் திடவேண்டித்
தவஞ்செய் வாரே.

சீவகன் கதை

பெலமுற்ற சிங்கமொரு கன்றீன யானையதன்
பின்னே செல்ல
விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப் பாய்ந்தகதை
மெய்யா மென்றே
சிலைபெற்ற சூளேந்த்ரன் விறலிதனில் விளங்குதன்றோ
செயங்கொண் டாரே 63
குலவித்தை கல்லாமல் பாதிவரு மென்றுலகோர்
கூறு வாரே.

கொக்கு மீன்களை மடித்துத் தானும் மடிந்த கதை

தண்ணார்மீன் களைச்சருவ சீவதாயபர பகந்தான்
தயவாய்ப் பேசி
யெண்ணாமற் சிதைத்தபழி தனக்கலவன் பகக்கழுத்தை
யிடறிற் றன்றே
பண்ணார்சிந் தாமணியில் எழுந்தன்றோ செயங்கொண்டார்
பரவு நாட்டிற் 64
கொன்றாரைக் கொல்லுமல்லார் கொலைவிடா தென்றுலகோர்
கூறு வாரே.

வாமனாவதாரக் கதை

உலகமெல்லா முடல்சிறுத்துஞ் சிறியவா மனனளந்தா
னொருபா தத்தால்
அலகையின்காத் திரமொடுங்கக் கிருஷ்ணபிரான் பாலருந்தி
யவளை மாய்த்தான்
சிலைநுதலாள் சௌந்தரிநா யகியையிடப் பாகம்வைத்த 65
செயங்கொண் டாரே
மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளிக்குப் பயஞ்சனிக்கும்
வளமை தானே.

புட்கரன் நளனைச் சூதாட வரவழைத்த கதை

காவலன்புட் கரனளனைச் சூதாட வரவழைத்த
கபடங் கண்டே
மேவியசூ தாடாமற் றள்ளிவிட்டாற் சனிநளனை
வினைசெய் வானோ
வாவிதிகழ் தென்னேமச் செயங்கொண்டா ரேமிகுந்த
வளஞ்சேர் நாட்டில்
நாவிதன்செய் தியையறிந்து குடுமியைப்பத் திரப்படுத்தல் 66
நலமென் பாரே.

குமணராசன் கதை

சிம்மாச னன்குமணன் சிரம்போல விழிமூக்குச்
செவிவாய் செய்து
சம்மாரம் பண்ணிரத்தச் சோரிசிந்தக் கொடுத்ததுவுந்
தட்டா னன்றோ
பெம்மானே தென்னேமச் செயங்கொண்டா ரேமலையைப்
பிரட்டுங் கையான்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக் கொள்ளுமெனக் 67
கழறு வாரே.

ஆமை வாயால் கெட்ட கதை

கொடியையிரண் டோதிமங்கௌ விப்பறக்க நடுக்கூர்மங்
குலவிச் செல்கால்
நொடியிலொரு செய்திசொல வாய்திறந்தா மையும்விழுந்து
நொறுங்கிற் றன்றே
வடிவுளதந் திரக்கதையு முண்டுசெயங் கொண்டார்வாழ்
வளஞ்சேர் நாட்டில் 68
நெடுங்கிணறும் வாயாலே தூறுமென்றே சொல்லுவர்கள்
நிசங்கண் டீரே.

திரிசங்கு ராசன் கதை

நம்புகுரு வசிட்டர்பகை மிகுந்திருக்கும் போதுதிரி
சங்கு ராசன்
வம்புரைத்த கோசிகராற் சொர்க்கமதி லேறியதால்
மகிமை யுண்டோ
சம்புமகா தேவசெயங் கொண்டாரே எதிராளி
தனுவா லெய்த 69
அம்புவிழக் கையிலிழை கட்டினால் மெய்யினிற்புண்
ஆறி டாதே.

சுக்கிரன் கண்ணிழந்த கதை

கூச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க மால்வாங்கக்
குறுக்கே சுக்ரன்
பேச்சறியா மற்பேசிக் கண்ணிழப்பா னேனொதுங்கிப்
பிழைக்கொண் ணாதோ
ஆச்சரியஞ் செயங்கொண்டா ரேயிலங்கா புரிராமர்
ஆண்டா லென்ன 70
ஏச்சிலரக் கர்களாண்டா லென்னென்று குரங்கந்நாள்
இருந்த தன்றே.

மானமுள்ள மகாபுருடன் கதை

நீரெடுத்தோர் கலசமதிற் கவசமுஞ்செய் தொருவன்வந்தா
னெடுநாள் கும்பம்
பாரில்விழுந் துடையவின்னு மொருகலச மென்மானம்
பார்க்கும் போது
சீலவென்றழதானென் றொருகதைசொல் வார்நேமச்
செயங்கொண் டாரே
யாரெனினு மானமிழந் துயிர்காப்ப தென்னவென்பார் 71
அவனி யோரே.

கருடன் கதை

விருப்பமறை யோன்றனுக்குப் பிறந்தநிரு தனையுவணன்
விழுங்கும் வாயி
னெருப்பெழச்சுட் டதனாற்செங் கருடனிரு தனைவிடுத்தா
னெனவோர் பாட்டிற்
றிருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார் முன்பெரியோர்
செயங்கொண் டாரே
நெருப்பிருப்ப தறியாமற் றொட்டாலுஞ் சுடுமெனவே 72
நிகழ்த்து வாரே.

பட்டினத்துப் பிள்ளை கதை

கையினிற்பட் டினத்தார்க்குத் தமக்கைநஞ்சு கலந்துபல
காரஞ் செய்தே
யையமறக் கொல்லவென்றே கொடுக்கவவள் மனைநெருப்பா
லழிந்த தன்றோ
துய்யபினா கச்சிலையீர் செயங்கொண்டா ரேபிறர்கக்குத்
துன்பங் காணச் 73
செய்ததீ வினைதானுஞ் செய்தவர்க்கே சேருமெனச்
செப்பு வாரே.

விக்ரமாதித்தன் கதை

சிந்தைமகிழ் விக்ரமா தித்தனுக்கா யிரவருடந்
தேவி யீந்தாள்
புந்திவலு மந்திரிசொல் லாலிரண்டா யிரவருடம்
புவியை யாண்டான்
சுந்தரர்க்குத் தூதுசென்ற செயங்கொண்டா ரேதருமந்
துலங்கு நாட்டில் 74
மந்திரங்கால் மதிமுக்கா லென்றுலகந் தனிலுள்ளோர்
வழுத்து வாரே.

காளிதாசன் கதை

நிசகாளி தாசனரண் மனைவாயிற் புகவேண்டி
நிருபன் கீர்த்தி
சகநாசி பல்போலென் றுரைத்ததனாற் செல்லவீட்டார்
தோன்றப் போவென்று
இசைவாங்கீர் வாணம்போ சன்றன்மேற் பகர்ந்தனன்காண் 75
செயங்கொண் டாரே
பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக் கொண்டிருந்த
பண்பு தானே.

இராவணன் போருக்குத் துணிந்த கதை

யாகத்தாற் செயமுமில்லை யிறப்பதினி நிசமெனக்கொ
ளென்னைப் பெண்ணே
லோகத்தா ரிராமனென வுரைக்குமட்டு மிராவணனென்
றுரைப்பார் போர்க்குப்
போகத்தான் றுணிந்தனனென்றா னரக்கனதால் செயங்கொண்டார்
பொருந்து நாட்டிற்
சாகத்தான் துணிந்தவர்க்குச் சமுத்ரமுழங் காலளவு 76
தானென் பாரே.

நக்கீரர் கதை

அத்தனார் கரத்தெழுதி யடமைக்கீந் திட்டசெய்யுள்
அதனை நோக்கிச்
சற்றுந்தா மதியாம லியற்கைமணங் கூந்தலுக்குத்
தகுதி யென்றல்
குற்றமெனப் பயமின்றி யுரைத்தனர்நக் கீரர்செயங்
கொண்டா ரேசொல்
வித்துவான் மதயானை யிரண்டுமொப்பென் றுரைப்பதுவும் 77
மெய்ய தாமே.

துரோணர் மனைவி கதை

உச்சிதமாய்த் துரோணர்சொன்ன மொழிப்படியே யவர்மனையா
ளுடையில் லாமற்
பிச்சையிடக் கொள்சிவனுக் கக்கணமே யிந்திரியம்
பிறந்த தன்றோ
தெட்சிணமா முனிபரவுந் தென்னேம நகரில்வளர்
செயங்கொண் டாரே
இச்சையுள்ள காமுகர்க்குக் கண்கண்ட இடத்தினிலென்று 78
இயம்பு வாரே.

வாதாபி கதை

மெத்தநாள் வாதாபி வேதியர்க ளுயிரையுண்டு
மேவிக் கும்ப
சித்தனைச் சாப் பிடநினைத்தான் சித்தனவ னுயிரைமுற்றுஞ்
சிதைத்துப் போட்டான்
மத்தகசந் தனையுரித்த செயங்கொண்டா ரேயார்க்கும்
மனதுக் கேற்க
நித்தியங்கட் டப்பாலை முற்றவுந்தான் பழுத்திடுமோ 79
நிலத்து மீதே.

நாரைமூக்குக் குவமைசொல்லிய கதை

பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார் பேரறிவாற்
பகர வொண்ணா
நாரைமூக் குக்குவமை பனங்கிழங்கென் றொருபுலவ
னவின்றா னன்றோ
சீருலவுங் கங்கைதிங்க ளரவமொடு கொன்றையணி
செயங்கொண் டாரே 80
காருலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும்வரை
கட்டு வாரே.

விறன்மிண்டநாயனார் கதை

ஆரூரெல் லையின்மிதியே னென்றவிறன் மிண்டர்தனை
    யரன்சோ தித்தப்
பாரிலொரு கால்மிதிக்கச் செய்ததுகண் டக்காலைப்
    பதறி யீர்த்த
சீருவந்து சிவன்காட்சி கொடுத்தானன் றோநேமச்
    செயங்கொண் டாரே
பேருலகில் மனங்கலங்கிப் பிடிவாதம் பிடித்தவர்க்குப் 81
    பேறுண் டாமே.

செந்நாப்புலவர் கதை

உற்றசெந்நாப் புலவர்மிக்க கணிகணன்மேற் கோபமதா
    யுலகுண் டோனை
யிற்றையாம் புறப்படுவோ மினியுண்பாய் சுருட்டியெழுந்
    திருமென் றோதச்
சித்தசன்றன் றாதைவர தப்பெருமா ளெழுந்தனரே
    செயங்கொண் டாரே
பத்தருளத் தினிலீசன் குடியிருப்பா னெனச்சொல்லும் 82
    பண்புதானே.

குசன் கதை

மிகப் பெரிய மாலசுவந் தனைப்பிடித்துக் கட்டிவந்த
    வினைப்போர் தன்னைப்
பகற்பொழுதிற் பொடியாக்கித் தாதைதனை வென்றகுசன்
    பண்பு பாரீர்
செகத்தரசர் புகழவருந் தென்னேமே நாடதிபர்
    செயங்கொண் டாரே 83
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு தோப்பெனவுஞ்
    சாற்று வாரே.

இரேணுகாதேவி கதை

தண்பரசு ராமனது தாயுடலிற் பறைச்சிதலை
    தரித்த மின்னாள்
நண்பரிடங் கொண்டுவர இவள்முழுதும் பறைச்சியென
    நகைத்து நாதன்
திண்புயனே யிவளையப்பாற் றுரத்தெனச்சேய்க் குரைத்தனரே
    செயங்கொண் டாரே 84
பண்புளவெண் சாணுடம்பில் சிரசுபிர தானமெனப்
    பகரு வாரே.

கண்ணன் கதை

பார்த்தனுக்கே ரதமூர்ந்தோன் மூத்தபல பத்திரனைப்
    பாரைச் சுற்றென்று
ஏய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரட்சித் தண்ணனைச்சார்ந்
    திருந்து வாழ்ந்த
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண் டாரேநீர் 85
    நுவலக் கேண்மோ
மூத்ததுவே மோழையென்று மிளையதுவே காளையென்று
    மொழிகு வாரே.

நிரம்பவழகியர் கதை

பொன்னார்செல் வமுந்தமிழும் பொருந்தரசன் தருக்கதனால்
புலவ ருக்குள்
மன்னான நிரம்பவழ கியரையண்டங் காக்கையென
வழுத்தக் கேட்டே
யன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார் செயங்கொண்டார்
அணிகொ ணாட்டிற் 86
தன்னாலே தான்மெலிந்தால் அண்ணாவி யென்னசெய்வான்
தரணி மீதே.

நந்திராசன் கதை

சூத்திரப்பா வையைநிகர்மெய் யிதனைநம்பொண் ணாதெனவுந்
துணைவன் கல்விக்கு
ஆத்துமதத் தஞ்செய்துஉல குள்ளமட்டும் புகழ்படைத்தா
னன்றோ நந்தி
போற்றியசுந் தரர்க்காய்முன் முறிகாட்டுஞ் செயங்கொண்டார்
புனித நாட்டிற் 87
கீர்த்தியப கீர்த்தியிவை வந்தாற்போ காவெனவே
கிளத்து வாரே.

சுவாகாள் கதை

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா திருக்கையிலே
யன்னோர் ரூபங்
கூறுசுவா காளெடுத்தக் கினிதேவைத் தழுவரிஷிக்
கூட்டங் கூடிச்
சீறியறு வரைத்துரத்தத் தவசுக்கே கினரன்றோ
செயங்கொண் டாரே 88
வாறவிதி வந்ததென்றால் வளைந்தாடும் பானையென்று
வழுத்து வாரே.

அருந்ததி கதை

நித்தியசந் யாசியென்றும் நித்யோப வாசியென்றும்
ரிஷிகள் கூற
அத்தைமெய்யென் றருந்ததியாள் கங்கைதனக் குரைத்துவழி
அன்பாய்க் கேட்கச்
சித்தமகி ழருந்ததிசொற் றனக்குவழி கங்கைவிட்டாள்
செயங்கொண் டாரே 89
பத்தினியுத் தமிவாக்குப் பலிக்குமெனத் தேவரொக்கப்
பணிந்திட் டாரே.

மிருகண்டர் கதை

மதிமெதுவா லொருநூறு வியன்மதியாற் பதினாறு
வயது புத்ரன்
எதுதருவோ மெனச்சிவனே நல்லபிள்ளை வயதிரெட்
டிருந்தாற் போதும்
அதுதருவீ ரென்றுமிரு கண்டுமுனி யன்றுரைத்தார்
செயங்கொண் டாரே 90
இதசாணி யொருகூடை மிக்கசவ்வா தோர்பணத்தின்
எடையென் பாரே.

அனுமான் கதை

சலியாமற் கடறாண்டி மருத்துமலை கொணரனுமான்
தடந்தோள் தன்னை
நலியாம லிந்த்ரசித்தன் பாசத்தாற் கட்டிவிட்டான்
நலம தான
கலியாண முரசொலிக்குந் தென்னேமச் செயங்கொண்டார்
கனத்த நாட்டில் 91
வலியார்க்கு வலியாரு மிருப்பரென்றே உலகிலுள்ளோர்
வசனிப் பாரே.

பாண்டியராசன் கதை

மதுரைமன்ன னிடத்திருந்த குதிரைபற்றா தெனவிலைக்கு
மாஅ னேகம்
இதமுடன்சே கரித்தநிமித் தியத்தான்முன் பரிமுழுதும்
இழந்தா னன்றோ
நிதியனைத்தோ மூமைவேண்டுஞ் செயங்கொண்டா ரேயேரி
நிறைக்க வேண்டிப் 92
புதியவெள்ளம் வரப்போய்முன் னிருந்தவெள்ளத் தையுமிழுத்தப்
போன வாறே.

விறகுதலையன் மனையாள் கதை

தெகிட்டாக்கா தலைவிறகு தலையன்மனை யாள்கூத்தன்
திகிலிட் டேங்கப்
புகட்டியல்லோ கற்பழியா மற்கவிகேட் டாள்தனது
புருடன் பேரில்
முகட்டாலி லையிற்றுயில்வோன் பணிசெயங்கொண் டாரேசீர்
முதிர்ந்த நாட்டிற் 93
பகட்டாற்பங் கெடுப்பரெனப் பொரியரிசி யிடியெனவும்
பகரு வாரே.

சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை

வாணிமா துலன்றோழ னிறவாமற் காக்கவென்ன
வகைசெய் வோமென்று
ஆணியிர வியைத்திகிரி யால்மறைத்துப் பார்த்தனைக்காத்
தருளினாரே
நாணரவாற் பொன்மலையை வளைத்தசெயங் கொண்டார்வாழ்
நலஞ்சேர் நாட்டில் 94
வேணுமென்று நூற்றால்மெல் லியநூலாய் நூற்றிடுவர்
மெய்ய தாமே.

மயில்ராவணன் கதை

அச்சமில்லாத் துராக்கதரா வணனைமயி லிராவணன்சேர்ந்
தழிந்து போனான்
பட்சமுள்ள விபிஷணன்றா னரக்கனைவிட் டொதுங்கிமிகப்
பண்பாய் வாழ்ந்தான்
கச்சணியுந் தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
கனத்த நாட்டிற் 95
துச்சனரைக் கண்டவுடன் தூரப்போ வென்றுலகோர்
சொல்லு வாரே.

வரகுணசோழன் மனையாள் கதை

வல்லவர குணசோழன் மாதைமணஞ் செய்தருளி
வடிவைப் பார்த்தே
அல்விருக்குங் குழலியிவள் மருதப்பர்க் காவள்நமக்
கன்னை யென்றே
தில்லைமன்று ளாடிமெய்யி லக்கியமாம் படிசேர்த்தான்
செயங்கொண் டாரே 96
நல்லதுகண் டால்நியாயந் தனக்கென்றே யுலகிலுள்ளோர்
நவிலு வாரே.

நக்கீரர் கதை

அரசிலையிற் பாதிபட்சி பாதிமச்ச மானவிந்தை
யனைத்தும் பார்த்து
விரவுளநி ட்டையைமமைந்த நக்கீரர் தமைப்பூதம்
விழுங்கத் தூக்கித்
திரண்மலையி லடைக்கவள்ளி கணவனன்றோ விலக்கிவிட்டான்
செயங்கொண் டாரே 97
உரைசெய்தவ மறந்தாற்கை தவமாகு மென்றுஔவை
உரைத்தவாறே.

வேடன் கதை

அடவியில்வே தியர்க்கொருவே டன்தினைமாப் பகுந்தபல
னாற்கா சிக்குத்
திடமுளமன் மனவன்சேயாத் தினையரியப் பொற்கலத்திற்
செனித்தா னன்றோ
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங் கொண்டாரே
வையந் தன்னில் 98
இடுவதுபிச் சைபின்பு பெறுவதுவே மோட்சமென
விளம்பு வாரே.

துர்வாசமுனி கதை

வாய்ச்சுதெனத் துர்வாச ருக்குமாங் கதனைமெத்த
வருத்த ஆழி
பாச்சலினான் முனியைவெல்ல வரவுருக்கு மாங்கதன்றான்
பரித்தா னன்றோ
கூச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கதிசேர்த் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற் 99
சாட்சிக்கா ரனைப்பணியார் சண்டைக்கா ரனைப்பணியத்
தகுமென் பாரே.

வரரிஷி கதை

சிவயோகர் வெகுளியினால் வரரிஷியு மகிடமெனச்
செனித்தான் பாரில்
பவமடியாற் கற்றவுமை லிங்கபரா ணியைவதைத்த
பழியின் தோழம்
நவதீர்த்த மாடியன்றோ தொலைந்ததென்பார் செயங்கொண்டார்
நலஞ்சேர் நாட்டிற் 100
தவமுடையோர் மனமழுங்கச் செயப்படா தென்றுலகோர்
சாற்று வாரே.

குலோத்துங்கன் அடைப்பைக்காரனான கதை

இன்றுமுதல் என்நாட்டில் இருக்கொணாது என்றுஅரசன்
இயம்பக் கம்பர்
அன்றுமுதல் அகன்றவர்பின் அவர்க்கு அடைப்பைக் காரனைப்போல்
அவன்சார்ந் தானே
கன்றுஉவப்பப் பால்ஊட்டும் கனவணிகர் தொழுஞ்செயங்கொண்
டாரே கற்றார் 101
சென்றசென்ற இடம்எல்லாம் சிறப்புறுவர் என்றமொழி
செம்மை ஆச்சே.

பரமசிவன் வரமளித்த கதை

தோத்திரம்செய் தேபத்மா சூரன்முனம் கேட்டவரம்
சோமர் தந்த
மாத்திரமே அவன்விரட்டப் பயந்தோடி ஒளியவிதி
வந்தது ஏனோ
கோத்திரம்ஓர் கொடியெனவே நிலவுகுல வணிகர்தொழும்
செயங்கொண் டாரே 102
ஆத்திரக்கார ருக்குஆனால் புத்திமட்டுஎன்று ஒருவசனம்
அதுமெய் யாமே.

பகீரதன் கங்கையைக் கொணர்ந்த கதை

நீக்கரிய பழிநீங்கக் கங்கைதனைப் பகீரதனும்
நிமலன் தன்பால்
தூக்கம்உண வின்றிநனி தவம்இயற்றிக் கொணர்ந்துபவம்
தொலைத்தான் அன்றோ
ஆக்கம்மிகு தனவணிகர் தொழஅருளும் செயங்கொண்டார்
அரிய நாட்டில் 103
ஊக்கமது கைவிடேல் எனஉரைத்த ஔவைமொழி
உண்மை தானே.

ஜெயங்கொண்டார் சதகம்
முற்றும்

விநாயகர் துதி

காட்டுவழி போனாலும் கள்ளர்பய மானாலும்
கேட்டுவழி காலகனார் கிட்டிலும் நாட்டமுடன்
நம்பிக்கை யாக நமக்கு வினாயகனின்
தும்பிக்கை உண்டே துணை.

இறுதி மூன்று பாடல்கள் 1925ல் புதுவயல் ரா.ம.சு. இராமசாமி செட்டியாார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட நூலில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. காட்டுவழி என்ற இப்பாடலும் முத்தப்பர் பாட்டாகச் சில புத்தகங்களில் காணப்படுகிறது.

நேமம் கோவில் வரலாறு

நன்னேமச் செயங்கொண்ட சோழீசர் கோவில் கொண்டருளும் நேமத் தலத்தின் சிறப்பினைக் கூறும் தலபுராணமும், தோத்திரத் தொகுப்பும் இணைந்தது நேமம் கோவில் வரலாறு.

செந்தமிழ்ச் செல்வத் திருமணி நாராயண நடராசன் (கீழச்சிவல்பட்டி, மாற்றூர்–கண்ணூர்) அவர்கள் இயற்றிய இந்நூல், அமரர் இராங்கியம் நா.அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் நினைவு மலராக, 1961இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் மலர்ந்தது.

இந்நூலில் அமைந்த முன்னுரை, நினைவுரை, நேமம் பற்றிய பிற நூற்குறிப்புக்கள், நேமம் தல வரலாறு, கோயில் அமைப்பு, கோத்திரத்துப் பெருமக்கள், புலவர் பெருமக்கள், நேமங்கோயில் நகரத்தார்கள் வாழும் ஊர்கள், கோயில் நிர்வாகம், நேமம் தல புராணம் ஆகியவற்றை அப்படியே பதிப்பித்துள்ளோம்.

பாடுவார் முத்தப்பரைப் பின்பற்றி இந்நூலாசிரியர் பாடியுள்ள திருமுகமும், அட்டாட்சரத் தோத்திரமும் அச்சிடப் பெற்றுள்ளன.

ஒன்பது நகரக் கோயில்களில் நான்கு கோயில்களுக்கே தலபுராணங்கள் பாடப் பெற்றுள்ளன. 'இலுப்பைக் குடிப் புராணம்' தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயராலும், 'இளசைப் புராணம்' (இளையாத்தங்குடிப் புராணம்) கணேச பண்டிதராலும், 'வயிரவன் கோயிற் புராணம்' சேந்தன்குடி வி. நடராச கவிராயராலும் இயற்றப் பெற்றவையாம். இவை 19ஆம் நூற்றாண்டின. இவற்றுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் அமைந்ததே நம் நேமம் தலபுராணம்.

முன்னுரை

செட்டி முருகன் திருவடி நினையும் போதெல்லாம் அவனருள் மறவாத நகரத்தாரையும் நினைந்து போற்றுவது எனது இயல்பு. இந்த இயல்பாலும், சிவவேடப் பொலிவுடையார் எவரே யாயினும் அவரேயாகி அளவளவும் விருப்பாலும் அடியேன் பெற்ற பேறுகள் பலவாகும். அம்முறையில், புதுக்கோட்டை புவனேசுவரி நகர் சதாசிவ பிரமேந்திர சரசுவதி அவதூத அதிஷ்டானத்தில் அருளாட்சி செய்யும் ஸ்ரீமத் சாந்தானந்த சுவாமிகள் ஆணையின் வண்ணம் "பஞ்ச பஞ்சகம்" பாடி அரங்கேற்றும் வேளையில் சுவாமிகள் எளியேனை ராங்கியம் நா.அ. குடும்பத்தினருக்கும் ராயவரம், முருகபக்தர், புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸ் உரிமையாளர் வயிரவன் செட்டியாருக்கும் அறிமுகப்படுத்தினார்கள்.

ஒன்பது கோவில் வரலாறுகளை முதலில் உரை நடையிலும், மாற்றூர் முதலாக நேமம் இறுதியாக அவ்வக் கோவில் கும்பாபிசேகங்களை ஒட்டி, செய்யுள் வடிவிலும் எழுதி வைத்திருந்தேன். நேமம் தல புராணத்தை பேரன்பர் வெஸ்ட் வயிரவன் செட்டியார் படித்துப் பார்த்து, எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் சாந்தானந்த சுவாமிகளின் திருமுகத்துடன் திருப்பணிச் செல்வர் அமரர் ராங்கியம் நா.அ. அண்ணாமலை செட்டியார் அவர்களின் நினைவு மலராக இன்று வெளியிடுகின்றேன்.

நேமம் கும்பாபிசேகத்தில் நகர விருந்துச் செலவை ஏற்க விரும்பிய தம் தந்தையாரின் எண்ணத்தைப் பூரணமாக நிறைவேற்றி வைக்கும் அண்ணாமலையாரின் திருக்குமாரர்களுக்கும், திருமுகம் தந்து அருளாசி கூறிய

சாந்தானந்த சுவாமிகளுக்கும் தல வரலாறு எழுதுவதற்கு வேண்டிய தகவல் தந்து, முன் ஏற்பாடுகளையும் செய்து தந்த நடப்புக் காரியக்காரர் கு.பழ.சு. பழ.சுப. சண்முகம் செட்டியார், மானேசர் லெ. வெங்கடாசலம் செட்டியார், ஆகியோருக்கும், ஆற்காட்டுக் கோவில்கல் வெட்டுக்களைப் படியெடுத்துப், பல அரிய குறிப்புகளைத் தந்த வீரத் திருமணி சா. கணேசன் அவர்களுக்கும், கோயில் ஐதீகங்களை விளக்கிக் கூறிய சண்முக சுப்பிரமணிய சிவாச்சாரியாருக்கும், பழனி செல்லும் எனது நேர்த்திப் பிரார்த்தனையை உணர்ந்து மிக விரைவில் அச்சிட்டுத் தந்த சிவகாமி அச்சகத்தினருக்கும் சாற்றுக் கவிகளும் சிறப்புரைகளும் தந்த தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உரிமைப்படுத்தி, எளியேனாகிய என்னை ஈர்த்து ஆட்கொண்டு, தன்னை நினையவும் தமிழ் மாலை சூட்டவும் உரிமையளித்துப் பெருமை செய்யும் செட்டி முருகனுக்கும் செயங் கொண்டாருக்கும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

"ஆண்டவன் நிலையம்" திருமதுரை கீழச்சிவப்பட்டி	நாராயண — நடராசன் (மாற்றூர் கண்ணூர்)

சாற்றுக் கவிகள்

"எந்தை,குரு, பாடுவார்க்(கு) இளவரசன்
நடராசன்
சந்தார் செம்மேனிச் சயங்கொண்டான் தனக்(கு)
அணியும்
நந்தாப் புகழ்மாலை நகரத்தார்க்(கு) ஒம்படையாய்
செந்தாதார் கடம்பன் வேள் திருவருளால்
திகழுகவே!"

— க. கிருட்டினமூர்த்தி

"ஒப்பரிய முத்தப்ப உரவோனை ஈன்ற புகழ்
செப்பரிய நேமத்தின் செயங்கொண்டானின்
பெருமை
இப்புவியோர்க்(கு) இனிது (உ)ரைக்கும்
இளவரசும், ஏழ்மரபும்
செப்பு புகழுடன் அறங்கள் செய்தென்றும்
வாழியவே!"

— புவித்தொண்டன்.

நினைவுரை

இந்நூலைக் கையுறையாகப் பெறும் அமரர் சிவத்திரு, நா.அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் ராங்கியத்தில், சிதம்பர விநாயகர் திருவடி மறவாத வ.நா. வகையில் திருவாளர் நாகப்பசெட்டியாரும், திருமதி நாச்சம்மை ஆச்சியாரும் செய்த தவப்பயனாக துன்முகி தை மாதத்தில் (ஜனவரி 1896) திருமாலின் நட்சத்திரமான திருவோணத்தில் பிறந்தார்கள். இவரோடு உடன் பிறந்தவர்கள் வள்ளியப்ப செட்டியார், பழனியப்ப செட்டியார், சொக்கலிங்கம் செட்டியார் ஆகியவர்கள். அவர்களில் தற்போது பழனியப்ப செட்டியாரும், சொக்கலிங்கம் செட்டியாரும் மற்றவர்களின் சந்ததியாரும் சிறப்புடன் திகழுகிறார்கள்.

நமது அண்ணாமலை செட்டியார் இளமையில் கற்பன கற்று, கற்றபடி

நின்று, பெரிது முயன்று பெரும் பொருள் ஈட்டி, செட்டுடனும் சிவனடி மறவாத சிந்தையுடனும் வாழ்ந்து **தெய்வானை ஆச்சியை** மணந்து அறம் வழுவாது நடத்திய இல்லறத்தின் பயனாக ஐமுகவனுக்கு ஆறுமுகம் பிறந்ததுபோல், **நாகப்பன், குமரப்பன், வள்ளியப்பன், சிதம்பரம், நாச்சியப்பன், சுப்பிரமணியன்** என்ற ஆண் மக்களும், **நாகம்மை** என்ற பெண் மகளும் பிறந்து, மணம் பெற்று மக்கள் மனைசெல்வங்கள் மல்க வாழ்ந்து வருகிறார்கள். சென்ற துன்முகி— தை—மீ 18உ (31-1-1957) அன்று அறுபதாண்டு சாந்தி மணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவர்கள் கானாட்டுத் தொலையானூரில் **மீனாட்சி சுந்தரர் கோவிலை** தம்பி, சொக்கலிங்கம் செட்டியாருடன் சேர்ந்து அமைத்துள்ளார்கள். மேலும், ராங்கியத்தில் ஊராட்சி மன்றத்தைத் துவக்கி அதன் தலைவராக பல ஆண்டுகள் இருந்து பல நற்பணிகள் செய்தார்கள். மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டியை நிறுவுவதற்குப் பெருந்தொகை அளித்துள்ளார்கள். சிவகாமி அம்பாள் உயர் நிலைப் பள்ளியை நிறுவி, அதன் வளர்ச்சிக்கு இவர்கள் செய்திருக்கும் சேவை மிகவும் பாராட்டத் தக்கது. **நேமம் கும்பாபிசேக நகர விருந்துச் செலவைத்** தான் ஏற்றுக்கொள்வதாக வாக்களித்தார்கள். இன்னும் பல அறப்பணிகளையும் செய்து வந்த நமது **அண்ணாமலை செட்டியார்** மதுரை பாங்கின் டைரக்டராக இருந்து வர்த்தகத் துறையிலும் சேவை செய்து வந்து, நாளது சார்வரி ஐப்பசி 3மீஉ (19-19-1960) தீபாவளி நன்னாளில் இரவு 8 மணிக்கு சிவபதவி அடைந்தார்கள்.

அறப்பணிச் செல்வர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் நினைவாக எழுதப் பெற்ற நேமம் தல புராணம் 29ம் பாடலிற் கூறியவாறு, அவர்கள் மண்ணுலகில் வாழ்ந்த ஆண்டுகளையும் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் நினைவூட்டும் வகையில் 64 பாடல்களாகவே அமைந்ததும் செயங்கொண்டார் திருவருட் செயலேயாகும். தங்கள் தந்தையார் செய்ய நினைத்தவைகளை அவரது செல்வ மக்கள் நிறைவேற்றி வருவது மிகவும் போற்றத்தக்கது. அண்ணாமலை செட்டியார் ஆன்மா சாந்தியுற செயங்கொண்டாரை வேண்டி இந்த மலரைச் சமர்ப்பிக்கிறேன்.

சார்வரி-தை-க.
14-1-61
பிரதோஷம்

நாராயண—நடராசன்.

ஓம்
தமிழுக்கு வெற்றி!

மரகத விநாயகர் மலரடி போற்றி!
செயங்கொண்ட சோழீசர் சேவடி போற்றி!
செட்டி முருகன் திருஅடி போற்றி!

நேமம் நகரத்தாருக்குத் திரு முகங்கள்

"இத்தரை முழுதும் இசைபெறும் நம்மீர்!
முத்தப்பன் யான் மொழிவது கேண்மின்!
செந்தமிழ்ச் செல்வச் சீமான், இவர் தாம்
வளம்பெறு(ம்) **நிம்பை மார்த்தாண்டப் புலவர்**
மடப்பளி அடுப்பு மறந்தது தொழில் ;அதில்
ஆம்பி பூத்ததாம் ;ஆதலினால் இவர்
நம்பால் உற்றனர் நாவலர் இவற்கே
வேண்டும் பரிசில் விரும்புவ அளித்தும்
ஆண்டு இவர் வறுமை நோய் அறவே களைந்தும்
சிறப்புற அனுப்புவீர் சீரார் நேம
நகரில் குபேர நலம் படைத் தோரே!"

இப்பாடலுடன் நேமம் சென்ற வேம்பத்தூர்த் தமிழ் வேந்தர் நகரத்தார் செய்த உபசாரங்களாலும் அளித்த பெரும் பரிசாலும் அகம் மகிழ்ந்தார்.

–ஒரு சிலையை

"வில்லாய் வளைத்த செயங்கொண்டார் திருவருளால்
எல்லோரும் வாழ்வீர்! இருந்து!"

–முத்தப்பர் வரலாறு

ஆசிரியர் திரு முகம்

"திட நேமச் செயங்கொண்ட செல்வத்
தனவணிகீர் !
நடராசப் பாவலன் யான் நவில்வது கேட்டருள்
செய் மின் !
முத்தப்பன் திருமுகத்தை முதுபேரன்பால் ஏற்றுச்
சித்த நிறைவுடன் பரிசில் சேர அளித்(து) ஒப்பற்ற
புகழ் பெற்றீர்! திருமதுரை பொலிவுபெற
அறம் வளரத்
திகழ்ந்திலகு சைவ நெறிசெந்தமிழோ(டு)
இணைந்(து) ஓங்க
ஏன்ற பணி செய்து (உ)லகில் ஏழு நகர் வணிகர்
புகழ்
சான்றாண்மையுடன் பரப்பும் தமியேன் ;வயிரவனாம்
நல்லன்பன் வேண்டச்செய் நவமுறைப்
புராணமிதை
கல்வெட்டுச் செய்திகள் சா. கணேசன்
வழியறிந்து
செயங்கொண்ட நேமத்திருக்கோயில் வரலாற்றை
வயங்கொண்ட அண்ணாமலை நினைவாய்
வழங்கினனால்:
உற்றுணர்ந்து பேறுகள் நீர் ஓர் எட்டும் எட்டும்
எய்திப்
பெற்றுப் பெருகிப் பெயர் நிறுத்திச் செயங்
கொண்ட
நல்லான் திருவருளால் நால் எட்டு அறம்
வளர்த்து
வல்லாராய் வாழ்வீர்! மகிழ்ந்து!"
"அணிபணியார் செயங்கொண்டாரருளால் ஏழூர் நகர
வணிகர் எலாம் வாழி! மகிழ்ந்து"

செயங்கொண்டார் அட்டாட்சரத் தோத்திரம்

இளவரசன் நா. நடராசன் திருமதுரை (கீழச்) சிவப்பட்டி)
சார்வரி கார்த்திகை 22ம் நாள் (7-12-60)
புனர் பூசத்தன்று அரங்கேறியது.

1. "நன்மை மல்க! நிதிக்கோன் தான்
நல்ல குலம் என்(று) எ(ண்)ணிப் பிறந்த
தன்மைப் புகழார் **தனவணிகர்**
தமிழும் சிவனார் தவநெறியும்
நன்மை அறங்கள் நால் எட்டும்
நாட்டில் வளர்த்தே நாட்டம் உடன்
மன்மை பெறவே செயங்கொண்டார்
மலர்ச் சேவடிகள் வாழ்த்துவமே!"

2. "ஓம் " எப்பொருட்கு(ம்) முதற் பொருளாம்;
"உகரம் " நடுவாம் ; "அம் "முதலாம்
சேமம் தரும் மந்திரக் குழுவில்
சிறந்த தலைமை நாத மந்த்ரம்
ஆம் ; "ஓம் மனுவே முதல் மனு" என்(று)
அறிந்தார் நகரத்தார் வாழ்ந்து
நேமம் சிறக்கச் செயங்கொண்டார்
நிமலப் பதங்கள் நினைவோமே!"

3. "மன்னர் அமைத்த திருக்கோயில்
மரபால், பணியால் பின்னவராய்
மன்னும் உரிமை, கடமை என
மனத்தில் எண்ணிப் பணி செய்யும்
தென்னர் **சிவகோத்திர வணிகர்**
செகத்தில் சீராய்த் திகழ்ந்திடவே
பொன்மை மேனிச் செயங்கொண்டார்
பொற்பதம் நாளும் போற்றுவமே!"

4. "நாடு கோட்டை நகர் மூன்று
நலங்கள் உடையார் நல் அறத்தால்
தேடும் புகழார் :சோணாட்டுச்
சேரும் புகழார் :சீரகத்தார்
சூடும் புகழார்: தென்பாண்டித்
துரைமாவணிகர் சுகம் பெறவே
ஆடும் புகழார்: செயங்கொண்டார்
அடிகள் நெஞ்சில் அணிவோமே!"

5. 'ராம' என்னும் இரண்(டு) எழுத்தை
நாளும் ஏத்தும் **நகர் வணிகர்**
சோமன் அணியும் சிவனார்தம்
தொன்மைப் பஞ்சாட்சரப் பயனும்
வாமத் திருமால் எட்டெழுத்தால்
வாய்க்கும் பயனும் வாழ்வும் உற
நேமத்(து) இறைவர் செயங்கொண்டார்
நேரார் பதங்கள் நினைவோமே!"

6. "யவமாம் சாலி, நவதான்யம்,
நற்பத்திரங்கள் கொண்டுயக்ஞும்
தவமாம் பூசை பலவிதமும்
சகம் வாழ்ந்திடச் செய்தமிழ் வணிகர்
நவமாம் வாழ்வில் திகழ்ந்(து) என்றும்
நல்லோர்ப் புரந்து நயம் பெறவே
துவமான் ஏந்தும் செயங்கொண்டார்
தொன்மைப் பதங்கள் துதிப்போமே!"

7. "(நா)ணாளும் பொன் தேடுவதும்
நம்பன் அடியார் நயப்புறவே
(வா)ணாளும் சீர்ப்பணிக்(கு) என்றே
மனத்தால் எண்ணும் மதி வணிகர்
(மா)ணாப் பெருமை மன் இணையும் மரியாதையும்
சேர் வாழ்வுறவே
சோணாசலராம் செயங்கொண்டார் துங்கத்
திருவடி தொழுவோமே!"

8. "யத்தனத்தால் ஏதொன்றும்
நடவா(து) எல்லாம் இறை செயலே
அத்தன் நினைவைச் செயலாக்கும்
அடியாரே நாம் என்(று) அறிந்தார்
வித்தம் பெற்றே அறம் வளர்க்கும்
வேள் வணிகர் இம்மேதினியில்
நித்தம் வாழச் செயங்கொண்டார்
நிகரில்பதங்கள் நினைகுவமே!"

பிற நூற் குறிப்புகள்

"இளமை நேமம்"
"பாமணக்கும் முத்தப்பன் பாவலனார் வாக்கு
மிகச்
சேம(ம்) உற்று ஓங்கி வரத் தேனாறு சூழ்ந்(து)
இலங்கும்
நேம நகரச் சோழீசர் நேர்மையுடன் தந்த திருக்
கோமகனே! எங்கள் குலக் குஞ்சரமே!
கண் வளராய்!"
– தன வணிகர் தாலாட்டு

"கருது நேமம் செயங்கொண்ட சோழீசர் பங்(கு)
அமர் சவுந்தரியும் வாழி!"
– வணிகர் வாழ்த்து

"களைப்(பு) ஆற்றும் நன் நேமம்"
– வணிக மண்டல சதகம்.

"சோதி வெண் பிறைக் கோடு (உ)ழக்கிழிந்து
அடைசொரி தேன்
மோதும் மூவகைக் கனிகளும் நறவொடு முடுகிக்
கோதிலா மது நதி எழச் சாலிகள் கொழிக்கும்;
ஆதலால் இதை "நியமம் "என்(று) உரைக்கும்
இவ் அகிலம்"
– சங்கிரக ராமாயணம்

"கேரள சிங்க வளநாட்டில் நேமம் ஆகிய குலசேகர
புரத்தில் தேனாறு பாயும் இளநலம் உடையார்"
– இசைகுடி மானம்

"இத் திருத்தலம் (நேமம்) மிகப் புராதனமான பெருமை உடையது. சிவபெருமான் திரிபுரத்தைச் சிரித்துச் செயங்கொண்ட ஐதீகத்தின் பெயரால் இக்கோவில் மூலலிங்கத்துக்கு "செயங்கொண்ட சோழீசர்" என்னும் திருநாமம் விளங்குகிறது."

– ஒன்பது கோயில்கள் விளக்கம்

ஞானத் தமிழ் புரிந்த நல்லார் வேட்கை

பிழைப்பு வாய்ப்(பு) ஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல்மாலை கொண்டருள் போற்றி!
– மணிவாசகர்

"விரைவிடை இவரு(ம்) நினைப்பிறவாமை
வேண்டுநர் வேண்டுக; மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொல் மலர் நினக்(கு) அணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்"
– சிவப்பிரகாசர்

"பாடும் பணியே பணியாய் அருள்வாய்!"
– அருணகிரியார்

"என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
– திருமூலர்

ஓம்
செயங்கொண்ட சோழீசர் துணை

நேமம் தல வரலாறு

"சீர் பொருந்தும்"
"நகரமெலாம்"
"செயங்கொண்ட"

"ஆண்டவனாய் அகிலமெலாம் அளித்து, ஆண்டு, அழித்து அருளும், தாண்டவனார் பழம் பதியாம் தண்பாண்டி வளநாடு" என்று ஆன்றோர் புகழும் செந்தமிழ்ப் பாண்டித் "தேயத்தில் "செந்தமிழை, மேலாம் சிவநெறியைப் பேணுதற்காய் வ்நத தனவணிகர் வாழ்ந்து, எண்ணான்கு அறம் வளர்த்து இசை பெற்றிலங்குவது செட்டிமார் நாடு.

இந்நன்னாட்டில் பதினான்கு பாண்டித்தலங்களில் திருப்புத்தூர், பிரான்மலை ஆகிய கொடுங்குன்றம், காளையார் கோயில் ஆகிய கானப்பேர் ஆகியவைகளும் பாடல் பெற்ற சிவத்தலங்களோடு உடன் வைத்து எண்ணத்தக்க தொன்மை உடைய மாற்றூர், இளையாற்றங்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி, சூரைக்குடி, வேலங்குடி, வயிரவன்பட்டி, இலுப்பைக்குடி ஆகிய நகரக் கோயில்களும், திருக்கோட்டியூர், திருமயம், அரியக்குடி முதலான வைணவத் தலங்களும், வேதாந்த மடாலயம் திகழும் கோயிலூர், பாதரக்குடி, கலாமடம், துலாவூர் முதலான உபதேச குரு தானங்களும் சரித்திர பிரசித்தியும் தல புராணங்களும் பெற்றுள்ள திருமதுரை கீழச்சிவபுரி, செந்தமிழ் மேலைச்சிவபுரி, தேவகோட்டை கண்டதேவி, காரைக்குடி, செயங்கொண்டபுரம், நாட்டரசன்கோட்டை, பொன்னமராவதி, பூங்குன்ற வேலங்குடி, சோழபுரம், சுந்தரபாண்டியபுரம், குலசேகரபுரம், வீரபாண்டியபுரம் புதுப்பட்டி, புதுக்கோட்டை, அரிமழம், ராசநாராயணபுரம், ஆற்காடு, ஆதன்குடி, பலவான்குடி, கொரட்டி நாச்சியார்புரம் முதலான எண்ணற்ற நல்லூர்களின் அண்மையில் "நடு நாடு" என்னும் பேருடன் அரச வனத் தலமாய் குன்றுதோறாடலில் ஒன்றாய், அண்ணாமலை நல் ஆதீனமும் அருள்நெறியும் பொலியத் திகழும் மயில் மலையான குன்றக்குடிக்கு வடக்கே ஒரு நாழிகை வழி (ஒன்றரை மைல்) யில் கீழச்சிவப்பட்டிச் சாலையில் சிவம் பெருக்கித் திகழுவது "நேமம் " திருத்தலம்.

நேமம் நகரக் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஒன்பது பொதுக் கோவில்களில் பழமையானதும் புகழ்பெற்றதுமாகும். பூங்குன்ற வேலங்குடியில் உள்ள நகரத்தார் சரித்திரக் கல்வெட்டிலிருந்து நேமம் கோயிலும் சேத்திர சுவாத்தியங்களும் தேனாறு பாயும் இள நலம் உடைய நகரத்தார்களுக்கு கலியுக வருடம் 3815ல் சாலிவாகனசகம் 636 கி.பி. 7141ல் ஏறத்தாழ 1250 ஆண்டுக்கு முன்னால் சவுந்தர பாண்டிய ராசனால் விட்டுக் கொடுக்கப் பெற்றதாகத் தெரிகிறது. ஆயினும் அண்மையிலுள்ள ஆற்காட்டில் தேனாற்றின் உற்பத்தித் தானத்தில் உள்ள மதுநதீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்தும், பாண்டியனின் தளபதியான கண்டன் உதயஞ் செய்தாறான காங்கேயன், நேமராசன் முதலானோரின் ஆட்சி பற்றியும் கோட்டைகள் பற்றியும் கூறப்பெறும் கர்ணபரம்பரைச் செய்திகளிலிருந்தும் நேமம் கோயில் மிகப் பழமையானதென்றும், ஆதி ஆலயத்தில் கல்வெட்டுகள் இருந்திருக்க வேண்டுமென்றும் ஊகிக்க இடமிருக்கிறது. ஆற்காட்டில் அகத்தியர் ஆலயப் பிரதிட்டை செய்திருப்பதாலும் குன்றக்குடியை

வழிபட்டபோது, அகத்தியர் நேமத்தை வழிபட்டிருக்க வேண்டும் என்பது ("தெட்சணமாமுனி பரவும் தென் நேமம்" என்று முத்தப்பையா செயங்கொண்டார் சதகத்தில் குறிப்பிட்டிருப்பதாலும்) தெளிவாகிறது.

கற்பனை கடந்த சோதியும், ஆதியும் அந்தமும் இல்லா அறவாழி அந்தணனும் செருக்குற்று உலவிய திரிபுரங்களைச் சிரிப்பால் எரித்த செம்மேனி அம்மானுமான செயங்கொண்ட சோழீசர் வீற்றிருந்தருளும் திருக்கோயிலுக்கு இன்று நடைபெறும் (சார்வரி தை - மீ௨உ 5-2-1961) அத்தம் குடமுழுக்குக்கு முன் 1907ல் மகா கும்பாபிஷேகமும், மற்றும் பல தடவைகள் அஷ்டபந்தன அபிஷேகங்களும் நிகழ்ந்துள்ளன. இன்று நடைபெறும் அபிஷேக விழா சிறப்புற பல ஆண்டுகளாய்த் திருப்பணி மேற்பார்வையிலும், கும்பாபிஷேக ஏற்பாடுகளிலும், தேவகோட்டை திருவாளர்கள் உ.ராம.மெ.சுப சேவு. மெ. மெய்யப்ப செட்டியார், அ.லெ.லெட்சுமணன் செட்டியார், கோயில் சம்பந்தமான கிராம நிர்வாகங்களில் முத்தப்பையா பரம்பரையில வந்த எ.நா. காசிவிசுவநாதன் செட்டியார் முதலானோர் பெரும்பங்கெடுத்து கொண்டுள்ளனர்.

ஊரின் பெயர்கள் 1. நியமம், 2. நந்தி (ராசன் பிரதிஷ்டை செய்த) புரம் 3. மதுநதிபுரம் 4. செயங்கொண்ட சோழபுரம் 5. மதுவனத்தலம், 6. குலசேகரபுரம் 7. நேமம்.

"நியமம்" என்பது உயிரினும் பெரிதாக ஓம்பப் பெறும் ஒழுக்கம். ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோர் பலர் வாழும் ஊராதலால் சயங்கொண்டார் சதகம், திருமுக விலாசம், வணிகர் வாழ்த்து, நகர வாழ்த்து வணிக மண்டல சதகம், வணிகர் வரலாறு, இளசைப் புராணம், மாற்றூர்ப் புராணம், வயிரவன் கோவில் புராணம், சூரக்குடிப் புராணம், இலுப்பைக்குடிப் புராணம், மயூரகிரி மான்மியம், பிள்ளையார்பட்டித்தல வரலாறு, தன வணிகர் தாலாட்டு, வணிகர் தசாங்கம் முதலான நூல்கள் எல்லாவற்றிலுமே "நியமம் " என்ற பெயரே வழங்கப் பெறுகிறது.

கோயில் அமைப்பு

கல்வெட்டுக்களில், "கேரள சிங்கவள நாட்டில், நேம நாட்டில், கீழ்க்குண்டாற்று, தேனாற்றுப்போக்கு" என்று குறிப்பிடப் பெறுகிறது. வெயிலுகந்த விநாயகர் கோயிலுக்குப் போகும் வழியில்" கோட்டை மேடு" என்று வழங்கப் பெறும் இடத்தில் நேமராசன் கண்டன், உதயஞ்செய்தான் ஆகியோரது கோட்டைகள் இருந்திருக்கலாம். நேமன் என்பவன் பொன்னமரா வதியை ஆண்ட பொன்னன், அமரனுடன் பிறந்தவன் என்றும் "நேமன் கோட்டையோ ஏமன் கோட்டையோ? "என்று நாட்டார் வியக்கும் வண்ணம் கோட்டை கட்டி ஆண்டான் என்றும், முடிவில் சகோதரர்களுடனேயே சவுந்தரபாண்டியனால் கொல்லப்பட்டான் என்றும் கர்ணபரம்பரைக் கதை கூறப்பெறுகிறது.

கிராம தேவதைகளும், சுற்றுக்கிராமத் தெய்வங்களுமாக எண்ணற்ற கோயில்கள் உள்ளன. இத்துடன் மேலேசுவரம் என்ற பழமையான சிவாலயமும், பழையாதங்குடிப் பகுதியில் சிவாலயமும் பெருமாள் கோயிலும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. மேற்படி கோயில்களிலிருந்த மேலேசுவரர், சக்கரம், சீதை, பெருமாள் முதலான சிலைகளும், விக்கிரகங்களும் எடுத்துப் பல ஆலயங்களில் வைக்கப் பெற்றுள்ளன.

வெயிலுகந்த பிள்ளையார் கோயில் நேமந்தான் கண்மாய்க்கரை தென்கோடியில் உள்ளது. மிகவும் வரப்பிரசாதியான இப்பிள்ளையார் சிலை பழமையின் சின்னத்தைப் பெற்றுத் திகழ்கிறது. மேலே விமானமும் கோயிலும்

அமைக்கத் திருவுளம் இல்லை. மண்டபமும் சிதைந்துள்ளது. அண்மையில் திரவியதீர்த்த விசேடம் வாய்ந்த ஊருணி இருந்திருக்கிறது. செயங்கொண்டார் சதகத்தில் முத்தப்பையா இவ்விநாயகரையே முதலிற் கூறியுள்ளார்.

செயங்கொண்டாருக்கு கிழக்கே பார்த்த சன்னிதியும், சவுந்திரநாயகிக்கு தெற்கே பார்த்த சன்னிதியும், விசேடமூர்த்தியான வயிரவருக்கு மேற்கே பார்த்த சன்னிதியும், இரண்டு பிரகாரங்களும், திருமதிலும், தெற்கே பெரிய கோபுரமும் அமைந்துள்ளன. கிழக்கேயுள்ள ராஜகோபுரம் இனிமேல்தான் அமைக்கப்பெற வேண்டும். நீராழிப்பத்தி மண்டபத் தூண்களிலும் அணியொட்டிக்கால் மண்டபத்தூண்களிலும் அட்ட வீரட்ட மூர்த்திகளும், மேற்படி தேவிமார்களும் அழகொழுகும் சிலைவடிவில் அமைக்கப் பெற்றுள்ளனர். இருபதுக்கு மேற்பட்ட ஊர்களில் எண்ணூறுக்கு மேற்பட்ட குடும்பத்தினராய் வாழும் நகரத்தார்களால் பொற்பணியினும் சிறந்த கற்பணியாய் அமைக்கப் பெற்றுள்ள இத்திருக்கோயில் சிற்பவேலைகள் மிக அற்புதமாக அமைந்துள்ளன.

கோயிலின் எதிரே நகரத்தார் விடுதியும், களஞ்சியமும், கோவிற் பணியாளர் வீடுகளும், வடக்கே பள்ளிக்கூடம், நந்தவனம், பசுமடம் ஆகியவைகளும் திகழ்கின்றன.

பாடல் பெற்ற செயங்கொண்டார்

மதுரை சங்கத்தில் இறையனார் என்ற பெயருடன் புலவர் தலைவனாய்த் திகழ்ந்த செயங்கொண்டாரைப் பாடிப் பரவிய புலவர்கள் எண்ணற்றவர்கள். புலவர் குலப்பொன்முடியும் கடாட்சகவியுமான பாடுவார் முத்தப்பையா செயங்கொண்டார் பேரில் பிள்ளைத் தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, ஊசல், சதகம் மற்றும் பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். சுவாமி முருகானந்தம், அரிமழம் கிருஷ்ணமூர்த்தி, நெற்குப்பை ராமசுப்ரமண்ய பாரதி, கீழச்சிவல்பட்டி நா. நடராசன் செட்டியார் முதலான பலரும் பல நூல்களைச் செய்துள்ளனர். முத்தப்பையா நூல்களில் செயங்கொண்டார் சதகம் ஒன்றே அச்சாகியுள்ளது.

பொதுவாக உலகில் யார் எத்தனை தூரம் கட்டிக் கொடுத்தாலும் பேணிவைப்பினும் செல்வம் வழிவழியாக நிலைப்பதில்லை. ஆனால் காணி காணியாக ஈட்டிக் கோடி கோடியாகத் தருமம் செய்யும் இயல்பு வாய்ந்த நமது நகரத்தார் செய்த தவப்பயனாலும், அருள் வாக்காளர் முத்தப்பையா "என்றைக்கும் நீங்கா(து) இரு" என்று இலட்சுமிக்குக் கட்டளையிட்டபடியாலும் பொதுவாக ஏழுவகை, இருபத்தோரு கோத்திரமும், ஒன்பது கோவிலும் உடைய நகரத்தார்கள் அனைவரும் சிறப்பாக, தேனாறு பாயும் இளங்லம் உடைய நேமம் நகரத்தார்களும் மகாயோக, பாக்ய சம்பன்னர்களாய், திருப்பணிச் செல்வர்களாய், தமிழ்நாடு முழுவதும், இந்திய நாட்டிலும், இலங்கை, பர்மா, மலேயா, தாய்லந்து இன்னும் உலகின் பல பகுதிகளிலும், முப்பத்திரண்டு தர்மங்களையும் பரிபாலித்து வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் "சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்" வாய்ந்து, "முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையராய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியராய" செயங்கொண்ட சோழீசர் திருவருளால் சிறப்புற வாழ்வது திண்ணம் என்ற நினைவுடன் முத்தப்பையா கூறிய வாழ்த்தினைக் கூறி இதனை நிறைவு செய்வோமாக!

வில்லாய் வளைத்த செயங்கொண்டார் திருவருளால்
எல்லாரும் வாழ்வீர் இருந்து!"

நல்லார் புகழ் கூறி நால் எட்(டு) அறம் வளர்க்கும்
வல்லாரே செவ்வேள் மரபினரே! — சொல்லாரும்
கல்லானை தின்னக்கரும்(பு) அளித்தான் கண் அருளால்
எல்லாரும் வாழ்வீர் இருந்து!"

"மாவாழும் ஏழுவழி நகரத்தார்க்(கு) என்றும்
கோவாழும் செல்வக் குலதெய்வ— மா(ய்) வாழ்
மரகத விநாயகனை மாமலர் தூய் வாழ்த்த
வரநல வாழ்(வு) எல்லாம் வரும் " – (நகரத்தார் சரித்திரம்)

"உலகெலாம் வாழி வாழி ! ஒன்பது நகரக்கோவில்
வலமுள பரமன், அம்மை மரகத விநாயகன் சீர்
நலமிகு முருகன் வாழி! நாளும் சந்தானம் பல்கி
மலர்மகள் அருள் பெற்றேழு வழி நகரத்தார் வாழி!" –(நகரத்தார் சரித்திரம்)

கோத்திரத்துப் பெருமக்கள்

"திருமுக விலாசம்" என்ற ஒப்பற்ற அருள் நூலைப்பாடி வணிகர் சமுதாயத்துக்கு பெருவாழ்வு தந்த பாடுவார் முத்தப்பையா நேமங்கோயிலைச் சேர்ந்தவர். முத்தப்பையாவைப் பெற்றதொன்றே நேமத்திற்குப் பெரும்புகழ் தருவதாகும். மேலும் தானங்களில் எல்லாம் தலை சிறந்ததான அன்னதானத்தை சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் பழனியில் தொடங்கி "அன்னதான மடத்தை" நிறுவிய குமரப்ப ஐயாவும் நேமம் கோயிலாரே, இளையாற்றங்குடி ஒக்கூராருக்கு நகரத்தார்களில் முதல் விபூதி மரியாதை ஏற்படக் காரணமான நிகழ்ச்சியும் நேமங்கோயில் அருணாசலம் செட்டியார் மகள் முத்து மீனாளால் நிகழ்ந்ததே. இவ்வாறு நகரத்தார் சரித்திரத்தின் முக்கியப் பகுதிகளிலெல்லாம் நேமங்கோயிலார் கலந்து கொண்டுள்ளனர்.

"ஏரோங்கு பொழில் புடைநேம, எழிற்பதியின்
மூவுலகும் இறைஞ்சி ஏத்தப்
பாரோங்கு வளங்கள் எலாம் பல்கச் செல்வம்
படைத்த தனவணிகர் குலம் செழித்து வாழ
நீரோங்கு சடாமகுடச் செயங்கொண்டாரின்
நிலவு திரு ஆலயத்தின் மேவுகின்ற
சீரோங்கு செயங்கொண்ட விநாயகன் தன்
திருவடித் தாமரை மலரைச் சிந்தை சேர்ப்பாம்".

புலவர் பெருமக்கள்

கல்வி ஒன்றே உலகில் நிலைபெற்ற செல்வம். திருப்பணிகளும் அறங்களும் செய்த அரசர்களை— செல்வர்களைத் தவிர மற்றவர் பெயரே வரலாற்றில் வருவதில்லை. ஆனால் இலக்கிய வரலாற்றில் கல்விமான்கள் பெயர் வராதிருக்க வழியில்லை. அழியாத புகழ் நூல்களைச் செய்த அறிவாளர்களை என்றென்றும் மறக்க இயலாது. அத்தகையாரிலே தலைசிறந்த **பாடுவார் முத்தப்பையா** பிறந்த நேமங்கோயிலில் தற்போது புகழோடு பொலியும் புலவர்களில் சிவபூசாதுரந்தரும், தமிழ் வள்ளலுமான தேவகோட்டை உ.ராம. மெ.சுப. சேவு. மெ. **மெய்யப்ப செட்டியார்** அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், கீழைத் திசைக் கழக அதிபராய் விளங்கும் நெற்குப்பை முத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, லெ. ப. கரு. **ராமநாதன் செட்டியார்** அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

நேமம் கோயில் நகரத்தார் வாழ்கிற ஊர்கள்

1. காரைக்குடி	2. செயங்கொண்டபுரம்
3. தேவகோட்டை	4. சண்முகநாதபுரம்
5. செம்பொன்னூர்	6. அரண்மனை சிறுவயல்
7. கல்லல்	8. கோட்டையூர்
9. பள்ளத்தூர்	10. கானாடுகாத்தான்
11. அரிமழம்	12. பலவான்குடி
13. நெற்குப்பை	14. வேந்தன்பட்டி
15. மேலச்சிவப்பட்டி (மேலச்சிவபுரி)	16. வலையபட்டி (வலம்புரி)
17. உலகம்பட்டி	18. ராங்கியம்
19. கீழச்சிவப்பட்டி (திருமதுரை)	20. கண்டனூர்

மொத்தம் 800க்கு மேற்பட்ட புள்ளிகள் வளர்ந்தேறி வாழ்கிறார்கள். காரியக்காரர்கள் 25 பேர். ஆண்டுக்கு 5 பேர் 5 ஆண்டுக்கு ஒரு முறை. வெகு தானிய வருஷம் முதல் பழைய காரியக்காரர்கள் 12 பேருடன் மேலும் 13 பேர் சேர்க்கப்பெற்று, ஆண்டுக்கு 1 முதல் 5.6 முதல் 10.11 முதல் 15.16 முதல் 20.21 முதல் 25 வரை வரிசையில் அவ்வக் குடும்பத்தில் வயதாலும், அனுபவத்தாலும் முதிர்ந்தவர்கள் ஐந்தைந்து பேர் கூடிச் சிறந்த முறையில் நிருவகித்து வருகிறார்கள்.

1. நெற்குப்பை. கு. பழ. சு. வகை
2. ஷ்ப. ராம. லெ. வகை
3. மேலைச்சிவப்பட்டி சி. ஆ. நா. & கும. சொ. ராம வகை (2)
4. ஷநா. ஆ. சி. வகை
5. கீழைச்சிவப்பட்டி அழ. மு. வகை
   (இவரும் ஓர் ஆண்டு)
6. வலையபட்டி குழ. அடை வகை
7. ஷந. மு. வகை
8. வேந்தன்பட்டி ந.ந. வகை
9. ஷநா. அரு. வகை
10. ராங்கியம் வ.நா. வகை
    (இவரும் ஓர் ஆண்டு)
11. காரைக்குடி நா. நா. வகை
12. கண்டனூர் தெ. அரு. வகை
13. பள்ளத்தூர் தெ.அ. & தெ. மு. & மு.பி வகை (3)
14. ஷஅரு. மு. நெ. சு வகை
15. கானாடுகாத்தான் அள. சு. வகை
    (இவரும் ஓர் ஆண்டு)
16. அரிமழம் சி. ராம வகை
17. ஷமு. செ. வகை
18. கோட்டையூர் கு. கரு. வகை
19. ஷகு.மு. வகை
20. ஷகு. வீர. வகை
    (இவரும் ஓர் ஆண்டு)
21. காரைக்குடி அரு. அ. வகை
22. ஷவீர. அ. வகை

23. கூஷகரு. வ. கரு. வகை
24. தேவகோட்டை உ. ராம. மெ. வகை
25. கூஷஉ. ராம உ. வகை

(ஐவரும் ஓர் ஆண்டு)

காரைக்குடியில் 4 பேர். தேவகோட்டையில் 2 பேர் கோட்டையூரில் 3 பேர். பள்ளத்தூரில் 2 பேர். கானாடு காத்தானில் ஒருவர். அரிமழத்தில் 2 பேர். நெற்குப்பையில் 2 பேர். வேந்தன்பட்டியில் 2 பேர். மேலைச்சிவப்பட்டியில் 2 பேர். வலையபட்டியில் 2 பேர். ராங்கியத்தில் ஒருவர். கீழைச்சிவப்பட்டியில் ஒருவர். கண்டனூரில் ஒருவர் ஆக 25 பேர்கள்.

சொத்துக்களும் நிருவாகமும்

கோயிலுக்கு சுமார் 500 ஏக்கர் வரை நஞ்சை, புஞ்சை, தென்னந்தொப்புகள் உள்ளன. நகரத்தார்கள் தரும் திருவிளக்குக் காணிக்கை, கட்டளைப் பணங்கள் கிராம வருமானத்திலிருந்து பூசைபடித் தரங்களும், உற்சவங்களும் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன.

சுவாமி பெயர்கள் : 1. செயங்கொண்டார் 2. செயங்கொண்ட சோழீசர் 3. நேமநாதர் 4. தேனாறுடையார்

அம்மை பெயர் : 1. சவுந்தரநாயகி

விநாயகர் பெயர்கள் : 1. மாணிக்க விநாயகர், 2. செயங்கொண்ட விநாயகர்

முருகன் பெயர்கள் : 1. கிருபாந்தகமூர்த்தி 2. சுப்பிரமணியர்

பரிவார தேவதைகள் : 1. விநாயகர், 2. தட்சிணாமூர்த்தி, 3. நால்வர் 4. கன்னி விநாயகர் 5. சோமேஸ்வரர் 6. மேலேசுவரர் (மேலேசுவரி) 7. பெருமாள் 8. அண்ணாமலையார் (லிங்கோற்பவர்) 9. சுப்ரமணியர் (வள்ளி, தெய்வானை) 10. கஜலட்சுமி (துர்க்கை, சரசுவதியுடன்) 11. பிரம்மா 12. துர்க்கை 13. சண்டிகேசுவரர் 14. வயிரவர் 15. தனியம்மை (சவுந்தரநாயகி) 16. நவக்கிரகங்கள் 17. சந்திரன் 18. சூரியன் 19. நந்தி 20. விசுவநாதர் (விசாலாட்சி) பலி பீடம், துவாரபாலகர் இரண்டாம் பிரகாரத்தில் 1. விநாயகர், 2. சுப்பிரமணியர், (சோழ தீர்த்த வடகரையில்) விநாயகர்

உற்சவ மூர்த்திகள் : 1. நடராஜர், 2. சிவகாமவல்லி (ஆவுடையம்பிகை) 3. நர்த்தன சுந்தரர், 4. விநாயகர் 5. சோமாஸ் கந்தர் 6. அருணாசலேசுவரர் 7. தெட்சிணாமூர்த்தி 8. அப்பர் 9. சுந்தரர் 10. சம்பந்தர் 11. மாணிக்கவாசகர் 12. சுக்கிரவார அம்மன் 13. சந்திரசேகரர் 14. சுப்பிரமணியர் 15. வள்ளி 16. தெய்வானை 17. பிரதோட நாயகர் 18. அழகிய நாச்சியம்மன் 19. சண்டீசுவரர் 20. பள்ளியறை மூர்த்தி 21. சக்கரம் 22. சீதை (அனைத்தும் பஞ்சலோகத்தால் ஆனவை)

வழிபட்டவர்கள் : 1. அகத்தியர் 2. தெட்சணமாமுனி 3. செயங்கொண்டான் 4. சவுந்தரபாண்டியன் 5. குலசேகரன் 6. நந்திராசன் 7. நேமராசன் 8. தளபதிகண்டன் 9. அருணகிரியார்

சுற்றுக்கிராம தேவதைகள் : 1. ஆற்காடுடையார் (மதுநதீசுவரர் மங்களநாயகி) 2. வயிரவர் 3. சிலந்தான் பிள்ளையார் 4. வெயில் உகந்த விநாயகர் 5. அழகாபுரிப் பிள்ளையார் 6. அரு. அ. பிள்ளையார் 7. சேவகப் பெருமாள் ஐயனார் 8. உகந்தான் ஐயனார் 9. காடப்பிள்ளை ஐயனார் 10.

பள்ளிமடை விநாயகர் 11. நெம்மேனி அம்மன் 12. அந்தரநாச்சி அம்மன் 13. கருப்பர் 14. நொண்டிக்கருப்பர் 15. ஆற்றுப் பிள்ளையார்

தந்தி & அஞ்சல் நிலையம் : குன்றக்குடி

பள்ளிக்கூடம் : ஆரம்பப் பள்ளி (நெம்மேனி ஏந்தல் at நேமம்)

ஜனத்தொகை : சுமார் 1000

தனிப்பட்டோர் அறங்கள்: தேவகோட்டை சிவத்திரு மலையாண்டி செட்டியார் ஆயிரம் வராகனுக்கு மேல் செலவிட்டு நந்தவனத்தைச் சீர்திருத்தி நடத்தி வருகிறார்கள்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

நேமம் தல புராணம்

சார்வரி –தை–க

14-1-61ல் அரங்கேற்றப் பெற்றது.

'வாகைபெறு செயங்கொண்டான் நேமநகர்
வரலாற்றை வகுத்துரைக்கத்
தோகையடிக் கணபதியை வெயிலுகந்த
நாயகனைத் துதித்து வாழ்வாம்'
"மலைமகளாய் உலகீன்ற கன்னிவளர்
நேமநகர் வளங்கள் கூறக்
கலைமகளாம் வெண்தாமரைக் கன்னி
தனை நெஞ்சிற் கருதி வாழ்வாம்"

செயங்கொண்ட தனவணிகச் சீராளர் வாழ்ந்(து)
இலங்கும் செட்டி நாட்டில்
நயங்கொண்ட நவதளியுள் நன்றியமத்தார்
வாழும் நல்லூர் ஆகி
வயங்கொண்ட பொன்வில்லை, மதிக்கீற்றை
ஏற்(று) இளசை வணிகர் வாழ்த்தும்
செயங்கொண்டார் வாழ்நகராம் தென் நேமப்
பெருமையினைச் செப்பி வாழ்வோம்"

(அவையடக்கம்)

"என்றும் உளம் செயங்கொண்டார் பால் வைத்தீர்!
இராங்கியத்தில் இசைநேமத்தில்
ஒன்றும் சீர்நாகப் பன்மகன் அண்ணா
மலை நினைவாய் உயர்ந்த மக்கள்
நின்றிசைக்க வயிரவனின் துணையினாலே
நீர் ஓதுக்கிப்பால் அருந்தும் நியாயத்தாலே
நன்றொழிய வேறேதும் அறியேன் சொன்னேன்
நயமனத்தால் ஏற்றருள்வீர் நகரத்தாரே!"

ஆற்றுப் படலம்

1. "மலையமுனி ஆற்காட்டில் மகிழ்ந்து
(உ)றையும் மாசிவனின்
தலையகத்தே முழுக்காட்டும்
தமிழ்நறவம் பெருக் கெடுத்துப்
புலயவனரும் மயங்கப்
பொற் கவிதைபோல் இனிக்கும்
தலையான சுவைநீரைத்
தந்தளிக்கும் தேனாறே!"

2. "கந்தரத்து நஞ்சென்னக்
கடல்மேய்ந்து கறுத்துருமி
எந்தலைவன் டமருகம் போல்
இசைமுழக்கி ஏழ்உலகும்
நிந்தையற்று வாழ்ந்துலகில்
நியமமுற மழைபொழியும்

செந்தமிழ்சேர் திருச்செயலால்
சிறந்தோங்கும் தேனாறே!"

3. "மந்தணம்போல் தூவெள்ளை
மாமுகில்கள் கடல்குடித்துச்
சுந்தரியாள் துர்க்கைஎனத்
தொனிஎழுப்பி மின்வெட்டி
அந்தமிலா உமையென்ன
அருள்சுரந்து பொழிமழையால்
பைந்தமிழைச் சிவநெறியைப்
பயிர்ஏற்றும் தேனாறே!"

4. "வேள்விப் புகையும் அகிற்புகையும்
விரவிக்கலந்து முகிலாகிக்
கேள்விமுறைதான் இல்லாதே
கெடியாய்க் கடலைக்குடித்(து) எழுந்து
தேள்விப்புருதி தருவ(து) எனத்
திகைத்து மயங்கிக் காற்றடியால்
தாள்குப்புறவே அலைந்து துளி
தான்பெய்திலங்கும் தேனாறே!"

5. "கலைமகள்போல் முகில்எழுந்து
கடல்மேய்ந்து கருவுற்ற
தலைமகளாம் துர்க்கையெனத்
தளர்நடையிட்டு(உ)றுகாலால்
அலைமகள்போல் அலைமுகில்கள்
அசலமகள் போற்கருணை
தலைமையுடன் பொழிதரலால்
தமிழ் பரப்பும் தேனாறே!"

6. "தேறுமதி ராங்கியத்துச்
செல்வன் அண்ணாமலையான்
ஆறுமுகம்தனைப் பெற்ற
ஆதிசிவன் எனப்பெற்ற
வீறுமதிச் செல்வர்குலம்
மென்மேலும் விளங்குதல்போல்
ஏறுமுகத் தோடுதமிழ்
இசைத்(து)ஓடும் தேனாறே!"

7. "ஆற்காட்டுக் கண்மாயின்
அணிகிழக்கில் புறகரையில்
வேற்காட்டும் கண்ணிஉடன்
விரும்பிஉறை வேய்முத்தன்
ஆற்காட்டு மதுநதியான்
ஆலயத்தின் புறத்து(உ)தித்துப்
பாற்காட்டித் தேன்காட்டும்
பல்சுவைத் தேனாறே!"

8. "ஆறு,குளம்,கண் மாய்கள்
அலங்கமுறும் ஊருணிகள்
தேறுபணிவுடைய பள்ளம்

செய்கள்எலாம் நீர்நிறைத்துப்
பேறுபலவும் நல்கிப்
பெருநாதன் எனும் கடலில்
கூறுடனே கலந்தும்சீர்
குலைதல்இலாத் தேனாறே!"

நாட்டுப் படலம்

9. "நிலமகளின் திலகமெ(ன்)னும்
நீர் உடுத்த பாரதத்தில்
புல மிகுத்த தென்னாட்டில்
பூழியர் கோன் பாண்டிதனில்
தலைமை பெறு மகுடமணித்
தன வணிகர் நாட்டையே
நிலைமை பெற வளம் பொலியும்
"நியமம்" எனும் நீர் நாடே!"

10. "வானாடர் தொழுதேத்தும்
வள்ளல் முழுக்காடுகின்ற
தேனாறு பாய்தலினாற்
செந் நெல் மிக விளைந்து
வானாடரும் நாணும்
வளர் நியமத்தார் சிறந்த
தே(ே)னாடு சோலை திகழ்
தென்னேம நன்னாடே!"

11. "கல்விச் சிறப்பால் பொருட் சிறப்பால்
கனத்தால் தனத்தால் காரியத்தால்
அல்லல் அறுக்கும் அறச் சொல்லால்
ஆசாரத்தால் நியமத்தால்
வல்ல திறத்தால் எளிமையினால்
வலிந்தீந்துவக்கும் வண்மையினால்
தொல்லைப் புகழால் இணை சொல்லத்
தோன்றா நேமச் சுடர் நாடே!"

12. "ஆற்றிற் சிறிதே ஆனாலும்
ஆறுமுகத்தான் சிகிமலையின்
போற்றும் உறுப்பாய்ப் புலவர் சொலப்
பொலிந்திடு மது நதிப் புறவினிலே
ஏற்றமுடைய செயங்கொண்டான்
இன்நெறி ஆலயம் இலங்குவதால்
மாற்று நிலை தவிர் பொன்னெ(ன்)னவே
மல்கும் நேம வள நாடே!"

13. "ஈவாரில்லை ஏற்பார்கள்
இல்லாமையினால் மனத்தின் வழிப்
போவாரில்லை யாவருமே
புலனையடக்கும் பொற்புளரால்
சாவாரில்லை இடைநடுவில்
தளர்வாரில்லை சார்நோயால்
ஓவாநீரின் நிலவளத்தால்
ஒப்பில்நேம உயர்நாடே!"

(நேம) நகரப்படலம்

14. "குன்றக்குடி யென்னும்
குமரன் திருத்தலத்தின்
நின்றெழுந்து நேர்வடக்கே
நெறிகூடித் திருமதுரை
ஒன்றும் உயர் சாலையினில்
ஒருநாழி வழிதனிலே
நின்றுதிகழ் திருத்தலமே
நியமம் எனும் நெறித்தலமாம்"

15. ஒப்புச்சொல ஓர்நாடி(ல்)லையேல்
உயர்(வு) எவ்வகையால் உரைபெறுமாம்?
அப்புத்திகழும் நேமமெனும்
அடல்சேர் நாட்டின் அணி நகராய்
செப்பும்புரங்கள் சிரித்தெரித்த
செயங்கொண்டானின் நேமச்சீர்
செப்புந்தரமோ? கனிச்சுவைதான்
தின்றாலன்றித் தெரிந்திடுமோ?

16. வரப்பே இல்லை எனும் சிறுமை
வரம்பின் இடையும் வரம்பின்றி
நிரப்பேயாக முத்து(உ)றங்கும்
நீரின்வளஞ்சேர் நேமமெனும்
புரப்போர் திகழும் ஊர்ப்புகழைப்
போந்தால்அறியலாம் அன்றிச்
சுரப்பேயறியா மலடிமக்கள்
சொல்லின்சுவையை உணர்வாளோ?

17. "ஏழ்தீவந்தனில் உயரும்
எழில் நாவலந்தீவில்
சூழ்பொழிலாற் சிறந்திலங்கும்
தோகைமலை தனக்(கு) அணித்தாய்
வாழ்வுறு சோழீசனுடன்
வயிரவனும் ஆட்சிசெயும்
ஏழ்நகரத் தார் திகழும்
எழில் மிக்க நேமமதே!"

18. "எத்தப்பு மில்லாதான் ஏழுநகர் வணிகர்எலாம்
நித்தம் புகழுறவும் நிலையாத திருமகளும்
சித்தம் குளிர்ந்தென்றும்
திகழச்செய் செழும் புலவன்
முத்தப்பன் பணிந்தேத்தும்
முதுநகரும் நேமமதே!"

19. "நந்தியெனும் மன்னவனும்
நன்நேமம் எனும் கோனும்
கொந்தணியும் நீபத் தார்க்
குலசேகரக் கோனும்
நிந்தையிலாப் புலமையரும்
நினைந்துருகி நெஞ்சாரப்

பந்தம் அறப் பணிந்தேத்தும்
பழந்தலமும் நேமமதே"

20. "தென்னவனாய்க் கேரளத்தும்
சீர் ஆட்சி செய் சிங்க
மன்னவன் பேர் சேர்ந்(து) ஒளிரும்
வளநாட்டில் கீழ்க் குண்டா(று)
என்றும் நதிக்கு (உ)த்தரத்தில்
இசைமிக்க தளத்தலைவன்
கன்னன் உதயம் செய்த
காங்கேயன் நேமமதே!"

21. "உகந்தான் கண்மாய் உள்வாய்
உவந்தளிக்கும் சாத்தனுக்குச்
சகந்தாழும் கழுத்தளவு
தண்ணீரைக் கட்டுவ மேல்
உகந்திடவே மழை பொழியும்
உண்மை; இன்றும் கண்கூடாம்
உகந்தானாம் ஆயர்கோன்
உகந்திருந்த நேமமதே!"

22. "மனத்தின் உரத்தால் நியமத்தால்
மாறாமறையோர் மலர்வேதன்
இனத்தில் வந்தார் தனவணிகர்
என்றும் ஏத்த இசைமல்கும்
புனத்தின் இடையே பொழில் திகழும்
பொன்னார் நேமப் பூஞ்சிறப்பை
இனைத்தென் றுரைக்க வல்லாரே
இல்லை உலகில்; ஈதுண்மை!"

23. "நொண்டிக் கருப்பன் சப்பாணி
நோற் பார்க்கு அருள் அந்தர நாச்சி
கண்டார் பழிச்சும் பள்ளிமடைக்
கணநாதன் சேவகப் பெருமாள்
செண்டார் காடப்பிள்ளை எனும்
செய்ய சாத்தன் நெம்மேனி
வண்டார் குழல் அழகியநாச்சி
வாழும் பதியும் நேமமதே!"

24. "பொன்னன் அமரன் எனும்
புகழாளருடன் பிறந்து
தென்நேம நாட்டில் அரண்
திகழ்கோட்டைதனைக் கட்டி
மன்னவனாம் சவுந்தர நன்
மாறனால் வீ(ழ்)ந்த புகழ்த்
தொன்மையினான் நேமன் வாழ்
தூய தலம் நேமமதே!"

25. "பஞ்சநதப் பேர் வாய்ந்த
பாவலனும் பழனியில் வாழ்
எஞ்சிவனாம் ஈசான இறையவனும் பூசனையால்

விஞ்சுபுகழ் மெய்யப்பன் வித்தக ராம(ந்)நாதன்
நெஞ்சுருகத் தொழுதேத்தும்
நீள்தலமும் நேமமதே!"

26. "நகரத்தார் நவதளியுள்
நல்இளைசை, வயிரவனூர்
சிகரமுயர் திருமாற்றூர் சீர்இலுப்பை சூரைநகர்
பகர்இரணியூர், வேலை பதிப்பிள்ளையார் பட்டி
நிகரில்எட்டாம் ஊர்திகழ
நின்றதலம் நேமமதே!"

27. "திருப்புத்தூர் கானப்பேர்
திகழ்பறம்புப் பிரான்மலையும்
மருப்புகுதும் பாண்டிதலம்
வளைந்திடவே அட்டசித்தித்
திருப்புகு நற்பட்டமங்கை
திருக்கோட்டியூர் இடையே
கருப்புகுதா நெறிகாட்டும்
கடித்தலமும் நேமமதே!"

28. "மங்களநாயகி உடனாய்
மதுநதியான் மகிழ்ந்துறையும்
துங்கநிறை சினகரமும் தும்பிமுகன் வெயிலுகந்த
ஐங்கரனின் திருத்தளியும் அளகைக் கணநாதன்
பொங்கமிகு ஆலயங்கள்
பொலிதலமும் நேமமதே!"

29. "கூடல்நகர்ச் சுந்தரனின்
குலவுவிளையாடல் என
நாடல்பெறு கலைஞான
ராங்கியம் அண்ணாமலையின்
கோடலில் வாழ்வு(ஆ)ண்டென்னக்
குலவும்அறுபான் நான்கு
பாடல்பெறு நேமநகர்ப்பதிச்
சிறப்புப் பகர்(வு)அரிதே!"

பல்கணத்துப் படலம்

30. "ஆதிசவுந்தரி சிலையில்
அமைந்ததொரு குறைநினைந்து
வேதியர்கள் வேறுசிலை
விருப்புடனே நிறுவுங்கால்
நீதியோடு நெறிகூறி
நிலைபெற்றுச் சன்னிதிகொள்
சோதிசவுந்தரி திகழும்
துகளில் நிலைஓர் பாலாம்!"

31. "மதகளிற்றின் திருமுகமும்
மாணிக்கமாம் பேரும்
நதம்ஒழுக்கும் துதிக்கரமும்
நால்வாயும் செயங்கொண்டான்
புதல்வனென அப்பெயரும்

புனைந்து கன்னித்திசை அமர்ந்து
நிதம்அருளும் கணபதிவாழ்
நிலையொருபால் நிலவிடுமே!"

32. "உருபாந்தள் வாய் கவ்வி
உலகெல்லாம் ஒரு நொடியில்
வருபாகத் தோகை மயில்
வாகனனாம் மால் மருகன்
கிருபாகரன் நேமக் கெடித்
தளியில் கிருபாந்தப்
பெருபாகன் எனத் திகழும்
பேர்த்தளியோர் பாலுளதே!"

33. "விண் வாழும் புலவரினும்
மேலானார் வேதநெறிப்
பண்பாடும் தெய்வ நெறிப்
பாவலராம் நால்வர்களைக்
கண்ணாரு(ம்) இளமுருகைக்
காசி விசுவேசுரனை
திண்ணார் மேலேசனையும்
சேர்ந்தமைந்த தளி பலவாம்!"

34. "மலிபுகழ்ப்புத்தூர் வயிர
வன் கூறு எட்டில் ஒன்று
பொலிபுகழார் வடுகேசன்
புனிதை சவுந்தரி பின்னாய்
ஒலியெழுப்பி மேற்கு முகத்(து)!"
உயர்யோக நிலை வாய்த்துக்
கலியெழுப்பி மகிழ் நிலையோர்
கலைபோலத் திகழ்ந்திடுமே!"

35. "அன்னதிறல் வடுகனெதிர்
ஆன்ற பலி நேர்ந்த கடா
தன்னதிரச் சத்தமிட்டுச்
சன்னல் நுழைந்(து)இமைப் போதில்
முன்னிலுமே சிறப்பமைய
முன்னிற்கும் மூதருளைப்
பொன்னளியார் கூறலன்றிப்
புலமைக் கூற்றாமன்றே?"

அகத்தீசுவரப் படலம்

36. "கைமிகுந்தார்; யாண்டும் அரன்
கதைகேட்கும் விருப்பமுளார்
நைமிசத்து முனிவர்கட்கு
நற்சூதன் புகன்றபடி;
பைமிகுந்த நச்சரவப்
பணியணிந்தான் பதிகளுள்ளே
சைமிகுந்த நியமநகர்த்
தலந்தானே தலைமைபெறும்!"

37. "எவ்வாறெனில் கேளிர்
ஏந்தல் அகத்தியன் ஓர் நாள்
செவ்வாறாம் வான்வழியாய்ச்
செல்போதில் வழி மறைத்து
எவ்வாறும் மேல்செல்ல
இசையாதே மனங்கவர்ந்து
துவ்வாத சுக நிலையில்
சொக்க வைத்த(து)ஓர் சோலை"

38. "ஏது இந்தச் சோலை?" என
எண்ணியே நிலத்தில் உய்தி
மாதியாலும் பாதியனின்
வடிவமைத்தான்; மணம் நிறைந்த
கோதில் தேன் கல்லையினிற்
கொண்டு முழுக்காட்டி நின்று
மாதினியான் திருமுடிமேல்
மலர் சாத்த முயலுங்கால்"

39. "வைத்தமலர் நில்லாத
வகைசெய்து தேன் பல்கிச்
சத்தம் உறச் சிவக்குறியைத்
தழுவி மகிழ் உமைபோலப்
பத்தியொடு அணைந்து வலம்
பாலித்த தேன்பெருகி
உத்திரமா திசைச்செல்லும்
ஓவியத்தைக் கண்டானால்!"

40. "பெற்ற மக்கள் ஈட்டு பொருள்
பெரிதென்ன நினைப்பதியல்(பு)
உற்றதுவும் பெரிதானால்
உளமகிழார் உலகிலிலர்!
நற்றவரே! தேனாற்றில்
நாதன் அகத்தியன் மூழ்கிப்
பெற்றமுகைத் தோன்தனையும்
பேணி வழிபட்டனனால்!"

41. "அங்கிருந்து தென் திசையை
அணுகுங்கால் மாணிக்கப்
பொங்கொளியைக் கண்டுள்ளம்
பூரித்தான்; புகழ்ந்தேத்தி
"எங்கு (உ)ளைநீ இறைவா? சொல்
என்றக்கால் செயங்கொண்ட
சங்கரன் என் தாதை இங்கே
தரியலர் தம்புர மெரித்தான்!"

42. "நான் இங்கே அச்சிறுத்தேன்
நாம் இன்றிச் செயல் ஏது(எ)ன்று
ஆனாதே நினை அமரர்
அறிவுற்றார் எந்தையும் ஏன்
மேனாளைக் கோரிக்கை

மெய்யாக்கி எனைத்துதித்தான்
தேனாற்றான் வாய்மலர்ந்து
சிரித்தளவில் புரம் பொடியே!"

43. "மாணிக்கக் கணபதி நாம்;
மயில் மலையில் தம்பி கந்தன்
ஆணிக்கையாய் உள்ளான்
அங்கெய்தி அஞ்சலித்துத்
தூணிக்கை அவல்வைத்துத்
தோகையடிக்குஞ் சரத்தின்
பாணிக்கை தனைப்பரவிப்
பாடி வழிபட்டனரால்!"

44. "ஆதலினால் நைமிசத் தீர்!
அரன் தலத்தில் நியமமிது
ஓதலுக்கும் அடங்காத
உயர் புகழுக்கு (உ)ரியதுவாம்
காதலினால் நீர் தொழுது
கதி பெறுவீர் " என்றுரைக்க
மாதவர்கள் நேமம் எய்தி
வழிபட்டு வாழ்த்தினரால்!"

சோழீசர் (தீர்த்த விசேடப்) படலம்

45. "பாண்டியனை வெல்ல எனப்
படை கொண்டு, கூடல்தனைத்
தூண்டுகையால் முற்றுகை செய்
சோழனவன் சிவபரனே
ஈண்டாதே துரத்தலினால்
இயல் மாறி அசுவத்தக்
கூண்டான கானிடையோர்
கொடு மடுவில் வீழ்ந்தானே!"

46. "மடு நீரின் பரிசத்தால்
மணிமேனி வெப்ப முறத்
தடுமாறும் வேளையினில்
"தமிழ்ச் சொக்கா! தஞ்சம்" என்று
வடுவாறும் நெஞ்சத்தான்
வழுத்திடவே வான் ஒலியாய்க்
கடுமாறும் தேனாறு
கண்டு நீராடுக" (எ)ன்றார்

47. "எங்குளதோ? தேனாறு!
யான் அதன்பாற் செல்லளவும்
தங்குமோ என்னுயிரும்;
தாங்காது எம்பெருமானே!
மங்குல்போற் கண்டத்தாய்
வாழ்விப்பாய் என்றேத்த
"இங்கும் உளதாறு; அதனை
எய்தி நீராடுகெனும்

48. "எட்டெட்டாம் ஆடல் செயும்
எஞ்சிவனார் விழிநோக்கால்
துட்டமன வீறடங்கித்
தொடு மடுவில் வீழ்ந்துகதி
முட்டஉறும் உளவர் பிரான்
முந்தைநிலை தானுணர்ந்து
சிட்டர் தொழமேல் எழுந்தோர்
திருக்குளத்தைச் செய்தனனே!"

49. "குளஞ் செய்து பெயர் பரவிக்
குடைந்து குடைந்(து) ஆடுங்கால்
வளஞ் செய்தான் மேனி வெப்பம்
மாறிய(து) அம்மட்டோ? முன்
பழஞ் செடிகள் பவம் அனைத்தும்
பனிபோலப் பிணிப் பகன்று
கழஞ்சுறுநற் பொன் ஒளியாம்
கதிர்மேனி ஆயதம்மா!"

50. "மிருத்திகையால் சிவனுறுவம்
விழைந்(து) இயற்ற எண்ணுகையில்
கிருத்திகையாள் வளர்த்த செல்வன்
கிருபாந்தகன் முருகன்
அருத்தியொடு தோன்றி "எந்தை
அடையலர் தம்புரம் எரித்த
கருத்தினிய தலம் இதுவே;
கான் இடையே தணியுளதால்!"

51. "அதை வணங்கி மயில் மலையும்
அஞ்சலிப்பாய்! எனச் சொல்லச்
சுதை வணங்கு செம்மேனிச்
சோழர்பிரான் இடர் தொலைத்துப்
புதைகின்ற வாயுடனும்
பொழிகண்ணின் நீருடனும்
தகைகின்ற செயங்கொண்டான்
தனைக்கண்டு தமிழ் கண்டான்!"

52. "சந்த நிறை கங்கையினைச்
சடையில் வைத்த செயங்கொண்ட
அந்தரனை வழிபட்டே
ஆராத காதல் உடன்
சுந்தரமாம் மயில் மலையில்
சுடர் வேலனைத் தொழுது
அந்தம் இலாக் காவீரி நாடு)
அடைந்திட்டான் அணிவலவன்!"

53. "சோழகுலச் சிறப்பதனைச்
சொல்வார் யார்? தாமரையும்
ஆழமதைக் குறைக்கஒண்ணா
அருமைதாம்; மூழ்குபவர்
தோழமெலாம் நீக்கிஉடல்

சுடர்எரிக்கும் சொக்கறுமே
சோழனவன் பணிந்ததனால் சோழீ
சன் என்றமைந்தான்!"

54. முனிவரர்காள்! எவனொருவன் தூநீராடி
முக்கரணசுத்தியொடு முக மலர்ந்து
கனிமொழியால் செயங்கொண்டான் புகழைப்பாடிக்
கருத்துவந்திப் புராணத்தைக் கற்றுணர்ந்தான்
நனிசிறந்த இலோக வாழ்வு காண்பான்
நாணாளும் வளர்ந்தேறும் நலமாம் வாழ்வில்
தனி சிறந்து உலகோ பகாரியாகத்
தழைத்த முத்தியும் பெறுவான் சரதம் ஈதே!"

போற்றிப் படலம்

55. தேனாறுடைய சிவன் போற்றி!
திருமாமுடிமேல் கங்கை எனும்
வானாறுடைய தவன் போற்றி!
மலையன் மருமான் என வந்து
தேனா(று) இதழி வேப்பந்தார்
சேர்த்துத் தென்னா(டு) ஆண்ட பிரான்
கோனான் வெட்டக் குளிர்ந்த செயங்
கொண்டாய்! நின் சீர்க்குணம் போற்றி!

56. முத்தப்பன் பாமலர் சூடும்
முதல்வா போற்றி! முத்தமிழின்
சித்தனான அகத்தியனும்
தேவாரத்தால் மூவர்களும்
நித்தம் போற்றும் அடிபோற்றி!
நிகரில் கருணை அருணகிரி
சித்தம் உருக்கும் வாசகனும் சேவித்தேத்தும்
சிவன் போற்றி!

57. முத்திநகர் ஏழுடைய முதலே போற்றி!
முத்தமிழும் ஏழிசையும் முதிரப்பாடும்
பத்தியினார் தமக்கு (எ)ளிய பரனே போற்றி!
பார் ஏழும்-கடல் ஏழும் கடந்து நின்ற
சித்தனைத்தும் வல்லசயங்கொண்டாய் போற்றி!
தேவி சவுந்தரியக்கினிய தேசா போற்றி!
ஒத்(து) என்னை உய்க்கும் உளம் ஈவாய் போற்றி!
ஒன்றும் இலா(து) எல்லாமாய் உள்ளாய் போற்றி!

58. சத்தியவான் நாரணனார் ஏத்த நின்ற
தாணுவே! நேம நகர்ச்சம்பு போற்றி!
அத்தியொடு கடம்பு (அ)ருளும் அரசே போற்றி!
ஐம்படையான் பிறப்(பு) அழிக்கும் அடலாய் போற்றி!
பத்தியத்தும் கத்தியத்தும் மட்டோ? மோனப்
பண்பாலும் உரைத்துணரப்படாதாய் போற்றி!
நித்தியனே! செயங்கொண்ட நிலையாய் போற்றி!
நினைவாகி நினைப்பரவும் நினைவே போற்றி!

59. ஆண்டியாய் விறகு தலையனாகி மண் சுமந்து
பாண்டியனாகி வந்தும் பரிநரியாகச் செய்தும்
ஈண்டிய புகழாய் போற்றி!
இளசை மாவணிகர் ஏத்தும்
சேண்திகழ் மதியணிந்த
செயங்கொண்டாய்! செம்மல் போற்றி!

60. போற்றி! ஐந்தொழில்
புரிவானே! செயங்கொண்டாய்!
போற்றி! வானவர்க்(கு) அரியாய்!
புலவர் தமக்(கு) எளியோனே
போற்றி! சவுந்தரி பாகா!
போற்றி! அகத்தியன் பணியைப்
போற்றி! அருள் செய்து
அடியர் புந்தி உறைவாய் போற்றி!

61. பொங்கல் தொறும் தமிழ் மாலை புலவர் சூட்டும்
பொற்கழலாய் போற்றி! எமைப்புரக்க நின்ற
சங்கரனே! பொழில் நேமத்தளியில் நின்ற
சதுர் வேதத்தலைப் பொருளாம் தமிழே! போற்றி!
கங்குல் பகல் சந்தியினில் கருத்தில் காணும்
கலைவல்லார் தமக்கு)இனிய கண்ணே போற்றி!
பொங்(கு) அரவப்பூணானே! செயங்கொண்டானே
போற்றி! முடுதல் முடிவில்லாப் போதா போற்றி

62. ஏழிசைப் பயனே போற்றி! ஏந்தலே போற்றி! சந்தத்
தாழிசை பனுவல் வேட்டும் சங்கவார் காதாய் போற்றி!
ஆழிசைப் பாயலாக் கொள் ஆதிமால் பங்கா போற்றி!
சோழிசுவரனே! கூடல் சுந்தரா போற்றி! போற்றி!

63. கத்து கடல் சூழ் உலகில் வாணிகம் செய்
கலையினராய் நினைமறவாக் கருத்தராகி
வித்(து) எனவே வாழ் நேமவணிகர் கோயில்
விரும்பியுறை கற்பகமே! வினைகடந்த
சத்துச் சித்தானந்த வடிவே போற்றி! சார்வரி
தை, அத்தத்தில் சாந்தி கண்டாய்!
புத்தி அருள் செயங்கொண்ட தேவா போற்றி!
பொன் நேம நாட்டரசே போற்றி! போற்றி!

64. சங்கரா போற்றி! தக்கன்
சலந்தரன், அயன், ஏமன், மா
துங்கமதன், அந்தகன், புறங்கள் செற்ற
சோழீசா! போற்றி! தெங்கஞ்சோலை சூழும்
பொங்கமிகு தேனாற்றுப் போக்கு நேம
புரம் ஆளும் புரந்தரனே போற்றி! மாலோன்
பங்கினனே! செயங்கொண்டபரனே! எந்தாய்!
பல்லாண்டு பல்லாண்டுன் பதியே போற்றி!

வாழியவே தென்பாண்டி வளநாடு! மாநியமம்!
வாழியவே செயங்கொண்டான் மலரடிகள் வாழியவே!!

முற்றும்



நகரக்கோயில் புராணங்களும் நகரத்தார் வரலாறும்

டாக்டர் தே.சொக்கலிங்கம் எம்.ஏ.பி.ஓ.எல்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,காரைக்குடி.3.

மூன்று புராணங்கள் :

நாட்டுக்கோட்டை நகரத்தார்க்குரிய ஒன்பது கோயில்களில், நான்கு கோயில்களுக்குப் புராணங்கள் பாடப்பட்டுள்ளன. நேமம் தலபுராணம் இருபதாம் நூற்றாண்டினது. ஏனைய மூன்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாடப்பட்டவை, இலுப்பைக்குடிப் புராணம், தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் பாடியது. இளைசைப் புராணம்(இளையாத்தக்குடிப் புராணம்) கணேச பண்டிதர் இயற்றியது. வயிரவன் கோயிற்புராணம், சேந்தன்குடி வி.நடராச கவிராயர் ஆக்கியது. இம்மூன்று புராணங்களும் ஏறத்தாழ இருபதாண்டு இடைவெளியில் சமகாலத்தில் எழுதப்பட்டவை. இம்மூன்று புராணம் பாடியவர்களொடு தேவகோட்டை வீர.லெ.சிந்நயச் செட்டியார் அவர்களுக்குத் தொடர்புண்டு. இப்பெரியார் நகரத்தார் வரலாற்றை உருவாக்கியவர். ஆதலின் மேற்சுட்டிய மூன்று புராணங்களிலும் நகரத்தார் வரலாறு பற்றிய செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. இக்கட்டுரை வயிரவன் கோயிற்புராணம் கூறும் செய்திகளைச் சுட்டி ஆராய்கிறது.

கிரிகரன் படலம் :

வயிரவன் கோயிற் புராணத்தின் இறுதிப்படலம், கிரிகரப்படலம், இப்படலம் நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றைக்கூறுகிறது. பூம்புகாரில் வாழும் கிரிகரன், திருத்தலப் பயணமாக வரும்போது வயிரவன் பட்டிக்கு வந்தான். அவன் அங்குள்ள மடத்தில் இருந்து சிதானந்தன் என்ற முனிவனைக் கண்டான். அவன் நீ யாவன்? என்றான். கிரிகரன் பொன்னிநாட்டுப் பூம்புகாரில் தனவைசியர் மரபில் வந்தவன், என் பெயர் கிரிகரன், சிவப்பதி எல்லாம் சென்று வணங்கிட வந்தேன், என்று தன்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வணங்கினான். சிதானந்தன், கிரிகரன் பிறவி வரலாற்றைச் சொல்லிச் சிவனடி பணிந்து நற்கதி அடைய வாழ்த்தினான்.

சிதானந்தன் எதிர்கால நோக்கு :

சிதானந்தனுடைய மூன்று காலமும் உணரும் தன்மையைக் கண்ட கிரிகரன், "மூன்று காலத்து நிகழ்ச்சிகளையும் முழு துணர்வோய்! ஏன்ற தொண்டனேன் குலத்தவர் பண்டைய இயல்பும் தோன்ற நிற்பதோர் போழ்தத்தில் அன்னவர் துன்னும், ஆன்ற செய்தியும் விதந்து அருளுதி" என்று வேண்டினான். அவ்வேண்டுகோளை ஏற்று முனிவனும் பிற்காலத்து நடக்கப் போகும் வரலாற்றைச் சொன்னான்.

முனிவன் கூறிய வழி :

சோழ மன்னன் அரசாளும் திருநகரம் பூம்புகார், பலரும் வாழும் இந்நகரில், மன்னர் பின்னோரான நகரத்தார் சைவநெறி பிறழாமல் வாழ்வர். சிவனடி மறவாதும் அஞ்செழுத்துச் சொல்லியும் திருநீறுபூசியும் சிவசின்னங்கள் பூண்டும் திகழ்வர். சிவபத்தியுடைய நகரத்தார்கள், மேருமலை போன்ற செல்வத்தாலும் இடரின் எய்தியார்க்கு ஈந்திடும் இருங்கொடையாலும் குபேர செல்வம் பெற்றிருப்பர்.

இந்நிலையில், பண்டைய வல்வினை வயத்தால் இளங்கோக்கள் (நகரத்தார்கள்) துயரில் வீழ்வர், அவர்கள் இன்னது செய்வது என்று அறியாது அமைந்து திகைத்துப் பூம்புகார் நகரத்தை விடுத்துப் போவர்; அவர்கள் காவிரிக்கரையின் மேல்கரை வழியாக

மூன்று திங்கள் நடந்து சென்று 'தெய்வதத் தனிச்சைய மாமலை'யைச் சேர்வர். இவர்கள் இம்மலையை அடைந்ததும் நல்ல குறிகள் ஏற்படும். மனத்தில் மகிழ்ச்சி பிறக்கும்.. உடனே நாயகர் அனைவரும் ஒருங்கு கூடி 'இச்செயல் ஊழின் இயல்போ? மலையின் மாண்போ? இந்நன்மைகள் வந்தடைய என்ன காரணமோ?' என்று ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, சிவனைப் போன்ற கலிங்கமாதவன் அங்கு வருவான்.

கலிங்கமாதவன் காட்டிய வழி :

அம்முனிவன் வருகையாலேயே இத்தகைய நல்ல குறிகள் உண்டாயின என்றுணர்ந்து, நகரத்தார் அனைவரும் தம் துயர் கூறிச் சரணடைவர். கலிங்கமாதவன் அவர்தம் உறு குறைகளை எல்லாம் கேட்டு," மறுமை, இம்மை, வீடு என்னும் இவற்றால் மிகும் ஐசுவரியம் முடிவற்ற ஈசுவர சம்பந்தத்தால் அன்றோ தொடர்புடையது" என்றும் "உறுதி ஒன்றிய உயர் சிவபக்தியின் ஒழிவால் வறுமை வாள் அராவாய்ப்பட்டீர் மதிவிதி வழித்தே" (49) என்றும் கூறி நல்வழி சொல்லி நெறிப்படுத்துவன்.

கலிங்கமாதவ முனிவன், நகரத்தார்களைக் காவிரியின் இருமருங்குமுள்ள சிவத்தலங்களைப் போற்றி வணங்கிடவும் சிதம்பரத்தில் இருந்து வழிபடவும் அங்கு வாழும் அகோர சிவாச்சாரியனை அடைந்து சிவ தீக்கை பெறுமாறும் கூறுவான். இப்பகுதியில் அகோர சிவாசாரியன் வரலாற்றை ஆசிரியர் விரித்துரைக்கின்றார். கலிங்கமாதவன் சொன்னவாறே நகரத்தார்கள் அகோர சிவாச்சாரியனைப் போற்றி மச்செல்லாம் பொறுத்திட்டு எம்மை வழி வழி அடிமை கோடி என்பர். பின்னர் நகரத்தார்கள் புகார் நகர் சென்று (79) முன்னை விட வணிகம் செய்து பெரும் பொருளீட்டிப் பண்டு போல வளமுடன் வாழ்வர்.

இடைப்பிறவரல்—பட்டினத்தார் வரலாறு :

இவ்வாறு நகரத்தார் வரலாற்றைக் கூறி வந்த வயிரவன் கோயிற் புராணம், இடையில் பட்டினத்தார் வரலாற்றையும் விவரிக்கிறது. பட்டினத்தார், திருவெற்றியூரில் முத்தி அடைந்தமையும் அங்கு அவர் சிவலிங்கமானமையும் சுட்டப்படுகின்றன. இங்குப் பட்டினத்தார் பாடிய நூல்களைப் பற்றிய குறிப்பேதும் இல்லை.

சோழ நாட்டினின்று பாண்டிய நாடு வருதல் :

பூம்புகாரில் நகரத்தார்கள் பலநலனும் பெற்று வாழ்வர். அப்போது சோழ மன்னன்நடுங்கத் தக்க பல குறைகளை நகரத்தார்க்கு இழைப்பான். அதனைப் பொறுக்க முடியாத அவர்கள் தங்கள் துயரங்களை அகோர சிவாச்சாரியனிடம் கூற அவன் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஆதரிப்பான். அந்நிலையில், பாண்டியன் தங்களுக்கு நல்ல குடி வேண்டும் என்று தன் நாட்டு ஈசான தேசிகரைக் கொண்டு அகோர சிவாசாரியாருக்குத் திருமுகம் எழுதச் செய்வான். திருமுகம் பெற்ற ஆச்சாரியன், வணிகர்களை எல்லாம் தில்லையில் கூட்டிச் சோழன் இசைவு பெற்று அவர்களைப் பாண்டிய நாடு அனுப்பி வைப்பான்.

அவ்வண்ணமே நகரத்தார்களும் தென்நாடு வருவர், வந்தவர் தொகை மிக மல்கியோங்கும். அவர்களுக்குப் பாண்டியன் ஒன்பது கோயிலும் ஒன்பது நகரமும் கொடுப்பான். இதனை,

> "ஒன்பது கோயில் வாய்ந்த உயர்தலன் இளசை மாற்றூர்
> பொன்பயில் வடுக நாத புரம் இருப்பைக்குடிப் பேர்க்
> கோன்புரி நேமம் சூரைக்குடிவேலன் குடி கணேச
> நன்பதி இரணியூர்இந் நகர்கட்கு முன்னர்ச் சொன்னார்.

என்ற பாட்டு உணர்த்துகின்றது. இதில் ஆசிரியர் (97) ஒன்பது கோயில்களையும் சுட்டுகின்றார். நகரத்தார் பாண்டிய நாட்டுக்கு வந்ததைக் கூறத் தொடங்கிய புராணம்,

பாண்டிய நாட்டாசான் ஈசான சிவாச்சாரியன் வரலாற்றை விரித்துரைக்கின்றது. ஈசான சிவாச்சாரியன் காசிக்குச் சென்றதும் அவர் திரும்ப வாராமையும் புதிய குருவாக இல்லஞ்சேரி சுவாமிகளை ஏற்றுக் கொள்ளுதலும் ஆகியன இங்கு கூறப்படுகின்றன. இங்ஙனம் பாண்டிய நாட்டில் நகரத்தார்கள் இந்திரன் பொறாமை கொள்ளுமாறு வளநனி நுகர்ந்து வாழ்வர்.

வயிரவன் கோயில் வரலாறு :

இந்நாளில், வயிரவன் கோயில் சேர்க்கையில் நின் வழியில் தோன்றப் போகும் 'தெய்வ நாயகன்'என்பான் தோன்றி வளரொளிக்குத் திருப்பணி பல செய்வான்.தெய்வ நாயகன் என்பது தெயினான் என்று மருவி வழங்கும். (தெய்வ நாயகனெனும் பேர் தேயினான் என்று இவன் மருஉவாம்' (110:1). இவன் மரபினர்க்கு இக்கோயிலின் முதல் மரியாதை உண்டு (பெய்வளைத் தோளி பாகன் பிரசாத முன்னிற்குமே). இவ்வாறு நகரத்தார் வரலாற்றைச் சிதானந்த முனிவன் செப்பினான் (111).

நடந்து முடிந்த செய்திகளை இனிமேல் நடக்கப் போகும் செய்திகளாக முனிவன் சொல்வதாகப் புராண ஆசிரியர் பாடுகின்றார். இவர் சமய உணர்வு மிக்கவராய் இருத்தலின் அகோர சிவாச்சாரியார்,ஈசான சிவாச்சாரியார், இல்லஞ்சேரி சுவாமிகள், பட்டினத்தடிகள் ஆகியோர் வரலாற்றைக் கூறுகின்றார்.

இலுப்பைக்குடிப் புராணமும் இளைசைப் புராணமும் :

இலுப்பைக் குடித்தல புராணத்தில், இப்புராணம் போல விரிவான நகரத்தார் வரலாறு கூறப்படவில்லை. இலுப்பைக்குடிப் புராணத்திலுள்ள சூடாமணிப்படலம், நகரத்தார் சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாடு வந்த வரலாற்றை மட்டுமே சுட்டுகிறது. வேறு செய்திகள் கூறப்பட்டில. இளைசைப் புராணம், வயிரவன் கோயிற் புராணம் போலச் சற்று விரித்தே நகரத்தார்பற்றிக் கூறுகிறது. வயிரவன் கோயிற்புராணத்தில் ஒரு படலத்தில் கூறப்பட்ட செய்திகள், பூம்புகார்ப் படலம், அகோர சிவாச்சாரியப் படலம், ஈசானாச்சிவாசாரியப் படலம், என்ற மூன்று படலங்களாகப் பிரித்து விரித்துரைக்கப்பட்டன. வயிரவன் கோயிற் புராணத்தில் கூறப்பட்டனவே சிறு மாறுபாடுகளுடன் இளைசைப் புராணத்திலும் சொல்லப்பட்டுள்ளன.

நகரத்தார் வரலாறு :

வயிரவன் கோயிற் புராணத்தினால் நாட்டுக் கோட்டை நகரத்தார் தொடர்பான பின்வரும் கருத்துக்கள் கிடைக்கின்றன. 1. நகரத்தார்களிடையே 'கிரிகரன்' என்ற பெயர் வழக்கில்லை. 'அண்ணாமலை', 'மலையப்பன்' என்பன போன்ற பெயர்களை மனத்தில் கொண்டு ஆசிரியர் இப்பெயரைக் கூறுகிறார். 2. நாட்டுக் கோட்டை நகரத்தார்களைத் 'தனவைசியர்' (கிரிகரப்படலம் 28:2) என்ற நூல் சுட்டுகிறது. 3. பூம்புகாரில் இம்மரபினர் சைவசமயிகளாக வாழ்ந்தனர். 4. விதிவசத்தால், இவர்கள் வறியராய்ப் பூம்புகார் நகர் விடுத்துச் சையமாமலை வந்து கலிங்கமா முனிவனைக் கண்டனர். 5. அவன் நகரத்தார் சிவனடி மறந்தமையாலேயே வறியராயினர் என்று கூறிச் சிவப்பதிகள் தோறும் சென்று பணிந்து சிதம்பரம் செல்லுமாறு கூறினான். அங்கு அகோரசிவாச்சாரியனை ஆசாரியனாய்ப் பெற்று அவனிடம் பொருள் பெற்று வளம் பெருக்கி மீண்டும் பூம்புகார் வந்தனர். 6. பூம்புகாரில் நகரத்தார் வளமுற வாழ்ந்தபோது, சோழ மன்னனால் அவர்களுக்குத் தொல்லை ஏற்பட்டது. எனவே நகரத்தார்கள், சிதம்பரத்திலிருந்து அகோர சிவாச்சாரியரைச் சார்ந்து அங்குத் தங்கினர். 7.இந்நிலையில், பாண்டிய வேந்தன் ஈசான தேசிகர் மூலம் அகோர சிவாசாரியரிடம் நல்லகுடி மக்களைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்புமாறு கேட்டிருந்தான். அகோர சிவாசாரியன் சோழ மன்னன் உடன்பாட்டுடன் நகரத்தார்களைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் பாண்டிய நாடு வந்து வளமுற வாழ்ந்தனர்.

புராண ஆசிரியர், அகோர சிவாச்சாரியார், ஈசான சிவாச்சாரியார், பட்டினத்தடிகள் ஆகியோர் வரலாறுகளை இங்குப் பாடுகிறார்.

வரலாற்று முடிவுகள் :

வயிரவன் கோயிற் புராணம் நகரத்தார் வரலாறு பற்றிக் கூறுவனவற்றுள் பின் வருவன குறிக்கத்தக்கன. (க) நகரத்தார் பூம்புகாரில் வாழ்ந்தமையும் அங்கிருந்து பாண்டிய நாடு வந்தமையும், (உ) அகோர சிவாச்சாரியார், ஈசான சிவாச்சாரியார், தொடர்பு (ங) இல்லஞ்சேரி சுவாமிகளைக் (பாதரக்குடி சுவாமிகள்) குருவாக ஏற்றல், (ச) தெய்வ நாயகன் திருப்பணி செய்தமை ஆகியனவாம். இவ்வரலாற்றில் ஆண்கள் பற்றிய பேச்சே இடம் பெறுகின்றது. பெண்களைப்பற்றி புராணம் யாதும் கூறவில்லை.

நகரத்தார் வரலாறு எழுதும் முயற்சி :

தேவகோட்டை வீர. லெ. சிந்நயச் செட்டியார் நகரத்தார் வரலாற்றைப் பற்றி ஆராய்ந்து வைத்திருந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே வயிரவன் கோயிற் புராணம் நகரத்தார் வரலாறு பற்றிக் கூறுகின்றது வேறு சில பாடுவார் முத்தப்பசெட்டியாரின் கருத்துகளை அடியொற்றியன, பத்தொன்பதாம் நூற் றாண்டின் துவக்கத்தில் நகரத்தார் வரலாறு எழுதப்படும் முயற்சி தோன்றி வளர்ந்ததை இந்தப் புராணக் குறிப்புகள் உணர்த்துகின்றன.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

"கற்றவர் கல்விக்கு உரையாணி! நீதங்கக் கட்டி நின்னைப்
பெற்றவ ளேசெல்வப் பேறுள்ள தாய்நின் பிதாமுன் செய்த
நற்றவ மேதவம் நாட்டார் வணிகர்க்கோர் ரத்தி னம்நீ
கொற்றவ ரும்புகழ் முத்தப்ப பூப ! குணரத் னமே".

– **வெண்பாப்புலி வீரகவிராயர்** தன்னை வெற்றி பெற்ற முத்தப்பரைப் புகழ்ந்து பாடியது.

வரலாறு படைக்கும் நேமங்கோயில்

வி.என்.சிதம்பரம் செட்டியார்.

"சைவமும் தமிழும் தழைத்தோங்க இந்நாட்டில் ஒரு சமூகம் உழைத்து வருவதைக் குறிப்பிட வேண்டுமானால், அந்தச் சமூகம் தனவணிக சமூகம் என்றே கூறலாம். ஒரு தேசத்துக்குக் கோட்டைக் காப்பு வீரர்கள் இருப்பது போல, இந்து மதம் எனும் கோட்டைக்கு,தனவணிக நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் கோட்டைக் காப்பு வீரர்களாக இருந்து வருகின்றார்கள்."

1922 ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி பீடம் சங்கராசார்ய சுவாமிகள் கானாடு காத்தானில் பேசும்பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள். இதன்படி சைவம், தமிழ், தொழில் ஆகிய எல்லாவற்றின் முன்னேற்றத்திற்கும் பெருந்தொண்டாற்றிய பலபெருமக்களைப் பெற்றுத் தந்தது நேமங்கோயில். தேனாறு பாயும் நேமங்கோயிலில் தமிழாறு பாய்வது வரலாற்றுண்மை. இதுவரை வரலாறு படைத்துள்ள நேமங்கோயில் இன்றும் வரலாறு படைக்கிறது. இனியும் வரலாறு படைக்க இருக்கிறது. நகரத்தார்களின் ஒன்பது கோயில்களில் பட்டினத்தாரைத் தந்த இளையாற்றங் குடிக்கோயிலுக்கும் கண்ணதாசன் பிறந்த மாற்றூர்க்கோயி லுக்கும் இணையான புகழ் பாடுவார் முத்தப்ப செட்டியாரைத் தந்த நேமங்கோயிலுக்கும் உண்டு.

வரலாற்றில் நேமங்கோயில்

பாண்டிய நாட்டில் கி.பி.670 முதல் 715 வரை ஆட்சி செய்த சௌந்தர பாண்டியன் என்றும் அரிகேசரி பராங்குசன் என்றும் அழைக்கப்பெற்ற நின்றசீர் நெடுமாறன் உயர்ந்த குடிகள் வேண்டுமென்று சோழநாட்டில் ஆட்சிசெய்த ராஜபூஷணச் சோழனிடம் வேண்டுகோள் விடுத்தான். அதன்படி தனவணிகப் பெருமக்களை அழைத்து "உங்களில் சிலர் பாண்டிய நாடு சென்று அந்நாட்டு வாணிபத்தையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக் காப்பாற்றுங்கள் என்று கூறினான் சோழன். தனவணிகர்கள் "நாங்கள் பிரிந்திருக்க மாட்டோம். நீங்கள் நடத்தியது போல மரியாதையுடன் எங்களைப் பாண்டியன் நடத்துவதானால் எல்லோரும் பாண்டிநாடு செல்கிறோம்" என்று கூறப் பாண்டியன் "சோழ மன்னரை விட அதிகமரியாதையாக உங்களை நடத்துவேன்" என்றுஉறுதியளித்து தனவணிகரை அழைத்து வந்து அவர்கள் விரும்பிய இடத்தில் வசிக்கச் செய்தான். குன்றக்குடியைச் சுற்றிய பகுதிகளில் தனவணிகர் இடம் கேட்டுப் பெற்றனர். இவர்களில் இளையாற்றங்குடி நகரத்தார்களுக்கும் அவர்களிடமிருந்து பிரிந்த மற்ற எட்டுப் பிரிவு நகரத்தார்களுக்கும் தனித்தனிக்கோயில்கள் அரசனால் தரப்பெற்றன. நேமங்கோயில் கலியுகம் 3815ல் கி.பி.714ல் நகரத்தார்களுக்குக் கொடுக்கப்பெற்றது.

இளையாற்றங்குடி கி.பி.707ஆம் ஆண்டிலும், மாற்றூர்க் கோயில் வயிரவன் கோயில் ஆகியவை 712 ஆம் ஆண்டிலும், இரணியூர்க்கோயில் பிள்ளையார்பட்டிக்கோயில், நேமங்கோயில், இலுப்பைக்குடிக்கோயில் ஆகியவை 714ஆம் ஆண்டிலும் சூரைக்குடிக்கோயில், வேலங்குடிக்கோயில் இரண்டும் 718ஆம் ஆண்டிலும் கொடுக்கப்பெற்றன. இவற்றுள் குன்றக்குடிக்கு வடக்கே சுமார் ஒன்றரை மைல் தொலைவில் அமைந்துள்ள திருத்தலம் நேமங்கோயில் ஆகும்.

கேரள சிங்கவளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறு பாயும் இளநலமுடையார் என்பது இக்கோயிலை வழிபடும் நகரத்தார்களின் சிறப்புப் பெயராகும். இப்பகுதி தேனாற்றின் உற்பத்தித் தலம் எனக் கருதப்படுகிறது.

இந்தத் தலத்தில் இறைவன் ஜெயங்கொண்ட சோழீசர் என்றும் இறைவி சௌந்தரநாயகி என்றும் அழைக்கப்படுகிறார்கள். முப்புரங்களைச் சிரித்துச் செயங்கொண்டதாலும், மன்மதனை எரித்துச் செயங்கொண்டதாலும் இறைவன்

ஜெயங்கொண்ட சோழீசன் ஆகிறான். சிறப்பாக வழிபடும் மூர்த்தியாக வயிரவப்பெருமான் விளங்குகிறார். இறைவன் கிழக்குப் பார்த்தும் அம்மை தெற்குப் பார்த்தும் வயிரவர் மேற்கே பார்த்தும்அமர்ந்திருப்பது இந்த ஆலயச் சிறப்பாகும். இரண்டு பிரகாரங்கள், அழகிய திருமதில் சுவர், தெற்கே பெரிய கோபுரம் ஆகியவற்றுடன் காட்சி தரும் இந்த ஆலயத்தில் உள்ள நீராழிப்பத்தி மண்டபம், அணியொட்டிக்கால் மண்டபம் ஆகியவற்றில் தூண்களில் அமைந்துள்ள சிற்பங்கள் கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்புடன் காட்சி தருகின்றன. இறைவனுடைய எட்டு வீரச் செயல்களைக் காட்டும் அட்ட வீரட்ட மூர்த்திகளின் சிற்பங்கள் அழகின் எல்லையைச் சுட்டுகின்றன.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றபடி உயர்ந்த ஒழுக்க நெறியில் நின்று நல்ல செயல் செய்வதை நியமம் என்பர், இந்த நியமப்படி வாழ்ந்த நகரத்தார் பலர் வாழ்ந்து வழிபட்ட பெருமையால் இக்கோயிலை நியமங்கோயில் என அழைக்கப் பெற்று நேமங்கோயில் ஆக மருவி விட்டது,

பொன்னமராவதியில் ஆட்சி செய்த பொன்னன், அமரன் ஆகியோரின் உடன் பிறந்த நேமன் என்ற குறுநில மன்னன் எமனும் கண்டஞ்சும் வண்ணம் "நேமன் கோட்டையோ, ஏமன் கோட்டையோ "என்று உலகம் வியக்கக் கோட்டை கட்டி ஆண்டதால் இப்பகுதி நேமங்கோயில் ஆயிற்று என்பாரும் உளர், ஆனால் நேமங்கோயில் புராணம் நகரத்தார் திருமுகவிலாசம், வயிரவன் கோயில் புராணம் ஆகியவற்றில் நியமம் என்றே இத்தலம் குறிக்கப் பெறுகிறது.

அகத்தியர் வழிபட்ட திருத்தலம் ஆதலால் "தெட்சணமா முனிபரவும் தென்நியமம்" என்றும் போற்றப்படுகிறது. நந்திபுரம், மதுநதிபுரம், ஜெயங்கொண்ட சோழபுரம், மதுவனத்தலம், குலசேகரபுரம் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

இத்தலத்தில் நேமத்தான் கண்மாய்க்கரை தென்கோடியில் உள்ள வெயில் உகந்த வினாயகர் மிகவும் (வரப்பிரசாதியாகி) அருள்மயமான மூர்த்தியாய்க் காட்சியளிக்கிறார். தினந்தோறும் கதிரவன் அவரை வழிபட்டுச் செல்ல வசதியாக மேற்கூரையின்றிக் காட்சியளிக்கிறார். தனக்குக் கோயில் அமைத்துக் கொள்ள அவர் இன்னும் நினைக்கவில்லை.கோயிலுக்கு எதிரே பழைய நகரத்தார் விடுதியும், அண்மையில் மிகச் சிறப்பாக கட்டப்பட்டுள்ள புதிய நகரத்தார் விடுதியும் களஞ்சியமும், கோயில் பணியாளர் இல்லங்களும், பசுமடம், நந்தவனம் ஆகியவையும் உள்ளன.

இந்த ஆலயத்திற்கு இதற்குமுன் 5.2.1961ல் திருக்குட நன்னீராட்டு நிகழ்ந்தது. முப்பதாண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது 3.2.1991ல் இந்த ஆலயத்திற்கும் இதைச் சேர்ந்த அழகுநாச்சியம்மன் ஆலயத்திற்கும் திருக்குட நன்னீராட்டுவிழா நடைபெறுகிறது.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

நல்ல தண்ணி ஊரணிபோல் நகரத்தார் எல்லாம் மக்கள்
நாகரிகத்தோடு வாழ நடத்தும் பள்ளிக் கூடம்
பிள்ளைமுதல் கிழவர்வரை பெண்கள் ஆண்கள் எல்லாம்
பெரிய மனிதர் தமிழகத்தின் பெருமை கூறும் மனிதர்

– கொத்தமங்கலம் சுப்பு –

அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீசர் பதிகம்

மு.நா.நாராயணன்
காரைக்குடி.

காப்பு

அயன்கண்ட வேதத் தணியுருவே! நேமச்
செயங்கொண்ட யானை முகவா —நயங்கண்ட
செந்தமிழால் சோழீசர் சீர்பதிகம் பாடுதற்கே
தந்தருள்வாய் நல்ல தரம்!

1. நிலவுலகில் அமரநிலை குலவிவரு வழிகளறி
நியமநெறி கண்ட சீலர்,
நிலவுமறம், ஆன்மீகம், வளர்தருமச் சேய்கள்தமை
நினைந்தூட்டும் அன்னை போல்வார்,
கலைகள்நிறை தமிழ்நிதமும் வளமைபெற அதனையிரு
கண்ணதெனக் காக்கும் அன்பர்,
கவிகள்தரு புலவர்மனக் கவலையற, வறுமையறக்
கருதியே புரந்து. ஞானம்
இலகுபுகழ் தனவணிகர் உலவுகுடிக் கோவிலொரு
ஏழிரண்டாம் இவைக ளுக்குள்
எழிலுலவு தேனாறு பொலியவரு நேமமுறை
இளநலம்தான் உடைய கோவே!
திலகநுதல் ஒளிரு,சிறு குறுமுறுவல் மலரவருள்
சேருமெழில் வடிவ மான
சீர்சௌந் தரவன்னை பங்கனே! உமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

2. புவனமுழு தாள்கின்ற புண்ணியா கண்ணியா
பொன்னம்ப லத்தின் அரசே!
பொங்கரவ மாலையணி சங்கரா! சதுர்மறைகள்
புகழ்கங்கைச் சென்னி இறையே!
தவமுடைய யோகியரும் ஞானியரும் வந்துபணி
தட்சிணா மூர்த்தி! யரனே!
தத்துவ வினோதனே! சித்தர்தொழும் பாதனே!
தையலிடப் பாக முடையாய்!
பவமழிய, உயிர்களது பயமழியத் திருவருள்
பாலிக்கும் முக்கண் ணனே!
பாமாலை தருநால்வர் பூமாலை கொண்டேத்தப்
பரமபதம் ஈந்த மணியே!
சிவநமசி வாயவெனத் தினமோது மன்பரது
சிந்தைதெளி வாக்கும் ஒளியே!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

3. அன்னமென ஏனமென நண்ணுமயன் மாற்கரிய
அடிமுடிகள் கொண்ட கோவே!
ஆகாயம், பூமி,யனல், நீரோடு காற்றுமென

ஐந்தாகி நின்ற தேவே!
கன்னலெனும் செஞ்சொல்வள மென்மொழி துலங்கவே
கவிமதுரை யாண்ட அரசே!
கணநாத னே இலகுமென் குணநாத னேஅரிய
கைலைமலை ஆளும் அமுதே!
மின்னலெனும் சின்னவிடைக் கன்னியிம வான்மகள்
மெய்தழுவு நாத வடிவே!
வித்தாகி, வித்திலொரு விளைவாகி, உயிரெலாம்
விரியவரு மூல முதலே!
சின்னவென் உளத்திலொளி மின்னவரு சோதியே!
தீயேந்து தெய்வ மணியே!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

4 புள்ளிமயில் ஏறியே துள்ளியுல கேழைநொடிப்
பொழுதுவலம் வந்து நின்றோன்,
போர்ப்படை முழக்கிவரு சூர்ப்படை கலக்கியொரு
பொடியிலா தன்ற ழித்தோன்,
கள்ளி,குற வள்ளிமயில் உள்ளநிறை காதல்மிகக்
கருதியே சிறையெ டுத்தோன்,
கருணைபொழி விழிகள்தரும் அருள்மழையில் உயிர்களைக்
காலமெலாம் புரந்து காப்போன்,
கொள்ளையழ கொளிரமலைக் குன்றெலாம் சென்றேறிக்
கொலுவிருந் தாளும் மூர்த்தி,
குறையகல, பக்தரது நிறைபெருக, தனவணிகர்
குலம்காத்து நின்ற கோமான்,
தெள்ளுதமிழ் வடிவமாம் பிள்ளையறு முகவனைச்
சேயென்று தந்த தேவா!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

5. வாசமார் மலர்கொடுனைப் பூசனைகள் செய்திலேன்!
வந்தனைநான் செய்த தில்லை!
மனதிலுறு பொய்,சூது, வஞ்சகம் மாச்சரியம்,
மாற்றும்வகை அறிந்த தில்லை!
நேசமாய் நின்னடிகள் கொண்டாடி யறிகிலேன்!
நெறிகள்பல அறிய கில்லேன்!
நெஞ்சினிடை மூவாசை விஞ்சிவரக் கண்டுமென்
நிலைமாற்றி நின்ற தில்லை!
மோசநா சங்களும் மோகமும் விட்டுநான்
முன்னேறத் தெரிய வில்லை!
மூடன்நான்! என்றனது கேடெலாம் மாற்றியே
முற்றும்நீ திருத்தி வைப்பாய்!
தேசுலாம் பிறையுடன் மாசிலாக் கங்கையும்
சிரமீது வைத்த செல்வா!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

6. வெந்துபிடி சாம்பலாய் மாறுநாள் வரையெனது
வேதனைகள் தொடரு மோ?நீ
விளையாடி மகிழ்வதற் கழகான பொம்மையாய்
வினையேனை எண்ண லாமோ?
நைந்துநைந் தென்னுள்ளம் நொந்தேநான் கரைந்துதினம்
நலிந்திடல் முறைமை தானா?
நலம்வளர, மனம்வளர, வளம்வளர அருள்வதெம்
நாதனுனக் கரிய தாமோ?
இந்தவுல கினிலெனது சொந்தமென உனையலால்
ஏழையெற் கேது முண்டோ?
இணையடிகள் பற்றியே மனமுருகி வேண்டினேன்
இரக்கம்வைத் தருளு வாயோ?
சிந்தைதனில் உன்றனது ஐந்தெழுத் தேநிதமும்
சேர்க்கின்ற திறமீ குவாய்!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

7. தாயாகித் தந்தையாய் நீயே இருந்துஎனைத்
தாங்குதல் அரிய தாமோ?
தரமுயர உனதுவிழி தரும்அருளில் சிறுதுளியைத்
தந்திடிற் குறைவு தானோ?
பேயாடு காடதனில் போயாடு தெய்வமே!
பேதைக் கிரங்கி டாயோ?
பிரியமுடன் எனையணைத் துரியநெறி காட்டிலென்
பிழைகளும் அகன்றி டாதோ?
வாயாரப் பாடி,உள் மனமாரக் கும்பிட்டுன்
மலரடியில் வீழ மென்றன்
வாட்டமது தவிர்த்தருளை ஊட்டினால் நாயினேன்
வாழ்வுமே சிறக்கு மன்றோ?
தீயாக வாட்டுமென் தீமைகள் நீக்கி,விதி
செய்கொடுமை நீக்கி ஆள்வாய்!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

8. பல்லா யிரம்கோவில் குளமோடு சத்திரம்
பள்ளிகள் கட்டி வைத்த
பண்புடைய தனவணிகர் இன்றுபடும் பாடதனைப்
பரம!நீ உணர்ந்தி டாயோ?
செல்லாத காசாகி வணிகர்குலக் கன்னியர்கள்
திருமணம் கூட வில்லை,
சிந்தைநொந் தலறிவிழி சிந்துசென் னீரதனை
தெய்வம்நீ கண்டி டாயோ?
நல்லாய்நின் கோவிலை நாடிவரு மெங்கள்குல
நங்கைதுயர் நீங்க வேண்டும்,
நாயகர்கை மாலைகொள, சேய்தழுவு வாழ்வுபெற
நாத!நீ யருள்கொ டுப்பாய்!
செல்லோடு புழுவென்று மிருநான்கு கோடியுயிர்ச்
சென்மங் கடைத்தேற் றுவாய்!

சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

9. நெறிகொண்ட திண்மையும், நிறைகொண்ட உண்மையும்
நீங்கா திருக்க அருள்வாய்!
நித்தம்வறி யார்க்குதவு சித்தம் கொடுத்துதவி,
நிலையுயர என்றும் அருள்வாய்!
சரிவென்று மில்லாத சன்மார்க்கம் தந்துமனச்
சாந்திபெறும் நிலையு மருள்வாய்!
சகலவுயிர் களுமுனது அபயகர வரமுதவத்
தலைநிமிரும் வகையு மருள்வாய்!
குறையின்றி எவ்வுயிரும் இரைகொண்டு பசியாறிக்
கொள்கின்ற வளமும் அருள்வாய்!
கூடாத சாதிமதக் கேடால் வருந்துயர்கள்
கொள்ளாத நலமும் அருள்வாய்!
திரைகொண்ட ஆழியுள் உறைகின்ற மால்,தங்கை
சிந்தைக் கிசைந்த கனியே!
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

10. ஏவுகணை வீசியே ஆவிகொளும் வன்முறைகள்
இல்லாமல் நீங்க அருள்வாய்!
இணைகின்ற நட்போடு கனிகின்ற அன்போடு
எவ்வுலகும் வாழ அருள்வாய்!
பாவிகளும் வந்துனது சேவடிவ ணங்கஅவர்
பாவம்தொ லைத்தும் அருள்வாய்!
பாரதனில் என்னாளும் போரின்றி நாடெலாம்
பயனடைய என்றும் அருள்வாய்!
தேவையென வருவோர்க்கே ஆவலுடன் உள்ளோர்கள்
செல்வம் கொடுக்க வருள்வாய்!
சிறுமைகள் கொன்றுநற் பெருமைகள் ஓங்கியே
செகமெலாம் வாழ வருள்வாய்!
சேவடிகள் தூக்கிவளம் மேவிவளர் தில்லையில்
செகமெலாம் மகிழ வாடும்
சீர்சௌந் தரவன்னை பங்கனே! எமையாளும்
ஜெயங்கொண்ட சோழீ சனே!

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

நியமம் மிகுந்த நேமங்கோயில்

சொ.சொ.மீ.சுந்தரம், எம்காம்.,

சைவத்திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமூலர் அருளிய திருமந்திரம். இந்நூலில் "அட்டாங்க யோகம்" என்ற தலைப்பில் எட்டு யோகங்களைக் குறிப்பிடுகிறார் திருமூலர். இவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று குறிக்கப்பெறுகின்றன. இவற்றுள் நியமம் என்றால் தீது அகற்றல். அதாவது தீமைகளைச் செய்யாமல் இருத்தல். நியமம் என்றால் நன்றாற்றல். அதாவது நல்ல செயல்களைச் செய்தல். இந்த இரண்டின் அடிப்படையில் மற்ற ஆறும் வளர்கின்றன. நியமம் எனப்படும் நல்லது செய்வதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட பெருமக்கள் வழிபட்ட கோயில் நியமங்கோயில். இதுவே பின்னாளில் நேமங்கோயில் ஆயிற்று.

பொன்னமராவதியை ஆண்ட பொன்னன் அமரன் ஆகியோருடன் பிறந்த நேமன் என்பவன் "நேமன் கோட்டையோ ஏமன் (எமன்)கோட்டையோ" என்று உலகம் வியக்கும் வண்ணம் கோட்டை கட்டி ஆண்ட இடம் நேமங்கோயில் என்று ஒரு செவிவழிச் செய்தியுண்டு. இருந்தாலும் நியமம் உடையார் வழிபடு கோயில் நேமங்கோயில் என்பதே மிகப் பொருத்தமாகவும் தகுதியாகவும் தோன்றுகிறது. எப்படி என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நேமங்கோயில் இறைவன் ஜெயங்கொண்ட சோழீசர் என்று அழைக்கப்படுகிறார். இப்பெயர் எதனால் வந்தது? இதே வினாவை ஊனையூர்ப் பாரதியார் என்ற சிவகங்கைப் பக்கத்துக் கவிஞர் நேமங்கோயில் நகரத்தாராகிய பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களைக் கேட்டார். பத்மாசுரன் சிவபெருமான் தலையில் கையை வைக்க வந்தபோது பயந்து ஓடியவர் சிவபெருமான். அருச்சுனன் அம்பால் அடிபட்டவர். இவரைப் போய்ச் செயங்கொண்டார் என்று சொல்லலாமா?

ஒங்கு பத்மாசுரனைக் கண்டு ஓடிஒளிந் தார் விஜயன்
வாங்குதனு வால்பூசை வாங்கினார் ?ஈங்கிருக்கும்
நன்நியமச் சோழீச னார் செயங்கொண்டார் என்றால்
என்ன செயம் கொண்டார் இவர்?

என்று கேட்டார் பாரதியார். இதற்கு விடையாக முத்தப்பர் "முப்புரத்தைச் சிரித்து வென்றவரும் சிவபெருமான். காமனைக் கண்ணால் எரித்து வென்றவரும் சிவபெருமான். இது போதாதா?

என்ன செயங்கொண்டார் இவர் என்றாய். முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச்சமைத்த சோழீசர் பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார், சித்தசனைக் கண்ணால்
எரித்துசெயம் கொண்டார்இவர்"

என்று பாடினார். சித்தசன் என்பது மனத்தை இழுக்கும் மன்மதனுக்கு மறுபெயர். ஒழுக்கமுடைய சான்றோர்கள் வழிபடும் நேமங்கோயில் இறைவன் முறையான வாழ்விற்கு முட்டுக் கட்டைகளாக விளங்கும் ஆணவம் கன்மம் மாயை காமம் என்ற நான்கையும் வெற்றி கொண்டு அடியார்க்கு வழிகாட்டு கிறான்.சிவபெருமான் முப்புரத்தை எரித்தான் அதுவும் சிரித்தேஎரித்தான் என்பது வரலாறு. முப்புரம் என்றால் தங்கக் கோட்டை வெள்ளிக் கோட்டை இரும்புக் கோட்டை என்ற மூன்று பறக்கும் கோட்டைகளில் வந்து உலகை வருத்திய மூன்று அசுரர்களைச் சிவபெருமான் அழித்தான் என்பதைக் காட்டும் அடையாளம என்பர். இந்த முப்புரங்கள் மனிதனிடம் இணைபிரியாமல் இருக்கும் ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களேயாகும் என்பார் திருமூலர்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் எய்தனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறிவாரே?

என்பது திருமந்திரம். நல்லொழுக்கத்திற்குத் தடையான மும்மலங்களையும் வென்று செயங்கொண்ட சோழீசரை வணங்கினால் நியமம் என்ற நல்லதே செய்யும் தன்மை வராமல் இருக்குமா? ஒழுக்கத்திற்குத் தடையாக இருக்கும் காமத்தையும் இயல்பாகவே வென்றவன் சிவபெருமான். இதுவே மன்மதனை எரித்த வரலாறு. இவையிரண்டையும் வைத்துப் பார்த்தால் நியமம் காப்பதே சோழீசர் செயல் என்பது விளங்கும். ஊனையூர்ப் பாரதியாரும் தன்னுடைய பாட்டின் மூன்றாவது அடியில் நன் நியமச் சோழீசர் என்று குறிப்பிடுகிறார். பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் தாம் இயற்றிய திருமுக விலாசத்தில் "அள்ளிநிதி செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர்" என்று குறிப்பிடுகிறார். விபவ ஆண்டு தைத்திங்கள் முதல் நாளில் (14.1.1808) நேமங்கோயிலில் அரங்கேற்றப்பட்ட செயங்கொண்டார் பஞ்சாட்சரத் தோத்திரம் என்ற சிறுநூலில்

நன்றே பெருக நவிலும் குபேர நகர்வணிகர்
என்றே உலகம் புகழ அவர்க்கு ஈண்டு இருநிதியம்
நின்றே நிலவ அறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றே சோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

என்று குறிப்பிடும் பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் அறமும் கனமும் நெடிதுபெறச் செயங்கொண்டாரைத் துதிக்கிறார்.

தென்னாடுடைய சிவபெருமான் இந்த நேமங்கோயில் திருத்தலத்தில் தேனாறுடைய சிவமாகக் காட்சியளிக்கிறார். அதனாலேயே நகரத்தார் பெருமக்களில் நேமங்கோயில் நகரத்தார்கள் கேரள சிங்கவள நாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில் தேனாறுபாயும் இளநலமுடையார் என்று குறிக்கப் பெறுகிறார்கள்.

ஒழுக்கத்தால் உயர்ந்து தெய்வப் பணியாற்றிய நகரத்தார் பெருமக்களில் நேமங்கோயில் நகரத்தார் குறிப்பிடத்தக்கவர்கள். சிவபெருமானுக்குச் சொற்கோயில் கட்டிய பாடுவார் முத்தப்ப செட்டியார் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் பழனிக்குக் காவடி எடுத்த நெற்குப்பை குமரப்ப செட்டியார், தமிழ்வள்ளலாக வாழ்ந்து தமிழ்ப்புலவர் குடும்பங்களை வாழ வைத்து அவர்கள் வீடுகளுக்குப் பொங்கல் பானை அனுப்பி வைத்து, அவர்கள் நூற்களை வெளியிட உதவி செய்தவரும், சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் எழுதிய பெரிய புராண உரை வெளிவரத் துணையாக இருந்தவரும் சிவநெறி மறவாச் சிந்தையரும் ஆகிய தேவகோட்டை உ.ராம.மெ. சுப.சேவு.மெ.மெய்யப்ப செட்டியார், அவருடைய தம்பியும் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி நிறுவனரும் ஆகிய சேவு.அண்ணாமலை செட்டியார், அண்ணாமலை பல்கலைக் கழக நிகழ்நிலைத் துணைவேந்தராகப் பலமுறை பணியாற்றிய நெற்குப்பை லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அறங்காவலர் குழுத்தலைவராகவும் தக்கார் ஆகவும் பணியாற்றி. தங்கரதம் செய்யும் பொறுப்பேற்றுத் தன்னுடைய செலவில்கல்யாண சுந்தரருக்குத் தனிச் சந்நிதி கட்டிவைத்த இராங்கியம் வி.என்.சிதம்பரம் செட்டியார். வெளியில் தெரியாமல் பல பணிகளைச் செய்துவரும் லெட்சுமி சீவல் உரிமையாளர் அ.சுப்பிரமணியன் செட்டியார் ஆகிய பலரும் நேமங்கோயிலைச் சேர்ந்தவர்களே ஆவர். திருவையாற்றுத் திருப்பணியும் திருவேடகத் திருப்பணியும் நேமங்கோயில் நகரத்தார் பெருமையை நிலைநாட்டுகின்றன. பல்லாண்டுகளாகப் புத்தகங்களை வாங்கித் தொகுத்து, தமிழுக்குத் தனி நூலகம் அமைத்துப் பெரும்பணியாற்றும் கோட்டையூர் ரோஜா முத்தையா செட்டியாரும் நேமங்கோயில் பங்காளியே ஆவார்.

நியமம் என்ற சொல்லுக்கு நகரம் என்றும் கோயில் என்றும் பல பொருள்கள் இருந்தாலும் அச்சொல் வழிபாட்டுமுறைகளில் வழுவாது ஒழுகும் வழக்கத்தையே சிறப்பாகக் குறிக்கிறது.

இந்த நியமத்துடன் வாழ்ந்த வணிகப் பெருமக்கள் வழிபட்டுவரும் அருள்மிகு சௌந்தரநாயகி அம்மை உடனாகிய ஜெயங்கொண்ட சோழீசப் பெருமானை வணங்கி, நம் வாழ்விலும் நியமத்துடன் வாழ்ந்து உயர்வோமாக!.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

காசி நகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவி ரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்
மாசற்ற பொன்னும் மணிவயிரம் ரத்தினமும்
தூசென்று எண்ணித்தூக்கிக் கொடுத்து வந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில் நம்ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசி விசாலாட்சி கவிமதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக் கோபுரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லேமோ !

– கவியரசு கண்ணதாசன் –

செயங்கொண்ட விநாயகர்

பே. ஞானசேகரன், எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

எடுத்த செயல் எதுவாக இருப்பினும் அதனை இடையூறின்றி இனிதே நிறைவேற்றித் தர, சைவ சமயத்தில் மக்கள் வழிபடும் கடவுள் ஒருவர் உண்டென்றால் அவர் விநாயகப் பெருமானாகத்தான் இருக்கவேண்டும். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாம் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானை வழிபடுபவர்கள் கூட முதலில் 'பிள்ளையார் சுழி' (உ) போட்டுவிட்டுத்தான் தங்கள் செயல்களைச் செய்யத் தொடங்குகின்றார்கள் என்பதை அறியும் பொழுது விநாயகப் பெருமானின் வீங்கு புகழ் தெள்ளிதின் புலப்படும். விநாயகருக்குப் பல்வேறு திருப்பெயர்கள் இருக்கின்றன. அவற்றுள் 'செயங்கொண்டார்' என்பதுவும் ஒன்று. அத்திருப்பெயர் அவருக்கு எப்படி வந்தது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் கருதுகோளாகும்.

பொதுவாக பிள்ளையாரின் பெயர்கள் தலத்தின் பெயரினாலோ அல்லது தலத்தில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியின் பின்னணியாலோ அமைகின்றன.

சான்று:

அ) 1) வாதாபி கணபதி :– திருவாரூர் அருகில் திருச்செங்காட்டங் குடியில் வாதாபிக் கோட்டை உள்ளது.

2) மயூரேச விநாயகர் :– மயூரத்தில் உள்ளது. இவை இரண்டும் இடத்தின் பெயரால் ஏற்பட்டவை.

ஆ) 1) வலம் வந்த விநாயகர் :- சென்னை – பெங்களூர் வழியில் 120 கி.மீ. தொலைவில் உள்ள திருவலம் என்ற இடத்தில் மாங்கனியைப் பெற தாய் தந்தையரை வலம் வந்த எழில் கோலம்.

2) செவி சாய்த்த விநாயகர் :- திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள அன்பில் தலத்தில் சம்பந்தர் அக்கரையிலிருந்து பாடியதை செவி சாய்த்துக் கேட்ட வண்ணம் இருக்கும் திருக்கோலம்.

இவை இரண்டும் தலத்தில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியால் அமைந்தவை.

மேற்சுட்டிய இரண்டு வகைகளிலும் அடங்குவதாக அமைகிறது 'செயங்கொண்ட விநாயகர் ' என்ற திருப்பெயர் ஆகும். இப்பெயர் கொண்ட நாயகர் உறையுமிடம் நேமம் என்பதாகும். இத்திருத்தலம் மயில் மலையான குன்றக்குடிக்கு வடக்கே 1 1/2 மைலில் கீழச்சிவப்பட்டிச் சாலையில் உள்ளது. இத்திருத்தலம் மிகப் புராதனமான பெருமை கொண்டது. இக்கோவில் மூல லிங்கத்துக்கு 'செயங் கொண்ட சோழீசர்' என்பது பெயர்.

சிவபெருமானின் பெயர் விநாயகப் பெருமானுக்கு எப்படி ஏற்பட்டது?

ஊரின் பெயரால் உருவானார் உயரிய செயங்கொண்ட விநாயகரே.

'நேமம்' என்ற திருத்தலத்திற்கு நியமம், நந்திபுரம், மதுநதிபுரம், செயங்கொண்ட சோழபுரம், மதுவனத் தலம், குலசேகரபுரம் என்ற பெயர்களும் இருப்பதாக நேமம் கோவில் வரலாறு தெரிவிக்கிறது. 'செயங்கொண்ட சோழபுரம்' என்ற தொடரில் உள்ள 'செயங்கொண்ட' என்ற ஊரின் பெயரைத் தாங்கிய விநாயகர், 'செயங்கொண்ட விநாயகர்' என்று அழைக்கப் பெறுகிறார்.

செயங்கொண்ட விநாயகர் என்பதின் பெயர்க் காரணம் :

ஊர்கள் தோறும் வாழ்ந்தாலும் மனிதனுக்கு உள்ள பெயர் ஒன்றே தான்.ஊருக்கு ஒரு பெயரில் ஒரு மனிதன் உலவுவான் என்றால் அவனை உத்தமன் என்று யாரும் உரைக்கமாட்டார்கள். உண்மையில் அவன் நேர்மையற்றவனாக, பித்தலாட்டக் காரனாகத்தான் இருப்பான். ஆனால் ஆண்டவன் ஆங்காங்கே அநேகப் பெயர்களுடன் விளங்குகின்றார் என்றால், அது அவருடைய அளப்பறிய கருணைத் திறத்தையும், அற்புத திருவிளையாடல்களையும் குறிக்கிறது என்றுதான் பொருள் .உலகை ஆளும் ஈசனின் இடப்பாகத்தே அமர்ந்துள்ள அன்னைக்கு மதுரையில் மீனாட்சி என்றும், காஞ்சியில் காமாட்சி என்றும், காசியில் விசாலாட்சி என்றும் பெயர்கள் இருப்பதையும் அறிகின்றோம் அல்லவா?

'செயம்' என்ற சொல்லுக்கு வெற்றி என்பது பொருள். வெற்றி பெற்றவர் 'செயங் கொண்டார்' என அழைக்கப் பெறுகிறார். முப்புரம் எரித்த வெற்றியைப் பெற்றமையால் முக்கண்ணனார் 'செயங் கொண்டார் –செயங்கொண்ட சோழீசர் ' என்றெல்லாம் அழைக்கப்பெறுவதைப் போலவே, விநாயகப் பெருமானும் ஒரு செயலில் வெற்றி பெற்றதால் இப்பெயரில் அழைக்கப் பெற்றிருக்கலாம். அச்செயல் யாது? என்பதை அறிந்தால் செயங்கொண்ட விநாயகர் பெயர்க்காரணத்தை எளிதில் உணரலாம்.

விநாயகருக்கு உள்ள பல்வேறு திருப்பெயர்களில் 'விக்கினேச்சுரர்' 'விக்கினராசர்' என்பவை குறிப்பிடத்தக்கவை. விக்கினம் என்றால் இடையூறு. ஏச்சுரர் என்ற சொல்லுக்கு உதாசினப்படுத்துபவர் என்பது பொருள். எனவே இடையூறுகளை ஒரு பொருட்டாக மதிக்காமல் உதாசினப்படுத்தி அழிப்பதால் விநாயகருக்கு விக்கினேச்சுரர் என்று பெயர் ஏற்பட்டது. அதே போன்று இடையூறுகளை வேரோடு அழிப்பதில் விநாயகரே தலைவனாக ராசனாக இருப்பதால்தான் அவருக்கு விக்கினராசர் என்ற பெயரும் ஏற்பட்டது. பிற தெய்வங்களை வழிபட்டால் வினைகள் விலகும். ஆனால் விநாயகரை வழிபட்டாலோ வினைகள் வேரோடு, தூரோடு அழியும். இக்கருத்தையே,

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

எனக் கபிலதேவ நாயனாரும் கருத்தாக மொழிகின்றார். அதனால்தான் எந்தக் காரியத்தையும் செய்பவர்கள் செய்யத் தொடங்கு முன் கணபதி வழிபாட்டுடன் தொடங்குகின்றார்கள். தம்மை நினைவாரது இடையூறுகளை நீக்கி அழிக்க வல்லார் என்பது பற்றியே அவருக்கு 'விக்கினேச்சுரர்' , 'விக்கினராசர்' 'விக்கின விநாயகர்' என்ற திருப்பெயர்கள் ஏற்பட்டன.

தம்மை நினையாமல் ஒரு செயலைச் செய்யத் தொடங்குபவர் எவ்வளவு பெரியவராக இருப்பினும் அவர் நினைத்த செயல் வெற்றி பெறாது என்பதைச் சிவபெருமான் முப்புரம் எரிக்க முயன்று தோல்வி பெற்றதை, அவர் சென்ற தேரின் அச்சு முறிந்ததைக் கொண்டு உணரலாம். இந் நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் 'அச்சிறுபாக்கம்' என்ற திருத்தலமாக இன்றும் வழங்கப்பெறுகிறது. சிவபெருமானுக்கே இந்நிலை என்றால் செகத்திலுள்ள பிறரைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? தம் தவறை உணர்ந்த சிவனார் விநாயகரை நினைத்தவுடன் முப்புரம் எரிப்பு எளிதில் முடிந்தது. இனிதாக வெற்றியும் பெற்றார். சிவனார் 'செயங்கொண்டார்' ஆனார் . அத்தகைய செயங்கொண்டாரையும் செயங்கொண்ட சிறப்பு விநாயகர் ஒருவருக்கே உண்டு. அதனால் தான் அவர் 'செயம் கொண்ட விநாயகர்' என்று அழைக்கப் பெறுகிறார்.

இத்தகைய செய்திகளை எல்லாம் அகத்தியர்க்கு அத்திமுகக் கடவுளே அறிவிக்கும் வகையில் அமைந்துள்ளன நேமம் கோவில் வரலாற்று அகத்தீசுவரப் படலப் பாடல்கள்.

"அங்கிருந்து தென்திசையை அணுகுங்கால் மாணிக்கப்
பொங்கொளியைக் கண்டுள்ளம் பூரித்தான் புகழ்ந்தேத்தி

தந்தையின் பெயரே தனயனுக்கும் :

தந்தையின் பெயரே தனயனுக்கும் வைப்பது சில இடங்களில் மரபாகப் போற்றப் பெறுகிறது. அந்த முறையிலேயே இத்திருத்தலத்தில் அமைந்துள்ள சுவாமிக்கு உள்ள நான்கு பெயர்களுள் 'செயங்கொண்டார்' என்பதுவும் ஒன்று. தந்தைக்கும் பிள்ளைக்கும் (செயங்கொண்டார் என்று) இப்பெயரே அவ்வகையில் அமைந்துள்ளது.

சிவபெருமானுக்கு எங்ஙனம் இப்பெயர் ஏற்பட்டது? என்பதைக் குறித்துக்கூட சுவையான ஒரு நிகழ்ச்சி சுட்டிக்காட்டப்படுவது உண்டு. இத்தலத்து மூல நாயகரான சிவன் என்ன வெற்றி கொண்டார்? என்று ஊனையூர்ப் பாரதியார் அவர்கள் வினாவாக ஒரு வெண்பா இயற்றினார் என்றும், அதற்குப்பதிலாக பாடுவார் முத்தப்பச் செட்டியார் அவர்கள் விடையாக வேறொரு வெண்பா இயற்றினார் என்றும் சொல்லப் பெறுவதுண்டு. வினாவும் விடையுமாக அமைந்த அப்பாடல்கள் வருமாறு:

"ஓங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்விசயன்
வாங்குதனு வால் புசை வாங்கினார் — ஈங்கிருக்கும்
நன்னியமச் சோழீச னார்செயங்கொண் டாரென்றால்
என்ன செயங் கொண்டா ரிவர்".
"என்னசெயங் கொண்டார் இவரென்றான் முப்புரத்தைச்
சொன்னமய மாச்சமைத்த சோழீசர் — பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டா ரே".

பத்மாசூரனுக்குப் பயந்து ஓடி ஒளிந்தும், அர்ச்சுனனின் வளைந்த வில்லால் அடியும் வாங்கிய சிவ பெருமானைச் செயங்கொண்டார் எனச் செப்புவது எங்ஙனம் பொருந்தும்? என்கிறார் முன்னவர். அதற்குப் பின்னவர் முப்புரத்தைச் சொன்னமயமாய்ப் பொலிவு பெறச் செய்த சோழீசர், மேலும் திரிபுரத்தைச் சிரித்தே செயங்கொண்டதாலும், உலகிலுள்ள அனைத்தையும் வெற்றி கொண்ட காமனைக் காய்ந்து வெற்றி கொண்டதாலும் செயங்கொண்டார் எனும் நாமம் செயங் கொண்டாருக்குச் செவ்விதின் பொருந்துமே" என்றும் விளக்குவதாகவும் அமைகின்றன மேற்காட்டிய பாடல்கள். சிவபிரான் பெற்ற வெற்றியைச் சுட்டிக் காட்டும் முறையிலேயே இத்திருத்தலத்து ஈசனுக்குச் செயங்கொண்டார் என்ற பெயர் ஏற்பட்டது. அத்திருப்பெயரே அவரின் மூத்த பிள்ளை விநாயகருக்கும் அமைந்துவிட்டது.

நேமத்தில் நிலைபெற்ற நீடுபுகழ் நாயகரின் நல்ல பெயர்கள்:

நேமத்தில் வீற்றிருக்கும் விநாயகருக்கு

1. மாணிக்கக் கணபதி
2. செயங்கொண்டார்

என்ற இரண்டு பெயர்கள் உண்டு. தென்மேற்கு மூலையில் அமர்ந்து விநாயகர் விளங்குகின்றார். இச்செய்திகளை 'நேமம் கோவில் வரலாறு பல்கணத்துப் படலத்தின் முப்பத்தொன்றாம் பாடல் தெள்ளிதின் தெரிவிக்கிறது.

"மதகளிற்றின் திருமுகமும் மாணிக்கமாம் பேரும்
நதம்ஒழுக்கும் துதிக்கரமும் நால்வாயும் செயங்கொண்டான்
புதல்வனென அப்பெயரும் புனைந்துகன்னித் திசையமர்ந்து
நிதமருளும் கணபதிவாழ் நிலையொருபால் நிலவிடுமே."

அகத்தீசுவரப் படலத்திலும் ஆனைமுகனே தன் பெயரை அகத்தியரிடமும் "மாணிக்கக் கணபதி நாம்" (அகத்.படல் 43) என்றும் உரைக்கின்றார்.

இவ்விரண்டு பெயர்களிலும் 'செயங்கொண்டார்' என்பதே பெருவழக்காய் வழங்கி வருகின்றது.

எங்குளைநீ இறைவா சொல்? என்றக்கால் செயங்கொண்ட
சங்கரன் என் தாதை ,இங்கே தரியலர்தம் புரமெரித்தான்! (42)

"நானிங்கே அச்சிறுத்தேன் நாமின்றிச் செயலேதென்
றானாதே நினைஅமரர் அறிவுற்றார் எந்தையுமென்
மேனாளைக் கோரிக்கை மெய்யாக்கி எனைத்துதித்தான்
தேனாற்றான் வாய்மலர்ந்து சிரித்தளவில் புரம்பொடியே!" (43)

அதுமட்டுமல்லாமல் கயமா முகனை வெற்றி கொண்டதாலும் அவரைச் 'செயங் கொண்டார்' என்று சொல்வது பொருந்தும். இதனை அருணகிரி யார் கந்தரனுபூதியில்,

"தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை"

என்று பாராட்டுகின்றார்.

இதுகாறும் கண்ட செய்திகளால் 'செயங்கொண்ட விநாயகர்' என்று விநாயகப் பெருமான் வழங்கப் பெறுவதற்கு,

1. செயங்கொண்ட சோழபுரம் என்ற பெயரும் நேமத்திற்கு இருப்பதால் இடத்தின் பெயராலும்

2. தந்தையின் பெயரே தனயனுக்கும் வைக்கும் மரபினைப் பின்பற்றி அத்தலத்துச் சிவன், செயங்கொண்டார் என்று அழைப்பதைப் போலவே, அவரின் மூத்த பிள்ளைக்கும் 'செயங்கொண்ட விநாயகர்' என்றும்

3. தன்னை நினைக்காது முப்புரம் எரிக்க முயன்ற ஈசனின் தேரச்சை முறிக்கும் செயலில் வெற்றி கொண்டதால், 'செயங்கொண்டார்' என்றும் , நினையாத செயங்கொண்டாரையும் நினைக்க வைப்பதில் வெற்றி பெற்றதால் 'செயங்கொண்டார்' என்றும் அழைக்கப் பெற்றிருக்கலாம்.

உ

செட்டிமக்கள் இந்த பூமியிலே – பல
தெய்வத்துக்களித்தது கோடியம்மா
கட்டிய கோவில்கள் ஆயிரமே – அதில்
கந்தனின் கோவில்கள் யாவையுமே.

– கவியரசு கண்ணதாசன் –

உ

இறையருள்

கவிஞர். கா. நாகப்பன் M.A. B.Ed.,
காரைக்குடி

ஸ்ரீ ஜெயங்கொண்ட விநாயகர்

நேமங் கோயில் ஜெயங்கொண்ட
நேர்த்தி விநாயகர் அடிபணிந்தால்
சாமங் கூட வந்திருப்பார்
சாகா வரமும் தந்திருப்பார்
நாமஞ் சொல்லி நாம்போற்ற
நாளும் செல்வம் நமக்களிப்பார்
சேம வாழ்வை அருள்கின்ற
சேவடி, சிந்தை வைப்போமே!

அழகியநாச்சியம்மன்

அழகிய நாச்சி அம்மாவே!
அணிகலன் பூண்ட சீமாட்டி
பழகிய அன்பரை எந்நாளும்
பரவச மூட்டிய தாயேஉன்
அழகிய விழியாம் நெருப்பாலே
அத்தனை சிலைகளும் வந்ததெனில்
அழகினைச் செப்பச் சொற்களில்லை
அற்புதச் சுடரே! தாள்பணிவேன்!

நேமங்கோயில் தோத்திரம் : இராம அண்ணாமலை செட்டியார் இயற்றிய சிவஞான மாலையிலிருந்து

ஏமமதை விலகுரவி யொளியே போற்றி
இறைவிசௌந் தரிமாதுக் கிசைந்தோய் போற்றி
சேமநிதி யேயருளே பொருளே போற்றி
செயங்கொண்ட சோழீசா சிவமே போற்றி
ஆமெனவே மென்றெழுந்த அரனே போற்றி
அம்பலத்தி னடனமிடு மரசே போற்றி
நேமநகர் விளங்குசிவ சம்போ போற்றி
நின்பத மெனக்கருள்வாய் போற்றி ! போற்றி !

நேமம்
சோழகுல விநாயகர் கோவில்

மா.சந்திரமூர்த்தி. எம்.ஏ
பதிவு அலுவலர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

இக்கோவில் திருக்குளத்தின் வடபுறம் அமைந்துள்ளது. இக்கோவில் கருவறை, முகமண்டபம், திருச்சுற்று மண்டபம், விமானம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. கோவில் சன்னதி கீழ்த்திசையை நோக்கியுள்ளது.

இக்கோவில் விமானத்தைத் தவிர அனைத்துப் பகுதிகளும் வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. விமானம் செங்கல்லும், சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட இக்கோவில் நகரத்தார்களுடைய கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நேமம் கிராமத்தை அடைந்தவுடன் நம் கண்முன் தோன்றுவது திருக்குளத்தின் வடகரையில் வனப்போடு தோற்றமளிக்கும் இவ்விநாயகர் ஆலயமே. ஊராரும், நகரத்தாரும் கோவில் திருக்குளத்தில் மூழ்கி நீராடிவிட்டு, இவ்விநாயகரை வழி படுவதற்கு ஏற்றவகையில் வடகரையிலுள்ள படித்துறையின் பக்கத்தில் இக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலை அடைய எட்டு கல்படிகள் உள்ளன. அதன் பக்கங்க ளில் கம்பீரமாக நிற்கும் இரு கல்யானைகளின் சிற்பங்கள் கவினுற செதுக்கப்பட்டுள்ளன. இப்படிக்கட்டுகளைத் தாண்டிச் சென்றால் வனப்புமிகு சோழகுல விநாயகரைக் கண்டு தரிசிக்கலாம்.

சோழகுல விநாயகர் :

நீண்ட பீடத்தின் மீது இருபக்கங்களிலும் நாகர்கள் சூழ விநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இவ்வுருவம் வலதுகாலை குத்திட்டு இடதுகாலை மடித்து நான்கு கரங்களுடன் காணப்படுகிறது. மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் பிடித்துள்ளன. கீழ் வலக்கை கூர்மையான தந்தத்தைப் பற்றியுள்ளது. இடக்கை மோதக உருண்டையை ஏந்தியுள்ளது. கரண்ட மகுடம் தலையிலும், முத்துப்பட்டங்கள் நெற்றி யிலும், வீரமணி துதிக்கையின் மேலும், இரட்டைவட கண்டசரம் கழுத்திலும், மெல்லிய தோள்வளை மேற்கையிலும், கைக்காப்பு முன்கையிலும், புரிநூல் மார்பிலும், மெல்லிய உதரக்கச்சை மேல்வயிற்றிலும், இடைக்கச்சை இடையிலும், காப்பு காலிலும் அமைந்து விநாயகரை அழகு செய்கின்றன.

கரண்ட மகுடத்தை தலையில் அணிந்து நிமிர்ந்து நோக்கி கம்பீரமாக காட்சியளிக்கும் ஆனைமுகத்தானின் துதிக்கை இடம்புரியாக வளைந்து இடக்கையிலுள்ள மோதகத்தைப் பற்றுகிறது.

பெருத்த மத்தகமும், கூர்மையான கண்களும், பக்கங்களில் விரிந்த காதுகளும், கூரிய தந்தமும், இடம்புரி துதிக்கையும் ஆனை முகத்தானை அழகு செய்கின்றன. அகன்ற தோளும், சரிந்த வயிறும், குட்டையான அங்கங்களும், தசைப்பற்றுள்ள உடலும் கொண்டுள்ள இவ்விநாயகரின் உருவம் அளவோடு அமைக்கப்பட்டுள்ளது. விநாயகர் பீடத்தின் முன்புறத்திலே அவரது வாகனமான மூசிகத்தின் உருவம் புடைச்சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மூசிகத்தோடு வீற்றிருக்கும் விநாயகரின் திருவுரு, நகரத்தார் கால கலைப்பணியாகும். இவ்வுருவம் சோழகுல விநாயகர் என்ற பெயரில் நித்திய வழிபாட்டிலுள்ளது. 82 செ.மீ உயரமும், 50 செ.மீ அகலமும் உடையது.

இவ்விநாயகரின் பக்கங்களில் இரு நகரத்தார் கால நாகர் சிற்பங்கள் உள்ளன. விநாயகரின் முன்புறம் உள்ள மேடைமீது, விநாயகரின் மூசிக வாகனமும், பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளன.

கருவறை :

விநாயகர் வீற்றிருக்கும் கருவறை சதுரவடிவுடையது. அதன் உட்பக்க அளவு 1.80 மீட்டர், வெளிப்பக்க அளவு 4. மீட்டர். கருவறையின் உட்சுவர்களில் வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளில் விளக்கு மாடங்கள் உள்ளன. கருவறை நிலை வாயிலின் பக்கங்களில் கல்மணிகள் பதித்து இருவரிகளில் தாமரை இதழ்கள் அணிசெய்ய, அழகிய திரு நிலைக்கால் அமைக்கப்பட்டுள்ளது. நிலை வாயிலின் பக்கங்களை இரு அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. அத்தூண்கள் போதிகையின் மீது, இரு சிவகணங்கள் விமானத்தைத் தாங்கி நிற்பது போன்ற சிறிய சிற்பங்களைக் காணலாம். கருவறை வாயில் மேல் முகப்பில், அமுத கலசமேந்தி நிற்கும் இரு யானைகளோடு கஜலட்சுமியின் அமர்ந்த கோலக் காட்சியைக் காணலாம். இக்கோவில் கருவறைக்கு முன்புறம் அர்த்த மண்டப அமைப்பு இல்லை.

அதிட்டானம் :

கருவறையின் புறச்சுவர்கள் கட்டிடக்கலைச் சிறப்பு மிக்கதாக விளங்குகிறது. உபானம், பத்மம், கண்டம், கபோதகம், பத்மம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம் ஆகிய உறுப்புகளைக் கொண்டு அதிட்டானம் விளங்குகிறது. இதன் அதிட்டானம் எளிமையான அமைப்புடையது. கடைப்படைகளில் சிற்பங்கள் இல்லை. ஜகதிப்படையும் எளிய தோற்றமுடையது. கருவறையின் தென்புறத்தில் யாளியின் வாயிலிருந்து அபிடேக நீர் வெளிப்படும் நிலையில் நீர்த்தாரை செதுக்கப்பட்டுள்ளது. அந்நீரை வெளியே கொண்டு செல்ல புதைச் சாளர அமைப்புகள் திட்டமிட்டு கட்டப்பட்டுள்ளன.

புற அமைப்பு :

கருவறை புறச்சுவரின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில், தேவ கோட்ட மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாடங்களில் தெய்வ உருவங்கள் இல்லை. உருவங்களைப் பொருத்துவதற்கு ஏற்ற வகையில் இல்லாமல், இக்கோட்ட மாடங்கள் பொய்மையாக அமைக்கப்பட்டுள்ளன. தேவகோட்ட மாடங்களின் பக்கங்கள் இரு அரைத்தூண்களாலும், அதன் மேலுள்ள பகுதி சாலை வடிவிலும் வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளது. தேவகோட்டத்தின் பக்கங்களில் சுவரையொட்டி அரைத்தூண் கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கருவறையின் புறச்சுவரில் நான்கு திசைகளிலுமாக 24 அரைத்தூண்கள் உள்ளன. இவற்றின் கால், உடல், இடை, பத்மபந்தம், தாடி, கலசம், பத்மம், கலசம், தாடி, கும்பம், கமலம், பலகை, போதிகை ஆகிய பகுதிகளும் கவனமாக செதுக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்களின் கால்களிலுள்ள சதுரப்படை களில் பல்வகையான கொடிக்கருக்குகள், மலர்த்தோரணங்கள், பாயும் மான், யாளி, மகரம் ஆகிய சிறிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

விநாயகர் சன்னதியின் கூரைப்பகுதியை எழுதகம், கபோதகம் ஆகிய பகுதிகள் அணி செய்கின்றன. இங்கு கபோதகத்திற்கு மேல் யாளவரி காட்டப்படவில்லை. அவ்வாறு கபோதகத்திற்கு கீழுள்ள எழுதகப் பகுதியில், மதலை வரிசைகள் அமைக்கப்படாமல் எளிமையாக தோற்றமளிக்கிறது. கபோதகத்தைச் சுற்றிலுமுள்ள நாசிக்கூடுகளை கொடிக் கருக்குகள் மட்டும் அணி செய்கின்றன.

முக மண்டபம் :

கருவறை முன்புறம் முக மண்டபம் விசாலமாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தை இரு வரிசைகளில் 8 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் 2.85 மீட்டர்

உயரமுடையவை. இவை மேலும், கீழும், நடுவிலும் சதுரமாக அமைந்து இடையேயுள்ள பகுதி 16 பட்டை வடிவுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தூண்களின் நடுவிலும், மேலுள்ள சதுரப்படைகளில் மலர்ந்த பூக்கள் விரிந்த தாமரைகள், வனப்புமிகு வட்டங்கள், கொடிக்கருக்குகள் ஆகியவற்றைக் காணலாம்.

தூண் சிற்பங்கள் :

இத்தூண்களின் கீழேயுள்ள சதுரப்படைகளில் தெய்வ உருவங்களும் மானிட மற்றும் மிருகங்களின் சிற்பங்களும் காட்சியளிக்கின்றன. முக மண்டபத்தின் முன் வரிசையிலுள்ள தூண்கள் சண்டிகேசுவரர், தலமரத்தின் கீழே இருக்கும் இலிங்கம் இரணியனை மடியில் கிடத்தி, அவனது குடலை உருவி மாலையாகக் கொள்ளும் சிங்கபிரான், அவனது காலடியில் வணங்கி நிற்கும் இரணியன் மகன் பிரகலாதன், சக்தி வஜ்ஜிரப்படையோடு மயில் வாகனத்தின் மீது காட்சியளிக்கும் முருகப்பிரான், இலிங்கத்திற்கு பால் சொரியும் பசு, கையில் கூடையேந்தி வரும் குறத்தி, அங்குசம் பாசம் ஏந்தியுள்ள ஆனைமுகத்தான், ஆகிய சிற்பங்கள் உள்ளன. மேலும் ஓங்கிய கையும் கதாயுதமும் கொண்டு விளங்கும் வீர ஆஞ்சநேயர், அம்மையப்பனாகத் தோன்றி காட்சியளிக்கும் உமா சகிதமூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, தண்டாயுதபாணி, காமதேனு ஆகிய சிற்பங்களும் அலங்கரிக்கின்றன.

முக மண்டபத்தின் பின் வரிசையிலுள்ள தூண்களில் பாய்ந்து வரும் யாளி, அம்பும் வில்லும் ஏந்தி வரும் இராமபிரான், இடையில் கோவணம் தரித்து நிற்கும் பழனியாண்டி, ஆடும் மயில், தாருகாவனத்தில் மானோடும் சிவகணங்களோடும் தோன்றி, பிச்சை உகுக்கும் பெருமானான பிட்சாடன மூர்த்தி, ரிஷப வாகனத்தின் மீது சுகாசனத்தில் தனித்து வீற்றிருக்கும் சிவபெருமான், பத்மாசனம் கொண்டு தியானத்தில் வீற்றிருக்கும் நான்முகன், மழுவும் மானுமேந்தி காளை வாகனத்தோடு தோன்றும் ரிஷபவாகன மூர்த்தி, தாடியும், மீசையும் ஜடாமுடியும் தரித்த யோகி, குழலூதும் வேணுகோபாலன், இன்னிசையில் மயங்கி நிற்கும் ஆநிரைகள், அல்லிமலர் ஏந்திநிற்கும் அன்னை சௌந்தர நாயகி, அழகிய அன்னம், பறக்கும் குதிரை, பாயும் யாளி ஆகிய சிற்பங்களைக் காணலாம்.

ரிஷபவாகன மூர்த்தி :

இச்சிற்பங்களில் காளை வாகனத்தின் முன்புறம் சிவபெருமான் மழுவும், மானுமேந்தி அருள் பாலித்து நிற்க, அவரது இடக்கரம் காளைக்கு துளிர் கொடுக்கும் கரமாக அமைந்துள்ளது. இவ்வாறு சிவனது காளை வாகனம் அண்ணலது இளங்கரங்களையே துளிராகக் கொண்டு, அக்கரங்களை தன் வாயில் கவ்வி சுவைத்து நிற்பதை மிக அற்புதமாக செதுக்கியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது. ரிஷபத்தின் முன்புறம் சிவபெருமான் நிற்கும் கோலங்கள் செம்பிலும், கல்லிலும் காலம் தோறும் கலைப்படைப்புகளில் காட்டப்பட்டிருப்பினும் இங்குள்ள உருவம் வேறுபட்டிருக்கக் காண்கிறோம்.

சிவபெருமான், கோகுலத்து கோபாலனைப் போன்று இரு கால்களைப் பின்னி நிற்காமல், காளை வாகனத்தின் முன்பு நேராக நிற்பதும் அவரது வலக்கரம் காக்கும் கரமாக அமைந்து அருள் பாலிப்பதும், தாரமங்கலத்து கெட்டி முதலிகளின் சிற்பப்படைப்புகளை ஒத்து தழுவி நின்றாலும் நகரத்தார் காலச்சிற்பிகள் சிவபெருமானது இடக்கரத்தை காளைக்கு துளிர் கொடுக்கும் கரமாக தனித்தன்மையுடன் படைத்துள்ள பாங்கு இங்கு போற்றுதற்குரியது. இது நகரத்தார் காலச் சிற்பக் கலையை அடையாளம் காண நமக்குத் துணை புரிந்து வருகிறது. இச்சிற்பம் 46 செ.மீ உயரமும், 24 செ.மீ அகலமும் உடையது. இதன் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அவ்வாறு ரிஷப வாகனத்தின் மீது சிவபெருமான் மழுவும் மானுமேந்தி அபயமளிக்கும் நிலையில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கும் சிற்பமும் இங்கு நோக்கத்தக்கது.

பொதுவாக உமையோடு உமாசகிதராகக் காட்சியளிக்கும் சிற்பங்களிலிருந்து இது வேறுபட்டு நிற்கிறது. இவ்வாறு உமை இல்லாமலும், உமையுடனும் காளை வாகனத்தின் மீது காட்சியளிக்கும் சிவனது சிற்பங்களை நகரத்தார் காலக் கோவில்களில் காண முடிகிறது.

முதாட்டி :

முகமண்டபத்து பின்வரிசைகளில் உள்ள இரண்டாவது தூணில் வயது முதிர்ந்த, உடல் தளர்ந்து, கூனிக்குறுகி, கையில் கைத்தடியேந்தி, தள்ளாடி வரும் மூதாட்டியின் உருவம் ஒன்றைக் காணலாம். இம்மூதாட்டி இடையிலுள்ள ஆடை நெகிழ்வதறியாது, தன்னையே மறந்த நிலையில் விநாயகரை வழிபட்டுச் செல்வது போன்று சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இம்மூதாட்டியின் முகவாய் எலும்புகளையும், நெஞ்சு மற்றும் விலா எலும்புகளையும் கூட மிக நுணுக்கமாக வெளிப்படுத்தியுள்ள நகரத்தார் காலச் சிற்பிகளின் திறன் நேரில் கண்டு மகிழத்தக்கது. பல்வேறு இறையுருவங்களைப் பாங்குறப் படைக்கும் இக்கலைச் சிற்பிகள், மானிட உருவங்களை எவ்வளவு கவனத்துடன் செதுக்கியுள்ளார்கள் என்பதற்கு இச்சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டு.

முகமண்டபத்தூண்களில் ஆழ்ந்த தியானத்தில் நான்முகனையும், சீற்றத்தோடு குடலை உருவும் நரசிம்மனையும், வேணுகானம் இசைக்கும் கோபாலனையும், பாய்ந்து வரும் வீர அனுமானையும், காட்சி கொடுக்கும் பெருமானையும் மாறுபட்ட சூழலில் பாங்குற அமைத்துள்ளனர்.

திருச்சுற்று மண்டபம் :

விநாயகர் கோவில் கருவறையை வலம் வர முகமண்டபத்தை ஒட்டி திருச்சுற்று மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தைச் சுற்றிலும் 8 தூண்கள் அலங்கரிக்கின்றன. இவை முக மண்டபத்தூண்களையொத்து விளங்குகின்றன. இத்தூண்களில் இடம்புரி விநாயகர், சக்திப்படையும், சூலமும் ஏந்தி அருள் பாலிக்கும் அண்ணல், ராஜ உடையில் தோன்றும் தண்டாயுதபாணி, காளியின் மீது நர்த்தனமாடும் நவநீதக் கண்ணன், வாலில் மணிகளுடன் தோன்றும் வீர ஆஞ்சநேயர் ஆகிய உருவங்கள் உள்ளன. இவை தவிர அழகிய அன்னம், சீறும் சிம்மங்கள், பாயும் யாளி, இறக்கையுடன் கூடிய மகரம், இரட்டை யாளி ஆகிய சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவை நகரத்தார் காலச் சிற்பக்கலையை வெளிப்படுத்துவன.

கல் யானைகள் :

முக மண்டபத்தின் வாயிலை அலங்கரிக்கும் இரு யானைகளின் உருவங்கள் வனப்புடையவை. பெருத்த உடலும், வலுவான கால்களும், நீண்டு வளைந்த துதிக்கையும், வனப்போடு விரிந்த காதுகளும், உருண்டு திரண்ட மத்தகமும், கூர்மையான சிறிய கண்களும், உறுதியான தந்தங்களும் கொண்ட களிறு வடிவம் கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது. கழுத்தைச் சுற்றிலும் சதங்கை வாரும், மலர்ச்சரமும் அணி செய்ய, முதுகின் மீது மேல்விரிப்பும், பின் உடலில் இடைவாரும் அலங்கரிக்க, மணியோசையுடன் கம்பீரமாக நடந்து வரும் வண்ணம், இரு களிறுகளின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சோழ விநாயகர் விமானச் சிற்பங்கள் :

விநாயகர் சன்னதியின் முகமண்டபத்தின் மேல் பகுதியில் சாலைகளும், கர்ண கூடுகளும், பஞ்சரங்களும் நான்கு திசைகளிலும் அமைந்து அலங்கரிக்கின்றன. கீழ்த்திசையில் மூசிகத்தின் மீது அங்குசம் பாசமேந்தி, நான்கு கைகளுடன் இடம்புரி விநாயகரின் இருந்த கோலம் சுதைச்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. விநாயகரின் பக்கங்களில் இருமறையவர்கள் கைகளில் கமண்டலமும் பூசைத்தட்டும், மணியும்,

சூடமும் ஏந்தி ஆராதிக்கின்றனர். மறையவர்களின் பக்கங்களில் இரு சிவகணங்கள் இனிப்பு உருண்டைகளை தலையிலேந்திப் பிடித்து நிற்கின்றனர்.

இதன் தென்திசையில் சக்திப்படையும், வஜ்ஜிரப்படையும் பின் கைகளில் ஏந்தி, அபய வரதமளிக்கும் சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை ஆகிய இரு தேவியருடன் தோன்றும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

அடுத்து கோகுலத்து கோபாலன் ஆயர்குலத்து அண்ணல் குழந்தைவடிவில் தோன்றி, இடையில் அரைஞாண் தரித்து, இளங்கைகளில் குழலெடுத்து வேணுகானம் இசைக்கும் காட்சியும், அண்ணலின் பின்புறம் அவ்விசை கேட்டு மயங்கி நிற்கும் ஆநிரையின் தோற்றமும் வடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிவகணத்தின் வடதிசையில் இரு தேவியருடன் சுப்பிரமணியர் தோன்றி அருள் பாலிக்கும் காட்சி, நின்ற கோல சிற்பமாக அலங்கரிக்கிறது. வடகோடியில் ஆயர்குல அண்ணல் கால்களை மடக்கி நின்று, கைகளில் குழல் கொண்டு வேணுகானம் இசைக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

தென்திசைச் சிற்பங்கள் :

இங்கு நீண்ட சாலையின் நடுவேயுள்ள மாடத்தில் தென் திசைச் செல்வனான தட்சிணாமூர்த்தி, இருகால்களையும் மடித்து யோகாசனத்தில் அமர்ந்துள்ளார். அவரது கைகளில் அக்கமாலை, தீயகல், ஏடு ஆகியன உள்ளன. அவரது பக்கங்களில் ஜனகாதி முனிவர்கள் முதியோர், அடியார், அரசர், நாயன்மார்கள் ஆகியோரின் உருவங்கள், கர்ண கூடங்கள் மற்றும் பஞ்சரங்களின் முன்புறம் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேல்திசைச் சிற்பங்கள் :

இங்கு சாலையின் நடுவேயுள்ள மாடத்தில் திருமால், ஆழியும் சங்கமுமேந்தி அமர்ந்த கோலத்தில் அருள் பாலிக்கிறார். திருமாலின் பக்கங்களில் திருமகளும், நிலமகளும் அல்லியும், தாமரையும் ஏந்தி நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இச்சிற்பத்தின் வடபுறத்தில் அஞ்சலித்து நிற்கும் கோதண்டராமர், வணங்கி நிற்கும் முதியோர்கள், அமர்ந்துள்ள அண்ணல் கையில் குடையோடும், கமண்டலத்தோடும் அந்தண வடிவில் வரும் வாமணன் ஆகியோரின் உருவங்களைக் காணலாம். தென் திசையில் முகத்தில் தாடியும், மீசையும் தரித்து, தலையில் உருமால் கட்டி நிற்கும் பெரியோர்கள் அவர்கள் முன் பணிந்து நிற்கும் அடியார்கள் ஆகியோரின் சுதைச் சிற்பங்களைக் கண்டு களிக்கலாம்.

வடதிசைச் சிற்பங்கள் :

இங்கு நீண்ட சாலையின் நடுவேயுள்ள மாடத்தில் அக்கமாலை கெண்டியேந்தி அபயவரதமளிக்கும் நான்முகன், தன் தேவியரான சரஸ்வதி, சாவித்ரி ஆகியோருடன் தோன்றும் காட்சியைக் காணலாம். இரு பக்கங்களிலும் நாரதரும், தும்புருவும் வீணையும் இசைக்கருவியையும் ஏந்தி இசை எழுப்புகின்றனர். கீழ்த்திசையில் யானையின் முன்பு தலையில் மகுடமும், முகத்தில் மீசையும், மார்பில் மாலையுமணிந்த மன்னவனின் தோற்றம் காணப்படுகிறது. அடுத்து நான்கு கைகளோடு தோன்றும் தெய்வத் திருவுருவத்தின் முன்பு யானை ஒன்று காட்டப்பட்டுள்ளது. மேல்திசையில் தும்புருவின் பக்கங்களில் அஞ்சலித்து நிற்கும் அரசன், சேவகன், அடியார், அல்லி மலரேந்தி நிற்கும் தெய்வ வடிவம், வணங்கி நிற்கும் முனிவர் ஆகிய உருவங்கள் உள்ளன. இறுதியில் இளம் தாய் ஒருவள் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு பாலூட்டுகிறாள். அவ்ளது கரங்கள் குழந்தையைத் தழுவியுள்ளன. பச்சிளம் குழந்தை தன் பிஞ்சு விரல்களால் தாயின் தனத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் நிலையில் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அங்குள்ள வரிசைகளில் தெய்வ உருவங்கள், அரசர், அந்தணர், முனிவர்கள் ஆகியோரின் உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

விமானம் :

கருவறையின் மீது இருதள விமானம் அலங்கரிக்கிறது. இவ்விமானம் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை கல்லைக் கொண்டும், அதன் மேலுள்ள விமானத் தளங்கள் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. இவ்விமான தளத்தின் சாலைகள், கர்ணக்கூடுகள், பஞ்சரம் ஆகிய அங்கங்களின் முன்பு அழகிய சுதைச் சிற்பங்களைக் காணலாம். விமானக் கோட்டங்களில் நான்முகன், விநாயகர், தென்திசைச் செல்வன், திருமால் ஆகியோரின் உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. விமானத்தளங்களை விமானந் தாங்கிகள் தம் தோளில் தாங்கி நிற்கின்றனர். தவிர அரசர், அந்தணர், மறையவர், முதியோர், சேவகர், பணிப்பெண்கள் ஆகிய உருவங்களுமுள்ளன. கிரீவக் கோட்டத்தின் நான்கு திசைகளிலும் விநாயகரின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. கிரீவம் வட்ட வடிவில் அமைந்துள்ளது. இதன் வேதிகைப் படையில் மூசிக வாகனத்துடன் சிவகணங்கள் காட்டப்பட்டுள்ளன. சிகரம் வட்டவடிவில் வேசர சிகரமாக அமைந்துள்ளது. அதன் மேலுள்ள ஸ்தூபி உலோகத்தாலானது.

சுதைச் சிற்பங்கள் அனைத்தும் நகரத்தார் காலத்து கலை வளத்தை அறிந்து கொள்ள பெரிதும் துணை புரிகின்றன. கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கோவிலையும் இங்குள்ள சுதைச் சிற்பங்களையும் அண்மைக் காலத்தில் திருப்பணி செய்து குடநீராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்து வருகின்றனர்.

முருகப்பனில்லாத ஊருமில்லை –ஒரு
முத்தையனில்லாத வீடுமில்லை
பழனியப்பனின்றி வம்சமில்லை – எங்கள்
பரம்பரைக் கவனின்றி அம்சமில்லை

கவியரசு கண்ணதாசன்

செட்டிநாட்டில் சிவபெருமான்

சிறுகூடற்பட்டி சிவத்திரு அ.சொ. சுப்பையா, எம். ஏ.,
சைவ சித்தாந்தப் புலவர் (தருமை)

முன்னொரு காலத்தில் தருமம் தவம் செய்தது. சிவபெருமான் உமையொரு பாகனாய் அதன் முன் தோன்றினார். தருமம் அம்மையப்பரை வணங்கி நின்றது.

"அற நெறியாள! நின் அரிய தவத்திற்கு மகிழ்ந்தோம். நீ விரும்புகிற வரத்தைக் கேட்பாயாக!" என்று முழுமுதற் கடவுள் பணித்தார்.

"தேவ தேவ! உலகெங்கும் அறநெறிக்கு மாறான வன் செயல்கள் பரவி வருகின்றன. மனிதரிடையே, நாட்டுக்கு நாடு எல்லைப் போராட்டங்கள், இனக் கலவரங்கள், சமுதாயச் சண்டைகள் சாதி சமயப் பூசல்கள், வீட்டுக்கு வீடு சச்சரவுகள் மனக்குழப்பங்கள் பெருகிக்கொண்டே இருப்பதால், அறப் பண்புகள் நாளும் நலிவுற்று வருகின்றன; அடியேனுடைய வாழ்வுக்கே ஒரு காலத்தில் ஊறு நேருமோ என்ற அச்சம் கூட எழுகிறது;

எனவே உயிர்களது நலனுக்காகத் தாங்கள் உருவத்திருமேனி கொள்ளும் போது, அடியேன் தங்களுடைய ஊர்தியாக இருக்க அருள் புரிய வேண்டும். தங்களுடைய திருவடித் தொண்டனாகிய அடியேன் எக்காலத்திலும் உயிரினத்தின் நல்வாழ்வுக்கு உறுதுணையாயிருக்க அருள் பாலிக்க வேண்டும்' எனத் தருமம் இறைவனிடம் இறைஞ்சியது. கருணையே வடிவான கண்ணுதற் கடவுள், தருமத்தின் அருள் உள்ளத்தையும், அன்பு நெறியையும் அமைதி வேட்கையையும் கண்ணுற்றார். எருது வடிவில் தமது ஊர்தியாக அதனை ஏற்றுக்கொண்டார்.

அறவிடை

அறம் என்றால் தருமம்; விடை என்றால் எருது. இவ்வாறு தருமமே எருது வடிவில் அறவிடையாகச் சிவபெருமானுக்கு ஊர்தியாயிற்று.

பெற்றம், ஆ, எருது, விடை, சே, காளை என்பன ஒரே பொருளுடைய பல சொற்கள். நாகு என்பது பெண் பாலாய்ப் பசுவினைக் குறிக்கும்.

பெற்றத்தை ஊர்தியாகக் கொண்டு ஆளுபவன் பெற்றாச்சி.

ஆவினை இச்சித்து (விரும்பி) ஏறுபவன் ஆவிச்சி. ஆவினைத் தனக்கு உடைமையாக உவந்து ஏற்றவன் ஆவுடையப்பன்.

சே கு அப்பன் = சேக்கப்பன், காளை அப்பன் = காளையப்பன், நாகு அப்பன் = நாகப்பன்

அடிக்குறிப்பு : தோடுடைய செவியன் விடை ஏறி ... (சம்பந்தர் 1:1:1) மடவாள் தனோடும் விடை ஏறு நங்கள் பரமன் ... (சம்பந்தர் 2:85:5) பசு ஏறி எங்கள் பரமன் (2:85:58 சம்பந்தர்)
நாகு தழுவி ஏறு வருவன கண்டேன் (அப்பர் 4:3:1)
ஏறு ஏறும் பெம்மானை எம் மனத்தே வைத்தேனே (அப்பர் 4:7:5)

இதிலிருந்து செட்டிநாட்டு வழக்கிலுள்ள பெத்தாச்சி, சேவுகன் செட்டி, சேக்கப்பன், காளையப்பன், நாகப்பன், ஆவிச்சி, ஆவுடையப்பன் போன்ற பெயர்கள், நம்மவர்களுக்குச் சிவத்தின்பால் உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உணர்த்துகின்றன அன்றோ?

தாம் அறத்தினை விடை ஊர்தியாக ஏற்று அருள் பாலித்த உண்மையை, பூவுலகத்தவராகிய நமக்கு உணர்த்த விரும்பினார் சிவபெருமான், அதற்காகப் பசு என்ற ஓர் இனத்தையே தோற்றுவித்தார்.

உலகிலுள்ள கோடானு கோடி பிராணிகளுள், பசு என்பது சாத்துவிக குணம் நிறைந்த ஓர் உயர்ந்த பிராணி. அமைதியே வடிவானது. அன்புருவானது. மற்ற பிராணிகளைப் போல் அது தீவினை செய்வதில்லை.

வினையும் பயனும்

மனிதர்களாகிய நாம் முன் செய்த வினையின் பயன்களை நுகர்ந்து கழிப்பதற்காகவே, மீண்டும் மீண்டும் பிறக்கிறோம். உயிர்கள் அனைத்துக்கும் இதுவே பொது நியதி. அநாதி காலம்தொட்டே, ஆணவம் என்ற ஒரு பெருங்கேடு நம்மை வலிமையாகப் பிணித்து ஆட்டுகிறது. எனவே, ஒவ்வொரு பிறப்பிலும் நாம் தன் முனைப்போடு பல காரியங்களைச் செய்து புதுப்புது வினைகளை ஈட்டுகிறோம்; அதனால், பிறப்பு இறப்பு என்ற சுழற்சியிலே சிக்கி, அல்லலுறுகிறோம்.

வினைதீர்த்தான்

ஆணவத்தின் ஆற்றலை ஒடுக்கி, வினையினை தீர்க்கவல்ல ஒரே தலைவன், சிவபெருமானே. வினை தீர்த்தான் என்ற அவரது பெயரினைச் செட்டிநாட்டில் பரவலாகக் காணுகிறோம்.

முன்னர் வினையேதும் செய்யாதிருந்த தருமம். இப் பூவுலகில் பசு வடிவம் பெற்று நம்மோடு வாழத் தலைப்பட்டவுடன், அதுவும் வினை செய்யத் தொடங்குகிறது. அது செய்கிற வினைதான் என்ன?

பசித்தபோது புல் தின்கிறது, தவித்தபோது தண்ணீர் குடிக்கிறது.

இவ்வாறு புல் தின்பதும், நீர் குடிப்பதும் வினையாகுமா என சிலர் ஐயுறுவர். செயல், தொழில், வினை, கருமம் முதலிய பல சொற்களும் ஒரே பொருளுடையன. தின்பது, குடிப்பதுமாகிய செயல்களும் வினையே ஆகும்.

ஒவ்வொரு வினைக்கும் ஏற்றதொரு பயன் உண்டு என்பதும், அவ் வினைப் பயனை, வினை செய்தவனே உரிய காலத்தில் இன்ப துன்பங்களாக நுகர்ந்து கழிக்க வேண்டும் என்பதும் சைவ சித்தாந்தம். இக் கருத்தினை மற்ற பல சமயங்கள் மட்டுமன்றி, இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கிறது. "Every action has an equal and opposite reaction..........என்பது நியூட்டன் என்ற மேலை நாட்டு அறிவியல் ஆய்வாளர் ஒருவரது "பொருள் அலைவுக் கொள்கை" (Newton's Law of Motion)..........ஆகும்.

பசு புல் தின்று நீர் குடித்தது. ஒரு வினையாயிற்று. அதற்குப் பயன் என்ன?

புல்லும் தண்ணீரும் சீரணமாகி, இரத்தமாக மாறி, அதனின்று பால் எனும் பொருள் வெளிப்பட்டது.

எனவே சங்க காலத்துத் தமிழ்ச் சான்றோர்கள் வினைப் பயனை அறிவுறுத்துதற்குப் பால் என்ற குறியீட்டுச் சொல்லையே இலக்கண இலக்கியங்களில் எடுத்தாண்டனர்.

"பாலது ஆணையாலே............" தொல், களவு – 2.

இறைவன் திருவருள்

சிவபெருமான் பசு செய்த வினையையும் அதன் பயனாகிய பாலையும் பார்த்தார். அறத்தின் சின்னமாகிய பசு, தன் முனைப்பின்றி அருள் உள்ளத்தொடு செய்த வினையாதலால், அதன் பயனைத் தாமே ஏற்றருளத் திருவுளம் கொண்டார்.

எனவே பசுவின் பாலைச் சிவபெருமான் தமக்கு அபிடேகப் பொருளாக ஏற்றார். அபிடேகத்திற்குப் பிறகும் பால் எஞ்சியது. அது தயிராயிற்று. தயிரையும் அபிடேகப் பொருளாகக் கொண்டார். எஞ்சிய தயிரிலிருந்து நெய் வெளிப்பட, அந்த நெய்யையும் தமக்கு அபிடேகப் பொருளாக்கி ஏற்றார்.

அவ்வளவுதானா? இல்லை, இல்லை, இன்னும் உள்ளது.

தின்ற புல்லிலும் குடித்த நீரிலும் குருதியாக மாறியவை போக, எஞ்சிய சக்கைகள் கழிவுப் பொருள்களாகி கோமயம், கோசலம் (எரு, நீர்) என்ற இரு பொருள்களாக வெளிப்பட்டன.

அவற்றையும் சேர்த்துப் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்ற ஐந்து பொருள்களையும் சிவபெருமான் தமக்கு விருப்பமான பஞ்சகவ்விய அபிடேகப் பொருள்களாகக் கொண்டார்.

பால் ஐந்து பலம், தயிர் மூன்று பலம், நெய் இரண்டு பலம், கோசலம் ஒரு பலம், கோமயம் கைப்பெருவிரலில் பாதி எனக் கூட்டியது, பஞ்ச கவ்வியமாகும்.

தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளில் அரன் ஆனைந்தாடும் சிறப்பு பரவலாக விதந்தோதப்படுகிறது.

"ஆவினுக்(கு) அருங்கல(ம்) அர(ன்) அஞ்(சு) ஆடுதல்" (4:11:2 அப்பர்)

"பால் நறு நெய் தயிர் ஐந் தாடும் பரம்பரணை...." (சுந்தரர்)

பசு செய்த வினையின் பயன், இவ்வைந்து பொருள்களோடு முடிந்ததா? எனில், இல்லை.

, எருவும், நீரும் எஞ்சி நின்றன. அவற்றை ஒன்றாகப் பிசைந்து முட்டக மிட்டுத் தீயில் சுட்டு, நீறாக்கி, அதனையும் திருநீறாகத் தம் உடல் முழுவதும் அபிடேகித்துக் கொண்டார் சிவபெருமான்.

திருவருளால் பசு இனம் தோன்றியது. தன் முனைப்பின்றி வினை செய்தது. எனவே வினைப்பயனாகிய பால் முதலிய ஐந்தினையும், திரு

நீற்றினையும் சிவபெருமான் தாமே ஏற்றருளினார். அவர் அவ்வாறு ஏற்ற ருளியதால், வினையும் பயனும் பசுவைத் தாக்காது ஒழிந்தன. இஃது இன்றும் நடைமுறையில் காணப் பெறுகிற நிகழ்ச்சி. பசு இனத்திற்கு இறைவன் இவ்வாறு அருள் புரிகிறார். இதேபோல் மனித இனத்துக்கும் அருள்பாலிப் பாரா? என்ற வினா எழுகிறதன்றோ?

உடையப்பன்

உயிர் பாசங்களால் கட்டுண்டிருப்பதால், உயிரை பசு என அழைப்பது சைவ மரபு. இத்தகைய உயிர்கள் அனைத்தையும் தமக்கு அடிமையாகவும், உயிரற்ற சடப் பொருள்களை எல்லாம் தமது உடைமையாகவும் கொண்டவர் சிவபெருமான். இங்ஙனம் அண்ட சராசரமும் அவரது உடமையாகின்றன. அந்த அவரது திருநாமமே உடையப்பன் என்ற பெயரால் செட்டிநாட்டில் வழங்கப் பெறுகிறது.

உயிர்களை அவற்றின் அறிவு வளர்ச்சிக்கேற்ப ஓரறிவுயிர் முதல் ஆறறி வுயிர் வரை ஆறாகப் பகுப்பர்.

மனம்–ஒரு தோழி

மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்றவன், மனிதன். அரசனுக்கு அமைச்சு போன்றும், தலைவிக்குத் தோழி போன்றும், உயிருக்கு மனம் உறு துணையாக நிற்கிறது.

தீயனவற்றை இனம் கண்டு ஒதுக்கவும், செம்பொருளை நாடி, உய்தி பெறவும் துணையாக, உயிருக்கு மனத்தைத் தோழமைப் படுத்தினார், இறைவன்; ஆனால் உயிரினமோ இந்த மனம் என்ற கருவியைத் துணை யாகக் கொண்டு, பண்டு தொட்ட சிற்றறிவுச் செயல்களிலும், விலங்கு உணர்வுகளிலுமே பெரிதும் ஈடுபடுகிறது. அதனால்தான் எங்கும் எதிலும் குழப்பங்களும் போராட்டங்களும் நிகழ்கின்றன.

வெற்று வாழ்வு

நெஞ்சுக்கும் அடிவயிற்றுக்கும் இடையில் மட்டுமே பலரது மனம் போக்குவரத்து புரிகிறது. அவர்களுக்குத் தோலின் தொடு உணர்வும், நாவின் சுவையும், மூக்கின் நுகர்வும் ஆகிய மூன்று அறிவுகள் மட்டுமே மேலோங்கி நிற்கும். எனவே, உண்பதும், உறங்குவதும், உடலுறவு கொள்ளு வதுமே அவர்கள் அன்றாடம் காணுகிற இன்பமாகிறது.

வீரவாழ்வு

நெஞ்சுக்கும் பிடரிக்கும் இடையேயும் சிலரது மனம் உலவுகிறது. அவர்கள் முன்னர்க் கூறிய மூன்றோடு கண்ணால் காணுகிற காட்சி, இன்ப மும், காதால் கேட்கிற கேள்வி இன்பமும் ஆகிய இரண்டு அறிவுகளும் சேர்த்து, ஐந்தறிவுகளைப் பெற்று உலகியலில் வளமுடன் வாழ்வதற்கான வழிமுறைகளை மட்டும் எண்ணிப் பார்க்கிற மனம் என்ற ஆறாவது அறிவினையும் உடைய மனிதராகின்றனர்.

அறிவு நரம்புகளும், செயல் நரம்புகளும் பிடரிப் பகுதியிலுள்ள சிறு மூளையிலே தொடங்குகின்றன. எனவே புத்தியும் அகங்காரமுமே அவர் களிடம் விஞ்சுகின்றன.

மனம் என்ற தோழியைப் பின்பற்றி, மனித அறிவு என்ற உயிர்த் தலைவியும் அலைந்து திரிகிறாள். இதனைத்

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொளும்..."

என்ற குறுந்தொகைப் (222) பாடல் மூலம் அறியலாம்.

அருள்வாழ்வு

"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என ஔவையார் நல்லறிவு புகட்டுகிறார்.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

"செம்பொருள் காண்பது அறிவு"–எனத் திருவள்ளுவரும் உண்மையான அறிவுக்கு இலக்கணம் கூறுகிறார்.

"சித்தத்தை சிவன் பாலே வைத்தல் வேண்டும்" – என்பதை நம் முன்னோர் வாழ்க்கை நெறியாகக் கொண்டனர்.

எனவே மன ஓட்டத்தைப் புருவ நடுவிற்குக் கொண்டு வரப் பயிலுதல் வேண்டும். அப்போது, அறிவும் சிறிது சிறிதாகப் படி முறையில் வளர்ந்து சிவஞானத்தில் தலைப்படும்.

இவ்வாறு மனத்தினை ஒருங்கே குவித்து, முடிந்த முடிவான சச்சி தானந்தப் பேரின்பத்தைப் பெறுவதற்கான சிவநெறியில் நிற்பவர்கள், மெய் யடியார்களாவர். அவர்களுடைய வாழ்வு அருள் வாழ்வாகும்.

ஓமத் தானம்

....அவர்கள் சிவபெருமானைத் தமது அடி வயிற்றிலே ஓமகுண்டத்தி லிருந்து வலஞ்சுழித்து எழுகின்ற எரிவடிவிலே கண்டு வணங்குவர். அப்போது அவர்களது வினைகள் அனைத்தும் பொசுங்கித் தம் வலி இழக்கின்றன.

பூசைத் தானம்

....மெய்யடியார்கள், தம் இருதயத்தையே திருக்கோயில் கருவறையி லுள்ள சிவலிங்கமாகச் சிந்தித்து, அங்குத் தாம் எப்போதும் திருக்கோயில் களில் கண்டு களிக்கிற அபிடேகம், ஆராதனை, நிவேதனம், சோட சோப சாரம் முதலிய எல்லா பூசனைகளையும் மனம் ஒன்றிச் செய்து மகிழ்வர்.

அவர்கள் உண்ட உணவு செங்குருதியாகி, அவர்களது இருதயத்தின் இடப்பாகத்தில் இலிங்க வடிவ இறைவனுக்கு அபிடேகப் பொருளாகிறது.

அவர்கள் பலவித வினைகளையும் செய்வதால், உடம்பு முழுவதும் செங் குருதியானது, அழுக்குச் சேர்ந்த நீலக் குருதியாகிறது. நீலக் குருதியும், இருதயத்தின் வலப் பாகத்திற்கு வந்து, இறைவனுக்கு அபிடேகப் பொருளா கிறது.

நாம் தூங்கினாலும், விழித்திருந்தாலும், நின்றாலும், கிடந்தாலும், எழுந்தாலும், நடந்தாலும் எக் காலமும் இடையீடின்றி இந்த அபிடேகம்

நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. எனவே சிவபெருமானை அபிடேகப் பிரியன் என்று கூறுவது மரபு.

இவ்வாறு சிவபெருமான் பசுவின் வினைகளைக் கொண்டது போலவே தமது மெய்யடியார்கள் செய்த நல்வினை, தீவினை அனைத்தையும் தமக்கு அபிடேகப் பொருளாகக் கொள்ளுகிறார்.

தியானத்தானம்

மெய்யடியார்கள் மனம் ஒன்றிய சிந்தனையால் தமது புருவ நடுவில் சிவமூல மந்திரத்தை எப்போதும் தியானித்திருப்பர். புருவத்தின் மேலுள்ள தலைப்பகுதி, சுத்த மாயையினால் ஆனது.

நிலையான பேரின்பம்

நமது தலையின் முன்பகுதியே, சிவபெருமானது திருவருள் கூடுகிற இடம். இங்கு தான், சிவபெருமான் தலைவனாக நின்று, உயிராகிய தலைவியையும் புணர்ந்து அவளுக்குப் பேரின்பம் நல்குகிறார்.

நில உலகில் உயர்ந்த இடம், குறிஞ்சி என்ற மலைப்பகுதி. நம் மனித உடலில், குறிஞ்சி போன்ற உயர்ந்த இடம் நமது தலை ஆகும்.

நம் தலையில் ஆண்டவன் – ஆன்மக் கூட்டம் நிகழ்கிறது. அதற்கான சுத்தமாயா உறுப்புகளும் நம் தலையினுள் செவ்விதே படைக்கப் பெற்றிருக்கின்றன.

எனவே குறிஞ்சியில் புணர்ச்சி என்றும், இடம் தலைப்பாடு என்றும் சங்கத் தமிழ் நூல்களில் சொல்லாட்சி நிலவலாயிற்று.

'இத்தகைய பேரின்பம் மறுமையில் தான்' என்பதில்லை. இந்தப் பிறவியிலேயே சிவ நெறியில் முறையாகப் பயில்வோர்க்கு அமையும் என்பது தொல்காப்பியர் முதலிய நமது முன்னோர்களது அனுபவ மொழியாகும்.

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

– தொல் (பொருளியல்) 239

நிறைவுரை

எனவே நாமும் தருமத்தின் வழி நின்று, அனைத்தையும் சிவச் செயலாகக் கருதிச் சிவஞானம் என்ற முடிந்த முடிவான உண்மைப் பேரின்பத்தை இம்மையிலும், மறுமையிலும், அம்மையிலும் அடைய முற்படுதற்கு,

ஸ்ரீ சௌந்தர நாயகி உடனாய ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரப் பெருமான் திருவடிகளைப் பற்றி நின்று வேண்டுவோமாக!

–திருச்சிற்றம்பலம்–

நன்கறிந்து பற்றுங்கள் சிவனின் பாதம்

கவிஞர் குழிபிறை வீ. கே. கஸ்தூரிநாதன் எம்.ஏ., எம்.எட்.,

விண்ணவர்கள் ஏத்துகின்ற தலைவன் இந்த
வியனுலகு காத்துநிற்கும் இறைவன் மூன்று
கண்ணுடைய சிவனாகும் தாயாய் மாறி
காவிரியில் மகப்பேறு பார்க்கும் நெஞ்சன்
பண்ணிசைத்தால் இரங்குகின்ற இதயம் கொண்டு
பக்தர்களின் முன்வந்து நிற்பான் மேலும்
எண்திசையும் தன்விழியைச் செலுத்தி வையம்
இயக்குகின்ற மூலவனும் அவனே ஆவான்!

வாசகனை ஆட்கொண்ட சிவனோ அன்று
வந்திக்கு மண்சுமக்க இறங்கி வந்தான்
மாசறுக்க மன்னவனின் ஆணை கேட்டு
மண்ணெடுத்து வைகைநதி அணையாய்ப் போட்டான்
ஈசனவன் அன்புக்கு மட்டும் என்றும்
இறங்கிவரும் இயல்புடைய இதயம் கொண்ட
தாசனென நிற்கின்றான் தெளிந்தால் போதும்
தடுமாற்றம் நமைவிட்டு விலகிப் போகும்!

மதுரையிலே ஆளுகிற உமையை இந்த
மண்ணுலகைக் காப்பதற்கு அனுப்பி வைத்து
புதுவரதன் தில்லையிலே காலைத் தூக்கி
புவியடங்க ஆடுகின்ற ஆட்டம் கண்டால்
மதுசுரக்கும் இதயத்தில் மகிழ்ச்சி தங்கும்
மனங்குளிர எல்லோர்க்கும் வாழ்வு பொங்கும்
புதுவிரதம் கொள்வதற்கு வழிகள் தோன்றும்
புண்ணியத்தின் பலன்வந்து நம்மில் ஊன்றும்!

இவ்வாறு எவ்விடத்தும் இருக்கும் எங்கள்
இறையவனும் உமையவளும் நேமம் வந்து
செவ்வாழை காலூன்றி நிலைத்து நிற்க
சிறப்புகளை நாமடைந்து பயன்கள் பெற்றோம்
ஒவ்வாத செயல்விட்டு உள்ளம் தொட்டு
உருப்படியாய்க் காரியங்கள் நடத்து கின்றோம்
வெவ்வேறாய் இல்லாமல் மக்கள் எல்லாம்
விரைவாக அவன்கோயில் அடைந்தால் போதும்!

பெற்றவளும் ஒருநாளில் பிள்ளை தன்னை
பிரிகின்ற நிலைமைவரும் குற்றம் கண்டு
உற்றவரும் விலகிடுவார் பகைமை வந்தால்
உடன்பிறப்பும் சிதைந்துவிடும் சொத்தைக் கேட்டால்
வெற்றிகளும் தொடர்வதில்லை என்றும் நம்மை
விமலன்தான் எப்போதும் காப்பான் உண்மை
பற்றுகளை விட்டுவிட்டால் பாவம் போகும்
பரமசிவன் கருணைவந்து நம்மைச் சூழும்!

ஓடிவரும் செல்வங்கள் இல்லம் நோக்கி
உயர்ந்துவிடும் நம்வாழ்வு இமயம் போன்று
கூடிவரும் நல்லுறவு குறைகள் தீரும்
குவலயத்தில் ஆனந்தம் எங்கும் சூழும்
தேடிவரும் அத்தனையும் தேனாய் மாறும்
திக்கெட்டும் தொழில்துவங்க பணங்கள் சேரும்
ஆடிவரும் திருமகளின் கடைக்கண் பட்டு
அண்டிவிடும் அத்தனையும் நம்கால் தொட்டு!

உன்பெருமை என்பெருமை என்ப தெல்லாம்
ஒருநொடியில் மறைகின்ற மாயை யாகும்
பொன்பொருளை ஆசையுடன் பதுக்கி வைத்தால்
பொட்டென்று ஒருநாளில் மறைந்து போகும்
அன்புருவம் ஆதிசிவன் அவனை நெஞ்சில்
அனுதினமும் மறக்காமல் பற்றிக் கொண்டால்
மண்பதையில் பிறந்தபயன் தோன்றும் பின்பு
மறுபிறவி யில்லாத முக்தி கிட்டும்!

இல்லறத்தின் நெறிகாட்ட உலகம் எங்கும்
இடங்கொடுத்தான் சக்திக்கும் எங்கள் அண்ணல்!
கொல்லுகிற விடம்எடுத்து குடித்தால் இந்த
குவலயத்து உயிர்க்கூட்டம் காக்க வேண்டி
செல்லரித்த மனதிற்குத் துணையாய் நிற்க -
சிவனன்றி எவனுண்டு மக்கள் தம்மை
நல்வழிக்கு அவனின்றி உதவி இல்லை
நன்கறிந்து பற்றுங்கள் சிவனின் பாதம்!

நேமம் செயங்செயங்கொண்ட சோழீசர்

வீர. சுப்பிரமணியன், பி.எஸ்ஸி.,

'என்ன செயம் கொண்டார் இவர்?' என்றான், முப்புரத்தை
சொன்னமய மாய்ச்சமைத்த சோழீசர் — பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார், சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டார் இவர்.

அகராதியைப் புரட்டி, 'நியமம்' என்ற சொல்லுக்கு எதிரே பார்த்தால், 'கோயில்' என்னும் பொருளைக் காணலாம். சங்க இலக்கியங்களில் பயின்று வரும் பழமையான சொல் அது. 'ஒவுக் கண்டன்ன இருபெரு நியமம்' என்று மதுரைக் காஞ்சியிலும் 'வியலிடம் பெறாஅ விழுப் பெரு நியமம்' என்று மலைபடு கடாத்திலும், 'சிந்தா விளக்கின் செழுங்கலை நியமம்' என்று மணிமேகலையிலும், 'கோயில்' என்ற பொருளில் 'நியமம் 'என்றசொல்லாட்சி வருகிறது.

'வியர்வை' என்ற சொல், 'வேர்வை' எனவும், 'செய்தி' என்ற சொல், 'சேதி' எனவும், 'பெயர்' என்னும் சொல், 'பேர்' என்றும் காலப்போக்கில் திரிந்தது போல், 'நியமம்' என்ற சொல் நாளடைவில் 'நேமம்' என மருவிற்று.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குன்றாப் புகழ் பெற்ற குமரன் தலமான குன்றக்குடிக்கு வடக்கே ஒன்றரை மைல் தொலைவில் கீழச்சிவப்பட்டி செல்லும் சாலையில் உள்ள நேமம் என்ற சிற்றூரின் பெருமை, –நியமம்' என்ற அதன் பழைய வழக்கினாலேயே புலப்படும்.

நந்திபுரம், மதுநதிபுரம், ஜெயங்கொண்ட சோழபுரம், மதுவனத்தலம், குலசேகர புரம் என்ற பெயர்களும் இந்த ஊருக்கு உண்டு.

பழமையும் பெருமையும் மிக்க இந்தத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளஇறைவனின் பெயர் ஜெயங்கொண்ட சோழீசர். இறைவியின் திருநாமம் — சவுந்தர நாயகி. இந்த ஆலயத்துடன் 'மேலேசுவரம்' என்ற பழைமையான சிவன் கோயிலும், அருகேயுள்ள பழையாத்தங்குடியில் சிவ, பெருமாள் கோயில்களும் இருந்ததாகத் தெரிய வருகிறது. இவைகளில் இருந்த மேலேசுவரர், பெருமாள் சீதை முதலிய செப்புச் சிலைகளும், விக்கிரகங்களும் இந்தக் கிராமத்தின் சுற்றுப் புறங்களில் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

'நேமங் கோயில்' என்று ஊர்ப் பெயரின் மூலமே குறிக்கப்படுகின்ற இந்தஆலயத்தில் ஜெயங்கொண்டாரின் சன்னிதி கிழக்கு நோக்கியும், சவுந்திரநாயகியின் சன்னதி தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. இரண்டு பிரகாரங்கள், சுற்றிலும்அகன்றுயர்ந்த திருமதில், தெற்கே பெரிய கோபுரம், எதிரே திருக்குளம் ஆகியவை காணப்படுகின்றன. வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும் நேமந்தான் கண்மாயின் தென் கோடிக் கரையில் இருக்கிறது.

புராணக் கதை :

'என்றுமுள தென்றமிழை இயம்பி இசை கொண்டவ' ராகிய அகத்திய முனிவர் ஒரு சமயம் தேவலோகத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார். திடீரென்று அவருடைய பாதையில் ஏதோ ஒரு தடை ஏற்பட்டு, வழி மறைக்கவே அவரால் மேற்கொண்டு ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. அப்போது அவர் சிந்தையைக் கவர்ந்திருந்தது ஒரு சீர் மிக்க சோலை. அந்தச் சோலையை நோக்கி பூமிக்கு வந்த குறுமுனி, அங்கே சிவபெருமானின் வடிவமொன்றை அமைத்தார். பின்னர், அத்திருவுருவத்தைத் தேனில் முழுக்காட்டி, மாலை சாத்தினார். ஆனால், மாலை இறைவனின் திருமுடி மீது நிற்காமல்

தேனாகப் பெருகி ஓடிற்று. தேனாற்றில் மூழ்கிய அகத்தியர் இறைவனின் திருவிளையாடலை எண்ணி இன்பமடைந்தார்.

பிறகு, அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்ற அகத்திய முனிவர், வழியில் ஓரிடத்தில் தெரிந்த மாணிக்கப் பேரொளியினைக் கண்டு மனமகிழ்ந்து, "எம் பெருமானே நீ எங்கே இருக்கிறாய்? அடியவனுக்குச் சொல்லி அருள்புரிய வேண்டும்!" என்று சிரந்தாழ்த்திக் கரங்கூப்பிப் பணிவுடன் வேண்டிக் கொண்டார். அப்போது எங்கிருந்தோ ஒரு குரல் ஒலித்தது. "மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார் புனலாய் ஒண்சுடராய்' எங்கும் சிவபெருமானின் திருப்புதல்வன் நான், மாணிக்கக் கணபதி என்று என்னை அழைப்பார்க்ள. முக்கியமான ஒரு செய்தி. பொன், வெள்ளி, இரும்பு என்னும் உலோகங்களால் ஆன மூன்று கோட்டைகளில் தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தாம் நினைத்த நினைத்தநேரமெல்லாம் அந்தக் கோட்டைகளுடன் பறந்து சென்று தேவர்களுக்கும், மக்களுக்கும் எண்ணற்ற இன்னல்களை இழைத்து வந்தனர். தேவர்களும், மக்களும் அந்த அரக்கர்களின் தொல்லை பொறுக்க முடியாமல், என் தந்தையாகிய சிவபிரானிடம் வந்து வேண்டினர்.

"அசுரர்களைக் கொன்றழிக்க விழைந்த என் தந்தையார், மேரு மலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமாலை அம்பாகவும், அக்கினி தேவனை அந்த அம்பின் கூராகவும் கொண்டு இந்த இடத்திற்குப் போர் புரிய வந்தபோது உண்மையாகவே அவர் சமர் செய்யவில்லை. புன்மைக் குணம் கொண்ட அரக்கர்களைக் கண்டு புன்னகை புரிந்தார் அவர். திரிபுரம் எரிந்து ஒழிந்தது. இங்கு சிரித்தே ஜெயம் கொண்டார் சிவபெருமான். எனவே, அந்தத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளை இந்த இடத்தில் வணங்கி மேற்கதி பெறுவீர்களாக! என்ற மொழிகள் தெளிவாகக் கேட்டன. இதைச் செவியுற்ற அகத்தியரும் தேவர்களும், முனிவர்களும், மக்களும் ஜெயங்கொண்டாருக்கு இங்கே கோயில் எழுப்பி வழிபட்டு வரலாயினர்.

இது இக்கோயிலைப் பற்றி வழங்கும் தல புராணத்தினால் அறியப்படுவதாகும்.

வரலாற்றுச் செய்தி :

வரலாற்று அறிஞர்கள் கருத்துப்படி இந்தக் கோயில், 'ஜெயங் கொண்ட சோழன், என்னும் சிறப்புப் பெயர் பெற்ற, கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவனாகிய, முதற் குலோத்துங்கனால் (கி.பி. 1070–கி.பி.1118) கட்டப்பட்டது. அதனாலேயே இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு 'ஜெயங்கொண்ட சோழீசர்' என்ற பெயர் உண்டாயிற்று.

கல்வெட்டுக் கருத்து :

வேலங்குடியில் உள்ள ஒரு கல்வெட்டிலிருந்து நேமம் கோயில், மன்னன் சவுந்தர பாண்டியன் என்பவனால் நகரத்தார்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டதாக அறிகிறோம். மற்றொரு கல்வெட்டு, நேமம் என்ற இந்தக் கிராமம் தேவாரம் ஓதுபவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறுகிறது.

சிறப்புக்கள் :

தென்னை மரங்கள் சூழ அமைந்துள்ள இந்தக் கோயில், இன்று நகரத்தார்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஆறு லட்சரூபாய் செலவில் கோயிலைப் புதுப்பித்து, அழகிய நாச்சியம்மன் கோயில், பிள்ளையார் கோயில், நந்தவனம், பசுமடம் முதலியன புதிதாகக் கட்டி, 1907 ஆம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள் . அதன் பிறகு, 5.2.61. அன்று ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது.

கோயிலின் எதிரே நகரத்தார் விடுதியும், களஞ்சியமும், பணியாளர் வீடுகளும் காணப்படுகின்றன. கோயிலுக்கு வடக்கே ஆரம்பப் பள்ளிக்கூடம், நந்தவனம், பசுமடம் ஆகியவை அமைந்துள்ளன. இந்த ஊரின் ஜனத் தொகை சுமார் 1050.

கோயிலுக்குச் சுமார் 500 ஏக்கர் நிலபுலங்களும், தென்னந்தோப்புகளும் சொந்தமாக உள்ளன. இவற்றின் மூலம் கிட்டும்வருமானமும், நகரத்தார்கள் அளிக்கும் திருவிளக்குக் காணிக்கை, கட்டளைப் பணம் முதலியவையும் பூஜை, படித்தரச் செலவுக்கும், உற்சவங்கள், விழாக்கள் நடத்தவும் போதுமானவையாக உள்ளன.

ஜெயங்கொண்டசோழீசரைத் தம் குல தெய்வமாகக் கொண்டவர்கள்(சுமார் 850 குடும்பங்கள்) இன்று இருபது ஊர்களில் வாழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

பெரும்புலவராக விளங்கிய பாடுவார் முத்தப்பர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது, ஜெயங்கொண்டார் பிள்ளைத் தமிழ், ஜெயங்கொண்டார் பதிற்றுப் பத்தந்தாதி, சதகம், ஊசல் மற்றும் பல பிரபந்தங்கள் இயற்றியுள்ளார்.

'சீர் பொருந்தும் தென் நேமம்' 'தருவை நிகர் தென் நேமம்' 'வயங்கு புகழ் நேமம்' களைப்பாற்றும் நன்னேமம், 'வாவி திகழ் தென்னேமம்' என்றெல்லாம் புலவர் பெருமக்களின் புகழ் மொழிகளைப் பெற்ற தலம் இது.

(இக்கட்டுரை 28.1.68 அன்றைய தினமணி சுடர் வார அநுபந்தத்தில் வெளியானது)

நன்றி : தினமணி

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

சீருலவு தனிவயிரக் கால்கள் நாட்டிச்
செம்பவள விட்டமதில் சிறக்கப் பூட்டிப்
பேருலவும் இரத்தினப்பொன் பலகை சேர்த்துப்
பிறங்குமணித் தரளவடம் பின்னி யார்த்துக்
காருலவு தாரழகன் கௌரி லும்பொன்
காந்தள்மலர்க் கைகளினால் களிப்பிற் றாட்டத்
தாருலவு கடம்பணிவேள் ஆடீர் ஊஞ்சல்
தண்ணீர்மா மலைக்கரசே ஆடீர் ஊஞ்சல்

– கூத்தலூர் இராமநாதன் செட்டியார் –

நியமம் கோயில் சிற்பங்கள்

(ஜெயங்கொண்டார் கோயில்)

திருக்கோயில். மே—1962 (வித்வான் திரு. அ.மா.பரிமணம், எம்.ஏ.,காரைக்குடி)

தமிழகத்து ஆலயங்கள் எல்லாம் இறைமணமும், கலைமணமும் ஒருங்கே கமழ்ந்து திகழ்வனவாகும். இசை, கூத்து, சிற்பம், சித்திரம் முதலிய பலவகைக் கலைகளும் ஆலயங்களைச் சார்ந்தே வளர்ந்துள்ளன. கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து, வானோங்கி நிற்கும் கோபுரங்கள் இறைஒளி வீசி நம்மை அழைக்கின்றன.

பாண்டிநாட்டு முகவை மாவட்டத்துத் திருப்பதிகளுள் ஒன்று நியமம் என்னும் ஊர். நேமம் என்று வழங்கப்படும். குன்றக்குடிக்கு வடக்கே $1^1/_2$ மைல் தொலைவிலுள்ளது. நகரத்தார் என வழங்கும் செட்டியார் பெருமக்களின் கோயில்களில் ஒன்பதில் ஒன்றாகும் இப்பகுதி. தொன்மைச் சிறப்புமிக்க தமிழ்ச் சிற்பக்கலை இந்த நூற்றாண்டிலும் சிறந்து விளங்குகின்றது என்பதற்குச் சான்றாக உள்ளது இவ்வூர்ச் செயங்கொண்டார் ஆலயமாகும். இவ்வாலயத்தின் உட்பிரகாரத்து முகப்புத் தூண்களில் உள்ள எழிலார்ந்த சிற்பங்கள் கண்ணிற்கும் கருத்திற்கும் இனிய விருந்தளிக்கின்றன.

மணமண்டபத்தின் மாட்சியையும், மணமக்களின் ஆடை அணிகலப் பொலிவினையும் நன்கு காணலாம்.

1. ஸ்ரீ பார்வதி கல்யாணம்
2. ஸ்ரீ நடராசர்
3. ஸ்ரீ காலசம்காரமூர்த்தி

திருமால் நீர் வார்த்தளிக்க, நான்முகன் எரி ஓம்ப முனிவர்கள் ஆசி கூற திருமணக்காட்சி இனிது சித்தரிக்கப்பட்டுள்ளது. மணமக்களின் உள்ள உவகையை முகம் காட்டுகிறது. கோவணமும் தோலுடையும் நீக்கி, பாம்பணி களைந்து பைம்பூண் பூண்டு, துறவிக்கோலம் துறந்து மணக்கோலம் பூண்டு விளங்கும் சோம சுந்தரரின் திருக்காட்சியைக் காணும் நாம் நம்மை மறந்து,

சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்து
நறுங்கொன்றையந்தார் தணந்து வேப்பம்
தொடை முடித்து விடைஊகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்துக் கயலெடுத்து வழுதி மருமகனாகி மீன்நோக்கின்
மடவரலை மணந்து உலகமுழுதாண்ட சுந்தரனை வணக்கம் செய்வோம்

(பரஞ்சோதி திருவிளையாடல்)

என்று வணங்கத் தோன்றுகிறது.

2. ஸ்ரீ நடராசர் : ஊர்த்துவ தாண்டவம் அற்புத ஆனந்தநடனக் காட்சி மெய் சிலிர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. முயலகன் மீதாடும் தாண்டவத்தினை ஆலங்காட்டில் ஆடுமாநடமும் நீ கண்டு, ஆனந்தஞ் சேர்த்து எப்போதும் பாடுவாய் நம்மை என்று ஆண்டவனால் அருளப்பெற்ற காரைக்காலம்மையார் கைத்தாளமேந்திப் பண்ணார்ந்த பதிகம் பாடிப்பாடி மகிழும் காட்சியினையும் காண்கிறோம். தாண்டவக் கோனுடைய திருமுகத்தில் அருட்குறிப்பும் பெருமிதமும் தவழ்கின்றது. திருமுடிகையிலும், திருவாசி கையிலும் பிற ஆடை அணிகளிலும் உள்ள நுண்ணிய சிற்பத் திறமை அறிந்தின்புறத் தக்கதாகும். தாண்டவக் காட்சியில் திளைத்தவர்கள்,

செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க

நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீலமணி மிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே

(அப்பர் தேவாரம்)

என்று வியப்பதில் வியப்பில்லையே, இக்காட்சியினைக் கொடுகொட்டி ஆடல் என்று பழந்தமிழ் நூல்கள் பேசும்.

3. ஸ்ரீ காலசம்ஹாரமுர்த்தி : இறைவன் இலிங்காகாரத்தில் தோன்றிக் காலனைக் காலாலுதைத் தருளிய காட்சி, சாட எடுத்தது தக்கன் தன் வேள்வியில் சந்திரனை, வீட எடுத்தது காலனை என்று ஆடவர் எடுத்த பொற்பாதத்தை அப்பர் சுவாமிகள் போற்றிய பொலிவினை இக்காட்சியிற் காணலாம். காலனுடைய நெடிய வன்பாசமும் தன்கடன் அடியேனையும் தாங்குதல் என்று கொண்ட மார்க்கண்டரின் அன்புறுதியும்அருட்குறிப்பும், சினக்குறிப்பும் ஒருங்கு பொலியும் ஐயன் திருமுகமும், அஞ்சிய எருமைக் கடாவின் தோற்றமும் காலன் நிலையும் நன்கு காட்டப்பட்டுள்ளன. இது கற்சிலை என்பதையே மறந்து விடுகிறோம்,

மருட்டுயர் தீர அன்று அர்ச்சித்த மாணி மார்க்கண்டற்கா
இருட்டியமேனி வளைவாளெயிற்று எரிபோலும் குஞ்சிச்
சுருட்டிய நாவில் வெங்கூற்றம் பதைப்ப உதைத்து உங்ஙனே
உருட்டிய சேவடியான் கடலூர் உறை உத்தமனே

(அப்பர் தேவாரம்)

இந்தத் தூண் சிற்பங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி ஒரே கல்லினால் சமைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயில் தூண்சிலைகள் எல்லாம் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் உருவாக் கப்பட்டவையேயாகும், காஞ்சி, கடல் மல்லை, தஞ்சை என்று வரும் வரலாற்றுக் காலச் சிற்பக்கலையின் வழிவழியாய் வாழையடி வாழையாய் இக்கலை இன்றும் செழித்தும் சிறந்தும் பொலிவது கண்டு நாம் பெருமை கொள்ளலாம்.

மே 1962 திருக்கோயில் இதழில் வெளிவந்தது.

நன்றி : திருக்கோயில்

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

வள்ளுவரின் குறள்வழியே வாழ்கின்ற மக்கள் – பண்டைத்தமிழ்
வழக்க பழக்கம் குறைந்திடாமல் வளர்ந்து வரும்மக்கள்
கொள்வதிலும் கொடுப்பதிலும் கோணிடாத மக்கள்
கொண்டுவிக்கப் போனநாட்டில் கோயில்கட்டும் மக்கள்

– கொத்தமங்கலம் சுப்பு –

சந்திரசேகரர் சிற்பம்

டாக்டர் வ. தேனப்பன்

ஒன்பது நகரக் கோயில்களுள் மிகப் பழமையான சந்திரசேகரர்சிற்பம் பிள்ளையார் பட்டியிலும், நேமத்திலும் உள்ளன. பிள்ளையார் பட்டியில் உள்ள சிற்பம் 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நேமத்தில் உள்ள சிற்பம் 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சந்திர சேகரரின் உருவ அமைப்பு பற்றி சகளாதிகாரம், சிறீ சாராசுவதீய சித்திரகரும சாத்திரம், வாசுத்துசாத்திரம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. அவற்றில் கூறப்பட்டுள்ள சிற்ப அமைதி அனைத்தும் ஒன்பது நகரக் கோயில்களில் உள்ள சந்திரசேகரர் சிற்பத்தில் காணப்படுகின்றன.

சந்திரசேகர மூர்த்தி இரண்டு பாதங்களையும் ஒழுங்காகச் சேர்த்து வைத்து பத்ம பீடத்தில் நிமிர்ந்து நிற்கும் நிலையில் (சமபாத தானக நிலையில்) அமைந்துள்ளார். வலக்கையில் அபய முத்திரையும், இடக்கையில் வரத முத்திரையும் தாங்கி நிற்கிறார். வெளிப்புறக்கை இரண்டிலும் வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் இருக்கின்றன. மூன்று கண்களோடும், எல்லாவிதமான அலங்காரத்தோடும் புன்னகை தவழும் முகத்தோடும் சந்திரசேகரர் சிற்பம் அமைந்துள்ளது.

நேமத்தில் உள்ள சந்திரசேகரரின் சிற்பத்தில் இராசராசசோழன் காலத்திய சிற்ப அமைதி காணப்படுகிறது. அழகான வேலைப்பாடு மிக்க கிரீடம், நெற்றிப்பட்டம், எடுப்பான மூக்கு, குவிந்த சிறுவாய், சிறிதே வெட்டி விடப்பட்ட நீண்ட கண்கள் செழுமையான கன்னம் ஆகிய இராசராச சோழமன்னன் காலத்திய முத்திரைகளாக அமைந்துள்ளன. இராசராச சோழமன்னன் நாட்டுவளம் இச்சிற்பத்திலும் தெரிகிறது. வலது காதில் மகர குண்டலமும், இடதுகாதில் பத்திர குண்டலமும் காணப்படுகின்றன. இடையில் முடியப்பட்ட ஆடை, தோளில் உள்ள தோள்மாலை, மார்பில் உள்ள முப்புரி நூல், வயிற்றின்மீதுள்ள உதரபந்தம் ஆகியன கண்களை உறுத்தும் வண்ணம் பிற்காலச் சிற்ப அணிகளைப் போலத் தூக்கலாக அமையாமல் படிமானமாக அமைந்துள்ளது.

முற்காலச் சிற்பங்கள் மெழுகில் செய்யப்பெற்று உலாவாகக் கொண்டு வரப்பட்டன. அவற்றில் குற்றம் குறை காண்பவர்கள் சிற்பியிடம் கூறலாம். அத்திருத்தங்களும் செய்யப் பெற்ற பிறகு அம்மெழுகின் மீது பசைப்பிடிப்பு மிக்க செம்மணலைக் குழைத்துப் பூசி அதன்உச்சியில் ஒரு சிறிய துளையினைச் செய்து அதன் வழியாக உருக்கிய சூடான ஐம்பொன்னை ஊற்றுவார்கள். செம்மண் கூட்டைத் தண்ணீரில் அழுத்திக் கழுவி எடுத்ததும் அழகு மிக்க சிற்பம் வெளிப்படும். இவ்வாறு உளிபடாத சிற்பங்கள் இராசராசன் காலத்துச் சிற்பங்கள். எனவே அணிகலன்கள் புடைப்பாகத் தெரியாது. தெய்வீக அழகு மட்டுமே உயர்வாகத் தெரியும்.

பிற்காலச் சிற்பங்கள் ஒரே வார்ப்பில் வடிவமைக்கப்பட்டுப் பின்னர் உளியினால் செதுக்கப்பட்டதால் அணிகலன்கள் உடற்பகுதியைக் காட்டிலும் புடைப்புடையதாக அமைந்துள்ளன. பிள்ளையார்பட்டி, நேமம் ஆகிய ஊர்களில் உள்ள சந்திரசேகரர் சிற்பங்கள் உளிபடாத சிற்பங்கள், நேமத்தில் உள்ள சந்திரசேகரரின் பொலிவான புன்னகை பூத்த முகம் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள முருகனின் முகம்போல் அழகு ததும்பும் முகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திர சேகரரின் கன்னச் செழிப்பில் இராசராசனின் நாட்டுவளம் பளபளக்கிறது. அச்செழிப்பு கி.பி. 11ஆம் நூற்றாண்டுச் சிற்பம்தாம் இது என முன் மொழிகிறது.

இறைவா வரம் தருக

கவிஞர். சிவல்புரி சிங்காரம்
கீழச்சிவல்பட்டி 623 205.

புனிதப் பிறவி எனமுன்னோர்
போற்றும் படியாய்ச் சொல்லுகிற
மனிதப் பிறவியை நான்பெற்றும்
மகத்துவம் ஏதும் காணவில்லை!
பணிகள் நாளும் செய்கின்றேன்!
பணிந்தே உன்னைப் போற்றுகிறேன்!
அணிதிகழ் செளந்தர நாயகியை
அணைக்கும் இறைவா வரம்தருக!

பாடு வாராம் முத்தப்பர்
பாட்டில் நிலைத்த பரம்பொருளே!
தேடி வந்தே தொழுகின்றேன்!
திறமை எனக்கே தரவேண்டும்!
நாடும் வீடும் போற்றுகிற
நல்ல நிலைமை பெறவேண்டும்!
ஆடல் வல்ல செளந்தரத்தை
அணைக்கும் இறைவா வரம்தருக!

நேரில் வந்த மன்மதனை
நெற்றிக் கண்ணால் எரித்தவனே!
போரில் அசுரரை வென்றதனால்
போற்றும் பெயரில் செயங்கொண்டாய்!
சீரும் சிறப்பும் நான்காணத்
தினமும் உன்னைத் தொழுகின்றேன்!
ஆற்றல் கொடுக்கும் செளந்தரத்தை
அணைக்கும் இறைவா வரம்தருக!

ஒன்பது நகரக் கோவில்களில்
ஒன்றாம் நேமம் கோவிலிலே
பொன்பொருள் கொடுக்கும் வரம்தரவே
புவியில் அமர்ந்த சோழீசா!
இன்பம் அனைத்தும் நான்காண
இதயம் உருகித் தொழுகின்றேன்!
அன்புடை நாயகி செளந்தரத்தின்
அருகி லிருந்தே வரம்தருக!

நோய்கள் என்னை அணுகாமல்
நுகரும் எதிர்ப்புகள் சேராமல்
தாயாய் என்றும் காத்திடவே
தலைவா உன்னைத் தொழுகின்றேன்!
ஆய கலைகள் அத்தனையும்
அடியேன் அறிந்து ஞாலத்தில்
தூய வாழ்க்கை வாழ்ந்திடவே
தொடர்ந்தே நாளும் வரம்தருக!

நேமங்கோயில் பூடம் (பீடம்)

நா.வள்ளி, எம்.ஏ., பி.எட்., டி.இ.ஏ.,
முதுநிலை விரிவுரையாளர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி –1.

செட்டிநாட்டுப் பகுதிகளில், பிடிவாதம் பிடிக்கும் பெண்களையும், அடிக்கடி கோபப்படும் பெண்களையும் 'நேமங்கோயில் பூடம்' என்று அழைப்பது வழக்கம். நேமங்கோயில் வகையில் பிறந்த பெண்களையும் வேடிக்கையாக 'நேமங்கோயில் பூடம்' என்றும், 'நேமங்காளி' என்றும் சொல்லுவது இன்றும் வழக்கில் இருந்து வருகிறது.

நகரக் கோயில்கள் ஒன்பதனுள், நேமங்கோயில் பூடத்துக்கு மட்டும் என்ன தனித்தன்மை? ஏன் அதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்? மற்ற கோயில்களில் பூடம் இல்லையா? பூடம் என்பது எதைக்குறிக்கும்? என்ற சிந்தனையின் விளைவுதான் இக்கட்டுரை.

பூடம் என்ற சொல் பீடம் என்றசொல்லின் திரிபே. பீடம் என்ற சொல்தான் பேச்சு வழக்கில் பூடம் என்று வழங்குகிறது.

ஆகம நூல்களில் கூறப்படும் விதிகளை அடிப்படையாகக் கொண்டே கோயில்கள் அமைக்கப்படுகின்றன. சைவ ஆகமப்படி அமைக்கப்பட்ட சிவன் கோயில்களில், கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தவுடன் காணப்படுவது பலி பீடம். பலி பீடத்தை அடைந்தவுடன் தீய இச்சைகளாகிய மிருகங்களை பலிபீடத்தில் பலி கொடுத்துவிட்டு, அகத்தூய்மையோடு உள்ளே சென்று இறைவனை வழிபடல் வேண்டும் என்ற தத்துவார்த்த அடிப்படையில் அமைக்கப்பட்டவை தான் இத்தகைய பீடங்கள்.

நேமம், ஜெயங்கொண்ட சோழீசர் திருமுன்பும் பீடம் காணப்படுகிறது. ஆனால் 'நேமங்கோயில் பீடம்' என்பது இந்த பீடத்தைக் குறிப்பிடவில்லை. பின் எந்த பீடத்தைக் குறிக்கிறது?

சிரித்துச் செயங்கொண்ட சோழீசர் கோயிலில், முதல் திருச்சுற்றில் வடகிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கிய வண்ணம் பைரவர் சன்னிதி உள்ளது.

"விரித்த பல்கதிர் கொள்சூலம் வெடிபடு தமருகம் கை
தரித்ததோர் கோலகாலப் பைரவராகி வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு, ஒன்திருமணிவாய் விள்ள
சிரித்து அருள் செய்த" செந்நெறிச் செல்வராகப் பைரவர் காட்சியளிக்கிறார்.

பைரவர் சன்னிதிக்கு நேரே திருச்சுற்று மாளிகை மதிலில் வட்டமான துளை உள்ளது. இரண்டாவது சுற்றிலும் பைரவர் சன்னிதிக்கு நேரே துளை உள்ளது. துளையின் வெளிப்புறம் அதாவது கோயிலின் பின்புறம், பைரவர் சன்னிதிக்கு நேரே உயரமான மேடை உள்ளது. மேடை மீது பெரியதொரு பத்ம பீடம். இந்தப் 'பீடம் தான்' நேமங் கோயில் பீடம் என்று அழைக்கப்படும் சிறப்புடையது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா'என்று பாரதிக்கு தாசன் கூறுகிறபடி, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சக்தியை இப்பீடத்திலே கண்டு பயபக்தியோடு வணங்குகிறார்கள் செட்டிநாட்டு மக்கள்.

'யாதுமாகி நின்றாய் காளி – எங்கும்
நீ நிறைந்தாய்" என்கிறார் பாரதி. இங்கு இப்பீடத்தை, சக்தியாக, காளியாகக் கண்டு களித்த மக்கள் 'நேமங்காளி' என்று பெயரிட்டு அழைத்தனர். (இது போலவே நகரத்தார்களில் ஒரு பகுதியினர் சென்று வழிபடும் இலங்குடியிலும், திருச்சுற்றில், மேடை மீதுள்ள பீடம், காளியின் அம்சமாகக் கருதப்பட்டு, மேடைக்காளி (மோடக்காளி) என்று அழைக்கப்படுகிறது.

பீட வடிவிலுள்ள காளி மிகவும் சக்தி வாய்ந்தவளாகவும், சீற்றமான தெய்வமாகவும் கருதப்படுகிறாள். தவறுகளைக் கண்டு சீறுவதில் தவறென்ன?

"மூவிலை நெடுவேல் ஆதி வானவன்
இடமருங்கு ஒளிக்கும் இமையக் கிழவி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிகை பிறை கதுப்பிற்குடி வளைக்கையில்
வாள் பிடித்து, ஆளி யேறி, தானவன்
மாளக் கடும்போர்கடந்த" மகிஷாசுரமர்த்தினி அல்லவா அவள்?

ஆனால் இப்பீடத்தைக் காளியின் வடிவமாகக் கண்டு வணங்குகிற வழக்கம், பாடுவார் முத்தப்பரின் காலத்திற்குப் பின்தான் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் முத்தப்பரின் பாடல்களில், நேமங்காளி பற்றிய குறிப்பு இல்லை. இப்பீடம் அவர் காலத்தில் நேமங்காளி என்று கருதப்பட் டிருந்தால், கீரணிப்பட்டி முத்துமாரியம்மன், உச்சினி மாகாளி, கொன்னையூர் மாரியம்மன், பாகனேரி புல்வாய் நாயகி, நெடுமரம் மலையரசி முதலிய பெண்தெய்வங்களைப் பாடிய அவர் தன் குலக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் நேமங்காளியைப் பாடாது இருந்திருக்க மாட்டார்.

உண்மையில், பைரவர் சன்னிதிக்கு நேரே உள்ள இப்பீடம், பைரவர்க்குரியது. பைரவரின் அருட்பார்வை இப்பீடத்தின் மேல் பட வேண்டும் என்பதற்காகத்தான் பைரவர் சன்னிதிக்கு எதிரே உள்ள இரு திருச்சுற்றுச் சுவர்களிலும் துளை அமைத்திருக்கிறார்கள். ஏன் இப்பீடம் கோயிலுக்கு வெளியில் இருக்க வேண்டும்?

நேமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் முகமதியர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்களும் வரசித்தி பெற்ற தெய்வமாகக் கருதப்படும் பைரவரை வணங்கியிருக்கிறார்கள். (திருப்பத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் எழுந்தருளியுள்ள பைரவரை இன்றும் பல முகமதியர்கள் வந்து வணங்கி வழிபட்டுச் செல்கிறார்கள்). ஆனால் அவர்கள் கோயிலுக்குள் செல்ல இயலாதாகையால் வெளிப்புறம் சன்னிதிக்கு நேரே உள்ள பீடத்தையே பைரவரின் அம்சமாகக் கருதி வணங்கியிருக்கிறார்கள். இதே போன்ற அமைப்பு ஆத்தங்குடி சிவன் கோயிலிலும் உள்ளது.

இவ்வாறு, எல்லா மக்களும் வந்து, வணங்கி, பைரவரின் அருள் பெறுவதற்காகவே அமைக்கப்பட்டது தான் இப்பீடம். பின்னர் இது நேமங்காளி என்று மக்கள் வழக்கில் வழங்கலாயிற்று.

இப்பீடம் பைரவரின் பீடமாக இருந்தாலும் சரி அல்லது காளியின் அம்சமாகக் கருதப்பட்டாலும் சரி, மிகவும் சக்தி வாய்ந்த பீடமாக நம்மவர்களாலும் பொது மக்களாலும் வணங்கப்பட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை.

காதல் கசிந்து பக்தி மிகுந்து காவிரி பாயும் நகரத்தார்
கோதி எடுத்துக் கோவில் படைத்து கோதைநலத்தை அதில் வைத்தார்
நாத மொழித்தேன் நாயகி யாக ஞாயிறு பழிக்கும் மகராணி
வேத முரைக்கும் சக்தி யெல்லாம் மிக்கவள் சக்தி அபிராமி

–கவியரசு கண்ணதாசன்–

உ

சிவமயம்

நேமம் ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீசர்

ராம. மு. தியாகராசன் செட்டியார்,

ஊராட்சி மன்ற உறுப்பினர், மேலைச்சிவபுரி

தமிழ்நாடு ஆலயங்கள் நிறைந்த நாடு. விண்ணளந்து காட்டி வினை மறைக்கும் திருக்கோயில்கள் ஆயிரம் தமிழகத்தை அணி செய்கின்ற தமிழ்நாட்டுக்கு அழகும் பொலிவும் ஊட்டுவன கல்லெல்லாம் கலையாக்கி பேசும் பொற்சித்திரமாக்கி வழிபடும் தெய்வமாகவும் படைத்துக் காட்டிய திறம் தமிழர்களுக்கே உரியது.

சென்ற காலத்திலும் சரி நிகழ்காலத்திலும் சரி தமிழ்நாட்டின் வரலாற்றை இயக்குவதில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் முக்கியமான பாகத்தை வகித்து வந்துள்ளன. இதனை ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் வாழ்க்கையில் வளர்ச்சியில் மாற்றங்களில் மிகுதியும் பங்கு பெற்று இருந்தவை திருக்கோயில்களே என்று வரலாறு கூறும் உண்மை.

அன்றாட வாழ்க்கை முதல், மொழி, கலை, இலக்கியம், சமயம், ஈறான அனைத்துத் துறைகளிலும் திருக்கோயிலுக்குப் பங்குண்டு. திருக்கோயில்களின் வரலாறு தமிழ்நாட்டின் வரலாறு, கல்லெல்லாம் கலை பேசும் பொற்சித்திரம்கடவுள் திருவுருவம்.

நேமம் ஜெயங்கொண்டார் கோயில் :

என்ன ஜெயங்கொண்டார் இவர் என்றான்
முப்புரத்தைச் சொர்ணமயமாய் சமைத்த சோழீசர் பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் – சித்தசனைக்கண்ணால்
எரித்துச் செயங்கொண்டார் – இவர்.

அகராதியைப் புரட்டி நியமம் என்ற சொல்லுக்கு எதிரே பார்த்தால் கோயில் என்றும் பொருளைக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் பயின்று வரும் பழமையான சொல் அது,

ஒவுக்கண்டன இருபெரு நியமம், என்பது மதுரைக் காஞ்சியிலும் வியலிடம் பெறா வியப்பெரு நியமம், என்று மலைபடு கடாத்திலும்

சிந்தாவிளக்கின் செழுங்கலை நியமம் என்று மணிமேகலையிலும் கோயில் என்ற பொருளில் நியமம் என்னும் சொல்லாட்சி வருகிறது.

நியமம் என்பது உயிரினும் பெரிதாக ஓம்பப்பெறும் ஒழுக்கம் ஒழுக்கத்தால் உயர்ந்த சான்றோர்கள் வாழும் ஊராதலால் ஜெயங்கொண்டார் சதகம் திருமுகவிலாசம் வணிகர் வாழ்த்து, நகர வாழ்த்து முதலானவற்றிலும் மாற்றூர் புராணம், வயிரவன் கோயில் புராணம் , சூரக்குடி, பிள்ளையார்பட்டி, இலுப்பைக்குடி, மயூரகிரி மண்டபம், தனவணிக தாலாட்டு, வணிகர் தசாங்கம் முதலான நூல்கள் எல்லாவற்றிலும் நியமம் என்ற பெயரே வழங்கப்பெறுகிறது.

வியர்வை என்ற சொல் வேர்வை எனவும் செய்தி என்ற சொல் சேதி எனவும் பெயர் என்னும் சொல் பேர் என்றும் காலப்போக்கில் திரிந்தது போல் நியமம் என்ற சொல் நாளடைவில் நேமம் என மருவிற்று.

தேவர் திருமகன் மாவட்டம் செட்டி நாட்டிலே குன்றாப் புகழ் பெற்ற குமரன் தலமான குன்றக்குடிக்கு வடக்கில் ஒன்றரைக் கல் தொலைவில் கீழச்சிவல்பட்டி செல்லும் சாலையில் உள்ளது. நேமம் என்ற சிற்றூரின் பெருமை நியமம் என்ற பழைய

வரலாற்றாலே புலப்படும்.

நேமம் நகரக் கோயில் நாட்டுக் கோட்டை நகரத்தாரின் ஒன்பது பொதுக் கோயில்களில் பழைமையானதும் புகழ்பெற்றதும் ஆகும். பூங்குன்ற வேலங்குடியில் உள்ள நகரத்தார் சரித்திரக் கல்வெட்டில் இருந்து நேமம் கோயிலும் சேத்திர சுவாத்தியங்களும் தேனாறு பாயும் இள நலமுடைய நகரத்தார்களுக்கு கலியுக வருடம் 3815ல் சாலிவாகன சகம் 636 கி.பி. 714 ல் ஏறத்தாழ 1280 ஆண்டுகளுக்கு முன்னால் சௌந்தரபாண்டியராசனால் விட்டுக் கொடுக்கப் பெற்றதாகத் தெரிகிறது. ஆயினும் அண்மையில் உள்ள ஆற்காட்டில் தேனாற்றின் உற்பத்தி ஸ்தானத்தில் உள்ள மதுநதிசுவரர் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்தும் பாண்டியனின் தளபதியான கண்டன் உதயக்குமாரன் செய்தாறான காங்கேயன் நேமராசன் முதலியோரின் ஆட்சி பற்றியும் கோட்டைகள் பற்றியும் கூறப்பெறும் கர்ண பரம்பரைச் செய்திகளிலிருந்தும் நேமம்கோயில் மிகப் பழமையானதென்றும்,

கல்வெட்டுக்களில் கேரள சிங்கவள நாட்டில் நேம நாட்டில் கீழ்குண்டாற்று தேனாற்றுப்போக்கு என்று குறிப்பிடப் பெறுகிறது. (வெயிலுகந்த விநாயகருக்குப் போகும் வழியில் கோட்டைமேடு என்று வழங்கப் பெறும் இடத்தில் நேமராசன் கண்டன் உதயஞ் செய்தான் ஆகியோரது கோட்டைகள் இருந்திருக்கலாம்) நேமன் என்பவன் பொன்னமராவதியை ஆண்ட அமரனுடன் பிறந்தவன் என்றும் நேமங்கோட்டையோ எமன் கோட்டையோ என்று நாட்டவர் வியக்கும் வண்ணம் கோட்டை கட்டி ஆண்டவன் என்றும் முடிவில் சகோதரர்களிடையே சவுந்தரபாண்டியனால் கொல்லப்பட்டான் என்றும் கர்ண பரம்பரைக்கதை கூறுகிறது. ஆதிகாலத்தில் கல்வெட்டுகள் இருந்திருக்க வேண்டுமென்றும் ஊகிக்க இடமிருக்கிறது. ஆற்காட்டில் அகத்தியர் ஆலயப்பிரதிட்சை செய்திருப்பதாலும் குன்றக்குடியை வழிபட்டபோது அகத்தியர் நேமத்தை வழிபட்டிருக்க வேண்டுமென்பது தெட்சணாமுனிபரவும் தென்னேமம் என்று முத்தப்பையா ஜெயங்கொண்டார் சதகத்தில் குறிப்பிட்டு இருப்பதாலும் தெளிவாகிறது.

ஊரின் பெயர்கள் :

நியமம், செயங்கொண்ட சோழபுரம், நந்திபுரம், மதுவனத்தலம், குலசேகரபுரம், நேமம், மதுநதிபுரம்.

பழமையும் புதுமையும் வாய்ந்த இந்தத் திருத்தலத்தில் கோயில் கொண்ட இறைவனின் பெயர் ஜெயங்கொண்டார், ஜெயங்கொண்ட சோழீசர், நேமநாதர், தேனாறுடையார் அம்மை பெயர் சவுந்தர நாயகி.

இந்த ஆலயத்துடன் மேலேசுரம் என்ற பழமையான சிவன் கோவிலும் அருகேயுள்ள பழைய ஆத்தங்குடியில் சிவபெருமான் கோவில்களும் பெருமாள் கோவிலும் இருந்ததாகத் தெரிய வருகிறது. இவைகளில் இருந்து மேற்படி கோவில்களிலிருந்து மேலேசுவரர் சக்கரம் சீதை பெருமாள் முதலான சிலைகளும் விக்கிரகங்களும் எடுத்துப் பல ஆலயங்களில் வைக்கப் பெற்று உள்ளன.

காட்டாத்தங்குடிக்கும் நேமத்துக்கும் நடுவே உள்ள நாய்ப்பாப்பாமலை என்ற மண்மேட்டில் நேமங்கோவிலைச் சேர்ந்த விக்கிரகங்களைத் திப்பு சுல்தான் காலத்தில் புதைத்து வைத்தனர் என்பர். 1950 அளவில் அவை மாடு மேய்ப்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு காட்டு ஆத்தங்குடி ஐயனார் கோவிலில் வைத்து வழிபட்டு வருகின்றனர்.

நேமம் கோயில் என்ற ஊர் பெயரின் மூலமே குறிக்கப்படுகின்ற இந்த ஆலயம் ஜெயங்கொண்டார் சன்னதிக்கு கிழக்கு நோக்கியும் ஸ்ரீ சௌந்தர நாயகியம்மன் சன்னதிக்கு தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. இரண்டு பிரகாரங்கள் சுற்றிலும்

அகன்று உயர்ந்த மதிலும் கிழக்கே புதிதாக சுமார் ஆறு லட்சம் ரூபாய் செலவில் ஐந்து அடுக்குக் கொண்ட வண்ண அழகுகளான பொம்மைகளுடன் கூடிய ராஜகோபுரமும் எதிரே நகரத்தார் விடுதி பழமையானதை அகற்றி விட்டு புதிதாக ரூபாய் ஆறு லட்சம் செலவில் அமைக்கப்பெற்ற புதிய விடுதியும் சௌந்தரநாயகி அம்மன் சன்னதிக்கு தெற்கே உயரிய கோபுரமும் எதிரே திருக்குளமும் அதன் வடகரையில் விநாயகர் ஆலயமும் உள்ளது. கோயிற்பணியாளர்கள் வீடுகளும் பழைய அக்கிரகார வீடுகளும் புதிதாக கட்டப்பெற்ற அக்கிரகார வீடுகளும் பசுமடம் நந்தவனம் ஆகியவையும் திகழ்கின்றன. கோவிலின் மேற்கு மூலையில் பிரசித்தி பெற்ற நேமங்காளி கோவிலும் உள்ளது. வடக்கே அழகிய நாச்சியம்மன் கோவிலும் உள்ளது. ஆரம்பப் பள்ளியும் உள்ளது.

வெய்யிலுகந்த விநாயகர்கோவில் நேமத்தான் கண்மாய்க்கரை தென்கோடியில் உள்ளது. மிகவும் வரப்பிரசித்தியான இப்பிள்ளையார் சிலை பழமையின் சின்னத்தைப் பெற்றுத் திகழ்கிறது. மேலே விமானமும் கோவிலும் அமைக்கத் திருவுளம் இல்லை. மண்டபமும் சிதைந்துள்ளது. அண்மையில் திரவிய தீர்த்த விசேடம் வாய்ந்த ஊருணி இருந்திருக்கிறது. ஜெயங்கொண்டார் சதகத்தில் முத்தப்பையா இவ்விநாயகரையே முதலில் கூறியுள்ளார்.

புராணக்கதை :

என்றுமுள தென் தமிழை இயம்பி இசை கொண்டவராகிய அகத்திய முனிவர் ஒரு சமயம் தேவலோகத்தில் நடந்து போய்க்கொண்டிருந்தார். திடீரென்று அவருடைய பாதையில் ஏதோ ஒரு தடை ஏற்பட்டு வழி மறைக்கவே அவரால் மேற்கொண்டு ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அப்போது அவரது சிந்தனையைக் கவர்ந்திருந்தது ஓர் சீர்மிக்க சோலை, அந்த சோலையை நோக்கி பூமிக்கு வந்த அந்தக் குறுமுனி அங்கே சிவபெருமானின் வடிவமொன்றை அமைத்தார். பின்னர் அத்திருவுருவத்தைத் தேனில் முழுக்காட்டி மாலை சாத்தினார். ஆனால் மாலை இறைவனின் திருமுடி மேல் நிற்காமல் தேனாகப் பெருகிற்று. தேனாற்றில் மூழ்கிய அகஸ்தியர் இறைவனின் திருவிளையாட்டை எண்ணி எண்ணி சிரந்தாழ்த்தி கரம் கூப்பி பணிவுடன் வேண்டிக் கொண்டார்.பிறகு அப்போது தெற்கு நோக்கிச் சென்ற அகத்திய முனிவர் வழியில் ஒரு இடத்தில் தெரிந்த மாணிக்கப் பேரொளியைக் கண்டு மனம்மகிழ்ந்து எம் பெருமானே நீ எங்கே இருக்கிறாய்? எனக்குச் சொல்லி அருள் புரிய வேண்டும் என்று சிரம் தாழ்த்தி கரம் கூப்பிப் பணிவுடன் வேண்டிக் கொண்டார்.

அப்போது எங்கிருந்தோ ஒரு குரல் ஒலித்தது. "மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய் தேன்சுடராய் எங்கும் சிவபெருமான் திருப்புதல்வன் நான், மாணிக்க கணபதி என்று என்னை அழைப்பார்கள். முக்கியமான ஒரு செய்தி பொன் வெள்ளி இரும்பு என்னும் உலோகங்களால் ஆன கோட்டைகளில் தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தாம் நினைத்த நேரமெல்லாம் அந்தக் கோட்டைகளுடன் பறந்து சென்று தேவர்களுக்கும் மக்களுக்கும் இன்னல்களை இழைத்து வந்தனர். தேவர்களும் மக்களும் அந்த அரக்கர்களின் தொல்லை பொறுக்க முடியாமல் என்தந்தையாகிய சிவபிரானிடம் வந்து வேண்டினர்.

அரக்கர்களைக் கொன்றழிக்க முயன்ற என் தந்தையார் மேருமலையை வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அக்கினிதேவனை அம்பின் கூறாகவும் கொண்டு போர் புரிய வந்தபோது உண்மையாகவே அவர் சமர் செய்யவில்லை. புன்மைக் குணம் கொண்ட அரக்கர்களைக் கண்டு புன்னகை புரிந்தார். அவர்கள் திரிபுரம் எறிந்தது இங்கே சிரித்தே ஜெயம்கொண்டார் சிவபெருமான். எனவே அந்தத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளை இந்த இடத்தில் வணங்கி மேற்கதி பெறுவீராக" என்ற வாழ்த்துக்கள் தெளிவாகக் கேட்டன. இதைச் செவியுற்ற அகத்தியரும் தேவர்களும் முனிவர்களும் மக்களும் ஜெயங்கொண்டாருக்கு இங்கே கோயில் எழுப்பி

வழிபட்டு வரலாயினர். இது கோயிலைப் பற்றி வழங்கும் தல புராணத்தினால் அறியப்படுவதாகும்.

வரலாற்று அறிஞர்கள் கருத்துப்படி இந்தக் கோயில் ஜெயங்கொண்ட சோழன் என்றும் சிறப்புப் பெயர் பெற்ற கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவனாகிய முதற்குலோத்துங்க சோழனால் கி.பி. 1070 கி.பி. 1118ல் கட்டப்பட்டது. அதனாலேயே இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்கு செயங்கொண்ட சோழீசர் என்ற பெயர் உண்டாயிற்று.

கல்வெட்டுக் கருத்து :

வேலங்குடியிலுள்ள ஒரு கல்வெட்டில் இருந்து நேமங்கோயிலை மன்னன் சௌந்தரபாண்டியன் என்பவனால் நகரத்தார்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டதாக அறிகிறோம். மற்றொரு கல்வெட்டு நேமம் என்ற இந்தக் கிராமம் தேவாரம் ஓதுபவர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறுகிறது.

கற்பனை கடந்த சோதியும் ஆதியும் அந்தமும் இல்லா அறவாளி அந்தணனும் செருக்குற்று உலவிய திரிபுரங்களைச் சிரிப்பில் எரித்த செம்மேனி அம்மானுமான ஜெயங்கொண்ட சோழீசர் வீற்றிருக்கும் திருக்கோயிலுக்கு இன்று நடைபெறும் (பிரமோதூத ஆண்டு தைதிங்கள் 21 உ ஞாயிற்றுக்கிழமை (3.2.91)ல் இந்தக் குடமுழுக்கும் இதற்கு முன் 1907ல் மகாகும்பாபிஷேகமும் 5.2.61ல் மகாகும்பாபிஷேகமும் மற்றும் பலதடவை அஷ்டபந்தன மகா அபிஷேகமும் நிகழ்ந்து உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் ஆடி 18ல் ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் சௌந்தரநாயகி அம்பாளுக்கு கணபதி ஓமம் பஞ்சமுக அர்ச்சனை நவசக்தி அர்ச்சனை திருக்கல்யாணம் திருவிளக்குப் பூஜையும் காரைக்குடி நகரத்தார்களால் சிறப்பு வழிபாடுடன் நடத்தப் பெறுகின்றன.

நேமம் கலைக்கூடம் :

ஆன்மாவிற்கு களிப்பும் மகிழ்ச்சியும் தேவை. அழகுணர்ச்சி தேவை. திருக்கோயில் சிற்பக்கலையில் உறைவிடமாக விளங்குவது மதுரை. கிருஷ்ணாபுரம் திருப்பெருந்துறை, தாராசுரம் கங்கை கொண்ட சோழபுரம், பேரூர் காஞ்சி மாமல்லபுரம் தஞ்சை முதலிய ஊர்களில் உள்ள திருக்கோயில் சிற்பங்கள் சிறந்தன.

அதைப் போலவே இரணிக்கோயில் நேமம் ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் கோயிலில் உள்ள சிற்பங்கள் சிறந்தவை. இங்குள்ள சிற்பங்கள் அனைத்தும் பேசும் பதுமைகளாக உள்ளன. இவ்வற்புதமான சிற்பங்களைக் காண்போர் கண்ணும் கருத்தும் திகைப்புறும்.

மார்க்கண்டேயனைக் காக்க கால தேவனை எட்டி உதைக்கும் சிவபெருமான் திருக்கோலமும் காலதேவன் எருமைக்கடா மீது அமர்ந்து கைதூக்கி வணங்கும் காட்சியும் சிவலிங்கத்தைக் கட்டித் தழுவிக் கொண்டுள்ள மார்க்கண்டேயனுடைய திருவுருவமும் இவற்றை எல்லாம் விட மார்க்கண்டேயனையும் சிவலிங்கத்தையும் சுற்றிப் போடப்பட்டுள்ள பாசக்கயிறும் ஒரே கல்லில் மிக அற்புதமாக வடித்திருக்கிற சிற்பியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். கல்லில் சிற்ப உருவம் செய்வது மிகவும் கஷ்டமானது. இவை கலை பயில் கூடமாகவும் சிற்பக்கலையின் மேம்பாட்டையும் உணர்த்துகின்றன. இத்துடன் நீராளி மண்டபத்தூண்களிலும் அணியொட்டிக்கால் மண்டபத்தூண்களிலும் வீரமூர்த்திகளும் தேவிமார்களும் அழகொழுகும் சிலை வடிவுகள் அமைக்கப் பட்டுள்ளன. சிற்ப வேலைகள் மிக அற்புதமாய் அமைந்துள்ளன.

வழிபட்டவர்கள் :

அகத்தியர், தெட்சிணாமூர்த்தி, ஜெயங்கொண்டார், சௌந்தரபாண்டியன், குலசேகரன், நந்திமாறன், நேமராஜன், தளபதிகண்டன், அருணகிரியார்.

விநாயகர் பெயர் :

மாணிக்க விநாயகர், ஜெயங்கொண்ட விநாயகர்

முருகன் பெயர்கள் :

கிருபாந்தகமூர்த்தி, சுப்பிரமணியர்

பரிவார தேவதைகள் :

விநாயகர், தெட்சிணாமூர்த்தி, நால்வர், கன்னி விநாயகர், சோமேஸ்வரர், மேலேசுவரர் (மேலேசுவரி), பெருமாள், அண்ணாமலையார்(லிங்கேஸ்வரர்), சுப்பிரமணியார் வள்ளி தெய்வானை, கெஜலட்சுமி (துர்க்கை சரசுவதியுடன்), பிரம்மா, துர்க்கை, சண்டிகேசுவரர், வயிரவன், சூரியன், நந்தி, விசுவநாதன் (விசாலாட்சி) பலிபீடம் துவாரபாலகர் இரண்டாம் பிரகாரத்தில், விநாயகர், சுப்பிரமணியர் (சோழதீர்த்த வடகரையில்) விநாயகர்.

உற்வசமூர்த்திகள், ஐம்பொன்சிலைகள் :

நடராஜர், சிவகாமவல்லி,(ஆவுடையம்பிகை), நர்த்தனசுந்தரர், விநாயகர், சோமசுந்தரர், ஆரணாலேசுவரர், தெட்சிணாமூர்த்தி, அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுக்கிரவார அம்மன், சந்திரசேகரர், அழகிய நாச்சி அம்மன், சண்டீசுவரர், பள்ளியறை மூர்த்தி, சக்கரம், கீதை(அனைத்தும் பஞ்சலோகத்தால் ஆனவை)

சுற்றுக் கிராமத் தேவதைகள் :

ஆற்காடுடையார், மதுநதீசுவரர் மங்கள நாயகி, வயிரவர், சிலந்தான் பிள்ளையார், வெயில் உகந்த விநாயகர், அழகாபுரிப் பிள்ளையார், சேவகப் பெருமாள் ஐயனார், உலகளந்தான் ஐயனார், காடப்பிள்ளை ஐயனார், பள்ளிமடை விநாயகர், செம்மேனி அம்மன், சுந்தரநாயகியம்மன், கருப்பர், நொண்டிக்கருப்பர், ஆற்றுப்பிள்ளையார்,

நேமம் நகரத்தவர்கள் இருக்குமிடம்	20 ஊர்கள்
நேமம் நகரத்தவர் புள்ளி சுமார்	1500
நேமம் கிராமம் ஜனத்தொகை	1500

தென்னை மரங்கள் சூழ்ந்துள்ள இந்தக் கோயிலை 24 பேர் நகரத்தவர்கள் கொண்ட அறங்காவலராக இருந்து நிலபுலன்களின் வருமானத்தாலும் தோப்புக்குத்தகை நகரத்தவர்களால் அளிக்கும் தொகையைக் கொண்டும் பூஜை படித்தரச் சிலவுகளும் உற்சவங்களும் விழாக்கள் நடத்தவும் போதுமானதாக உள்ளன.

சொற்பலிதமுள்ள கவிபாடும் ஆற்றல் மிக்க சிறப்புகளுடைய பாடுவார் முத்தப்ப ஐயா இக்கோயிலைச் சேர்ந்தவரே. அவர் ஜெயங்கொண்ட சோழீசர் பிள்ளைத்தமிழ், பதிற்றுப்பத்து, அந்தாதி உலா சதகம் போன்ற நூல்களைப் பாடியுள்ளார்கள்

சீர்பொருந்தும் தென்னேமம்
தருவைநிகர் தென்னேமம்
சயங்குபுகழ் தென்னேமம்
கலைப்பாறும் தென்னேமம்
வாவி புகழ் தென்னேமம்

என்றெல்லாம் புலவர் பெருமானால் புகழ் மொழிகளைப் பெற்ற தலம் நேமம் இதுவே.

மருதுநேமம் செயங்கொண்ட சோழீசர் பங்(கு)
அமர் சௌந்தரியும் வாழி !

காட்சி ....மீட்சி........ மாட்சி............

இராம. சிவராமன் எம்.ஏ., பி.எல்.,
கீழச்சிவல்பட்டி

1. திருக்குடநன் னீராட்டு ஜெயங்கொண்ட சோழீசர்
திருவருளைக் காட்டும் நேரம்
தேனாக வாழ்வியலை திசைமாறாப் பக்திதனை
தித்திக்கக் கூட்டும் நேரம்
பெருமைமிகு சிற்பங்கள் பிறந்துவந்து சாமரங்கள்
பெரியோரை வீசிக் காக்க
பேணுகிற இல்லறத்தில் பிரியமிகு துணையாகும்
பீடுடைய சௌந்தர நாயகி
ஒருமையுடன் சிவசக்தி உன்னதத்தைக் காட்டுகிற
உயர்ந்திருக்கும் கோபு ரங்கள்
உலகாளும் தேவியுடன் உறுதுணையாய் உத்தமனும்
உளங்கனிந்து இன்பம் நல்க
அருமையிலும் அருமையென அமைந்தநகர் நேமத்தில்
ஆறாக மகிழ்ச்சி ஊற்று
அகம்வழியும் பெருக்கெடுக்கும் அன்பாட்சி செய்துவிடும்
அறம்வளரும் காட்சி காண்போம்.

2. தொடுத்தகவி பழுதில்லை தோன்றுகிற எண்ணங்கள்
தொடுகவிதை மெருகை ஏற்ற
தொல்தமிழின் புகழ்வளர்த்த முத்தப்பர் கோயிலென
தொடர்மாந்தர் போற்று கின்றார்
எடுத்தகவிக் கீடில்லை எனப்புலமை மிக்கோர்கள்
இறைஞ்சுகிற பாடு வாரை
எதிர்ப்பவர்கள் ஓடிவிட இன்னருளைப் புரிந்திட்ட
எழிலான நேமங் கோயில்
கொடுத்துக்கை சிவந்தகரக் கர்ணன்போல் கொடைவள்ளல்
கொண்டாடும் நேமங் கோயில்
குடமுழுக்கு நீராட்டு விழாவாலே மனிதஇனம்
குன்றாக வளமை ஏற்க
மிடுக்காக நடைபோட்டு மேதினியில் அமைதியினை
மென்மேலும் ஓங்கச் செய்ய
மிடிநீக்கும் தெய்வங்கள் நல்லருளைத் தந்துவிட
மேலான மீட்சி காண்போம்.

3. பழவினைகள் போயகலும் பண்புநலம் குடியிருக்கும்
பக்கமிரு வெற்றி வேலன்
பன்னாட்டு மக்களையும் பக்தர்களாய் ஆக்கிவிடும்
பக்கமிரு கற்பக மூர்த்தி
விளங்குமிந்தப் பிள்ளைகளால் விரும்புமருள் தேடிவர

வேண்டியன வந்து சேரும்
விண்முட்டும் கோபுரங்கள் ஏற்கும்நீர் முழுக்குவிழா
வித்தாகும் மாட்சி காண்போம்
வழங்கிவரும் கோயில்களில் ஒன்பதிலே ஒன்றாகி
வருவோர்க்கு வரங்கள் தந்து
வண்ணமிகு இறக்கைகளால் வானோங்கிப் பறக்கின்ற
வளமைதரு நேமங் கோயில்
அழகான கோயிலென ஆன்றோர்கள் போற்றுகிற
அருந்திறமை காட்டும் கோயில்
ஆட்சிசெயும் இறையோர்கள் அகமகிழநீர் ஆட்டுவிழா
அன்பான மாட்சி காண்போம்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

"மோரு வித்த காசை இறுக்கி முடிஞ்சு வைப்பார் ஆச்சி - குன்னக்குடி
முருகனுக்கு வெள்ளியிலே வைப்பார் திருவாச்சி
குளம்பு வித்துப் பாக்கை வாங்கிக் குமிச்சு வைப்பார் ஆச்சி - திருக்
குளங்கள் வெட்டும் திருப்பணிக்கு கொடுத்திடுவார் ஆச்சி
கோயிலிலே அலகிடுவார் கோடீஸ்வரர் மனைவி - வண்ணக்
கோலமிடும் கைகளிலே குலுங்கும் வைர வளைவி
வாய் மணக்கும் தாலாட்டிலே வருகும் தமிழ் அருவி
வாழ்க்கை யெல்லாம் உழைப்பதிலே வானம்பாடிக்குருவி.

– கொத்தமங்கலம் சுப்பு –

மண்ணின் மைந்தர் செயங்கொண்டார்

தெ. முருகசாமி, முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

எந்த ஒரு பொருளும் இருப்பதற்கு ஓர் இடம் தேவை. நிற்க, நடக்க, இருக்க நிலமே ஆதாரம். 'நில்' என்ற வேர்ச்சொல்லடியாக எல்லா வற்றிக்கும் நிலைத்த ஆதாரமாக இருக்கும் நோக்கம் கருதி நிலம் என்ற காரணப்பெயர்பூமிக்கு ஏற்பட்டது. நிலத்திலிருந்தே அனைத்துயிர்களும் தோன்றுகின்றன; மடிகின்றன. நிலம் தரும் பயன்பாட்டால் அதை வாழ்முதற் பொருளாகக் கொண்டனர் தமிழர். 'முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு' என்பது தொல்காப்பியம்.

நில அடிப்படையில் மனித இனம் பாகுபாடு செய்யப்பட்டதை வரலாறு உணர்த்துகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற தொன்மைக் குறியீடுகளும் ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா போன்ற கண்டங்களும் நிலத் தொடர்பால் மனித இனத்தை அடையாளம் காட்டும் சொற்களாக நின்று நிலைத்து உள்ளன. அறிவியல் முன்னேற்றத்தால் உலகம் சுருங்கி விட்ட இக்காலத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உணர்வு விரிவடைந்து விட்டதால் இலக்கண, இலக்கியங்களிலும் வரலாற்றிலும் மட்டுமே மனிதனை இடத்தொடர்பால் இனம்பிரித்துக் காணும் வழக்கம் உள்ளது. இன்றைய நடைமுறை வாழ்வியலில் இவ்வழக்கம் அருகி விட்டாலும் செட்டிநாட்டு நகரத்தார் மரபில் இடத்தொடர்பால் அடையாளங் காணும் வழக்கம் இன்றும் உள்ளதைக் கண்கூடாகக் காணலாம்.

செட்டி நாட்டில் உள்ள ஒன்பது ஊர்களின் சிவாலயத் தொடர்பால் நகரத்தார்கள் ஒன்பது பிரிவினர் ஆவர். இடத்தொடர்பான இப்பிரிவுகள் 'கோயிலைச் சார்ந்த குடி, குடியைச் சார்ந்த கோயில், என்ற செழுந்தமிழ் வழக்கை உறுதிப்படுத்தும் அடையாளமாகக் காணப்படுகின்றன. வரப்புயர நீரும் நீருயர நெல்லும் உயர்ந்தாற் போலக் குடியுயரக்கோயிலும், கோயிலுயரக் குடியும் உயரும் தனித்த சிறப்பு நகரத்தார் மரபில் மட்டுமே காணப்படுதலால் எந்த இனத்தார்க்கும் கிட்டாத 'மன்னர் பின்னோர்' என்ற இலக்கியப் புகழ் நகரத்தார்க்கே கிட்டியது எனலாம். எனவே மண் வாசனையோடு கூடிய மனித வாடை வீசும் நாகரிகத் தொட்டிலாகச் செட்டிநாடு விளங்குகிறது.

நகரத்தார் அனைவர்க்கும் செட்டிநாட்டின் எல்லாச் சிவாலயங்களிலும் வீற்றி ருக்கும் மீனாட்சி சுந்தரேசுவரரே பொதுப்பெயராய் வழிபடு கடவுளராயினும் இவ்வொன்பது திருக்கோயில்களிலும் அம்மனுக்கும் சுவாமிக்கும் தனித்தனியாக ஒன்பது திருநாமங்கள் உள்ளன. இவ்வொன்பதில் சவுந்தர நாயகி உடனாய செயங்கொண்டார் எனப் பாடுவார் முத்தப்பச் செட்டியாரால் பாடல் பெற்ற தலம் நேமம் திருக்கோயிலாகும். இங்கு வீற்றிருந்தருளும் இறைவன் 'நாற்றிசையும் புகழ வரும் 'செயங்கொண்டார்' எனப் பாடுவாரால் சதகத்தில்(33) புகழப்படுகின்றான். 'மைப்படியுங் கண்ணி சௌந்தரி பாகர் செயங்கொண்டார்' (46) என ஆண்டவனின் உமையொரு பாகத் தன்மையையும் 'பாக்கியஞ் செந்தமிழ்க் குதவும் செயங்கொண்டார் (62) எனவும் 'தண்டமிழ்க்கருள் புரியும் செயங்கொண்டார்' (29) எனவும் ஆண்டவனின் தமிழ்த்தொடர்பும் மற்றுமுள்ள பெருங்கருணைகளும் அருட்கவியால் பாடப்பட்டுள்ளன. இங்ஙனம் பாடுவதெல்லாம் பொதுவானவை. ஆனால் நேமம் என்ற ஊரைச் சுட்டி உணர்த்தும் குறிப்புகள் நேமங்கோயில் நகரத்தாரின் தனித்தன்மையை உணர்த்துவனவாக உள்ளதைச் சதக இலக்கியங் கொண்டு நோக்குவோமாக.

"சீர் பொருந்தும் தென்னேமம்" என விநாயகர் காப்புடன் தொடங்கும் செயங்கொண்டார் சதகத்தில் 'செகத்தார் புகழ வரும் தென்னேம நாடதிபர்" எனப் பல

இடங்களில் நேமம் என்பதைத் "தென்னேமம்" என்றே முத்தப்பர் குறிப்பிடுகிறார். அருட்கவியரசர் அவதரித்த கீழச்சிவல்பட்டிக்கு நேமம் தெற்குத் திசையில் உள்ளதால் அங்ஙனம் தென்னேமம் எனக் கூறப்பட்டதானாலும் 'வட நேமம்' என்ற ஓர் ஊரைப் பிரித்துக் காட்ட வேண்டி அங்ஙனம் கூறப்பட்டதெனக் கருதக் கூடாது. தென்பழநி, வடபழநி, தென்மதுரை, வடமதுரை என இனம் பிரித்துக் காட்டும் இடங்கள் போல் தென்னேமத்திற்கு வட நேமம் என்ற ஒன்று இல்லை. இதனைத் தென் வேங்கடம் என்ற ஒன்றில்லாத வேங்கடத்தை வடவேங்கடம் எனத் தனித்துக் கூறுதல்போல் வடநேமம் என ஒன்றில்லாத நேமத்தைத் தென்னேமம் எனக் கொள்வதாகத் தனித்து உணர வேண்டும். இப்படிக் கூறுவதை இனச்சுட்டில்லாத அடைமொழி என இலக்கண நூலார் கூறுவர். வெண்டாமரைக்குச் செந்தாமரை இனம். ஆனால் செஞ்சூரியனுக்கும், வெண்திங்களுக்கும், கருஞ்சூரியனும், கருஞ்சந்திரனும் இல்லை. இங்ஙனம் இனம் சுட்ட முடியாத தனித்த சொற்களைப் போன்றதே 'தென்னேமம்' என்பதால் இச்சொல்லின் பொருளாழம் நேமங் கோயிலாரின் தனித்தன்மையைச் சுட்டுவதாகக் கருதலாம்.

தென் என்றால் 'இனிமை' என்று பொருள். இனிமை பொருந்திய பாடலைத் 'தென்பாங்கு' என்பர். இதைத் தெம்மாங்கு என மருவி வழங்குதலும் உண்டு. கனி போன்ற தென்பாங்கு' என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். இனிமையுடைய காற்று தென்றலாகும். அது தெற்கிருந்து வருவதாயினும் இனிய சுகந்தத்தைத் தருவதால் தென்றலாயிற்று.

தென் என்பதற்குப் பாட்டு என்ற ஒரு பொருளும் உண்டு. 'வண்டு தென் காட்டும் செழும்புறவு' – என்பது அப்பரின் திருப்புத்தூர் தேவாரம். எனவே தென்னேமம் என்றால் இனிமையான நேமம் என்றும் பாடல் உடைய நேமம் என்றும் பொருள்படும்.

பேரரசர்களைப் போல நகரத்தார்கள் கட்டிய எல்லாத் திருக்கோயில் சிற்பங்களும் சிறப்பானவை என்றாலும் குறிப்பாக நேமங்கோயில் சிற்பங்களின் அற்புதங்கள் தனித்தன்மை யுடையன என்பது யாவரும் அறிந்ததே. அறிவுத்திறன் மிக்க சிற்பிகளின் மிக நுட்பமான கலை நுணுக்கங்கள் காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர வல்லன. அவ்வாறே பாடுவாரின் அருட்பாடல்களால் இன்னருள் சுரக்கும் தலமாக நேமம் இலங்குகிறது. மேலும் இக்கோயிலைச் சார்ந்த இடங்களில் பல கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளதால் புதிய வரலாற்று உண்மைகள் வெளிவர உள்ளன என்பது நேமத்திற்குத் தனித்த பெருமையாகும். பாடுவாரின் 'செயங்கொண்ட சோழீசர்' என்ற குறிப்பும் 'செம்பி நன்னாட்டவர் புகழும் தென்னேமம்' (21) என்ற செய்தியும் வரலாற்றடிப்படையில் அக்கோயிலின் சுற்றுப்புறச் சூழலை உயர்த்தியுள்ளன. எனவே வரலாற்றுண்மையாலும் பாடல் இனிமையாலும் தென் நேமம் என்பது முற்றிலும் பொருந்தும் எனலாம்.

இத்தென்னேமம் என்ற தொடருக்குப் பாடுவார் கூறும் அடைமொழி செஞ்சொற்கவியின்பமாக அமைந்து நேமங்கோயிலாரின் மாண்பை உயர்த்திக் காட்டுகின்றது. "தருவை நிகர் தென்னேம நகரில் வளர் செயங்கொண்டார்" (2) என்பது அருட்கவியின் அமுத வாக்கு. கற்பகத் தருவைப் போன்ற என்ற உவமையைத் தென்னேமம் என்ற ஊர்ப் பெயரோடுஇயல்பாகச் சேர்த்துப் பொருள் காண்பது ஒருவகை. அவ்வுவமையைச் செயங்கொண்டார் என்பதோடு சேர்த்து தென்னேம நகரில் வளர்தருவைநிகர் செயங்கொண்டார் எனப் பொருள் காண்பது மற்றொரு வகை. இவ்வுவமைஇங்ஙனம் ஈரிடத்துக் கூட்டியுரைக்கும் முதல்நிலைத் தீவகமாக அமைந்தாலும் நேமத்தோடு மட்டுமே சார்த்தி உரைத்தல் சாலும் எனக் கொள்ளலாம். ஏனெனில் ஆண்டவன் இயல்பாகவே கொடுக்கும் தன்மையுடையவன் என்பதால் கற்பகத் தருவைப் போன்றவன் ஆண்டவன் எனக் கூறுவதில் சிறப்பில்லை. நேமம் கற்பகத்தருவாக உள்ளது என்பது தான் சிறப்புக்குரிய செய்தியாகும்.

ஈண்டு நேமம் என்பது அந்த வூரைக் குறிக்காமல் அஃது ஆகுபெயர் நிலையில் நேமங்கோயில் நகரத்தாரைக் குறிக்கும் என்பது இலக்கண மரபாகும். ஊர் புகழ்ந்தது என்றால் ஊரார் புகழ்ந்தனர் என்பது போல கற்பகம்போலக் கொடுப்பதில் வல்ல நேமங் கோயிலார் என்பது பொருள். அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக இருக்கும் ஆண்டவனை விடப் பாடுபட்டுத் தேடிய பொருளைத் தாமும் துய்த்துப் பிறரையும் துய்க்கச் செய்யும் மனிதக் கொடையே சிறப்பிற்குரியது. 'ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' என்கிறார் திருவள்ளுவர். எனவே கோடி கொடுக்கும் கொடை மனிதக் கொடையே மகத்தானது என்பதால் 'தருவை நிகர் தென்னேமம்' என்ற குறிப்பு நேமங்கோயிலாரின் மாண்பைத் துலங்கச் செய்கின்ற தன்றோ! இதற்கு அகச்சான்றாக நேமங்கோயில் நகரத்தார்களுக்குத் தனியாகப் பாடிய பாடல் ஒன்றில் 'சீரார் நேமநகரிற் குபேர நலம் படைத்தோரே' என்று பாடுவார் குறிப்பிடுவதால் அவர்தம் அருள் வாக்கு பலிக்கும் வண்ணம் கற்பகம் போல் நேமங்கோயிலார் வாரி வாரி வழங்க நிலையான அறங்களோடு நேமங்கோயில் குடமுழுக்கும் நடக்கின்றதன்றோ!

இன்னொரு முறையாலும் இவ்வுண்மையை அறுதியிட்டு உறுதிப் படுத்தலாம். சுவையான பழத்தோட்டம் அமைந்து நாட்டளவில் உலகளவில் பெருமைக்குரிய நேமமாகப் புகழ் பெற்றுள்ளதை யறியாதார் உளரோ? எனவே தருவை நிகர் என்ற அடைமொழியை ஊரளவில் சார்த்திக் கூறினாலும் ஆகுபெயர் நிலையில நேமங்கோயிலாருடன் சார்த்திக் கூறினாலும் அது ஆண்டவனைக் காட்டிலும் நேமத்திற்கே பெருமை எனலாம். இந்த நல்ல சுற்றுப்புறச் சூழலையுடைய நேமம், கற்பகத் தருவைப் போலப் பலவற்றைத் தரும் சிறப்புக்களைக் கொண்ட மண் வாகும் பாடுவாரின் பண் வாகும் கொடுப்போரின் பொன் வாகும் உடையது என்பதால் தருவை நிகர் தென்னேமம் என்பதே முற்றிலும் பொருந்தும் என்பதே உண்மை.

பொதுவாக நகரக் கோயில் ஒன்பதின் மக்களும் அவ்வவ்வூர்களை வாழ்விடங்களாகக் கொள்ளாமல் வந்து வழிபட்டுச் செல்லும் வழிபாட்டிடங்க ளாகவே கொள்கின்றனர். அவ்வாறே நேமங்கோயி லார்க்கும் நேமம் அமைந்துள்ளது. ஆனால் "கலியாண முரசொலிக்கும் தென்னேமச் சயங் கொண்டார்" (91) எனப் பாடுவார் பாடியருளியபடி உலக வழக்கில் திருமணமே நடைபெறாத ஆடி மாதத்தில் நாள், திதி முதலிய எந்தக் கணக்குமின்றி ஒவ்வொரு ஆடிப் பெருக்கன்றும் திருவிளக்குப் பூசையுடன் திருமணம் செய்து கொண்டு எல்லோர்க்கும் திருவருள் புரிய நேமத்திலே தங்கியிருக்கும் சௌந்தரநாயகி உடனாய செயங்கொண்டாரே நேம மண்ணின் மைந்தர் ஆவார். இம்மண்ணின் மைந்தரைக் கண்டு உலகம் உய்வதாகுக!

நேமம் அடைந்திடுவோம்! நேமம் அடைந்திடுவோம்!
சேமம் செகம் பெறவே நேமம் அடைந்திடுவோம்!
தாமமிகு கலியாண முரசொலிக்கும் செயங்கொண்டார்
நாமமதைப் போற்றியே நாளுமே உய்ந்திடுவோம்!
நாளும்நாம் உய்வதினால் நலிவு நமக்கில்லை!
கோளும்தீக் கொடுமைகளும் கொடியமிடி வறுமைகளும்
நீளுமவர் நல்லருளால் நீச்சம் அடைந்துவிட
மூளுமவர் இன்னருளை முன்னின்று காத்திடுவோம்!
வாளும் வடிவேலும் வையகத்தை வாட்டுமெனத்
தோளும் துணைக்கரமும் தொய்வின்றி அருள்கூட்டத்
தாளும் தமிழும் தரணிக்கு வழிகாட்டி
ஆளும் அருள்நேமம் அடைந்துய்வோம் வாரீரோ!

நாட்டுக்கோட்டை நகரத்தார் -செட்டியார் நல்லியல்புகள்

செல்வி வீர. சிவராமன்

பூங்குன்ற நாட்டின் வேலங்குடிச் சிவாலயக் கல்வெட்டு பேசும் வரலாறு: நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஆதிகாலம் வாழ்ந்து சீரும் சிறப்பும் பெற்றது நாகநாட்டில் சாந்தியாபுரம் என்னும் நகரம்.

அதன்பின் தென்னக வாழ்வை விரும்பிக் காஞ்சிபுரத்தில் குடியேறினர். பல நூறு ஆண்டுகள் அங்கே வாழ்ந்தனர். பிறகு சோழ நாட்டின் தலைநகர் காவிரிப் பூம்பட்டினத்தில் பல ஆண்டுகள் இருந்தனர்.

சோழ மன்னருள் ஒருவன் செய்த கொடுங்கூற்றால் பலர் உயிரிழந்தனர். எஞ்சியிருந்த ஆண்மக்கள் அறநூல் முறைப்படி வேளாளர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு பாண்டிய மன்னன் வரவு கூற பாண்டிநாடு வந்தமைந்தனர்.

பாண்டிய மன்னர் பரிசளித்த ஒன்பது சிவாலயங்களை உரிமையாகக் கொண்டு ஒன்பது கோயில் வகுப்பாக வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர்.

தற்பொழுது ஸ்ரீவைகுண்டத்தில் மண்கோட்டை உள்ளதுபோல் சோழமன்னன் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் கோட்டையுடன் இருந்ததால் நாட்டுக்கோட்டையார் என்று பெயராயிற்று. பூம்புகார் நகரத்தில் நீண்ட காலம் வாழ்ந்தமையால் நகரத்தார் என்றும் அழைக்கலாயிற்று.

பாண்டியநாட்டின் இளையாத்தங்குடியில் இருக்கிறபொழுது அவர்களுக்குள் ஒற்றுமை குறைந்தது. அந்தக் குறை விரிவடையாமலிருக்க மாத்தூர், வைரவன்கோவில், நேமம் கோவில், இலுப்பைக்குடிக்கோவில், சூரைக்குடிக்கோவில், வேலன்குடிக்கோவில் என்ற ஊர்களுக்கு ஒவ்வொரு பிரிவாகச் சென்று வாழ ஆரம்பித்தார்கள்.

இளையாத்தங்குடிக் கோயிலார் ஏழு பிரிவினரும் திருவேட்புடையார் என்ற இரு சகோதரர்களும் இளையாத்தங்குடியிலேயே தங்கி தங்கள் தங்கள் வகுப்பிற்கு ஒரு ஊருணியும் ஒரு பிள்ளையார் கோயிலும் அமைத்து கைலாசநாதரையும் நித்யகல்யாணியையும் திருமாலையும் வழிபட்டு வந்தனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திருவேட்புடையாரின் மூத்தவர் இரணிக் கோயிலுக்கும் இளையவர் பிள்ளையார்பட்டி என்ற மருதங்குடிக்கும் குடியேறினார்கள். இவர்கள் உடன்பிறந்தவர்களாதலின் இரணிக் கோயிலாரும், பிள்ளையார்பட்டியாரும் சம்பந்தம் செய்துகொள்வதில்லை.

ஒரே கோவிலில் திருமணம் செய்துகொள்வதில்லையென்றாலும் மாத்தூர் கோவில் இளையாத்தங்குடிக்கோவில் ஆகிய இரண்டிலும் உட் பிரிவுகளில் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் பின்னர் நிகழ ஆரம்பித்தது. புள்ளிகள் பெருகிவிட்டதே காரணமாயிற்று.

ஒன்பது கோவில்களிலேயே வாழ்ந்துவந்தவர்கள் சிதறுண்டு வெளியேறும்படி கி.பி. 1500ல் முகமதியர்கள், சிற்றரசர்கள், பாளையக் காரர்கள் ஆகியவர்களின் சண்டைகள், கலகங்கள் ஏற்படுத்திவிட்டன. அப்படிப்பட்ட ஊர்களின் கணக்கே "தொண்ணூற்றாறு ஊர்கள்" ஆகும்.

அவர்கள் குடியேறிய ஊர்களிலெல்லாம் மிக முக்கியமாக பிள்ளையார் கோயிலும் ஊருணியும் திருப்பணிகளாயின.

மாத்தூரில் நேமம் கோவிலார் குடியிருந்த காலத்தில் நேமம் கோயிலார் பெயரிட்ட ஒரு ஊருணியும் பிள்ளையாரும் இன்றும் விளங்குகின்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார் தாம் குடியேறிய ஊர்களில் ஏற்கனவே அவற்றின் குடிமக்களான கள்ளர், மறவர், அகம்படியார், வல்லம்பர், வலையர் போன்ற பலரும் கும்பிட்டு வந்த குலதெய்வங்களான காளி, பிடாரி, மாரி, கறுப்பர், அய்யனார் முதலான தெய்வங்களையே தமக்கும் குலதெய்வமாக கொண்டாட ஆரம்பித்தனர்.

பெரும்பாலும் மாசி மாதத்தில் அணி அணியாகத் திரண்டு சென்று குலதெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். வீடுகளில் முன்னோருக்குப் படைப்புப் படைக்கும் வழக்கமும் ஒன்று சேர்ந்து கொண்டாடப் பெறுகிறது.

தோற்றத்தில் எல்லோரும் முடிவைத்து, தலைப்பாகை கட்டி, வளர்த்துள்ள காதுகளில் கடுக்கன்கள், கழுத்தில் உத்திராட்சம் ஆகியவை அணிந்து, நெற்றியில் மூன்று விரல்பட திருநீறு பூசி, எட்டு முழ வேட்டியைக் கொய்து மடி வைத்துக் கட்டி மடியில் எப்பொழுதும் திருநீற்றுப் பையும் செப மாலையும் கொண்டு விளங்குவர்.

துக்கம் நேரிட்டால் தலைப்பாகையை அவிழ்த்து இடையில் கட்டிக் கொள்ளுவார்கள்.

எந்த மங்கலக் காரியத்திலும் சிறியவர் முதல் பெரியவர் வரை தலைப்பாகையணிந்து தான் செய்ய முற்படுவார்.

உணவுப் பழக்கத்தில் புலால் உண்பதில்லை, மது அருந்துவதில்லை, புகை பிடிப்பதில்லை. நகரத்தார் சைவ சமயத்தினர். எக்காரணத்தாலும் சைவ சமயத்தையன்றி வேற்று மதங்களையடைந்தவர் யாருமில்லை.

பாண்டிநாட்டு ஆசாரியாராகிய கலாமடம் ஈசான சிவாச்சாரியாரிடம் நகரத்தார் ஆண்கள் சிவ தீட்சையும் திருவைந்தெழுத்து உபதேசமும் பெற்று வந்தனர்.

பெண்கள் வேளாளர் குலத்தில் பிறந்தமை கருதி வேளாளர் குருவாகி துலாவூர் மடத்து பெண்கள் நிரம்ப அழகிய தேசிகரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்று வரலாயினர். கலாமடத்து ஆசாரியர் காசியாத்திரை சென்று வர பல ஆண்டுகளானபடியால் பாதரக்குடி மடத்தின் ஆசாரியாரிடம் ஆண்கள் தீட்சையும் உபதேசமும் பெறத் தொடங்கினர்.

ஆகவே ஆண்களுக்கு கலாமடமும் பாதரக்குடியும், பெண்களுக்கு துலாவூர் மடமும் குரு நிலையங்களாயின.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபினர் என்று நாம் பெருமை கொள்ளும் அவதாரப் பெருமக்கள் 1. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான இயற்பகையாரும் 2. கைலைமலைக்குத் தலையால் நடந்து சென்று இறைவனால் "அம்மையே" என்று அழைக்கப்பெற்ற காரைக்கால் அம்மையாரும் 3. பட்டினத்தடிகளும் 4. வெட்டுண்ட கணவனை எழுப்பிய கற்பின் தெய்வம் கண்ணகியும் ஆவர்.

ஆங்கில அரசு வந்ததற்பின் பயம் ஒழிந்தனர். ஊர்விட்டு ஊர் போகாமல் அங்கங்கே நிலைபெற்றனர்.

அருணகிரியார் பாடிப் பரவசமடைந்த குன்றக்குடி நகரத்தார் அனைவருக்கும் நடு நாயகமாக விளக்கமாயிற்று. குன்றக்குடி முருகன் நகரத்தாரின் பொதுவான குலதெய்வம்.

குன்றக்குடியை வைத்தே நகரத்தார் வாழும் ஊர்கள் கீழவட்டகை, மேலவட்டகை, தெற்குவட்டகை, வடக்கு வட்டகை என்று வகுத்துக் கூறலாயினர்.

குன்றக்குடியிலே எல்லா நகரத்தார் பெருமக்களும் சேர்ந்தும், தனித்தனியாகவும் கோயில் திருப்பணிகள், நந்தவனங்கள், பசுமடங்கள், ஊருணிகள், அன்னதான மடங்கள் ஆகியவை நிறுவியிருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் வீடுகளில் குன்றக்குடி முருகனுக்கு வேலூன்றி, மலைபோல் சோறுவடித்துப் பூசையிட்டு அன்னதானமிடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

சின்னஞ் சிறு பிராயத்திலே மண்ணிலே எழுத்தெழுதி மனத்திலே கணக்கை வைத்து நீதி நூல்களைப் பொருளுணர்ந்து கற்றறிந்து திரைகடல் ஓடித் திரவியம் ஈட்டினார்கள். தாம் ஓதி உணர்ந்த நீதி நூல்கள் அனைத்தும் செயல்முறைகளுக்கு அடித்தளமாக அமைந்தன. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்" என்ற நெறியிலே வளம் கண்டனர். தஞ்சை, அறந்தாங்கி போன்ற ஊர்களுக்குப் பொதிமாடுகள் வைத்துச் சென்று பண்டமாற்றுச் செய்தனர். தானியங்கள், பஞ்சு, உப்பு வியாபாரம் நடத்தினர். நூல் புடவை, பலசரக்குக் கடைகள், நாணயமாகக் கொடுத்து வாங்கல் ஆகியவற்றால் தங்கள் மானத்தையும் சைவ நெறியையும் போற்றிப் புகழ்பெற வாழ்ந்தனர்.

உப்பு விற்ற ஊதியத்தில் தைப்பூசந்தோறும் பழநிக்கு கால்நடையாகச் சென்றும் பாதரக்குடி மடத்திலிருந்து காவடிகள் கட்டிச் சென்றும் அன்னதானம் செய்தனர். அங்கங்கே ஊருணிகளும் அன்னதான மடங்களும் கட்டுவித்தனர்.

பழநியில் உள்ள அன்னதானமடம், குன்றக்குடியில் உள்ள அன்னதான மடம், திருவண்ணாமலையில் உள்ள ஓயாமாரி மடம் ஆகியவை மூன்றும் காசி முதல் கன்னியாகுமரி வரை நகரத்தார்கள் செய்திருக்கும் அறப்பணிகளுக்கு வித்தாயின.

1805ல் கொழும்பு, 1824ல் பினாங்கு சிங்கப்பூர், 1852ல் பர்மா நாட்டில் மோல்மென், 1854ல் ரங்கூன், 1855ல் மாந்தளை ஆகிய நாடுகளுக்குப் பாய்மரக் கப்பல்களில் கடல் கடந்து பயணம் செய்து வாணிபம் செய்ய முற்பட்டனர்.

தாய் நாட்டை, தாய் தந்தையரை, உற்றார் உறவினரை அனைவரையும் பிரிந்து அயல் நாட்டு மண்ணில் நாடு, மொழி, இனம், மதம் இவற்றால் மாறுபட்டவர்களுடன் இனிது பழகி ஒழுக்கம் மாறாமல் மரபுகாத்து மூன்று ஆண்டுகள் ஒரு கணக்காக வைத்து கொடுக்கல் வாங்கல் வாணிபத்தில் தக்க பெரும் லாபத்துடன் திரும்பும் திறன் படைத்தனர். அயல் மொழியை எளிதில் பேசவும் எழுதவும் தேர்ந்தனர்.

சிறியவர் முதல் பெரியவர் வரை கூட்டுறவு நல்லெண்ணம் படைத்த மனப்பாங்கினர். இனத்தவரின் பிள்ளைகளைக் கைப்பிடித்து கரைசேர்க்கும் பண்பாளர். அடுத்தாளாக அழைத்துச்சென்று மேலாளாக, கூட்டாளியாக உயர்வு தந்து ஊக்குவிப்பது ஒரு மரபாகி மேன்மை தந்தது. பிறர் வாழ மகிழும் அரிய மனத்தினர்.

மூன்று நான்கு கணக்குகள் முடித்து வந்துவிட்டால் மணமகனாகித் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெறும். பெண்கள் திருமணமும் காலத்தால் முறையாக நடைபெறும். பெண்கள் திருமணம் என்று கண் கலங்கியதில்லை.

பெண்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்ததாலும் ஆண்கள்

எண்ணிக்கையில் அதிகம் இருந்ததாலும் பெண்களைப் பெற்ற தாய் தந்தையர் வறுமைக்கோட்டில் வாழ்ந்ததாலும் மிகச் சில பெண்களுக்கு வாங்கிச் செய்த பழக்கமிருந்தது.

ஏட்டுப் பள்ளி அளவில் கல்வி கற்றவர்கள் ஆங்கிலக் கல்வி பரவ ஆரம்பித்ததும் ஆங்காங்கு நகரத்தார் இளைஞர்கள் கல்வியில் தேட்டம் கண்டு பயில ஆரம்பித்துப் பட்டம் பெற ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் தேவார திருவாசக வேத பாடசாலைகள் நிறுவியவர்கள் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் தோற்றுவிக்க முன் வந்தனர்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார், அ.மு.மு. முருகப்பசெட்டியார், டாக்டர் கலைவள்ளல் அழகப்பசெட்டியார், தமிழ் வள்ளல் மெய்யப்ப செட்டியார், கருமுத்து தியாகராசச் செட்டியார், உ.அ.பெரி.ராம. அருணாசலம் செட்டியார், சேவுகன் அண்ணாமலை செட்டியார், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர், ஆவி.பழ. சிவ சிதம்பரம் செட்டியார், மெ.செ.மெ. மெய்யப்ப செட்டியார், செந்தமிழ்ச் செல்வர் இராம. பெரிய கருப்பன் செட்டியார் ஆகிய அறச்செம்மல்கள் அனைவரும் தொழில் வளம் பெருக்கி பல்கலைக் கல்லூரிகள் கண்டனர்.

இதனால் பெரும் பயன் பெற்ற நகரத்தார் மாணவ மாணவியர் பலதுறைகளிலும் மேன்மைபெற்று உலகெலாம் உணர்ந்து பெயர் விளங்குகின்றனர்.

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

என்னும் குறட்பாவின் நடைமுறை மக்களாகத் திகழ்கின்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் திருப்பணிகளுக்குச் சான்றாக திகழ்பவை ஒன்பது நகரக்கோயில்கள், தாம் வசிக்கும் ஊர்களிலும் சுற்றுப்புற ஊர்களிலும் அமைத்த திருக்கோயில்கள், ஊருணிகள், சோழநாட்டுத்தலங்கள், பாண்டிநாட்டுத்தலங்கள், கொங்கு நாட்டுத்தலங்கள், நடுநாட்டுத் தலங்கள், தொண்டைநாட்டுத் தலங்கள் ஆகியவையாகும்.

பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் ஆங்கிலக் கல்விமோகத்தில் மாறத்தொடங்கியது ஒரு சாபக்கேடு. நம்மவருக்கு வருங்காலத் தேவைகள் மிக இன்றியமையாத சில உள்ளன.

பொருளில்லார் தாம் படிக்க விரும்பும் பொறியியல், மருத்துவம், விவசாயம் போன்ற பலதுறைப் பாடத்திட்டங்களில் படிக்க முன்னுரிமையும் நோயற்ற வாழ்விற்குரிய தற்கால வசதிகள், நிரம்பிய அடித்தள மருத்துவ மனைகளும் அறத்தின் நல்லார் சிந்தித்து அருள்நோக்கோடு ஆக்கிப் படைக்க வேண்டும்.

தன் தன் பெண் பிள்ளைகளுக்குக் கோடி கொடுத்து திருமணம் செய்யும் பேறுபெற்றவர்கள் தம் வீட்டுப் பெண்கள் எத்தனையோ தம் இனத்துப் பெண்கள் அத்தனை பேருக்கும் கண்ணீர் துடைத்து திருமண வாழ்வு கொடுக்க முன் வருதல் அறத்தால் வரும் இன்பம் பெறுவார்கள்.

தொழிலதிபர்கள் நகரத்தார் இளைஞரின் திறன் கண்டு ஊக்கமளித்து உயர்வு பெற வழிவகுத்து வாழையடி வாழையாக வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக வேண்டும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் செட்டியார் குலத்தில் ஊறிய பாரம்பரிய நல்லியல்புகள் யாவும் ஒருங்கே வளர்க! வாழ்க!

ஒன்றென்று இரு
தெய்வம் உண்டென்று இரு
உயர் செல்வம் எல்லாம்
அன்றென்று இரு
பசித்தோர் முகம் பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்று இரு
நடு நீங்காமலே நமக்கு
இட்டபடிஎன்றென்று இரு
மனமே உனக்கே உபதேசமே!

–பட்டினத்தடிகள்.

நூற்களஞ்சியம் ரோஜா முத்தையா

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்

நட்புக் கொள்வதில் தேர்ந்தெடுத்து நல்லவர்களோடு நட்புக் கொள்வது உலகியல். நல்ல நண்பர்களைக் குணம் நாடி நட்புக் கொள்ள சிவபெருமான் வழிகாட்டுவதாகக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் நால்வர் நான்மணி மாலையில்,

"அறிந்து செல்வ முடையானா மளகைப் பதியாற் றோழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டுமெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா! நினைத்தோழமை கொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு நுதற்கட் பெருமானே!"

என்று கூறுகிறார். நல்ல நட்பாக இருவரைக் கொள்ள வேண்டும். ஒருவர் செல்வத்திற் சிறந்தவராகவும், மற்றவர் கல்வியிற் சிறந்தவராகவும் இருக்க வேண்டும். சிவபெருமான் செல்வத்திற் சிறந்த குபேரனை நட்பாகக் கொண்டு, கல்வியிற் சிறந்த சுந்தர மூர்த்தி நாயனாரைத் தேடித் தோழமை கொண்டாராம். சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கட் பெருமான், ஆராய்ந்து நட்பாள்தல் நமக்கு வழிகாட்டுவதன்றோ.

"தனவானைத் தோழனென்ற செயங்கொண்டார்"
(செயங்கொண்டார் சதகம் 44)

எனப்பாடும் முத்தப்பர் நகரத்தார்களைக் குபேர நகர் வணிகர் எனப்பாராட்டுவார். மேலும் "தருவை நிகர் தென்நேமம்" என்றும்,

"சீரார் நேமநகரிற் குபேர நலம்படைத்தோர்"

என்றும் பாராட்டும்போதும் நேமம் கோயில் நகரத்தார்களைக் குபேரனோடு ஒப்பிட்டுக் கூறுவார்.

"சீர் பொருந்தும் தென்நேமம்" எனப்பாடும்போது பொருள் நலத்தாலும், உணர்வறிய கலை நலத்தாலும் பெற்ற சிறப்பினை இச்சீர் குறிக்கிறது.

ஒன்பது நகரக் கோயில்களில் நேம நகரத்தார் முத்தப்பரின் பாராட்டால் குபேர நலத்தோடு திகழ்தல் பலரும் அறிந்ததே. கலை நலத்தால், கல்வி நலத்தால், கல்வி வளர்க்கும் நூல் நலத்தால் அறிவினுக்காய் நட்புக் கொள்ள அமைந்த சுந்தரரைப் போல அறிவு வளர்க்கும் நூல் நலத்துக்காக, நம் ரோஜாமுத்தையா அவர்கள் அமைந்திருப்பது நேமம் கோவிலுக்கே அமைந்த தனிச்சிறப்பு. இருபெருநலமும் ஒருங்குடன் வாய்ந்ததால் நேம நகரத்தார் செயங்கொண்டாரே.

திரு ரோஜா முத்தையா அவர்கள் நல்ல நூல்கள் என்றைக்கும் விட்டுப் பிரியாத நல்ல நண்பர்கள், என அவற்றைச் சேகரித்து நூற்களஞ்சியமாய்த் திகழ்கின்றார். பல்கலைக் கழகங்களிலேயும் சமூக வரலாற்றிலேயும் ஆய்வு செய்யும் பலருக்கும் இவர் நூல் நிலையம் சிறந்த துணை செய்கிறது.

ரோஜா முத்தையா :

தன் இளமைக் காலத்தில் 1950களில் தன் முயற்சியால் பொருளீட்ட சென்னை சென்று அங்கு பெயர்ப்பலகைகள் எழுதும் பணியில் ஈடுபட்டபோது அக்கடைக்கு வைத்த பெயரான ரோஜா என்ற பெயர் இவர்கள் பெயரோடு இணைந்து ரோஜாமுத்தையா என்றே இவர்கள் பெயர் பிரசித்தமானது.

காரைக்குடி செல்வி பதிப்பகத்தில் இவர்கள் எழுதிய பெயர்ப் பலகையே இன்றும் வண்ணம் மாறாமல் அலங்கரிக்கிறது. இக்கலை உணர்வே விலை மதிப்பற்ற பல்துறைக் கலைப்பொருட்களையும் சேகரிக்க அமைந்த தூண்டுகோல்.

புத்தகங்கள், அஞ்சற்றலைகள், திரைப்பட சுவரொட்டிகள், திருமண அழைப்பிதழ்கள், பொம்மைகள், பளிங்குப் பொருட்கள், பத்திரங்கள், அஞ்சற் கூடுகள், அரிய ஓவியங்கள், விடுதலைப் போராட்ட நூல்கள், ஓவியம், நடனம், சிற்பம், அரசியல் நிகழ்வு, இசை முதலிய நூல்கள், எனப் பலவும் இவர்கள் சேகரிப்பில் உள்ளன.

1 லட்சம் புத்தகங்கள், 5 லட்சம் இதழ்க்குறிப்புகள், 2 லட்சம் சிறுகதைகள், 2 ஆயிரம் முதற்பதிப்பு நூல்கள், புத்தரைப் பற்றிய 2 ஆயிரம் கட்டுரைகள் 3 ஆயிரம் வைத்திய நூல்கள், 1.5 லட்சம் பழமொழிகள் 8,400 அழகுக் குறிப்புகள், 1,500 காதல் நூல்கள், 80 ரவிவர்மா ஓவியங்கள், 1000 திரைப்பட சுவரொட்டிகள் மற்றும் பல இக்களஞ்சியத்தை விலைமதிப்பற்றதாக்குகின்றன.

அரிய நூல்கள் :

கிடைத்தற்கரிய மிகப்பழைய நூல் ஆக 1804ல் கொழும்பில் அச்சிடப்பட்ட கதிர்காம ஏகாம்பர வாத்தியார் உரையுடன் கூடிய 'கந்தரனுபூதி' 1828ல் தாண்டவராய முதலியார் வெளியிட்ட "இலக்கண வினாடிவினா", 1828ல் வெளியான 'போகர் வைத்திய நூல் வரிசை' 1840ல் வெளியான கலிங்கத்துப் பரணி 1848ல் வெளியான இண்டர்மீடியட் பரிட்சைக்கான தமிழ் ஆங்கிலப் புத்தகம் 1850ல் வெளியான மஸ்தான் பாடல்கள், 1874ல் வெளியான தமிழ் ஒக்கபிலரி, 1884ல் வெளியான பவலூர் புராணம், 1887ல் வெளியான சீவக சிந்தாமணி, 1890ல் வெளியான நளச்சக்கரவர்த்தி கதை, 190 பக்க புத்தமத ஆய்வுரையுடன் உ.வே.சா 1898ல் வெளியிட்ட மணிமேகலை, ஆறுமுக நாவலர் உரையும் கூடிய பெரிய புராணம் தமிழ்த்தாத்தா உ.வே.சா எழுதிய முதற்புத்தகமான மத்யார்ஜுன மான்மியம், பாரதி நூல்களின் முதற் பதிப்புகள், 1919க்கு முன் வெளியான மகாத்மா காந்தி சதகம், 1920ம் ஆண்டு காந்திக்கு ஏ. முத்துகிருஷ்ணப்பிள்ளை எழுதிய கண்டன நூல், 1921ல் காந்தி மீது பாடிய கலித்துறை, 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளியான மயிராவணன் கதையிலிருந்து மயரா புராணம் வரை பல கிடைத்தற்கரிய நூல்கள் இங்குள்ளன.

1705ல் வெளியான சார்லஸ் டிரிலில் லோர்டின் பியர்பதும் உள்ளது.

தலபுராணம் :

சைவ எல்லப்ப நாவலர் எழுதிய மாளவி மகாலிங்க ஐயர் 1840ல் உரையுடன் வெளியிட்ட அருணாசல புராணம் உள்ளது. வண்ண ஓவிய அச்சு இல்லாததால், பதிப்பித்த 300 புத்தகங்களிலும் கையால் வரைந்த திருவண்ணாமலை அருணாசலேசுவரர், கோயில் வண்ணப்படங்கள் இரண்டினை ஒவ்வொரு புத்தகத்திலும் வைத்து அனுப்பியுள்ளனர். அந்நூல் உள்ளது. மேலும் 750 தலபுராணங்களும் 1500 புத்தகங்களும் உள்ளன. ஜி.யு. போப் மொழிபெயர்த்து 1907ல் வெளிவந்த திருவாசக முதற்பதிப்பு உள்ளது.

விடுதலைப் போராட்ட கால நூல்கள் :

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசிய உணர்வு படைத்த 80 கவிஞர்கள் எழுதிய 300 கவிதை நூல்கள் உள்ளன. 1888ல் வெளிவந்த காங்கிரஸ் வினாடிவினா என்ற நூல் உள்ளது.

நகரத்தார் பற்றியன :

1870ல் நகரத்தார்களிடையே திருமணச் சீர்வரிசைப் பரிமாற்றம் செய்வது பற்றிய பனை ஓலை ஏட்டு ஒப்பந்தம் திருமணத்தில் பெண்ணுக்குச் செய்த நகைக் கணக்கு ஏட்டில் எழுதியது. ஸ்ரீதனப் பணத்திற்கு எழுதிக் கொடுத்த கையெழுத்துக் கடிதங்கள், இரண்டு தலைமுறைக்குப்பின் தங்கள் பெண்ணுக்குக் கொடுத்த ஸ்ரீதனத்தைப் பெருக்கி பேரன் பேத்திகளுக்குப் பிரித்துக் கொடுத்த கணக்கு, இறுதிச் செலவில் காய்கறிச் செலவு சாப்பாட்டுக் கணக்கு முறைகள் கொடுத்த கணக்குகள், நகரத்தார் திருமணத்தில் மாப்பிள்ளையே திருப்பூட்டிய செய்திக்குறிப்பு, திருமணத்து வாழ்த்துரைகள், இசைபிடிமானம் பற்றிய விளக்கங்கள் என 4000க்கும் மேற்பட்ட குறிப்புக்கள் உள்ளன.

தேசபக்தி மிக்க நகரத்தார் தபால் கார்டுகளில் காந்தி, சுபாஸ் சந்திரபோஸ் படங்களைப் போட்டு அதில் கடிதம் எழுதி பிரபலப்படுத்திய கார்டுகளும் உள்ளன. விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட நகரத்தார் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன.

இதழ்கள் :

கணேசர் படம் போட்ட முதல் ஆனந்த விகடன் முதல் இன்றைய மலர்கள் வரையில் உள்ளன. 1916ல் நெல்லையப்பர் நடத்திய கதாரத்னாகரம், வள்ளலார் படத்துடன் கூடிய சாந்தோபதேசமஞ்சரி, தொழிலாசிரியன், பாலபாரதி, கலாசிந்தாமணி, புதூர் நடத்திய ஆனந்த விகடன், மாதர் மனோரஞ்சனி, வினோத விசித்திர பத்திரிகை கிருஷ்மித்ரன், சுகோதயம், ஒற்றுமை, பிரஜானுகூலம், மதிபூரணி என்ற பலவற்றைக் காணலாம்.

கலை :

ரவிவர்மா எழுதிய எண்பது ஓவியங்கள் வங்க ஓவியர் நந்தலால் போஸ், சாந்தி நிகேதனிலிருந்து தம் காரைக்குடி நண்பருக்கு அனுப்பிய அஞ்சலட்டையில் வரைந்த இரண்டு வண்ண ஓவியங்கள் 27.8.1938ல் அனுப்பிய இவ்வோவியங்களில் ஓவியர் தம் கையெழுத்தை தமிழிலேயே எழுதியுள்ளது பெரும்சிறப்பு. இவை எந்த ஓவியக் கண்காட்சிக்கும் எழிலூட்டும்.

1911 முதல் வெளிவந்த திரைப்பட நாடக விளம்பரங்கள், சுவரொட்டிகள் 1000 உள்ளன. மதுரை கன்னையா நாடகக் குழுவில் ஏழு வயது கிட்டப்பா ஆண்டாளாக நடித்த ஆண்டாள் கல்யாணம் விளம்பரம் உள்ளது.

மரப்பாச்சி, பளிங்கு பொம்மைகள் பல உள்ளன. இவை பெண் குழந்தைகளுக்குக் கொடுக்கும் விளையாட்டுப் பொம்மைகள், பளிங்கு பொம்மைகள் பலவும் தாயும் மகவுமாக அமைந்தன. தாய்மை உணர்வை ஊட்டும் இவை பெண்களுக்குத் திருமணத்தின்போது அளிக்கும் சீர்ப்பொருட்களில் ஒன்றாம்.

இக்கலைப் பொருட்கள் நூல்களின் சேமிப்புப் பற்றித் திரு ரோஜா முத்தையா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார் "எனக்குத் தோன்றிய பணியைச் செய்தேன். இதில் நான் ஆனந்தத்தைக் காண்கின்றேன். புத்தகம் சேகரிப்பது அவற்றை ஒழுங்குபடுத்துவது, பிறருக்குப் பயன்படும்படிச் செய்வது, இவையெல்லாம் அதிக உழைப்பு மிகுந்த செயல்கள்தான். ஆனால், அதனால் ஏற்படும் மனநிறைவோ, மகிழ்ச்சியோ, வேறெதிலும் இல்லை. வின்சென்ட் சர்ச்சிலைப் பற்றிப் படிக்கையில் ஒரு சாதனை வீரர். மகாயுத்தம் முடிந்து

நடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதைச் சிந்திக்கும் போதும் காந்தியடிகளைப் பற்றிப் படிக்கும் போதும், ஏற்படும் மகிழ்ச்சி ஆத்ம சிந்தனை மனவளர்ச்சி ஏதும் விலை கொடுத்துப் பெற முடியாதவை. எனது வாழ்க்கை புத்தகம் தேடி இரவு பகல் வித்தயாசமில்லாத உழைப்பாகவே அமைந்து விட்டது. அது என் பாக்கியம். பலனோ அளவற்றது. ஒரே ஆனந்தமயம்இறைவனின் அருட்கொடைகளில் புத்தகமே மிகமிக மேலானது."

திரு. ரோஜா முத்தையா அவர்கள் ஏராளமான புத்தகங்களைச் சேர்த்தது மட்டுமல்ல, அவற்றையெல்லாம் படித்திருக்கின்றார்கள். பலவகையில் அட்டவணைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். எந்தப் பொருள் பற்றியும் கேட்டவுடனே அதுபற்றிய செய்திகளையும், குறிப்புக்களையும் கால வரிசையோடு கூறுகின்றார்கள். தனிமனிதர் நூலகம் இவ்வளவு பெரிதாக விரிந்து வளர்ந்திருப்பது நிச்சயமாக உலக சாதனையே!.

கவிஞர் கண்ணதாசன் தன்னைப்பற்றிப் பாடும்போது "முத்து என இட்டபெயர் முத்தாக வேண்டுமென முறையீடு செய்யவிலையோ" என்று பாடுவார். முத்தையா என்ற ரோஜா முத்தையா அவர்களுடைய பெயரும் முத்தாக ஒளிவீசுகின்றது.

நேமங்கோயிலுக்கு அமைந்த நன்முத்துக்கள் பாடுவார் முத்தப்பர், ரோஜா முத்தையா என்பது பொருத்தமானதே.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

உ

சிவமயம்

பண்டைய ஒற்றுமை

ஆடுக ஊஞ்சல் மெ.மெ.மெய்யப்பன்.

நல்வழி	முதுரை	நற்றமிழ்	ஔவை
சொல்வழி	பண்புறு	சுவடிகள்	கற்றார்
எண்சுவடி	கீழ்வா	லெக்கம்	குழிமாத்து
இன்னவை	கற்றார்	அதுவே	போதும்
அதிகக்	கல்வி	அகந்தை	வளர்க்கும்
பொதிபோல்	சுமப்பதில்	புண்ணியம்	இல்லை
வழிநெறி	காட்ட	போதும்	என்றார்
வழியிலை	என்றா	விட்டார்	இல்லை
பழியற	வாழப்	பண்புசொல்	கல்வி
வளமுற	வாழ	வகைசொல்	கணக்கு
உலகிற்	சிறக்க	"அவன்"	அருள் என்றே
அலைகடல்	கடந்தார்	அகவை	பத்தில்
இடுப்பொரு	துண்டும்	இளந்தோளொரு	துண்டும்
கடல்வழி	கடக்கக்	கனிவொடு	பெற்றோர்
தடையறத்	தந்த	பணங்கள்	பத்தும்
கடைநிலை	ஊழியக்	கடமையும்	கொண்டே
கடையின்	தலைவரைக்	காக்கும்	தந்தை
உடனுழை	தோழர்	உறவெனக்	கொண்டே
பாய்மரக்	கப்பலில்	பர்மா	செல்வான்
சேய்நிலை	மாறிச்	சுமைதனைக்	கொள்வான்
கடைநிலை	ஊழியம்	கணக்கில	செய்தால்
தடையிலை	உணவுடன்	மூவிரு	உடைக்கும்
அடைவான்	சிறுபொருள்	அத்துடன்	அனுபவம்
கடையின்	கணக்கர்	அடுத்தாள்	என்றே
படிப்படி	யாக	வட்டித்	தொழிலின்
படிகளில்	ஏறிப்	பங்காளி	ஆவான்
முதலாளி	சொல்லே	முழுமுதல்	மந்திரம்
அதனைக்	காப்பதே	அவருடைக்	கடமை
அவர்க்கென	தனியொரு	விலாசம்	இல்லை
அவரை	வணிக	மகவாய்	ஏற்று
உயர்ந்திட	வழிதருங்	கடையின்	எழுத்தே
பெயரின்	முதலிற்	கொள்வார்	உழைப்பார்
முதற்தொகை	பெருகி	பன்னூ	றாகி
முதற்கடை	செழித்து	முதிர்ந்த	ஆல் ஆகும்
ஆலின்	கீழே	அறங்கள்	தழைக்கும்
ஆலின்	விழுதெனக்	கிளைமரம்	பிறக்கும்
தன்னரும்	கூட்டாய்த்	தரித்துத்	தனிக்கடை
ஒன்றினை	ஆக்கிடப்	புதுமரம்	தோன்றும்
பல்கிப்	பெருகிப்	பழத்தோப்	பாகும்
இல்லை	இதற்கோர்	ஒப்பாம்	ஒற்றுமை
நெஞ்சம்	நிறைநல்	லன்புடன்	பாசம்
பிஞ்சைப்	பழமரம்	ஆக்கிப்	பார்த்தது

ஒன்றைப் பத்தாக்கி ஆயிரம் ஆக்கி
கொண்டு விற்றார் குறைவிலா ஒற்றுமை
பண்டைக் காலம் போல் வர வேண்டும்
பண்டை வளமும் பண்பும் திரும்பக்
கொண்டிட வேண்டும் கொடுத்திட வேண்டும்
அறப்பணி திருப்பணி ஆற்றிடல் வேண்டும்
நிரம்பிய புகழும் நிலைபெறல் வேண்டும்
அன்னை சௌந்தர வல்லி!
அண்ணல் சோழீசா! அருள் தரு வீரே

பணம் – பழைய இரண்டணா.

"வெள்ளி ரதம் இருக்குமாடி? தங்க அங்கி உண்டா - நல்ல
வீணை உண்டா? சங்கீதத்தில் வித்துவான்கள் உண்டா
வீதி எல்லாம் நாதசுரம் மோதிக் காதில் பாயும் - காலை
விழாவுக்காக ரதமிழுக்க விடைகள் புல்லை மேயும்
கோத்திரத்தில் முனிவர் பேரைக் கோர்த்துச் சொல்வார் - மற்றோர்
கோவிலையே கோத்திரமாய்க் கொண்டவர் நகரத்தார்"

– கொத்தமங்கலம் சுப்பு –

பாடுவார் முத்தப்பர் அருளிய ஜெயங்கொண்டார் சதகம்

திருமதி மு. முத்துமீனாள், எம். ஏ., எம்.எட்., தலைமைத் தமிழாசிரியை,
ஸ்ரீ மீனாட்சி பெண்கள் மேனிலைப் பள்ளி, காரைக்குடி

செட்டி நாடு முழுமையும் கொடி நிறுத்தி ஆண்ட பெரும்புலமையாளர் பாடுவார் முத்தப்பய்யா அவர்கள். கீழைச்சிவற்பட்டியில் தோன்றிய பெரு முத்தாகிய பாடுவார் அய்யா அவர்களின் இயற்பெயர் முத்தப்பர் என்பது. இருப்பினும் அவர்களைப் "பாடுவார்" என்றே அழைத்தார்கள். இயற்பெயரை விடவும் சிறப்புப்பெயர் பெருகி வழங்கிய புலமையாளர்களின் 'தமிழ்க்கடல்' 'சிவமணி' இராய. சொ. அவர்களைப் போல முத்தப்பரும் குறிப்பிடத்தக்க வர். ஆங்கில ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த முத்தப்பர் அவர்கள் தம் அரிய முயற்சியால் நிறையத் தமிழ் நூல்களை ஓதி இருக்கின்றார் இயல்பாகவே கவிபாடும் வல்லமை எய்தி இருக்கின்றார். இவை யாவினும் மேலாய், சொன்ன சொற்கள் பலித்திடும் உன்னதமான ஒரு அருளாற்றலையும் பெற்றிருக்கின்றார். தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமான், இப் புலவர் கோமானின் நெஞ்சிலும் நாவிலும் நினைவிலும் நனவிலும் பொருந்தி இருந்து இவரை சீரேற வைத்திருக்கின்றான்.

பாடுவார் அய்யா அவர்கள் நிறையத் தனிப்பாடல்களைப் பாடி இருக்கின்றனர். திருமகளை வேண்டும்

"காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்– வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்காது இரு"

என்ற வெண்பா மிகவும் போற்றப் பெறும் பாடல் ஆகும். அய்யா அவர்கள் பாடியருளிய தனிப்பாடல்கள் சிறப்புடைய வெண்பாக்களும் பல உண்டு. அவற்றுள் மேற்குறிப்பிட்ட வெண்பா ஒன்றாகும்.

பாடுவார் அய்யா அவர்களின் தெய்வ கடாட்சத் திறலும் கவிச் செழுமையும் சொற்பலித உண்மையும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களும் நாடறிந்தவை. அவர்கள் இயற்றிய 'பெருநூல்கள்' என்னத்தக்க நெடும் பாடல்கள், 'கருப்பர் அகவல்', 'திருமுக விலாசம்' 'ஜெயங்கொண்டார் சதகம்' என்பன ஆகும். அவற்றுள் 'திருமுக விலாசம்' என்பது ஆற்றுப்படை அமைப் பில் அமைந்த வளமான நூல் ஆகும். பாராயணத்திற்குரிய பக்தி இலக்கியம், 'ஜெயங்கொண்டார் சதகம்' பற்றிச் சில சொல்லுதலே இக் கட்டுரையின் நோக்கம்.

"சதகம்" என்பது சிற்றிலக்கிய வகையில் உள்ள 96 நூல் வகைகளில் ஒன்று, 'சதகம்' என்பது வடமொழிச் சொல் நூறு உடையது என்று பொருள் தருவது. நூறு பாடல்களை உடைய நூல் சதகம் ஆகும். இவ்வகை நூல்கள் ஏறத்தாழ 10 அல்லது 15 பழைய நாளில் மிகவும் கொண்டாடப் பெற்றன என்பர் பெரியோர். குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம் என்பன இளஞ்சிறார்க்கு மனப்பாடம் செய்விக்கப் பெற்ற அருமை

பெருமைக்கு உரியன. திருவேங்கட சதகம், எம்பிரான் சதகம், கோவிந்த சதகம், அபயாம்பிகை சதகம் முதலியனவும் புகழ் பெற்ற சதக நூல்களில் சில.

பெரும்பாலான சதக நூல்களின் கருத்து அறநெறிகளைக் கூறுவதும் நிலைத்த உண்மை (AXIOM)களைத் தொகுத்தளிப்பதும் ஆகும். சைவ, வைணவ பரமான சில சூக நூல்கள் அந்தந்தச் சமயப் பொருட்களை விதந்து கூறு வதும் உண்டு.

அபயாம்பிகை சதகம் முழுக்க முழுக்க ஒரு தோத்திர நூல் ஆயிற்று. பிற்காலத்தில், அண்மையில் வேலாபுரிக் கறுப்பண்ண சுவாமி சதகம் என்ற நூல் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனத்தாரால் வெளியிடப் பெற்றது. இதுவும் நீதிநூல் வரிசையிலேயே நின்று அறநெறிகளையும் சாத்திர, தருக்க, சோதிடப் பொருண்மைகளையும் பட்டியல் இடும் நூலாயிற்று.

'செயங்கொண்டார் சதகம்' என்ற பாடுவார் அய்யாவின் அருளிச் செயல் சதக நூல் வரிசையில் தனித்தன்மை உடையதாகிறது. பிற சதக நூல் களைப் போல, பாடல்தோறும் நேமங்கோயில் சிவபெருமான் ஆகிய செயங் கொண்ட சோழீசரை விளித்துப் பாடல் சொல்வதால், நூல் இப் பெயர் பெறுவதாயிற்று. ஆனால் பிற சதக நூல்கள் போலல்லாமல், வேறுபட்ட நூறு பழமொழிகளைத் தேர்ந்து தொகுத்தும், அவ்வள மொழிகளைத் தக்க சான்று களால் நெஞ்சிலும் நினைவிலும் பதியச் செய்யும் வண்ணம் நூறு வரலாற்று, புராண நிகழ்ச்சிகளைச் சொல்லியும், நூலைப் புதுமையான சதகப் படைப் பாக அய்யா அவர்கள் ஆக்கியுள்ளனர். மேலும் பிற சதக நூல்களில் பெரும் பாலும் மிக நீண்ட எண்சீர் விருத்தப்பாக்களும் இடம் பெற்றிருக்க, பாடுவார் அய்யா அவர்கள் எளிய, இனிய அறுசீர் விருத்தப்பாக்களையே இந் நூலில் கையாள்கின்றார்.

கம்பநாடார் கவிவண்ணத்தில் நெஞ்சம் தோய்ந்த அய்யா அவர்கள், கம்பன் பாட்டில் கைதேர்ந்த சந்தமாகிய,

'வெள்ளெருக்கஞ் சடை முடியான்
வெற்பெடுத்த தடந்தோளான் மேலும் கீழும்"

என்ற பாட்டின் சந்தத்திலேயே, நூறு அறுசீர் விருத்தப்பாக்களையும் அமைத் திருக்கிறார். இதனால் பாடல்கள் பயில்வார்க்கும் மனனம் செய்வார்க்கும் எளிமையும் இனிமையும் தருவன ஆகின்றன.

மேலும் இதிகாச புராணங்களில் பேதம் இன்றிச் சிவபரமான வரலாறு களையும் திருமால் பரமான வரலாறுகளையும் பொருத்தமாக ஆள்கின்றார் அய்யா. இவை தவிர, கம்பரும்–கலைமகளும்–1, மூதேவியும் திருமகளும்–2, கருணாகரனும் காந்தக் கற்கோட்டையும்–3, அம்பிகாபதியும் அமராவதியும் – 4 நளனும் பாம்பும் – 5, நெறி தவறிய அரசன் மனைவி – 6, சேதுபதிராசன் மகள் – 7, தொழுநோய் கொண்டான் பலிதம் கேட்டது – 8, பஞ்ச தந்திரக் கதை– 9, மண்ணுண்ணி மரப்பாவை என்று மூடன் பாடிய கதை – 10, உருக் மாங்கதன் கதை – 11, பொய்த்தவ ஒழுக்கத்தார் கதை–12, சீவகன் கதை – 13, கொக்கு மீன்களை ஏய்க்க நினைத்தது – 14, ஆமைவாயாற் கெட்டது – 15,

விக்கிரமாதித்தன் – 16, காளிதாசன்–17, இரேணுகா தேவி – 18, செந்நாப் புலவர் – 19, மயில் ராவணன் கதை – 20 என்று இவை மிக அதிசயமான புதுமை பொருந்திய வரலாறுகளைச் சுவையாகப் பாடித் தந்திருக்கிறார் அய்யா.

நூலின் தொடக்கம் மங்கலமாகப் பிள்ளையார் மாங்கனி பெற்ற கதையிலும், முடிவு கங்கையை நிலவுலகுக்குக் கொண்டு வந்த கதையிலும் அமைந்துள்ளன.

செயங்கொண்டாரை விளக்கும் பாடல் வரி தோறும், சிவபெருமான் சீரும் திருவிளையாடற் பெருமைகளும் கருணையும் வாய் மணக்கும் செஞ்சொற்கவிகளாக வெளிப்படுகின்றன.

71ஆம் பாட்டில் கருடன் கதை என்று திருப்பதி வேங்கட சதகம் கூறும் செய்தியைச் சொல்கின்றார்கள் அய்யா அவர்கள். தமது சதக நூலையொத்த பிற சதக நூல்களை அய்யா அவர்கள் நுணுகி ஆழ்ந்து கற்றிருக்கின்றார் என்பதுடன் அவற்றிற் சிறந்த பாடல் என நெஞ்சில் நின்ற பாடலைத் தம் பாடலில் ஆள்வதினால் அய்யா அவர்களின் பெருந்தன்மையும் நூலறிவும் புலனாகும்.

மேலும் இந் நூலில் செயங்கொண்டார் என்ற சிவலிங்கப் பெருமானைப் பேசுங்கால், அப் பெருமானை வணங்கும் வணிகர்களை வாழ்த்துவது அய்யாவின் வழக்கம். ஒரு பாடலில் (92) வணிகர்கள் கருணையும் நெறியும் உடையவர்கள் என்று குறிப்பால் சுட்டிப்பாடும் நேர்த்தி குறிப்பிடத் தக்கது. கன்றுக்கு விடாமல் பால் கறந்து விற்கும் பிற வணிகர் போல் அல்லாமல், "ஊருணிகள் கூடம் இவை உண்டு பண்ணி", தாரணியில் தர்மம் வளர்க்கும் தனவணிகர்" "கன்று உவப்பப் பால் ஊட்டும் கன வணிகர்" என்று அய்யா மகிழ்ந்து பேசுவர்.

இவ்வாறு எண்ணற்ற சிறப்பியல்புகளைக் கொண்ட "ஜெயங்கொண்டார் சதகம்" ஒரு சிறந்த நெறி நூல்; சுவைதரும் இலக்கியம்; வணிகரை வாழ்த்தும் நூல் என்பது உணர்வோம்; ஓதி மகிழ்வோம்; பாடுவார் அய்யாவின் சீர் பரவுவோம்! முருகன் அருட்கடலில் ஆடுவோம்!

☆ ☆ ☆ ☆ ☆

வள்ளலென்றால் இருபத்தோரு வள்ளலோடு போச்சா /நாம்
வாழும்போது தமிழன் வயிறு மலடியாகிப் போச்சா /செட்டிப்
பிள்ளைகளில் வள்ளல் எத்தனை செப்பும் கோயில்ஏடு
சீரும் சிறப்புமாக என்றும் செழிக்கும் செட்டிநாடு

–கொத்தமங்கலம் சுப்பு –

திரு முக விலாசம்

காப்பியக் கவிஞர்.நா.மீனவன். எம்.ஏ.எம்.எட். எம்பில்

செட்டிநாடு செய்த தவப்பயன் பாடுவார் முத்தப்பர் நம்மினத்தில் புலவராய்ப் பிறந்தது. நேமங் கோவிலைச் சார்ந்த முத்தப்பர் கலைமகளின் திருவருளுக்குரியவர். காளமேகப் புலவர்க்குப் பின்னர்த் தோன்றியகவினார்ந்த தமிழ்ப் புலவர். முருகன்மேல் அளவுகடந்த பக்தியுடையவர்.. இவர் பணிந்தாரைப் பாராட்டியும் எதிர்த்தாரை ஏசியும் பாடி வந்தவர். பாதரக்குடியில் வாழ்ந்த ஞானாசிரியரான சேனாபதி அடிகளின்மேல் மிகுந்த பக்தியுடையவர். வாக்குப் பலிதம் உள்ள பாவலர்.

திருமுக விலாசம் ......

இவர் அவ்வப்போது பாடியனவாக உள்ள பாடல்கள் பல. எனினும் பல பதிகங்களையும் சிற்றிலக்கியங்களையும் பாடியுள்ளார். நேமங்கோவிலைச் சார்ந்தவர் இவர் என்பதால் தம் வழிபடு கடவுளாகிய செயங்கொண்ட சோழீசர் மேல் சதகம் பாடியவர். இவர் பாடிய இன்னொரு சிற்றியலக்கியம் திருமுக விலாசம். இது தொண்ணூற்று ஆறு சிற்றிலக்கிய வகைகளைச் சாராதது. புதியவகைச் சிற்றிலக்கியம் என்று சொல்ல இடமுண்டு.

தலைப்பு விளக்கம்

திருமுகம் என்பது கடிதம் என்ற பொருளில் வரும். விலாசம் என்பதற்கு முகவரி என்று பொருள். விலாசம் என்பதற்கு விளையாட்டு என்றும் பொருளுண்டு. முருகன் நகரத்தார்க்கு இக்கடிதம் கொடுத்து அனுப்பியதால், திருமுகம் கொடுத்துச் செய்த விளையாட்டு என்று பொருள் கூறுவாறுமுண்டு.

திரு முக அமைப்பு

யாருக்கு எவரால் எழுதப் பெற்றது என்ற செய்தியைத் தாங்கி வெளிவரும் கடிதமே திருமுகம் ஆகும்.

'மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை வரிச்சிற கன்னம் பயில்பொழில் ஆலவாய்
மண்ணிய சிவன்யான் மொழியும் மாற்றம்
பருவக் கொண்மூப் படியென உதவும்
செருமா உகைக்கும் சேரலன் காண்க.'

எனவரும் ஆலவாய்ப் பெருமானின் திருமுகம் இதற்குச் சான்று. திருமுகம் சீட்டுக் கவிபோல் அமைவது. கொடுப்போர் பெருமையும் பெறுவோர் பெருமையும் தாங்கி வரும்.

'ஏடா யிரங்கோடி எழுதாது தன்மனத் தெழுதிப்
படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர ராகவன்
விடுக்கும் ஓலை'

என்ற அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடல் இதற்குச் சான்று. ஆனால் இத்திருமுகம் மாறுபட்ட வகையில் அமைந்தது.

இந்நூல் தோன்றக் காரணம்

ஒருமுறை நகரத்தார் பொதுக் கூட்டத்தில் எடுத்த முடிவு தவறு என்று கருதிய முத்தப்பர் அம்முடிவைக் கண்டனம் செய்திருக்கின்றார். இதனையறிந்த நகரத்தார் இதுபற்றி விசாரிப்பதற்காக முத்தப்பரை ஊர்க்கூட்டத்திற்கு அழைத்தனர். அஞ்சா

நெஞ்சுடைய முத்தப்பர் மனம் கூட்டத்தின் முன் நிற்க ஒருப்படவில்லை. எனினும் நகரத்தார்க்குப் பதிலுரைக்கும் கடப்பாடுடையவர் ஆதலின் கொற்ற மங்கலத்தில் கூடியிருந்த நகரத்தார்க்குத் திருமுகம் ஒன்றனை எழுதி ஊனையூர்ச் சுப்பையா பண்டாரத்திடம் கொடுத்தனுப்பினார். இத்திருமுகம் முருகனின் பெருமையைக் கூறுவதோடு நகரத்தார் பெருமையையும் கொடைச் சிறப்பையும் கூறுவதாக அமைந்திருந்தது. திருமுகம் கண்ட நகரத்தார் மகிழ்ந்தனர். முத்தப்பர் மேற்கொண்ட சினம் மாறினர். இவ்வரலாறு பற்றிய செய்திகள் இத்திருமுக விலாசத்திலோ இவர் பாடிய பிற செய்யுட்களிலோ இல்லை. உலகாயி அம்மன் கோவிலுக்கு வடக்கேயுள்ள விடுதியில் நகரத்தார் கூடிய செய்தியைத் திருமுக விலாசம் கூறுகிறது. பாடுவார் மேல் நகரத்தார் குற்றம் சாட்டிய குறிப்புக்கள் பற்றி இதில் இல்லை. இதனை நகரத்தார் பால் கொண்டு சென்ற ஊனையூர்ப் பண்டாரத்திற்கு உதவவே திருமுகம் பாடியதாகக் கொள்வது பொருந்தும். இவர் வரலாற்றில் இதுபோல் கவிபாடிப் பலருக்குப் பொருள் கிடைக்கச் செய்திருக்கின்றார் பாடுவார். ஊனையூர்ப் பண்டாரத்திற்கு நகரத்தார் உதவிய பின்பே அவர்தம் கொடைத்திறம் விளங்க இவ்விலாசத்தை அவர் பாடியிருக்க வேண்டுமென்று கூறுவார் உளர். இது ஆற்றுப்படைச் சாயலில் அமைந்த நூல் என்றும் ஆய்வாளர் கூறுவர்.

நூல் அமைப்பு

இத்திருமுக விலாசம் 260 வரிகளையுடையது. முருகன் தோன்றிய செய்தி இதில் விரிவாகக் கூறப்படுகிறது. இந்நூல் ஒரு கந்த புராணச் சுருக்கம் போல் அமைந்திருக்கிறது எனலாம். பண்டாரம் முருகனது வரலாறு கூறித் தேரடியில் நின்று

'கந்தா கடம்பா கதிர்வேலா கங்கைபெற்ற
மைந்தா மயூர கிரிவாசா நந்தும்
கருணைக் கடலே கனிந்துருகிப் பாடும்
அருண கிரிநாதர்க் கருள்வோய்'

என அழைக்கும் வரிகள் முத்தப்பரின் முருக பக்தியினைப் புலப்படுத்தும். இந்நூலில் இன உணர்வைக் காட்டிலும் முருக பக்தியே மேலோங்கி நிற்கிறது.

சோழ நாட்டில் வாழ்ந்த நகரத்தார் மரபினர் பாண்டியன் வேண்டுகோளால் பாண்டிய நாடு வந்த செய்தியும், அவ்வாறு வந்தவர்கள் அரியூர், சுந்தரம் இளையாத்தங்குடி ஆகிய மூன்றூர்களிலும் குடியேறிய வரலாறு விளக்கப்படுகிறது. இவ்வரலாறு உண்மை என்பதற்கு இதுவே சான்று.

நகரத்தார் சமயப் பற்று

சிவமதம் சார்ந்த நகரத்தார் சமயப் பொறையாளர் என்பதை

'அஞ்செழுத்தை உட்செபிப்போர் அல்லும் பகலுமெனை
நெஞ்சில் விட்டு நீங்காத நிண்ணயத்தார் ரஞ்சிதமாய்த்
திருமாற் கடிமைசெய்வோர் தெய்வமெல்லாம் ஒன்றென்று
ஒருமையுடன் போற்றிவளர் வுற்றோர்'

என்று விலாசம் குறிக்கும். நகரத்தார் உபதேசம் பெற்ற வரலாறும் இதனுள் கூறப்படுகிறது.

'சிரகப்பூந் தாரணிந்தோர் சிங்கக் கொடிபடைத்தார்
காரிணையாச் செம்பொன் கவிக்கீவோர்'

என்ற தொடர்களால் மகுடதன வைசியர்கள் மன்னர்போல் தனிக்கொடியும் தனிமாலையும் பெற்றுக் கொடையாளராகவும் விளங்கிய பெருமை புலப்படும்.

பண்டாரம் பெற்ற பரிசு இருவகை என்ற குறிப்பு இவ்விலாசத்திற் காணப்படுகிறது.

ஆடைகள், தங்க நகைகள், நெல் முதலியன ஒருவகை. அவை நகரத்தார் மூலம் பெற்றவை நகரத்தார் வீட்டுத் திருமணங்களில் ஊனையூர்ப் பண்டாரத்திற்கு ஒரு பணம் கொடுக்க வேண்டும் என்ற முறையும் ஆணையாக இடப்பட்டிருப்பது தெரிகிறது.

பண்டாரத்தின் வறுமை கூறும் பகுதிகள் படிப்பார் நெஞ்சில் கண்ணீரை வரவழைப்பன.

'நச்சரவைப் பாய்ந்து நடனமிடும் தோகைமயில்
பச்சோந்திக் கஞ்சும் பழமையைப்போல் மெச்சுசெல்வம்
இல்லா வறுமையினால் இல்லாள்முன் வாய்பேசச்
செல்லாமல் நெஞ்சம் தியங்கியே நல்லோர்கள்
கூடு சபைக்கிங் கேகமனம் கூடாம லேவிரைந்தே
ஓடி ஒளிந்தேன் உறுகணால்'

என்பன அவ்வறுமையைச் சித்தரிக்கும் வரிகள்.

அக்காலத்தில் பாடிய புலவர்க்குப் பரிசளிக்காதாரும் இருந்தமையைத் திருமுக விலாசம் குறிக்கிறது.

'பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைச் சொற்புலவர்
சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி நாக்குலர்ந்து
ஏடும்புண் ணாகி எழுத்தாணி யும்தேய்ந்து
பாடும் மனமும் பரிதவித்தே'

என்ற வரிகள் புலவர் பொருள் பெறாமைக்குச் சான்றுகளாம்.

புராண வரிகள், காளமேகம் பாடியது போன்ற நிந்தாத் துதியில் அமைந்த வரிகள், திருத்தொண்டர் புராண நிகழ்ச்சிகள், திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகள் ஆகியன ஆங்காங்கு இடம்பெற்று இன்பம் பயக்கின்றன.

ஒருமான், இருமாதர், மும்மூர்த்தி, நால்வேதம், அஞ்சுமுகன், ஆறுமுகன், ஏழுமஞ்சு, எட்டானை, பத்துமுடி முதலிய எண்ணலங்கார உத்திகள் இந்நூலுள் அமைந்துள்ளமை பாராட்டத் தக்கன.

நகரத்தாரின் முருக பக்தி, கொடைச் சிறப்பு, தெய்வ வரலாறு ஆகியனவற்றை உறுதி செய்யும் சான்றாக இத்திருமுக விலாசம் விளங்குவதோடு பாடுவாரின் புலமைத் திறத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது எனலாம்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

பணத்துக்காக நகரத்தாரைப் பாடவில்லை சுப்பு - சும்மா
பழகியதால் ஒருவரைப் பாராட்டுவதும் தப்பு
குணத்துக்காக நகரத்தாரைக் கும்பிடுவான் சுப்பு - அவனால்
கோவில் கட்ட முடியாததால் பாவில் வைத்தான் இப்போ !

கொத்தமங்கலம் சுப்பு

முத்தப்பருக்கு ஒரு திருமுகம்

மீ. சுசீலா, பி.லிட்.எம்.ஏ.,

கங்கை	முடியணிவாள்	கண்ணுதலான்	பெற்றமகன்
செங்கை	வடிவேலன்	சேவடிகள்	- எங்கும்
மறவாமல்	பாடும்	மதியாளன்	என்றும்
அறம்வளர்க்கும்	செல்வர்குலத்	தன்பன்	- திறமுடைய
செந்தமிழ்ப்பா	வண்ணவகை	சீராய்ப்	படைத்துலகம்
வந்திக்கப்	பாடியே	வைத்தவனே	- இந்தநிலம்
கூடுவார்	போற்றுகிற	குலமுதலே	எங்கள்குலப்
பாடுவார்	முத்தப்பர்	பார்க்கவே	- பீடுமடல்
ஒன்று	விடுத்தேன்	உளக்கவலை	கொண்டுலகில்
இன்று	வணிகர்குலம்	இன்னல்களால்	- நன்றறிய
மாட்டாமல்	கன்னியர்கள்	மாலைபெற	மாட்டாமல்
வாட்டமுடன்	வாழ்தல்	வகையோகாண்	- நாட்டமுடன்
இல்லத்	திருவென்று	எழுதிவைத்த	பொன்மகளும்
இல்லாமற்	தான்விட்டிங்	கேகினளோ	- பொல்லாத
வல்விதியால்	வாடி	வகையழிந்து	போனாரோ
தொல்விதிதான்	இன்னும்	தொடருமோ	- வல்லவரே
பாட்டுப்	பலிதமுள்ள	பாவலரே	எங்களது
கூட்டு	வழிபாட்டைக்	கொள்ளாயோ	- நாட்டிலே
மீண்டும்நீ	தோன்றுவாய்	மேலான	நம்குலத்தார்
வேண்டும்	பணிக்கு	விதிசெய்வாய்	- ஆண்டவன்தாள்
பாடி	அருள்பெற்ற	பாவலனே	முத்தப்பா
நாடும்	குலப்பெண்கள்	நன்மையுற	- வாடுகிற
மாதர்குலம்	மாலைபெற	மற்றிளைஞர்	வாழ்வுபெற
ஆதரவாய்ப்	பாடி	அருள்செய்க	- போதமுள்ள
செந்தமிழால்	உன்னடியைச்	சீராட்டிக்	கேட்கின்றோம்
வந்திங்கே	ஈவாய்	வரம்.	

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

குரு பீடங்களின் வரலாறு

ஸ்ரீலஸ்ரீ ரவீந்திர சுவாமிகள் எம்.ஏ.,

கலாமடம், பாதரக்குடி ஆதீனம், பாதரக்குடி.

'மாதா பிதா குரு தெய்வம்' என்பது முதுமொழி. 'நன்றாக குரு வாழ்க குருவே துணை' என்றுதான் முன்பு பள்ளிகளில் பாடம் தொடங்குவது வழக்கம். இப்பண்பாட்டுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக நகரத்தார்கள் தமக்கென குருபீடங்களை ஏற்படுத்தி அவற்றை சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளாகப் பராமரித்து வருகிறார்கள். எனவே தமது குருபீடங்களைப் பற்றியும் அவற்றின் பணியாகிய பஞ்சாட்சர உபதேசத்தைப் பற்றியும் நகரத்தார் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தேவகோட்டை வீர. லெ. சின்னயசெட்டியார் அவர்கள் எழுதியுள்ள 'நகரத்தார் சரித்திரம்' பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் எழுதியுள்ள 'நகரத்தார் வரலாறு' 'இளையாற்றக்குடி மான்மியம்' 'பழனிக்காவடியும் நகரத்தார் அறப் பட்டயங்களும்' ஆகிய நூல்களில் இந்த குருபீடங்களைப்பற்றிய வரலாறு காணப்படுகிறது.

அகோரசிவரும் ஈசானசிவரும் :

இக்கலியுகத்தில் சிவதருமங்கள் குறைவுபடாமலிருக்கும் பொருட்டு சிவபெருமான் தமது திருமுகங்களிலிருந்து ஈசானசிவர், அகோரசிவர் என்ற இரு சிவயோகியர்களைத் தோற்றுவித்தார். இவ்விருவரும் சிவாகமங்களுக்குப் பத்ததிகள் எழுதியுள்ளனர். அதன்படியே இன்றும் கும்பாபிஷேகம் முதலியவை நடைபெறுகின்றன. எனவே இவ்விருவரும் சைவத்திற்குத் தூண் போன்றவர்கள். இவ்விருவரில் அகோரசிவர் சிதம்பரத்திலும், ஈசானசிவர் மதுரையிலும் தங்கியிருந்து திருத்தொண்டாற்றி வந்தனர். இவர்களை முறையே சோழ மன்னனும் பாண்டிய மன்னனும் ஆதரித்து வந்தனர். இவ்விருவருமே இந்த குரு பீடங்களைத் தோற்றுவித்தவராவர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் நகரத்தார்கள் :

நகரத்தார்கள் முதலில் நாகநாட்டிலுள்ள 'சாந்தியாபுரி' என்ற ஊரிலும் காஞ்சிபுரத்திலும் வாழ்ந்திருந்து பின்னர் கி.மு. 708 ல் காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் ஆதி முதல் சிவ மதத்தைப் பின்பற்றுபவர்களாயினும் சில காலம் சிவதருமங்களைக் கைவிட்டதனால் செல்வமிழந்து துயருற்றனர். கோவலன் மரபினர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தது இங்கு நினைவு கூறத்தக்கது. ஒரு சமயம் இவர்கள் சிதம்பரம் சென்றிருந்த பொழுது அங்கு உணவின்றித் தவித்தனர். அப்பொழுது அங்கு அகோரசிவாச்சாரியார் இவர்களுக்குத் தமது திருமடத்தில் அன்னமிட்டு உபசரித்தார். சிவதருமங்களைக் கைவிட்டதே அவர்களுடைய துயருக்குக் காரணம் என்று கூறினார். அவர்களும் ஒப்புக் கொண்டு அவரிடம் சிவதீட்சை பெற்று ஊர் திரும்பி சிவனருளால் மீண்டும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர். அது முதல் அவர்கள் அகோரசிவனையே தமது குலகுருவாகக் கொண்டனர். இவ்வரலாறு 'இளையாற்றக் குடி மான்மியத்தில்' காணப்படுகிறது.

கி.மு. 585 ல் பூவந்திச் சோழன் என்பவன் தங்கள் குலப் பெண்களைச் சிறையெடுத்ததனால் எண்ணாயிரம் குடும்பத்தினரும் தங்கள் பிள்ளைகளை குருவிடம் ஒப்படைத்து விட்டு உயிர் நீத்தனர். குருநாதரும் ஆத்மநாதசாஸ்திரி என்பவர் மூலம் அவர்களை வளர்த்து கல்வி கேள்விகளில் சிறப்புறச் செய்து ஆதரித்தார். பின்னர் கி.மு. 594 ல் சோழ மன்னன் தனது மகள் ராஜபூஷணனுக்கு முடிசூட்ட விரும்பி வழக்கம் போல் நகரத்தார்களை அழைத்து முடிசூட்டுமாறு வேண்டினான். அதற்கு அவர்கள்

பிரம்மச்சாரிகளான நாங்கள் முடிசூட்டலாகாது. எங்கள் குலத்திலோ பெண்களே இல்லை. என்ன செய்வது என்றார்கள். அரசன் அவர்களுடைய குருவாகிய அகோர சிவரையும் மற்ற பெரியோர்களையும் அழைத்துக் கேட்டபொழுது அவர்கள் இதுபோன்ற சமயங்களில் வைசியர்கள் வேளாளர் குலத்தில் பெண்ணெடுக்கலாம் என்று கூறினார்கள். வேளாளர்களை அழைத்துக் கேட்ட பொழுது அவர்கள் எங்கள் குருமார்களே எங்கள் பெண்களுக்கு குருவாக இருப்பதானால் சம்மதம் என்று கூற அனைவரும் சம்மதித்து திருமணம் நடந்தது.

பாண்டிய நாடு வருகை :

சோழநாடு சென்றிருந்த சௌந்தரபாண்டிய மன்னன் சோழ மன்னனிடம் தனது நாட்டில் திருப்பூவணம் வரை கடல் கொண்டு ஊர்கள் அழிந்து விட்டபடியால் குடிகள் இல்லாமலிருந்து இப்பொழுது நற்குடிகள் வரவழைக்கப் பெற்று செழிப்பாக இருப்பதாகவும் மேலும் சில நற்குடிகளும் வியாபார வைசியர்களும் கொடுக்க வேண்டும் என்று கேட்க, சோழ மன்னன் நகரத்தார்களை அழைத்துக் கேட்டான். அவர்கள் நாங்கள் மூன்று தெருவாரும் சேர்க்கையாகக் குடியிருக்க இடமும் தேவாலயமும் நாங்கள் உடன் அழைத்து வரும் குருமார்களுக்கு மடாலயமும் மானியங்களும் கொடுப்பதுடன் தாங்கள் நடத்துவது போல் மரியாதையுடன் நடத்துவதானால் செல்கிறோம் என்றார்கள். பாண்டியனும் அவ்வாறே சம்மதிக்க நகரத்தார்கள் அங்கிருந்து புறப்பட்டு ஆண்கள் குரு அகோர சிவாச்சாரியாரையும் பெண்கள் குரு நிரம்பவழகிய தேசிகரையும் உடன் அழைத்துக் கொண்டு கி.பி. 707 ல் பாண்டியநாடு வந்து சேர்ந்தார்கள்.

குரு மடங்களின் தோற்றம் :

பாண்டிய நாடு வந்த அகோரசிவாச்சாரியார் தமக்கு வயதாகி விட்டபடியால் தாம் சிதம்பரத்தில் சிவதவமியற்ற விரும்புவதாகவும் தமது நண்பரும் பாண்டிய மன்னனின் குருவுமாகிய ஈசான சிவாச்சாரியாரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறும் கூறித் திருமுகமளித்து விட்டுச் சிதம்பரம் சென்று விட்டார். எனவே பாண்டிய மன்னன் ஈசான சிவாச்சாரியாருக்கு கிளாமடம் முதலிய ஐந்து கிராமங்களையும் நிரம்பவழகிய தேசிகருக்கு துளாவூர் முதலிய கிராமங்களையும் அளித்து மடம் ஏற்படுத்திக் கொடுத்தான். அதுமுதல் நகரத்தார் ஆண்களுக்கு நெற்குப்பை அருகிலுள்ள கிளாமடமும் பெண்களுக்குக் குன்றக்குடிக்கருகிலுள்ள துளாவூரும் குரு பீடங்களாக அமைந்தன.

பாதரக்குடி மடம் தோற்றம் :

சில காலத்துக்குப் பின் காசியாத்திரை சென்ற கிளாமடம் சுவாமிகள் நீண்ட நாள் திரும்பி வராதபடியால் நகரத்தார்களில் சிலர் திருப்புனல் வாயிலிலிருந்த இராமநாதசுவாமி என்பாரிடம் தீட்சை பெற்றனர். அதன் பிறகு காசி சென்றிருந்த சுவாமிகள் திரும்பி வந்து விடவே நகரத்தார்கள் அவரிடம் சென்று நடந்ததைக் கூறினர். அதைக் கேட்ட சுவாமிகளும் உங்களில் எத்தனை பேர் அவரிடத்தில் தீட்சை பெற்றீர்களோ அத்தனை பேரும் வமிச பரம்பரையாக அவரிடமே தீட்சை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி அனுமதியளித்து கி.பி. 1566 ல் இராமநாதசுவாமிக்குப் பாதரக்குடியில் மடாலயமும் மானியமும் விட்டுக் கொடுத்தார்.

பழனிக் காவடியும் குரு பீடமும் :

கி.பி. 1600 வாகில் நகரத்தார் சிலர் கலாமடம் சுவாமிகளைத் தரிசித்து தமது தொழில் மந்தமாக இருப்பதாகக் கூறினார்கள். அதற்கு சுவாமிகள் உப்பு எடுத்துக் கொண்டு பழனியை நோக்கிச் சென்று வியாபாரம் செய்யும்படி கூறினார். நகரத்தார்களும் அவ்வாறே செய்ய அப்பொழுது பழனிப் பகுதியில் அடைமழை பெய்து உப்பு மூட்டைகளெல்லாம் கறைந்து உப்பே இல்லாமலிருந்ததால் இவர்களுக்கு நல்ல லாபம்

கிடைத்து, விபரத்தை சுவாமிகளிடம் வந்து தெரிவிக்கவே அதற்கு அவரும் தொடர்ந்து அப்பகுதியிலேயே வியாபாரம் செய்யும்படியும் இலாபத்தில் அரைக்கால் பங்கு மகமை எடுத்து வைத்து தைப்பூசத்தன்று பழனியில் சன்னியாசிகளுக்கு அன்னதானம் செய்யும்படியும் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்து வர நான்காண்டுகளில் இலாபம் பெருகி மகமையும் அதிகம் சேர்ந்தது. நகரத்தார்கள் இதை சுவாமிகளிடம் தெரிவிக்கவே, சுவாமிகளும் அவர்களுடன் சென்று அன்னதான நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்பொழுது அவர் அடுத்த ஆண்டு வரும்பொழுது காவடி எடுத்து வரவேண்டும் என்று கூறினார். அவ்வாறே அடுத்த ஆண்டு முதன் முதலில் கலாமடத்தில் வைத்து சர்க்கரைக் காவடி கட்டிப் புறப்பட்டார்கள். இவர்கள் வருவதையறிந்த பழனி ஜமீன்தார் சின்னானப்ப நாயக்கரும் ராஜமரியாதைகளுடன் சுவாமிகளையும், காவடியையும் வரவேற்று தரிசனம் செய்து வைத்தார். இவ்வாறு பதினைந்து ஆண்டுகள் வரை சுவாமிகள் தலைமையிலேயே வரலாற்றுப் புகழ் மிக்க நகரத்தார் பழனிக் காவடிப் பயணம் நடைபெற்றது. சுவாமிகளின் கனவில் முருகப் பெருமான் வந்து கூறியபடி திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். விபூதிக் காசில் கால் பங்கு அன்னதான மடத்துக்கு நிதியளித்திருக்கிறார்கள். அன்னதான மடத்திலும் ஷண்முக நதிக்கரையிலும் கலாமடம் சுவாமிகளின் உருவச் சிலை இருக்கிறது. இன்றும் பழனியாண்டவர் சன்னதியில் நகரத்தார் காளஞ்சி மரியாதைகளில் கலாமடம் ஆதினத்துக்கே முதல் மரியாதை அளிக்கப்படுகிறது.

சேனாபதி சுவாமிகள் :

பாதரக்குடி மடம் சேனாபதி சுவாமிகள் குன்றக்குடி முருகப் பெருமானுக்கு வெள்ளிமயில் வாகனம் செய்து வைத்துள்ளார். இன்றும் அங்கு பங்குனி உத்திரத் திருவிழாவில் முதல் மரியாதை பாதரக்குடி ஆதினத்துக்கே. சேனாபதி சுவாமிகள் மீது கோவிலூர் ஆண்டவரும் பாடுவார் முத்தப்பய்யாவும் பாடல்கள் பாடியுள்ளனர்.

இவ்வாறு நகரத்தார் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து விட்ட குருபீடம் இப்பொழுது 1975 முதல் கலாமடம் பாதரக்குடி இரண்டும் ஒன்றுபடுத்தப்பட்டு கோவிலூருக்கு அருகிலுள்ள பாதரக்குடியிலும் பெண்கள் குருபீடம் குன்றக்குடிக்கருகிலுள்ள துளாவூரிலும் இயங்கி வருகின்றன.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

"உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த இளைஞர்பலர் ஊக்கம்மிக்கார்
உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார் அன்பொன்றே உறுதியென்பார்
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார் தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார் ".

– மகாகவி பாரதியார் –

துலாவூர் மடம் வரலாறு

பொற்கிழிக் கவிஞர் காசி ஸ்ரீ அரு.சோமசுந்தரன்.

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் முதலில் நாகநாட்டில் சந்தியாபுரி என்னும் நகரில் வாழ்ந்தனர். பிறகு காஞ்சிபுரத்தில் குடியேறிப் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்தனர். அதன் பின் சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறிப் பல நூறு ஆண்டுகள் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்தனர். சோழமன்னனின் கொடுங்கோன்மையால் நமது குலத்தைச் சேர்ந்த எண்ணாயிரம் ஆடவரும் பெண்டிரும் அவர்தம் குழந்தைகளும் உயிர் நீத்தனர். பள்ளிக்குச் சென்றிருந்த ஆண்பிள்ளைகளே உயிர் தப்பினர். பிறகு இப்பிள்ளைகள் வளர்ந்ததும் மணக்க செட்டிப் பெண்கள் இல்லாததால் அறநூல் விதிப்படி வேளாளர் குலத்துப் பெண்களை மணந்தனர். எனவே நம் ஆடவர்களுக்குப் பழைய வழக்கப்படி அந்தணக் குருவும் நம் பெண்களுக்கு வேளாளர் குல மரபுப்படி வேளாள குருவும் உபதேசம் செய்து வந்தனர்.

பிறகு நம் நகரத்தார்கள் சோழ நாட்டை விட்டு அகல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபொழுது ஒட்டு மொத்தமாக எல்லோரும் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு பாண்டிநாட்டில் குடியேறினர். பாண்டிய மன்னனின் ஆணை பெற்றுக் கடலுக்கு மேற்கு பிரான்மலைக்கு கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு ஆகிய நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்தனர். இப்படி இவர்கள் செட்டிநாட்டில் குடியேறிய காலம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு. அடியேனின் ஆய்வுப்படி நம் செட்டிநாட்டில் குடியேறிய காலம் இன்றைக்கு சுமார் ஆயிரம் ஆண்டாக இருக்கலாம். எப்படி என்றால் அப்பர், ஞானசம்பந்தர் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு. அவர்கள் நம் பகுதியில் திருப்புத்தூர், காளையார்கோயில், திருவாடானை, மதுரை பற்றிப் பாடியுள்ளனர். மற்றபடி நமது தேவகோட்டை, காரைக்குடி மற்றும் ஒன்பது கோயில்களைப் பற்றிப் பாடவில்லை. அதற்குக் காரணம் அப்பொழுது இக்கோயில்களோ அல்லது இந்த ஊர்களோ உருவாகவில்லை. நாமும் இப்பகுதியில் இல்லை. எனவே அவர்கள் பாடவில்லை. நாம் இங்கு இருந்திருந்தால் அவர்கள் இங்கு வராமலோ பாடாமலோ இரார்.

அப்பொழுது நாம்காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தோம். எனவே அவர்கள் நமது காவிரிப்பூம்பட்டினத்தைச் சுற்றி இருந்த எல்லாக் கோயில்களையும் பாடியுள்ளனர்.

நம்மவர்கள் கி.பி.பத்தாம் நூற்றாண்டு வாக்கில் காரைக்குடிப் பகுதியில் குடியேறினர். முதலில் குடியேறிய ஊர் இளையாற்றங்குடி என்றும் நாட்டரசன் கோட்டை என்றும் ஓங்காரக்குடி என்றும் கூறப்படுகிறது. முதலில் குடியேறிய ஊர் ஓங்காரக்குடியாக இருக்கலாம். அதுதான் பிறகு காரைக்குடியாக மருவி உள்ளது.

காரைக்குடியைச் சுற்றி நமது நகரக் கோயில்கள் ஒன்பதும் இன்று அமைந்துள்ள உண்மையை பூகோள ரீதியில் ஆராய்ந்தால் காரைக்குடியில்தான் நம்மவர்கள் முதலில் வாழ்ந்து பிறகு ஒன்பது கோயில்களைச் சுற்று வட்டாரங்களில் அமைத்துக் கொண்டு நாளாவட்டத்தில் பரவி இருக்க வேண்டும் என்ற உண்மையை உணரலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் நாம் இருந்த காலத்தில் வேளாளர் குலப் பெண்களை நம்மவர்கள் மணந்த காலத்தில் வேளாளர்களுடன் ஏற்பட்ட உடன்பாட்டின்படி நமது வேளாள வம்சப் பெண்களாகிய ஆச்சிகளுக்கும், அவர்கள் வழிவரும் ஆச்சிகளுக்கும், வேளாளர்குல குருவாகிய ஆதி நிரம்ப அழகிய தேசிகரே உபதேசம் செய்யும் உரிமை பெற்றார். அவரது காலம் கி.பி.567–627. அவருக்குப் பின் நமசிவாய தேசிகர், சத்திய ஞான தேசிகர். மங்களேசுவர தேசிகர், ஆகியோர் குருவாக இருந்தனர். அவர்களுக்குப் பின் சத்திய ஞான தேசிகர், சிதம்பர தேசிகர், மங்களேசுவர தேசிகர், உதய மூர்த்தி தேசிகர்

பொன்னம்பல தேசிகர் ஆகியோர் குருமூர்த்திகளாக இருந்து நமது ஆச்சிமார்களுக்குஉபதேசம் செய்வித்தனர். இக்காலத்தில்தான் நாம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து செட்டிநாட்டில் குடியேறினோம்.

நமது பெண்கள் குருவாக இருந்த அனைவர்க்கும் நிரம்ப வழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயர் பட்டப்பெயராக வழங்கி வரலாயிற்று.

செட்டிநாட்டிற்கு நாம் வந்த பின் பெண்கள் குருவுக்கு உரிய இடமாக துலாவூர் அமைந்தது. துலாவூர் மடத்தை முதலில் நிறுவியவர் ஞானப் பிரகாச தேசிகர் என்ற குரு ஆவார். இவரது காலம் கி.பி.913—943 ஆகும். இதுதான் நாம் செட்டிநாட்டில் குடியேறிய காலம் என்பது நினைவு கூறத்தக்கது.

துலாவூர் மடாதிபதிகள் வரிசை

1. ஞானப் பிரகாச தேசிகர்	கி.பி.913—943
2. சிவஞான தேசிகர்	943- 971
3. சபாபதி தேசிகர்	971—995
4. பொன்னம்பல தேசிகர்	995—1026
5. பூரணசுந்தர தேசிகர்	1026—1058
6. சபாபதி தேசிகர்	1058—1087
7. பூரணசுந்தரதேசிகர்	1087—1115
8. மாசிலாமணி தேசிகர்	1115—1167
9. நடராஜகுருதேசிகர்	1167—1198
10. மாசிலாமணிதேசிகர்	1198—1226
11. உதயமூர்த்தி தேசிகர்	1226—1277
12. சிதம்பரதேசிகர்	1277—1335
13.சபாபதிதேசிகர்	1335—1388
14. வடுகநாததேசிகர்	1388—1417
15. உதயமூர்த்தி தேசிகர்	1417—1449
16. சத்தியஞானதேசிகர்	1449—1498
17. தாண்டவேசுவர தேசிகர்	1498—1541
18. சத்தியஞானதேசிகர்	1541—1597
19. சிதம்பரதேசிகர்	1597—1629
20. தாண்டவேசுவரதேசிகர்	1629—1684
21. சாமிநாததேசிகர்	1684—1735
22. ஆபதோத்தாரண தேசிகர்	1735—1768
23. வடுகநாததேசிகர்	1768—1799
24. ஆபதோத்தாரண தேசிகர்	1799—1828
25. சத்தியஞான தேசிகர்	1828—1860
26. உதயமூர்த்திதேசிகர்	1860—1880
27. ஞானப்பிரகாசதேசிகர்	1880—1923
28. பாலஉதயமூர்த்திதேசிகர்	1923—1987
29. ஞானப்பிரகாசதேசிகர்	1987 முதல்

கி.பி.913 முதல் இந்த 1984 ஆம் ஆண்டுவரை உள்ள 1071 ஆண்டுகாலத்தில் 28 மடாதிபதிகளே துலாவூரில் ஆட்சி புரிந்துள்ளதை எண்ணும்பொழுது ஸ்ரீமங்களாம்பிகை சமேத ஸ்ரீவாஞ்சிஸ்வரநாத சுவாமி இவர்கள் ஒவ்வொருவருக்கும் நீண்ட ஆயுளை வழங்கி உள்ளார் என்பது சொல்லாமலே விளங்கும்.

மேற்கண்ட 28 மடாதிபதிகளில் ஞானப் பிரகாசதேசிகர் என்ற முதலாவது மடாதிபதி துலாவூர் மடத்தை கி.பி.913 ஆம் ஆண்டில் நிறுவியவர் என்பதும், ஆதிகுருவாகிய நிரம்பவழகிய தேசிகர் ஆதீனம் என்றே மடத்துக்குப் பெயரிட்டதும் நினைவு கூறத்தக்கன.

பின்னர் ஆட்சிக்கு வந்த 18வது குருவான சத்திய ஞான தேசிகர் 1541 முதல் 1591 முடிய 56 ஆண்டுகள் பட்டத்தில் இருந்திருக்கிறார். இவர் நிரம்பவழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயராலேயே பிரபலம் அடைந்த மாபெரும் புலவர் ஆவார். இவர் சேதுபுராணம் பாடி இராமநாதபுர சேதுபதியால் பாராட்டப்பட்டவர். இவரைப் பற்றித் தமிழக அரசு வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில் காணப்படும் குறிப்பு வருமாறு,

நிரம்பவழகிய தேசிகர்

16 ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமறைக்காட்டில் பிறந்தார். பாண்டிய நாட்டில் துழாயூரில் வாழ்ந்தார். இவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். இவர் மதுரையிலே தங்கி மாணவர்களுக்கு சைவ சித்தாந்த நூல்களைக் கற்பித்தார். சேதுபதியால் பாராட்டப் பெற்றார். இவர் இயற்றிய சேதுபுராணம் இலக்கியச் செறிவுடையது. சொற்சுவை பொருட்சுவை மிக்கது. திருப்பரங்குன்றப் புராணம், திருவையாற்றுப்புராணம். திருஞானசம்பந்தம் மாலை என்னும் நூல்களும் இவர் இயற்றியனவே என்பர். சிவஞான சித்தியாருக்கும், திருவருட்பயனுக்கும் உரை எழுதி உள்ளார் என்பது கலைக் களஞ்சியக் குறிப்பாகும்.

இவர் காலம் முதல் நிரம்ப வழகிய தேசிகர் என்ற பெயர் தமிழ் உலகில் பிரசித்தமாயிற்று. இன்றும் துலாவூர் மடத்தில் ஏராளமான தமிழ்ச்சுவடிகள் உள்ளன.டாக்டர்.உ.வே.சாமிநாதஐயர் அவர்.களின் தமிழ் ஆராய்ச்சிக்கு இம்மடம் ஏராளமான தமிழ்ச்சுவடிகளை உதவியது குறிப்பிடத்தக்கது. இந்த நிரம்ப வழகிய தேசிகராகிய பெரும் புலவரின் படம் இன்றும் இம் மடத்தில் காணப்படுகிறது.

இம்மடத்தின் 20 ஆம் குருவாகிய தாண்டவேசுவர தேசிகர் காலத்தில் தமிழ்நாட்டில் முஸ்லீம் படையெடுப்புகள் நிகழ்ந்து இந்துக் கோயில்களும் மடங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. அப்பொழுது துலாவூர் மடத்தின் சொத்துக்களும் நவாபினால் அபகரிக்கப்பட்டன. அக்காலத்தில் நவாபின் நோய் நீக்கி அஞ்ஞான இருளகற்றி இழந்த சொத்துக்களை நவாபிடம் இருந்து சாசனமாக மீண்டும் பெற்ற பெருமை இந்த இருபதாவது குருவையே சாரும். துலாவூர் மடத்தின் சொத்துக்களை நவாப் உருது மொழியில் எழுதிச் சாசனம் செய்து கொடுத்துள்ளார். இதனை இன்றும் துலாவூர் மடத்தில் காணலாம்.

28வது குருவாக இருந்து சதாபிஷேகம் செய்து கொண்ட ஸ்ரீபால உதயமூர்த்தி தேசிகர் அவர்கள் செட்டி நாட்டில் பலமுறை பயணம் செய்து பல ஆயிரம் ஆச்சிமார்களுக்கு உபதேசம் செய்து வைத்துள்ளார்கள். இவர்களது சதாபிஷேகத்தின் பொழுது 27.5.1984 இவர்களது தலைமகன் ஆகிய ஞானப்பிரகாச தேசிகர் அவர்கட்கு இளவரசுப் பட்டாபிஷேகமும் செய்விக்கப்பெற்றது. இக்காட்சிகளைக் காணும்பேறு நமக்குக் கிட்டியது.

துலாவூர் மடமானது சைவ மடங்கள் பதினெட்டில் ஒன்று. இங்கிருக்கும் மடாதிபதிகள் இல்லற நெறியினர். இவர்கள் பெண்கள் குருவாகையால் இல்லறப் பான்மையர்.

இம்மடத்தில் ஒருசிறு கோவில் உள்ளது. அதில் ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீவாஞ்சீஸ்வர சுவாமி எழுந்தருளியுள்ளார். இத்தெய்வங்கட்கு மடாதிபதியே தினந்தோறும் பூசை செய்வது மரபு. ஸ்ரீ வாஞ்சியம் மடமும் துலாவூர் மடமும் சகோதர மடங்கள் ஆகும்.

துலாவூர் மடம் ஜமீன் ஒழிப்பால் நிலம் இழந்து வறுமைப்பட்டுள்ளது. இங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ வாஞ்சீஸ்வரநாதருக்கு நித்தியப்படி பூசை செய்ய அன்பர்களிடமிருந்து

ரூ.100 (நூறு) வீதம் வாங்கி வங்கியில் நிரந்தர நிதியாக வைத்து அதில் இருந்து வரும் வட்டித் தொகையை உபயதார் குறிப்பிடும் நாளில் பூசைச் செலவுக்குப் பயன்படுத்தி உபயதாருக்குப் பிரசாதம் வழங்க ஆவன செய்து முதல் நிதி அடியேன் வழங்கினேன்.

சைவ ஆதீனங்கள் பதினெட்டு

1.திருவாவடுதுறை
2. காஞ்சிபுரம்
3. தருமபுரம்
4. சூரியனார்கோயில் (ஆடுதுறை)
5. ஆகம சிவப்பிரகாச ஆதீனம் (சிதம்பரம்)
6. செங்கோல் ஆதீனம் (பெருங்குளம் திருநெல்வேலி மாவட்டம்)
7.திருஞானசம்பந்தர் ஆதீனம் (மதுரை)
8. திருவண்ணாமலை ஆதீனம் (குன்றக்குடி)
9. இராமேச்வர ஆதீனம்
10. நீலப்பாடி (தஞ்சாவூர் மாவட்டம்)
11. தாயுமானவ சுவாமிகள் ஆதீனம்
12. சாரமாமுன் ஆதீனம் (திருச்சிராப்பள்ளி)
13. சொர்க்கபுர ஆதீனம் (அம்பர் திருமாகாணம்)
14. வேளாக்குறிச்சி ஆதீனம் (திருவாரூர்)
15. வள்ளலார் ஆதீனம் (சீர்காழி)
16. வருணை ஆதீனம் (வேதாரணியம்)
17. நாச்சியார்கோயில் ஆதீனம் (கும்பகோணம்)
18. நிரம்பவழகிய தேசிகர் ஆதீனம் (துலாவூர்)

இவற்றில் இரண்டு ஆதீனங்கள் இல்லறப் பான்மையன. அதில் ஒன்று துலாவூர் ஆதீனம்.

நிரம்ப வழகிய தேசிகர் பற்றி ஆன்றோர்கள் வாக்கு

1. "பொருவரும் சைவ ஆகமம் தேர்ந்து ஆசிரியத் தன்மையினைப் பூண்டு நல்லோர் கருதுற நற்கலைக் கடலை நீந்தி. மதிபுனை அமலன் கழற்காற்கு அன்பு மறுவறுசீர் நிரம்ப அழகிய முனிவன்" வேதாரண்யம் குருக்கைவித்துவான் குமாரசுவாமிபிள்ளை

2. 'குன்றுதல் இல்லாப் புலமையின்
நிறைந்த தலைமையின் மிக்கோன்
வரம்பில் புகழ்சான்ற நிரம்ப அழகிய தேசிகன்'

–சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்

3. திருப்பரங்கிரிப் புராண வசனத்தில் சேற்றூர்
வித்துவான் மு.ரா.அருணாசலக் கவிராயர் நிரம்ப
அழகிய தேசிகரை புகழ்ந்து எழுதியுள்ளார்.

4. விரிதரு பைங் கடல் உலகம் புரந்ததனி
வேந்தரெலாம் வியந்து போற்ற
அரியமறை முனிவர்தமிழ்ப் பாவாணர்

செவிநுகர்வோர் அமுதமாகத்
தெரிதரமுத் தமிழ்வடிக்கு முனிநிரம்ப
அழகியதே சிகனாம் செம்மல்
வரிசைபெறு வடமொழியின் சேதுமாக்
கதை தமிழில் வகுத்திட்டானே.

(சேதுபுராணப்பாயிரம் – அவையடக்கம்)

சுவாமி அம்மன் கோயில்

துலாவூர் ஆதீனத்தில் ஒரு சிறுகோயில் உள்ளது. இது கற்றளியாகும். இதன் திருப்பணியினை நகரத்தார்கள் செய்துள்ளனர். இங்கு எழுந்தருளி உள்ள ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ வாஞ்சீஸ்வர சுவாமிக்கும் நிரம்ப அழகிய தேசிகர் படத்துக்கும் சிலைக்கும் தினந்தோறும் இரண்டு காலபூசை நடந்து வருகிறது.

குருபூசையும் கொலுமண்டபமும்

ஆதிநிரம்பவழகிய தேசிகராகிய குருமூர்த்திக்கு ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் பௌர்ணமிக்கு அடுத்த நாள் குருபூசை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தக் குருபூசையின் போது செட்டி நாட்டு ஆச்சிமார்கள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு சோற்றுக் காணிக்கை எழுதிக் குருபூசை உணவு உண்கின்றனர். குருபூசை அன்று ஆதீனகர்த்தர் கொலுமண்டப சிம்மாசனத்தில் எழுந்தருளி ஆசி கூறுவது வழக்கம். அப்பொழுது பாதகாணிக்கை செலுத்துவது பக்தர்கள் மரபு. குருபூசை தினத்தில் ஆச்சிமார்கள் ஆதீனகர்த்தரிடம் உபதேசம் பெற்று ரூ. 16 குரு காணிக்கைசெலுத்துகின்றனர்.

கொலுமண்டபம் 1940 ஆம் ஆண்டில் கானாடுகாத்தான் சா.ரா.மு.ராம. சிட்டாள் ஆச்சி அவர்களால் திருப்பணி செய்யப் பெற்றது. பிறகு 17.8.1982 இல் அவர்களது புதல்வர் திரு.சா.ராம.மு.ராம.ஆர்.இராமநாதன் செட்டியார் (Ex.M.P.) அவர்களால் கொலுமண்டபமும் சிம்மாசனமும் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

மடம்

கோவிலை ஒட்டி மடம் உள்ளது. அதில் தான் ஆதீன கர்த்தரின் குடும்பத்தார் வாழ்கின்றனர். அந்த மடம் மிகவும் பழுதாக உள்ளது. வளவு ரெண்டாங்கட்டு ஆகியன கோட்டையூர் அ.க.அழ.சேதுக்கரசி ஆச்சி, கண்டனூர் நா.அ.ராம.கா.ராம.உமையாள் ஆச்சி, காரைக்குடி நா.சீதை ஆச்சி ஆகியோரின் கூட்டு முயற்சியாலும் ஆச்சிமார்களின் நன்கொடையாலும் இப்பொழுது பழுது பார்க்கப்பட்டுள்ளன.

துலாவூரும் குன்றக்குடியும்

துலாவூர் மடத்துக்கும் குன்றக்குடி மடத்துக்கும் ஆதிகாலத்தில் தொடர்பு இருந்திருக்கிறது. அரியூர் ஆறுவழியினரான நகரத்தார்களின் கோயிலான கடேரகிரி(பிரான்மலை) முதலிய ஐந்து கோவில் தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாக்களாகத் துலாவூர் ஆதீனகர்த்தர்கள் ஐவர் இருந்துள்ளனர்.

சிலையும் தோரண வாயிலும்

துலாவூர் ஸ்ரீநிரம்ப அழகிய தேசிகர் சிலையைக் காரைக்குடி அழகம்மை ஆச்சி செய்துவைத்துக் கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள்.

துலாவூர் நுழைவாயிலில் தோரணவாயிலும் (ARCH) பேருந்து நிழற்குடையும் திருவருட்செல்வர் இராம.ஏகப்பனும், திருவருட்செல்வர் அழ.சி.அழகப்பனும் முயற்சியாளர்களாக இருந்து குன்றக்குடி துலாவூர் சாலையில் அமைத்துள்ளனர்.

துலாவூர் கிராமப் பட்டயம்

சுவஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 632 கலியப்தம் 3811 இல் சாதாரண வருஷம் வைகாசி மீ 9உ சோமவாரமும் பருவ புண்ணிய காலமும் விசாக நட்சத்திரமும் கூடிய சுபகரண் சுபயோக தினத்தில் ஸ்ரீ சவுந்தர பாண்டிய ராசா அவர்கள் அனுக்கிரகப் பிரசாதத்தினாலே ஸ்ரீமயூரகிரித்தலமாகிய குன்றக்குடியில் தெட்சிணவீதி அன்னதான மடமாகிய நகரக்குருக்கள் அடுக்களை தீட்சை நிரம்ப அழகர் பண்டாரத்துக்கு நம்ம நாட்டுச் சேர்க்கை சிராவயல் ஏழூர்ப்பத்து மாகாணத்தில் துலாவூர் தானசாதனம் பண்ணினது

துலாவூர் கிராமம் 15 கீழ்ப்பார்க்கெல்கை கொரட்டிப் புரவு சுக்கான் ஊரணிக்கும் பெரியாண்டார் கண்மாய்க்கும் கீழ்க்கடைக் கொம்பு குத்துக்கல்லுக்கும் மேற்கு தென்பார்க்கெல்கை பனைக்குடிக் கண்மாய் நொண்டிக் காஞ்சியலையடிக்கல்லுக்கு, விளாவடி ஏந்தல் தென் கடைக் கொம்புக்கல்லுக்கு, பனையடி ஏந்தல் வீரையடிக்கல்லுக்கு.

வடக்கு

மேல்பார்க்கெல்கை சிராவயல் புரவு முக்கூட்டுக் கல்லுக்கு, மருதங்குடிப் புரவில் ரெட்டைக் கால்வாய்க்கு வெள்ளைக்கல் பொட்டலுக்கு சந்தைப்பேட்டைக் கால்வாய்க்கு பாலையடிக் கல்லுக்கு கடலாத்திக்குக் கிழக்கு வடபார்க்கெல்கை உலகடி ஊரணி தென் கரைக்கு, வெள்ளைக்கல்லு கசாளைப் பொட்டலுக்கு குடமுவட்டிப் பெரிய கால்வாய் சுட்டிப் பாறைக்கு குருவுடையான் பொட்டலுக்கு, பாறைக்கு காயந்திட்டுக்குத் தெற்கு – ஆக இசைந்த பெருநான்கு எல்லைக்குள்பட்ட நஞ்சை, புஞ்சை, திட்டுத் திடல், மாவடை மரவடை, கீழ்நோக்கிய கிணறு, மேல்நோக்கிய மரகம் சகலமும் செலத்துரு பாசனமும் உள்பட நிரம்ப அழகர் மடத்துக்கு தான சாதனம் உண்டுபண்ணிக் கொடுத்தது. அப்போது தான சாதனம் வாங்கியர் சத்திய ஞான கோத்திரத்தில் நிரம்ப அழகர் ஆதிக்கத்தில் மங்களேஸ்வர பண்டாரத்தின் புத்திரர் சத்திய ஞான பண்டாரம்.

(இதற்கு ஆதரவு – கல்வெட்டுக் காட்டிய மூல சாதனம் அனைத்தும் உள்ளன).

நவாப் சன்னது

ஹிஜிரி 1081 கமரியுலவல் மீ 2உ உசேன் நகரமாகிய சிவகங்கை இலாகா திருப்பத்தூர் சேகரம் துலாவூர் கிராமத்தில் (எயகள) 111 பதக்கு விரையடியை ஷூர் நிரம்ப அழகக் குருக்கள் காலக்ஷேபத்துக்காக 1084 பசலி உஜீர் இனாயிரத்து நாமாம் படிக்கு நிச்சயிக்கப்பட்டிக்கிறது.ஆகையால் ஷயார் தக்ந்த பாக்கியத்துடனே ஷ ி கிராமத்தில் அகமசியலாயிருக்கிறார்.

உஜீர் சய்தீன் நவாபு சையது முகமது முகர். நீர் 460 சிவகங்கை ஜமீன்தார்சேகரம்திருப்பத்தூர் தாலுகாவில் சேர்ந்த துலாவூர்–அதிகரை உள்கிடை குந்தனி பரயனேந்தல் –க–பட்டமங்கலம் உள் கிடைகாடாங்குடி ஏந்தல் –க– செல்லி புலிவயல்–க–ஆக ஏந்தல் உள்கிடை துலாவூர் மடப்புரம் நெரம்ப அழகர் நகர் ஆபதாரண குருக்கள் (உருது கை எழுத்து) இரவும் பகலும் நாம் நம்முடைய ஞாபகமாகவே இருந்து வருகிறோம். நம்முடைய தர்பாரில் இருந்து எழுதப்பட்டது.

அப்துல்லாஹாம் உறிஜீரி (10)70

அபிதான சிந்தாமணியில்
நிரம்ப வழகியர் பற்றிய குறிப்பு

நிரம்ப அழகியர். ஒரு தமிழாசிரியர். இவர் வேதாரண்யத்தில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றிக் கல்வி பயின்று வல்லவராய் ஞானநூல் அறிய வேண்டி விருப்பம் கொள்ளக் கருணை ஞானப் பிரகாச சுவாமிகளிடம் சிவதீட்சை பெற்று மதுரையில் வசித்து இருந்தார். இவர் ஒரு நாள் ஒரு மரத்தடியில் சிவதியானத்துடன் இருக்கையில் அவ்வழி சென்ற சிற்றரசன் ஒருவன் அவ்விடம் தனித்து மரத்தடியில் உட்கார்ந்திருப்பவர் யாரென்று வினவ, அவ்ஏவலர் இவர் இருந்த நிலையையும் இவரது தேக அடையாளங்களையும் கூற, அரசன் இவரை அறிந்தவன் ஆதலாலும், இவர் தேகத்தில் இருந்த நுணாக்காய்க் கிரந்தியாலும் நிரம்ப அழகியரே என்றனன். அதுவே பெயராயிற்று. இவர் சாலிவாகன சகம் 1430க்கு மேலிருந்தவர் என்பர். இவர் திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவருடன் வாசித்தவராம். இவர் செய்த நூல் சேதுபுராணம், சிவஞானசித்தி சுபட்ச உரை திருவருட்பயன் உரை.

அதி வீரராம பாண்டியன்

நைடதம் பாடிய அதிவீர ராம பாண்டியன்நிரம்ப அழகியாிடம் பாடம் கேட்டுள்ளான்.

ஆண்கள் குரு : பெண்கள் குரு :

நகரத்தார் ஆண்கள் குரு பீடம். கலா மடம் பாதரக்குடி.
பெண்கள் குரு பீடம். துலாவூர்.

புதிய கட்டிடம்.

துலாவூரில் கொலுமண்டபம் அருகில் புதிய கட்டிடம் அமைக்க இரசிகமணி இராம.சிதம்பரம் செட்டியார் தலைமையில் முயற்சி நடைபெறுகிறது.

அறமனச் செம்மல்.

துலாவூர் ஆதீனத்தின் சார்பில் குருபூசை அன்று நம் பெரியவர் ஒருவருக்கு அறமனச் செம்மல் என்ற பட்டம் வழங்கப் பெற்று வருகிறது.

கடலோடி மலைநாடும்
பிறநாடும் சென்றார்கள்
கப்பல் வராத போதே

காற்றினிலே பாய்போட்டு
கடவுளையே துணைவைத்து
கலங்களெல்லாம் சென்ற போதே

நடமாடும் சிவமாக
திருநீறும் சந்தனமும்
நதிபோலப் பூசும் உடலே

'நமசிவாயம்" என்று
நாள்தோறும் சொல்லுமவர்
நயமான சிவந்த இதழே

தடம்பார்த்து நடைபோடும்
தனிப்பண்பு மாறாத
தகைமிக்க தெங்கள் குலமே

தந்தகரம் அவராகப்
பெற்றவளும் நீதானே
சாட்சிசொல் தமிழர் இனமே!

– கவியரசு கண்ணதாசன் -

உ

நேமம் கோயில் இறைவணக்கம்

ஆடுக ஊஞ்சல் மெ.மெ. மெய்யப்பன்

வெயில் உகந்த விநாயகர்

செம்மை மலர்ப்பதம் தந்தெம்மைக் காத்தருள்
வெம்மைத் துயர்தீர் விநாயகா – உம்மைப்
பணிந்திடும் எங்குலம் பேருடன் சீரும்
அணிந்திட அருள்வாய் மகிழ்ந்து.

ஜெயங்கொண்ட சோழீசர்

சீர்பெருகும் நேமம் செயங்கொண்ட சோழீசா
வார்புனற் கண்மலர் வைத்துனது பேர்பாடிச்
சீரடியை வாழ்த்துகிறோம் சீர்சிறப்பும் சேர்வளமும்
பார்புகழும் பெற்றிடக் கண்பார்

சௌந்தரவல்லி

எழில் பொங்கும் சௌந்தர வல்லிஎன் அன்னை
பொழிகருணை வெள்ளத்தால் பொங்கும் வளம் ஓங்கும்
மாதர் குறைதீரும் மங்கலம் வந்தடையும்
பாதம் பணிவோம் மகிழ்ந்து.

நேமங்காளி

வாமணன் தங்கை வரம்பிகந்த பேராற்றல்
நேமநகர்க் காளி நகரத்தார் சேமமுற
வாழ அருளும் வளர்ந்துயர நற்பொருளும்
நாளும் தருவாள் நமக்கு.

கந்தவேள்

கையிலொரு வேலுடன் காத்தருளும் கந்தா உன்
செய்ய திருவடிச் சீர்பாடி உய்ய
எனக்கருள் மெய்யே இனித்துயர் செய்யாய்
உனக்காளாய் ஆனேன் உணர்ந்து.

பைரவர்

அயிலெரித்த அண்ணல் அருங்குமரா அய்யா
வயிரவா வாழ்வளிக்கும் தேவா – உயர்வளிக்கும்
நல்லபணி யாமாற்றி நாற்றிசையும் பேர்சிறக்க
நல்லவரந் தருவாய் நயந்து.

மகாலெட்சுமி

கமலம் அமர்ந்து கவலைகள் தீர்க்கும்
விமலை, வளமருள் தெய்வம் அமர்ந்தென்
தரமுயரக் கண்பார்க்கும் தாய், இருப்பாள் என்றும்
நிரந்தரமாய் நெஞ்சில் நிலைத்து.

பழந்தமிழ் நூல்களில் வழிபாடு

பேராசிரியர் டாக்டர் வெ. சு. அழகப்பன், எம். ஓ. எல்., எம். லிட்., பி.எச்.டி.,
அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவை பண்டைய இலக்கியங்கள் எனப்படும். இவற்றுள், சிலவற்றில் வழிபாடு பற்றிய குறிப்புகள் உண்டு. தொல்காப்பியத்தில் தெய்வ வழிபாடு பற்றிய குறிப்புகள் உண்டு. தெய்வத்தை வணங்கினால், அது குடும்பத்தைக் காக்கும் எனவும், மற்றும் குடிவளர்ந்து செல்வ வளம் சிறக்கும் எனவும் தொல்காப்பியம் பேசுகிறது.

"வழிடு தெய்வம் நின் புறங்காப்ப,
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து,
பொலிமின்! ' – (சூ–415)

என்று சுட்டப் பெறுகிறது. இன்னும் தொல்காப்பியத்தில் "தேவர் பராஅய புறநிலை வாழ்த்தும்", என்றும் "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" – என்றும் குறிக்கப் பெறுகிறது. இங்கெல்லாம் தெய்வம், தேவர் கடவுள் என்ற சொற்கள் காணப்படுதலோடன்றி தெய்வ வணக்கத்தைப் பற்றியும், அது தரும் பலன் பற்றியும் தெரிவிப்பதைப் பார்க்கிறோம். தெய்வத்தை மட்டுமே போற்றிய நூல்களும் தமிழில் உண்டு. முருகன், திருமால் ஆகிய இரு தெய்வங்களைக் குறித்துப் போற்றி செய்யும் பாடல்கள் – பரி பாடலில் பார்க்கலாம். திருமுருகாற்றுப்படை முருகனின் வரலாற்றைச் சொல்வதோடன்றி, அவனை வணங்குகிற முறை பற்றியும், வேண்டுகிற செய்தி பற்றியும் தெரிவிக்கிறது. அகநானூறு போன்ற தொகுப்பு நூல் ஒவ்வொன்றிலும் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பெருந்தேவனார் என்பவர் இயற்றி இருக்கிறார். இந் நூல்களின் வழியாகத் தெய்வ வழிபாடு பற்றி அறிகிறோம்.

பழங்கால ஆரியர்கள், யாகங்களின் மூலமாகத் தெய்வ வணக்கத்தை இயற்றினர். யாகத்தில் பல பொருட்கள் ஆகுதியாக இடப் பெற்றன. இந்த யாகத்தில் உயிர்க் கொலையும் நடந்தன. இவற்றின் எச்சத்தை முருக வழிபாட்டில் இன்றும் காண்கிறோம். பக்திநெறி வழிபாட்டில் உயிர்க் கொலை இல்லை.

முருகன், செந்தமிழ்க் கடவுள் குறிஞ்சி நிலமான மலைப்பகுதிக்கு, முருகன் உரிய தெய்வம் ஆவான். முருக வழிபாட்டில் பக்தர்கள் வழிபடும் போது 'காந்தள்' என்ற கூத்தை இயற்றிப் பூசாரி வழிபடுவான் என்றும், அக்கூத்து 'வெறியாட்டு அயர்ந்த காந்தள்' எனப் பெயர் பெறும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார்.

"வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்" –(சூ. 63)

என்பது சூத்திரம். முருகனுக்குக் குரவைக் கூத்து முதலியன நிகழ்ந்ததாகத் தெரிகிறது. முருகனுக்குப் பூசை செய்கிறவன் வேலன். அவன் வெறியாட்டு எடுத்துக் குறி சொல்லி மக்களின் நல்வாழ்வுக்காக வேண்டுவான்.

முருகனுக்குக் கடப்பமாலை, பனந்தோடு இவற்றைச் சூட்டுவர். வெறி யாட்டு எடுக்கும் இடத்தில் செந்நெல் பொரி சிதறுவார்கள். இறுதியாக,

வழிபாட்டில் ஆட்டை அறுத்துக் குருதியைத் தினையில் பிசைந்து படைப்பர். தெய்வ வழிபாடு என்பதே வீர வழிபாட்டில் இருந்து வந்தது என மானிட நூலார் பகர்வர்.

போர்க்களத்தில் வீரம் காட்டி இறந்துபட்ட ஒருவருக்குப்பீடும், பெயரும் எழுதி, நடுகல் நாட்டுவர். அந்த நடுகல் வழிபாடே, பின்னர் சமய வழி பாடாக மலர்ந்தது. வீரக்கல்லை ஒரு மரத்தின் நிழலில் நல்ல நாளில் நட்டு, நீராட்டி, மலர் சூட்டி, பூ, புகையும் காட்டி, விளக்கும் இட்டு வணங்குவர். சில போது உயிர்ப் பலியும் இட்டு, மதுவைப் படைப்பதும் உண்டு. இந் நடுகல் வழிபாட்டைப் பற்றித் தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள், நீர்ப்படை, நடுதல், விழா எடுத்தல், வாழ்த்துதல்" என்று குறிக்கிறார். இதற்கு அடுத்த நிலை ஆவிகள் பற்றிய கருத்துக்கள்.

பழங்காலத்தில் மன்றங்களிலும், மரங்களிலும், கற்களிலும் தெய்வம் உறைந்ததாக நம்பினர். இது வழிபாட்டின் தொடக்க நிலை. உருவ வழிபாடு சங்க காலத்தில் இருந்தது.

திருமுருகாற்றுப்படையில் முருகனை வழிபட்ட செய்திகளைக் குறித்துச் சிற்சில குறிப்புகள் உண்டு. திருப்பரங்குன்றத்தில் முருகனுக்குப் பெண் ஒருத்தி – துணங்கைக் கூத்து நிகழ்த்தினாள். வேலன் (பூசாரி) குரவைக் கூத்து ஆடினான். குறமகள் ஒருத்தி, முருகனுக்குரிய சேவல் கொடியை நிறுத்தி, நெய்யோடு, வெண் கடுகு அப்பி, வெண்பொரி சிதறி, வெண் அரிசியில் கடாவின் உதிரத்தைக் கலந்து தூவி வணங்கினாள். மஞ்சள் தெளித்துச் சந்தனம் பூசினாள். மாலை சூட்டிப் புகை எடுத்தாள். இவ்வாறு வழிபாடு இயற்றியதாக நக்கீரர் கூறுகிறார்.

பண்டைய காலத்தில் வேத வழிபாட்டு முறைகள் இருந்தன என்பதற்குச் சில சான்றுகள் உள. பூஞ்சாறூர்ப் பார்ப்பான் என்பவன, முக்கண்ணனை வழிபடுவதற்கு வேள்வி செய்து ஆகுதி இட்டான் எனப் புறநானூறு கூறுகிறது (புறம் – 166).

'அமரர்ப் பேணியும், ஆகுதி அருத்தியும்"–என்று பட்டினப்பாலை பேசு கிறது.

பரிபாடலில் சில வழிபாட்டு முறை சொல்லப்படுகிறது. தெய்வத்திற்கு நறும்புகை காட்டல், பூச்சூட்டல், பலியிடுதல், தலை தாழ்த்தி வணங்குதல் போன்ற வழக்கங்கள் சொல்லப் பெற்றுள்ளன. "புகை, பூ, அவியாராதனை, அழல் பல ஏந்தி நகையமர் காதலரை நாளணிக் கூட்டும்" (பரி.6) என்ற வரிகளால் அறியலாம். பரிபாடலில் மற்றுமோர் இடத்தில்,

"நாணா ளுறையு நறுஞ் சாந்துங் கோதையும்
பூத்த புகையு மவியும் புலராமை
மறுஅற்க வான மலிதந்து நீத்தம்
அறுஅற்க" – (பரி. 16)

என்று கூறி வழிபாட்டை இயற்றினார்கள்.

இறைவனை வாழ்த்தி வணங்கும் போதும், தலை தாழ்த்தி வணங்குவ தும், பற்பல போற்றிகள் இயம்புவதும் வழக்கம்.

"நயத்தகு மரபின் வியத்தகு குமர
வாழ்த்தினேம் பரவுதுந் தாழ்த்துத்தலை நினையா" பரி.9)

என்று கூறினன்.

இன்னும் சிலர் முருகனை, பண் சேர்த்து நரம்புக் கருவியில் பாடினர். விளக்கு எடுத்தும், பூச்சிதறியும், அகில், ஆரம் புகை எடுத்தும், தம் சுற்றத் தாருடன் சென்று வணங்கியதாக ஒரு பாடல் கூறும்.

"புரியுறு நரம்பு மியலும் புணர்ந்து
சுருதியும் பூவுஞ் சுடரும் கூடி
எரியுரு ககிலோ டாரமுங் கமழும்
செருவேற் றானைச் செல்வநின் னடியுறை
உரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப்
பிரியா திருக்கவெஞ் சுற்றமோ டுடனே" (பரி.18)

என்பது பாடல்.

இறைவனை இரு கையாலும் தொழுது வணங்குவதைப் பற்றி,

"..............நின் னார்வலர்
தொழுதகை யமைதியி னமர்ந்தோயு நீயே" (பரி.4)

என்பதால் அறியலாம்.

பண்டைய பக்தர்களின் வேண்டுதல், போகப் பொருள்களைப் பற்றி இல்லாமல், தர்மத்தைப் பற்றியதாகவும், உயிர் நல்லுயிராக உயர வேண்டும் என்றும் ஆசை உற்றதை

"..............யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளு மன்பு மறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே" பரி.5)

என்றார் ஒருவர். பின்னொருவர்,

"..............நின்னடி
தலையுற வணங்கினேம் வாழ்த்தினேம்
கடும்பொடுங் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா டறியற்க வெம்மறிவு" (பரி.2)

என வேண்டுகின்றனர். இவை தவிர பண்டைய காலத்தில் கன்னிப் பெண்டிரும், இறை வழிபாட்டில் நாட்டம் காட்டினர். தை மாதத்தில் கன்னிப் பெண்டிர், ஆதிரை நட்சத்திரத்தில் நதிக் கரையில், அம்மனை–சக்தியை வழிபட்ட ஒரு சடங்கே அம்பா ஆடல். இந் நோன்பின் நோக்கம் நல்ல கணவனைப் பெறுவது. நாடு நல்ல மழை பெற வேண்டும் என்பது. இச் சடங்கு குறித்து அந்தணப் பெண்டிர் கன்னியருக்குக் கற்பித்தனர்.

"வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலி னாய்கொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்

ஊதை யூர்தர வுரைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளி ரீரணி புலர்த்தர" (பரி.11)

என்ற அடிகளால் தெரியலாம். இங்ஙனம் பண்டைய இலக்கியங்களில் வழி பாட்டு முறையைப் பற்றி அறிய முடிகின்றது.

★ ★ ★ ★ ★

கடுகளவு பொருளேனும் வீணாய்ப் போனால்
　கலங்கிடுவார் மனம்பதைப்பார் புண்ணியத்தைத்
தொடுகின்ற செயற்கென்றால் கோடி கோடி
　தொகுத்ததெல்லாம் ஒருநொடியில் மனம் கனிந்து
கொடுத்துவிடும் வள்ளன்மை உடையார் அன்பு
　குடிகொண்ட நெஞ்சத்தார் வையமெல்லாம்
தடுத்தாலும் நேர்மைவழி மாறா தேகும்
　தகைமையுடையார் நகரத்தார் என்றும் வாழ்க!

கவிஞர் நாரா. நாச்சியப்பன்

ஐயனார் வழிபாடு

டாக்டர். அ. விசுவநாதன், எம். ஏ., எம். லிட்.பி.எச்டி...
இணைப்பேராசிரியர் தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.

தமிழ்நாட்டுக் கிராமக் காவல் தெய்வங்களுள் ஐயனார் முதலிடம் பெறுகின்றார். பெண் தெய்வங்களுள் மாரியம்மன் சிறப்பிடம் பெறுதல் போல ஆண் தெய்வங்களுள் ஐயனார் சிறப்பிடம் பெறுகின்றார். ஐயனார் கோயில் இல்லாத கிராமமே இல்லை என்பர் ஒயிட்வுட்.

ஐயனார் கோயில் ஏனைக் கோயில் போல ஊரின் நடுவில் இல்லாமல் புறத்தே அமைதல் வழக்கம்.

"புறம்பணையான் வாழ்கோட்டம்" (சிலப்பதிகாரம் 9;12) என்னும் சிலப்பதிகார அடிக்கு உரையெழுதுங்கால் "புறம்பணையான் – மாசாத்தான், புறம்பு அணைந்த இடம் புறம்பணையாயிற்று என்று குறிப்பிடுவர், அடியார்க்குநல்லார்.

நகரத்தார்களால் வணங்கப்படும் குல தெய்வங்களுள் ஐயனார் முதலிடமும் சிறப்பிடமும் பெறுகின்றார். மிகுதியான கோயில் பிரிவினரால் வணங்கப் பெறுபவர் ஐயனாரே.

ஐ. ஐயன். சொற்பொருள்:

ஐயர் என்ற சொல் தொல்லிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" *(1091)*

ஐயர் என்பதற்குத் தலைவர், தமையன்மார் என்பது பொருள். குறிஞ்சிநிலக் கடவுளாக முருகன் விளங்குதலின் முருகனை ஐயன் என்று வணங்கினர்.

"ஐவன வெண்ணெல் அறையுரலுட் பெய்திருவாம்
ஐயனை ஏத்துவாம் போல" *(43:4–5)*

என்ற கலித்தொகையடியில் ஐயன் என்பது முருகனைக் குறிக்கின்றது.

மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல
என் ஐ வாழி பலவே" *(136: 3–4)*

என்ற நற்றிணை அடியில் வரும் 'ஐ' தந்தை, தலைவன் என்ற பொருளில் வழங்கப் பெற்றுள்ளமை அறியத்தகும்.

என்ஐமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்ஐ
முன்னின்று கல்நின் றவர் *(771)*

என்ற குறளில் ஐயன் – தலைவன் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது. ஐ – தலைமை என்னும் பொருளது. அ்தனின்றும் ஐயன், ஐயர், ஐயை முதலிய சொற்கள் தலைமைப் பொருள்பட உருவாயின. அப் போக்கில்தான் காவற் கடவுளும் ஐயனார் என்று அழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

நிகண்டுகளில் ஐயன்/சாத்தன்

ஐயனார் என்று இன்று வழக்கில் உள்ள தெய்வம் பண்டை நாளில் சாத்தன் என்று அழைக்கப் பெற்றது. ஐயனாருக்கு உரிய பெயர்களுள் ஒன்றாகச் 'சாத்தன்' என்ற பெயரும் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ளது.

"கோழிக் கொடியோன் சாத வாகனன்
காரி சாத்தன் – கடல்நிற ஐயன்" (திவாகர நிகண்டு தெய்வ: 9)
"சாத வாகனன் கோழிக் கொடியோன்
சாத்தன், வெள்ளை யானை வாகனன்
– – – – – –ஐயன் பெயரே". (பிங்கலம்: வானவர் 25)
காரியே புறத்தவன் பூங்கடல்
வண்ணன் – – – – – – – – –
ஒருமா சாத்தன் செண்டாயுதன்
வெள்ளை யூர்தி
ஆரியன் அறத்தைத் காப்போன்
அரிகர குமரன் ஐயன். (சூடாமணி: தேவ 28)

இங்ஙனம் சாத்தன்/ஐயனார் என்னும் தெய்வத்தைக் குறிக்க சாத்தன், மாசாத்தன், ஐயன், ஐயனார், அரிகர புத்திரன் முதலான பல பெயர்கள் உள்ளமை நிகண்டுகளால் அறிகின்றோம். கால அடைவில் ஐயனாருக்கு வழங்கும் பெயர்களின் வளர்ச்சி அவருடைய வரலாறு மக்களிடையே பெருகி வளர்ந்தமையைக் காட்டும் என்பர் மு. சண்முகம் பிள்ளை.

ஐயனார் கிராமக் காவல் தெய்வம் என்றும் கோழிக் கொடியுடன் கருங் குதிரை மேல் ஊர்வர் என்றும் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடும் (தொகுதி 1)

சங்க காலத்திய நிலை

சங்ககாலத்தே ஐயனார் என்ற பெயர் வழக்கில்லை சாத்தன் என்றே அழைக்கப்பெற்றார். சாத்து என்ற சொல் வணிகக் குழுவைக் குறிக்கும். சாத்தன் வணிகக் குழுவில் உள்ளவன், வாணிகம் புரிவோன் என்று பொருள் படும். சிலப்பதிகாரத்தில் கோவலனின் தந்தை 'மாசாத்துவான்' என்று குறிக்கப்பெற்றுள்ளான். கோவலன் கண்ணகியை அழைக்கும்போது "பெருங் குடி வாணிகன் பெருமட மகளே" என்று விளிக்கிறான்.

மணிமேகலையின் ஆசிரியர் சாத்தனார். சங்க காலத்தில் சாத்தனார் என்ற பெயரில் பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர். ஆடுதுறை மாசாத்து வனார், ஆலம் பேரி சாத்தனார், அழிசி நச்சாத்தனார், கருவூர்க் கதப் பிள்ளை சாத்தனார் போன்ற பெயர்களைச் சுட்டலாம். அரசர்களுக்கும் இப் பெயர் வழங்கப் பெற்றுள்ளது. பாண்டியன் கீரன் சாத்தன் கருவூர்ச் சேர மான் சாத்தன். ஒல்லையூர் கிழான் மகன் சாத்தன் என்ற பெயர்கள் சான்றா கும். "இப் பெயர்களை ஆராய்ந்தால், பெருஞ்சாத்தான் பேரிசாத்தான் என்ற பெயர்களின் மறு உருவமே தற்போது வழங்கும் மகாசாஸ்தா என்ற பெயர் எனத் தெரிகிறது" என்று பி.எல். சாமி குறிப்பிடுவர். (தமிழிலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு : ப.2).

சோழநாட்டுப் பிடவூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாடுங்கால்

சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை உறந்தைக் குணாது
இருங்கோ வேண்மான் அருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிடையேம் பெரும

(புறநானூறு : 395 : 1821)

என்று போற்றுவர். இப் பகுதிக்குக் குறிப்புரை எழுதுங்கால் உ.வே.சா. அவர்கள்,

"பிடவூர் என்பது சோழ நாட்டில் உள்ள தொரு
வைப்புத்தலம். அதில் மாசாத்தனார் கோயில் ஒன்று
உண்டு. அவர் பெயரே இப் பாட்டுடைத் தலைவனுக்கு
அமைந்துள்ளது போலும்"

(புறநானூறு : 395)

என்று குறிப்பிட்டுள்ளார். பிடவூரில் மாசாத்தனார் உலகறிந்த தெய்வமாக விளங்கியதைச் சேக்கிழார் சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் (பா.52) குறித்துள்ளமை அறியத்தகும்.

சாத்தன் இந்துக் கடவுளா?

சங்க காலத்தில் சிறப்புடன் வழங்கிய பெயர் சாத்தன் என்பது நன்கு புலப்படும். "சாத்தன் அல்லது சாத்தனார் என்னும் பெயர், சாஸ்தா என்னும் வடமொழிப் பெயரின் திரிவு. சாஸ்தா என்பது புத்தருக்குரிய பெயர் களுள் ஒன்று என்பது 'அமர கோசம்', 'நாமலிங்கானு சாசனம்' முதலிய வடமொழி நிகண்டுகளால் அறியப்படும். கடைச் சங்க காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த பௌத்தர்கள் சாத்தன் என்னும் பெயரைப் பெரும்பாலும் மேற்கொண்டிருந்தனர் என்பது சங்கநூல்களின்றும் தெரிகின்றது" என்று மயிலை. சீனி வேங்கட சாமி கருத்துரைப்பர் – பௌத்தமும் தமிழும் ப. 174)

சிலப்பதிகாரத்தில் சாத்தன் வரலாறு, கனாத்திறம் உரைத்த காதையில் விரி வாகப் பேசப் பெறுகின்றது. வரந்தரு காதையில் சில செய்திகள் இடம் பெற்றுள்ளன. "புறம் பணையான்", "பாசண்ட சாத்தன்" இரண்டும் இருவேறு தெய்வங்கள் என்று கருதுவர் மு. சண்முகம்பிள்ளை.

"புறம்பணையானாகிய மாசாத்தான் கோயிலையடுத்து, அருகர் கோயிலான நிகந்தக் கோட்டம் சொல்லப்பட்டுள் ளது. அருகதேவரின் அறங்காக்கும் காவல் தெய்வமாகச் சாத்தனார் சொல்லப்படுகிறார். எனவே, அவன் முற்படச் சென்ற மாசாத்தன் அருக சமயத்தார் வழிபட்ட தெய்வமா தல் வேண்டும்"

'பின்னர், மாலதி வரம் வேண்டிக், கிடந்த கோயிலாகிய பாசண்டச் சாத்தன் கோயில் பிற சமயத்தார் வைதிக சமயத்தார் வழிபட்ட சாத்தன் கோயிலாதல் வேண்டும். பாசண்டன் என்றால், புறச் சமயத்தான் என்றும், பாசண்டி

மூடம் என்றால், புறச் சமயத்தினரைப் போற்றும் மடமை என்றும் சமணர்கள் கொள் வார்கள். ஆகவே பாசண்டச் சாத்தன் சமண சமயத்தாரல்லாத பிற சமயத் தார் வழிபட்ட தெய்வமாதல் வேண்டும்" (தமிழாய்வு : ப.56)

சாத்தனே/ஐயனார் ஆனமை

சங்க காலத்தில் சிறப்பாக வழங்கப் பெற்ற தெய்வம் சாத்தன். இவரே பிற்காலத்தில் ஐயனார் என்று அழைக்கப்படலானார்.

"பாசண்ட சாத்தற்குப் பாடு கிடந்தாளுக்கு"

என்ற சிலப்பதிகார அடிகளுக்கு உரை எழுதுங்கால் கோயிலே "சாத்தன் என்கிற ஐயன் கோயிலிலே" என்று குறிப்பிட்டுள்ளார். ஐயன் என்ற சொல் இன்றும் வழக்கில் உள்ளது. 'ஐயன் காவு' என்ற சொல் கேரளாவில் இன்றும் பெரு வழக்கினது. ஐயனார் கோயிலை ஐயன் கோயில் என்று கிராம மக்கள் இன்றும் அழைக்கின்றனர். ஐயன்/தலைவன், ஆர் விகுதி சேர்ந்து ஐயனார் என்று வழங்கப்படுகிறது. சங்க காலத்தில் பெரு வழக்கிலிருந்த சாத்தன் என்ற பெயர் அருகி வருகின்றது. இருப்பினும் மக்களிடையே இன்றும் அப் பெயர் வழக்கில் உள்ளது. மேலும் சாத்தன்தான் ஐயனார் ஆனார் என்பது இன்றும் வழக்கில் உள்ள பெயர்களால் அறியலாம். சாத்தையன், சாத்தப்பன், சாத்தையனார் போன்ற பெயர்களைச் சான்றாகச் சுட்டலாம். 'சாத்தான் கோயில்' என்று ஊருக்குப் பெயர் அமைந்திருத்தல் தக்க சான்றா கும். கொரட்டி, சாத்தன்குடி போன்ற ஊர்களில் உள்ள தெய்வத்தைச் சாத்தையனார் என்றும் ஆத்தங்குடியில் உள்ள ஐயனாரை மகாசாத்தையனார் என்றும் நகரத்தார்கள் அழைத்து வணங்கி வருகின்றனர் சாத்தன்தான் ஐயன் ஆனார் என்பது, மேலை வழக்குகளினால் தெளிவாகின்றது. சாத்தன் பௌத்தக் கடவுளாக மட்டுமன்றிச் சமணக் கடவுளாகவும் வணங்கப் பெற்ற தையும், பின்னர் இந்துக்கள் தம் கடவுளாக ஏற்றுக் கொண்டதையும் மயிலை சீனி வேங்கடசாமி மொழிகுவர்.

"ஐயனார், சாஸ்தா, அரிகரபுத்திரன் எனும் பெயர்களையுடைய தெய்வம் ஊர்த்தெய்வமாக இப்போது இந்துக்களால் வணங்கப்படுகின்றது. இந்தத் தெய்வம் பௌத்தம் சமணம் எனும் இரு சமயங்களிலிருந்து இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ----------------பௌத்த ஐயனாருக்கும் சமண ஐயனாருக்கும் உள்ள வேற்றுமை யாதெனில், பௌத்த ஐயனாருக்கு வாகனம் குதிரை; சமண ஐயனாருக்கு வாகனம் யானை என்பதே. சைவக் கோயில் களில் பிள்ளையார் அல்லது முருகன் எவ்வாறு போற்றப்படுகின்றனரோ அவ்வாறே சமணக் கோயில்களில் ஐயனார் எனப்படும் பிரம்மயட்சன் தனிக்கோயிலும் பூசை சிறப்பும் பெற்று இன்றும் விளங்குகின்றார்" (சமணமும் தமிழும் : பக்கம் 93-94).

சாத்தன் பௌத்தக் கடவுள்

சாத்தனார் பௌத்தக் கடவுள் என்னும் கருத்து சங்கப் பெயர்களால் உறுதியாகின்றது. மேலும் பௌத்த மதக் கொள்கைளில் அடிப்படையானது உயிர்க்கொலை புரியாமை ஆகும். இன்றும் ஐயனார் கோயில்களில் சிறப்புப் பூசை நடைபெறும் காலங்களில் ஆடு, கோழி முதலியன பலியிடப் பெறும். ஆனால் ஐயனார் சந்நிதியில் இவற்றைப் பலி கொடுக்கமாட்டார்கள். ஐயனார் கோயில்களில் பரிவாரத் தெய்வங்களாக வழிபடப் பெறுகின்ற

கறுப்பர், வீரன் முதலிய இறைச்சந்நிதிகளில் பலி நடக்குமே தவிர, ஐயனார் முன்னிலையில் நடைபெறாது மேலும் பலி நடைபெறும் சமயங்களில் பூசாரி கள் ஐயனார் கோயிலில் பூசை செய்து திருக்கதவுக்குத் தாழிட்டுப் பூட்டி விடுவர். ஆதலின் ஐயனாரை இந்துக்கள் கடவுளாக ஏற்றுக் கொண்டாலும் உயிர்க்கொலை ஐயனார் முன் செய்வதைத் தவிர்த்து விடுகின்றனர். ஐயனார் பௌத்தக் கடவுளாகப் பண்டு விளங்கியமையை இஃது உறுதி செய்கின்றது.

சாத்தன் செல்வாக்கு

இந்து சமயத்தாரால் சாத்தன் வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்ட பின்னர், சாத்தனைச் சிவபெருமானின் மகனாகச் சொல்லுகின்ற வரலாறு தமிழ் நாட்டில் பரவிற்று. திருநாவுக்கரசர் தாம் பாடிய திருப் பயற்றூர்த் திருப்பதிகத்தில், சாத்தனைச் சிவபெருமானின் மகன் என்றே குறிப் பிடுகின்றார்

பார்த்தனுக்கருளும் வைத்தார் பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார் திருப்பயற் றுஊர னாரே

(தேவாரம்: 4 :32 :5)

ஐயனார் பிறப்பு வரலாறுகள்

சாத்தன் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற நிலையில், சாத்தனின் அவதாரக் கதையும் மக்களிடம் பல்வேறு வகைகளில் பரவலாயிற்று.

"இவர் அரிகரபுத்திரர் சாத்தா என்றும் அழைக்கப்பெறுவர்,
தாருகாவனத்து இருடிகளின் ஆணவமாதி
இறுமாப்புக்களை அடக்குவதற்கு அரியும் அரனும்
எழுந்தருளிய காலத்து, மோகினியாக நின்ற
மகாவிஷ்ணுவின் பால் அரனுக்கு மகனாகத்
தோன்றியவர். கிராமத்தைப் பாதுகாக்க ஊரின்
வடபால் கோயில் கொண்டருளுபவர். மழை
வேண்டுபவர் இவரை உபாசித்தலும் உண்டு"
என்று தமிழ்க் கலைக் களஞ்சியம் (தொகுதி 2 : பக்கம் 632)
ஐயனார் தோற்றம் பற்றிச் சுருங்க உரைக்கும்.

கந்த புராணத்தில் இரண்டாவதான அசுர காண்டத்தில் 32 ஆம் படலம் "மகா சாத்தப்படலம்", இப் படலத்தில் ஐயனாரின் அவதார நிகழ்ச்சிகள் விரிவாகப் பேசப்படுகின்றன. திருமால் மோகினி வடிவங் கொண்டபொழுது சிவபெருமான் அவளைச்சார்ந்த நிலையில் ஐயனார் தோன்றினார். ஐயனாரை உருவாக்கிய சிவபெருமான் அவருக்குப் பெயர்சூட்டி, உருத்திரரோடு ஒக்க வைத்து, உலகைக் காக்கும் தொழிலை அவருக்குத் தந்தார்.

"அங்கண் மேனி அரிகர புத்திரன்
சங்கை யில்பெருஞ் சாரதர் தம்மொடு
எங்கு மாகி யிருந்தெவ் வுலகையும்
கங்குலும் பகலும் எல்லையுங் காப்பனால்"

(கந்தபுராணம் : மகாசாத்தப்பன் 54)

அவ்வாறே ஐயனார்காவல் தொழில் புரிந்து வரலானார்.

காஞ்சிப் புராணத்திலும் 'மாசாத்தன் தனிப்படலம்' எனப் படலம் உள்ளது. கந்த புராணத்தை அடியொற்றிச் சாத்தனின் அவதாரம் பேசப் படுகின்றது. சாத்தனார் சிவபெருமானை அருச்சித்து வழிபட்டனர் என்றும் இறைவன் பூதகணத் தலைமை நல்கின ரென்றும், பின்னர், சாத்தனார் காமாட்சி அம்மை மனம் மகிழும் வண்ணம் பிலத்திலேயே தங்கிவிட்டனர் என்றும் காஞ்சிப் புராணம் குறிக்கின்றது.

'பல்கரி வீரர் தேர் பரிகள் தம்முடன்
நல்கிய தலைமைபெற் றனைய சாத்தனும்
ஒல்கிடை மலைமகள் உவகை மீக்கொள
மல்குசீர் பிலத்தயல் மகிழ்ந்து வைகினான்'
(காஞ்சிப் புராணம்)

சங்க நூல்களிலோ, சங்கம் தழுவிய நூல்களிலோ காணப்படாத இவ்வ வதாரச் செய்திகள் பின்னால் புனையப்பட்டன என்பது வெளிப்படை.

ஐயனார் பிறந்த நாள்

ஐயனார், மாசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரியன்று பிறந்ததாகக் கூறுவர் அதனாற்றான் ஐயனார் கோவில்களில் சிறப்பு வழி பாடுகள் சிவராத்திரியன்று நடைபெறுகின்றன.

ஐயனார் தன் பரிவாரங்களுடன் இரவில் குதிரைமீதமர்ந்து ஊரைக் காத்து வருவதாக மக்கள் நம்புகின்றனர். மதுரை வீரனும் பாவாடைராயனும் ஐயனாரின் படைத்தளபதிகள் ஆவர். குட்டிச் சாத்தான், சாத்தான், கறுப்பன், முண்டன், குளிகன் முதலிய பூதங்கள் ஐயனாரின் பணியாட்கள் ஆவார்.

"A third figure from Rameswaram represents him as riding on a horse--------------------and Madurai Veeran and Pavadirayan, his generals" (South Indian Images of Gods and Goddesses. Page.230)

ஐயனார் உருவ அமைப்பு

ஐயனாருடைய உருவ அமைப்பு பல நிலைகளில் காணப்படுகின்றது. பொதுவாக ஐயனார் அமர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றார். ஒருமுக மும் இரண்டு கைகளும் உள்ளன. சடையில் சந்திரன் உள்ளது. மார்பில் பூணூல், வலது கையில் செண்டைப் பிடித்திருப்பர். வலது கால் கீழே தொங் கிய நிலையில் இருக்கும். இடதுகால் மடிந்து குறுக்காக இருக்கும், இடது முழங்கால் மேல் இடதுகை நீட்டப்பட்டிருக்கும். இவர் கரிய மேனியும் சிவந்த சடையும் உக்கிர குணமும் உடையவர்.

ஐயனார் மூலத்தானத் தெய்வம்

ஐயனார் கோயில்களில் ஐயனார்தான் மூலத்தானத்தில் இருப்பர். வீரன், கறுப்பன், மாடன் முதலியோர் பரிவாரத் தெய்வங்களாக விளங்குவர். யாண்டும் பிற கோயில்களில் ஐயனார் பரிவாரத் தெய்வமாக அமைந்திலர். சிவன் கோயில்களில் ஐயனார் சந்நிதி அமைதல் அரிது. மேலும் காவல் தெய்வமாகக் கருதப்படுதலின், ஊரின் புறத்தேதான் ஐயனார் கோயில் அமைந்திருக்கும் அவருக்குப் பரிவாரத் தேவதைகள். இருப்பரே ஒழிய அவர் பரிவாரத் தெய்வமாக அமைவதில்லை.

ஐயனார் கோயிற் பூசை செய்வோர்

ஐயனார் கோயில்களில் பெரும்பாலும் பார்ப்பனரல்லாத ஏனைய சாதியினரே கோயில் பூசாரிகளாகப் பணிபுரிவர். ஒருசில கோயில்களில் பிராம்மணர்கள் பணிபுரிதலும் உண்டு.

"It may be stated generally that no Brahmins are the preiests of village deities, but the pusaris are drawn from all other castes indiscriminately while an important part in the worship especially that connected with the buffalo sacrifices, is even taken by out castes. (Village Gods of South India P.P. 19 & 20)

ஐயனார் சந்நிதிகளில் பலியிடுதல் நடைபெறாது எனினும் ஏனைப் பரிவார தெய்வங்களின் சந்நிதிகளில் பலியிடுதல் நடைபெறும். அதனாற்றான் பிராமணர்கள் பூசாரிகளாகப் பணிபுரிவதில்லை. வேளாளர்களோ, உவச்சர் களோ, ஊரினர்களோ பூசாரிகளாகப் பணிபுரிதல் இயல்பாகின்றது.

இங்ஙனம் கிராம தெய்வங்களுள் ஒருவராக விளங்கும் ஐயனார் பிற் காலத்தில் குல தெய்வமாகவும் வணங்கப் பெறுகின்றார். நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் பெரும்பாலோர்க்கு ஐயனார் குல தெய்வமாக விளங்கு கின்றார். நகரத்தார்களால் வணங்கப் பெறும் ஐயனார் கோயில்கள் பற்றி இனிக் காண்போம்.

நகரத்தார்களில் ஐயனாரை வழிபடுவோர் விவரம் (முழுமையானதல்ல)

நகரத்தார்களுள் மிகுதியானவர்கள் ஐயனாரைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டுவருகின்றனர். குல தெய்வ வழிபாட்டிற்கும் நகரத்தார் ஒன்பது கோயில் பிரிவுக்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது. ஒரே கோயிற் பிரிவினர் வெவ்வேறு தெய்வங்களைக் குல தெய்வங்களாகக் கொண்டுள்ளனர்.

குல தெய்வம் உள்ள ஊர்	சுவாமி பெயர்	வழிபடும் பிரிவினர்
1. அம்மா பட்டி	அய்யனார்	நேமம்
2. அரிமளம்	செல்ல ஐயனார்/ கோட்டைக் கரை ஐயனார்	இரணிக்கோயில் பிள்ளையார்பட்டி
3. அரண்மனை – சிறுவயல்	களத்தி ஐயனார்	மாத்தூர்–கருப்பூர்
4. இலங்குடி	பகற்சால மூர்த்தி ஐயனார்	இலுப்பக்குடி– பிள்ளையார்பட்டி பைரவன் கோயில் மாத்தூர்–குளத்தூர்– இளையாத்தக்குடி.
5. கண்ணங்காரன்குடி	சாத்தையர்	இலுப்பக்குடி, இளையாத்தக்குடி – பட்டினசாமி
6. கருவேலங்குறிச்சி	சேவுகப் பெருமாள் ஐயனார்	மாத்தூர் அரும்பாக்கூர்
7. காடனேரி	கருமுகில் ஐயனார்	நேமம்
8. கீழக்கோட்டை	ஐயனார்	இலுப்பக்குடி, மாத்தூர், மணலூர், வைரவன் கோயில், மாத்தூர் – அரும் பாக்கூர்.
9. கீழக் கொரட்டி	ஐயனார்	இளையாத்தக்குடி, ஒக்கூருடையார்
10. சாத்தன்குடி	சாத்த ஐயனார்	வைரவன் கோயில்
11. சிறுகூடல்பட்டி	மக்கமடை அய்யனார்	மாத்தூர்–கண்ணூர், வைரவன் கோயில்

உ

நலம்பெறவே துதிப்போம்

பண்டித மு. முத்து வேங்கடாசலம்

பயன்கொண்ட தாரு
வளர்ந்தோங்கு பொதியப்
பசுந்தமிழ்தேர் சங்கம்
அமர்பாண்டி நாட்டில்
நயங்கொண்ட தேனாறு
அருகுபாய் தலமாம்
நலநேம நகராள்
அனைஎம் பிராட்டி
இயங்கொண்ட கோயில்
இருந்தாணை புரியும்
எழில்தவழு மேனிச்
சவுந்தரநா யகியாள்
செயங்கொண்ட சோழீச
ராமெம் பிரான்தம்
சிலம்பணிந்த பாதம்
நலம்பெறவே துதிப்போம்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

தேவி மாஹாத்ம்யம்

அர்க்களத் தோத்திரம்

(தமிழாக்கம்)

பண்டித. மு. முத்து வேங்கடாசலம்

சயந்திமங்க ளைகாளி பத்திர காளி
துயரறுக பாலினி துர்க்கை -உயர்வாம்
சுமைசிவை தாத்ரி,ஸ்வ தாஸ்வாஹா என்றே
அமைந்தோய் வணக்கம் அடிக்கு. (1)

மதுகை டபரை வதைத்தவளே நின்று
துதிசெய்அய னுக்குவரம் தோன்றி உதவுநினை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்!
ஈண்டு பகை கெடுக்க! இன்று. (2)

மாவித்தை மாமாயை மாமேதை என்றயனும்
சேவிக்கநீ மகிடற் செற்றொழித்தாய் -தேவி!உனை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்!
ஈண்டு பகைகெடுக்க இன்று! (3)

தாரணி போற்றுமிரு தாருடையாய்! மாதேவி
கோரும்ஸௌ பாக்யங் கொடுப்பவளே! -வீரி!உனை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி, புகழ் நல்கியருள்!
ஈண்டு பகைகெடுக்க! இன்று. (4)

சண்டனையு முண்டனையுங் கத்தியாற் சாய்த்துப்பின்
சண்டிகையே ரத்தபீ சற்கொன்றாய் - அண்டிநினை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (5)

எண்ணரிய பல்வடிவ முஞ்சரித மும்ஏய்ந்தோய்!
நண்ணும் பகையெலாம் நாசஞ்செய் - சண்டி!நினை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (6)

பக்திச் சுவைசொட்டப் பாடித் துதிப்பவரின்
மொய்த்தநோய் தீர்த்தருளு முக்கண்ணி -நத்தியுனை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (7)

புலர்ந்தவுடன் பூக்கொண்டு பொன்னடியைப் போற்றி
வலம்வந்து தேவி! வணங்கும் -நலத்தினர்க்கு
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (8)
மங்களங்கள் தந்திடுவாய் மாதேவி! மட்டற்ற
பொங்கு செல்வம் ஈவாய்புவனேசி -சங்கரியே!
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (9)

மக்களெலாம் கல்விமணம் வான்புகழ்நற் செல்வமணம்
இக்குவல யத்தில் இனிதுபெற - இக்கணஞ்செய்!
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்!
ஈண்டு பகைகெடுக்க இன்று. (10)

செங்கண் திருமுகத்துச் செல்வன் கிருட்டிணனாம்
துங்கமணி நித்தம் துதிசெய்த - மங்கலையே!
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (11)

தேவா சுரர்முடியிற் சேர்மணிஉ ராய்ந்திடு, பூ
மேவும் அடிசேர் விமலையே - தேவி!நினை
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (12)

ஆனந்த வெள்ளத் தழுந்தியன்பர் தாம்அகண்ட
மான,சித் தாகஅருள் அன்னையே - ஈண்டுனையே
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (13)

அன்புடையாள் என்மனத்திற் கேற்பச் செயல்புரிவாள்
மன்னுங் குலச்சிறப்பில் வந்துதித்தாள் - வன்பிறவி
நீரா'ழி நீந்த உதவிபுரி நேரிழையைச்
சீராம்வாழ்க் கைத்துணையாச் செய். (14)

பூநாறு செவ்வாய்ப் புதல்வரைத் தந்தருளாய்
ஆனாத செல்வம் அருங்காமல் - நீநல்காய்
வேண்டினேன் நல்லுருவம் வென்றி,புகழ் நல்கியருள்
ஈண்டு பகைகெடுக்க இன்று. (15)

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

சிந்தை மகிழும் சிவபுராணம்

பேராசிரியர் இராம. சிவசுப்பிரமணியன் M.A., M.Phil., B.T. C.G.T.,
தமிழ்த்துறை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை.

திருவாதவூரடிகள் அருளிச் செய்த திருவாசகத்துள் முதலாவது சிவபுராணம். இது சிவபெருமை கூறும் புராணம். திருப்பெருந்துறையில் அருளிச்செய்தது. சிந்தையை உருக்கிச் செவியைக் குளிர்விப்பது. சிவநேசச் செல்வர்களால் நாளும் ஓதி மகிழுதற்குரியது. தொண்ணூற்றைந்து அடிகளான் இயன்றது. முதலைந்து அடிகள் அவன் திருவடி வாழ்த்து. அடுத்த ஐந்து அடிகள் அவன் கழல்களின் வெற்றி முழக்கம். அடுத்தும் ஐந்தடிகள் மறுபடியும் அவன் திருவடி வாழ்த்தாய் அமைவது. ஆரா இன்பம் தரும் அப்பெருமான் மணிவாசகர் சிந்தையுள் நின்ற சிறப்பால், "அவனருளால், அவன் தாளை வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பேன்" என்று சிவபுராணத்தைத் தொடங்குகின்றார். சிந்தை மகிழும் சிவபுராணம் தன்னைச் சிந்தித்து மகிழ்வதே இச்சின்னஞ் சிறிய கட்டுரையின் நோக்கம்.

வீட்டின்பம் கண்டு மகிழ்ந்த மணிவாசகப் பெருந்தகை அவன் புகழை வாய் மணக்கச் சொல்லிச்சொல்லி மகிழ்கின்றார். கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தால் எத்துணைத் தித்திக்கும். அத்துணையளவு அவன் பெருமை கூறும் அடியவர் உள்ளத்துள் தேன் போலத் தித்திக்கின்றானாம். ஆம் அடியவர் தம் உள்ளத்துள் நினைந்து நினைந்து இன்புறும் ஆண்டவன் இனிமைக்கு இதனினும் வேறு உவமை வேண்டுமோ?

மீண்டும் இந்த மானிட உடம்பின் இழிதகைமையைச் சுட்டிக் காட்டுகின்றார். ஆண்டவனோடு இரண்டறக் கலந்து கசிந்து உள்உருகும் நாயினும் கடையனாகிய நலமிலாச் சிறியன் என்று தன் இழிதகைமையைக் கூறுகின்றார். அத்தகையோனாகிய தனக்கு இந்நிலத்தின்மேல் எளிவந்தருளித் தனது புகழ்மிக்க நீண்ட கழல்களைக் காட்டித் தாயினும் சிறந்த தயாவான தத்துவனாய் அருளுகின்றான் என்று கூறி அவன் பெருமையைப் பின்னும் பாடுகின்றார். "மாசற்ற சோதி! மலர்ந்த மலர்ச் சுடரே!" என்று தொடங்கி, "என் சிந்தையுள் ஊற்றான உண்ணாரமுதே! உடையானே!" என்று முடியுங்காறும் அவன் புகழே பாடிப் பரவுகின்றார். வெவ்வேறு பிறவிகள் எடுத்தது போதும், இனிப் பிறவிகள் வேண்டாம்; இனியும் பிறவி பெறின் ஆற்றேன்; வீட்டின்பமே பெற விருப்பம் என்று தனது வேணவாவைக் கூறிச் சிவபுராணத்தை முடிக்க முயல்கின்றார்.

"நமச்சிவாய வாழ்க !" என்று தொடங்கி, "தில்லையுட் கூத்தன், தென் பாண்டி நாட்டான், அல்லற் பிறவி அறுப்பான்" என்று இப்புராணம் முழுவதையும் முடித்துக் கண்ணீர் மல்கக் கசிந்து உள்ளுருகிச் சொல்லும் அடியவர் சொல்லியபாட்டின் பொருள் உணர்பவர், பொருள் உணர்ந்து அப்புராணம் மீளப் பாடுபவர் சிவபுரமாம் கயிலாயம் செல்வர். சிவனடியைச் சார்ந்துள்ள சிவபுரத்தார் எல்லாரும் இவ்வடியார்களைப் பணிந்தேத்தச் சிவனடிக்கீழ் எஞ்ஞான்றும் நீங்காது இருப்பர் என்பதே சிவபுராணத்தின் சிறப்பாகும்.

பிறவி மறுப்பு, ஆண்டவன் புகழ்ச்சி, வீடு பேற்று விழைவு இவையே சிவபுராணத்தின் உட்கோள். எனவே, சிவபுராணம் பாடுகின்றவர்க்கும், அப் புராணத்தின் உட்பொருளை உணர்கின்றவர்க்கும் சக்தி என்றும் உண்டு என்பது வெளிப்படை. ஆதலின், அப்புராணம் நாளும் ஓதிச் சிந்தை மகிழ்வோமாக.

அனைத்துமாய் நின்ற ஆதிபராசக்தி

ராஜகுமாரி நாகப்பன் B. Sc., காரைக்குடி

பராசக்தி அகில உலகங்களுக்கெல்லாம் தாய். அனைத்து உயிரும் ஆகி நிற்கிறாள். அவளது வியாபகம் சொல்லில் அடங்காவே! அவ்வம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். இது அருமறைகள் நான்கும் அளித்த தீர்ப்பு. எல்லா உலகங்களையும் படைத்துக், காத்து, அழித்து அருள் செய்கின்றாள்–அந்தத் தாய். இவ்வாறு பஞ்சகிருத்தியங்களையும் செய்கின்ற ஜகன் மாதாவின் வலிமையையும், சிறப்பையும் ஒரு காலத்தில் தேவர்கள் மறந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தாமே சிறந்தவர் என்னும் அகங்கார எண்ணத்துடன் திரிந்தனர். அவர்களுக்கு மெய்யறிவு ஊட்ட விரும்பினாள் – அன்னை பராசக்தி.

இவ்வாறு திருவுள்ளங் கொண்ட அன்னை–ஒரு யக்ஷ வடிவில் இந்திரன் முதலிய தேவர்களின் முன்னிலையில் காட்சியளித்தாள். இந்திரன் அந்த யக்ஷ வடிவைக் கண்டு அதிசயித்து, அவரைச் சோதித்து வருமாறு அக்னி தேவனை அனுப்பினான். அக்னிதேவனும் சென்று, அந்த யக்ஷனால் இடப் பட்ட ஒரு சிறு துரும்பை எரிக்கமாட்டாமல் தோற்று, அவமானத்துடன் திரும்பினான். இதைக் கண்ட வாயுதேவன், தனது வலிமையைக் காட்டு வதற்குத் தக்க சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணி, மிக வேகமாக அந்த யக்ஷனிடம் சென்றான். ஆனால் வாயு தேவனால் அவன் நிலத்தில் போட்டி ருந்த சிறு துரும்பை அசைக்கக் கூட முடியவில்லை. வாயுதேவனும் வெட்க மடைந்து திரும்பிவிட்டான். பின்பு வருணன் யக்ஷனிடம் சென்றான். யக்ஷன் அங்கு ஒரு சிறிய மண் கட்டியைத் தரையில் வைத்தான். ஆனால் வருண னால் அந்தச் சிறிய மண் கட்டியைக் கரைக்க முடியவில்லை. இதனால் வருணனும் தலைகுனிவுடன் திரும்பினான்.

அக்னிதேவனும், வாயு தேவனும், வருணபகவானும் தோல்வியுற்றதைக் கண்ட இந்திரன் வியப்பும், சினமும் கொண்டு, தேவியாகிய அந்த யக்ஷனிடம் வந்து, அவ்வுருவை உற்றுப் பார்த்தான். அவ்வளவில் அந்த யக்ஷ உருவம் மறைந்துவிட்டது. இந்திரன் மிகுந்த அச்சத்துடன் வேத மாதாவைத் துதிக்க லானான். அவனுடைய கர்வம் அடங்கியது. இந்திரன் ஓதிய வேத மந்திரத்தைக் கேட்டு மனமகிழ்ச்சி அடைந்த அம்பிகை, அசரீரியாக "இந்திரனே, அஞ்சாதே! எந்தச் சக்தியினால் எல்லா உயிர்களும் இயங்கு கின்றனவோ, எந்தச் சக்தி இச்சை, கிரியை, ஞானம் என்ற வடிவத்துடன் உலகில் காணப்படுகின்றதோ, அந்தச் சக்தியாகிய அன்னைதான் சர்வ சக்தி களுக்கும் காரணம். தனிப்பட்ட எவருக்கும் பெருமை இல்லை. தனிப்பட்ட ஒருவரது சக்தியினால் பயன் உண்டாகாது. நீ கண்ட யக்ஷ உருவம் எமது உருவமேயாகும்" என்று கூறி அருளினார். அசரீரியின் உரையைக் கேட்ட இந்திரன் உண்மையை உணர்ந்தான்.

"அன்னையே, இந்த உலகப் படைப்பு உமக்கு விளையாட்டு; நீ வசிக்கும் இடமோ அடியேனது இதயக் குடிலை" என்று சொல்லித் துதித்தார். அத் தகைய தேவியின் அருளைப் பெற நமது இல்லத்தையே ஓர் ஆலயமாக்கி – அதில் தேவியை நிரந்தரமாக தங்க வைக்க வேண்டும். இதில் ஆடவர்களைக் காட்டிலும் பெண்களுக்குத்தான் அதிகப் பங்கு உண்டு. ஏனெனில் சமய

வழிபாட்டோடு – பெண்கள் பல விரதங்கள் இருந்து தெய்வ வழிபாட்டையும் மிகவும் சிரத்தையுடன் செய்வர். இல்லத்தரசிகளாகிய நாம்–நம் இல்லத்தையே ஓர் ஆலயமாக எண்ணி அதனை அகமும் புறமும் தூய்மையாக வைத்துக் கொண்டால், அதில் தேவியின் சாந்நித்யம் நிரந்தரமாக ஏற்படும். இல்லத்தை எப்பொழுதும் மங்களமாயும், பரிசுத்தமாகவும் வைத்துக் கொண்டு திருமெழுகிடுதல், கோலமிடுதல், காலை மாலை திருவிளக் கேற்றுதல், வேத ஒலியும், கீத ஒலியும் ஒலிக்கச் செய்தல் – இவைகளால் நமது இல்லம் நிரந்தரமாகத் தெய்வ சாந்தியத்துடன் திகழும்படிச் செய்ய வேண்டியது மிக்க அவசியம்.

நமது இல்லத்தில் உள்ள கிணறும் தீர்த்த மாதாவின் அம்சம். எனவே தினந்தோறும் ஸ்நானஞ் செய்யும்போது, பராசக்தியின் அம்சமான இத் தீர்த்தம் நமது உள்ளும், புறமும் சுத்தி செய்து நம்மை தூய்மையானவர்களாக ஆக்கட்டும் என்று பிரார்த்தித்துப் பிறகு ஸ்நானஞ் செய்தால் நல்ல பலனைத்தரும். "கங்கேச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி நர்மதா ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதம் குரு" என்னும் ஸ்லோகத்தைக் கூறி கிணற்று நீரிலோ அல்லது குழாய் மற்றும் நீராடத்தக்க நீர்நிலைகளிலோ ஸ்நானஞ் செய்து தேவியின் க்ருபையை அடைவோமாக!!

"அன்னை அன்னை என்றால் போதும்
அவளே வருவாள் பாலூட்ட
என்னை உன்னை ஏந்தி எடுப்பாள்
இன்பத் தமிழில் தாலாட்ட
மன்னும் கங்கைக் காசிக் கரையில்
மலர்ந்தது மாதா அரசாட்சி
பின்னும் என்ன உலகம் முழுதும்
பெறும்பேர் சக்தி விசாலாட்சி"

– கவியரசு கண்ணதாசன் –

திரு மகள் மாலை

சிவநெறிக் கவிஞர் இராகவன் முத்து,
13 /14 கொட்டமடக்கியார் தெரு, காரைக்குடி —1.

காப்பு

செல்வத் திருமகள்மேல் செய்யும் தமிழ்மாலை
கல்லில் எழுதிவளர் காவியமாய்த் — தொல்லுலகில்
என்றும் விளைந்துவர ஈசன் தலைமகனே!
நின்றிடுவாய் நெஞ்சில் நிலைத்து.

1. ஆதிலட்சுமி

உன்னைத் தொழுதேன் உயிர்க்குப் புகலுதவும்
பொன்னே முதல்திருவே பூவளரும் — அன்னே!
எனதுள்ளம் என்றும் இனிப்பே அடையக்
கனிவுனது கண்மலரால் காட்டு.

2. சந்தானலட்சுமி

காட்டும் திருக்கரத்தால் கந்தன் என அழகு
கூட்டும் மழலையால் கும்பத்தால் — நாட்டில்
நிறைவளிக்கும் தாயே! நிகரில்லாத் தேனே!
துறை எதிலும் இன்பம் துலக்கு.

3. கஜலட்சுமி

துலங்குபொற் கும்பத் துதிக்கையால் ஆனை
நலங்கெழுநீர் ஆட்ட நயந்த — இலங்கிழையே
கையேந்தி உன்பால் கசிந்து தொழுகின்றோம்
செய்யவளே சீரெமக்குச் செய்.

4. தனலட்சுமி

செய்ய திருமேனி செம்பொன் அணிமிளிரக்
கையிருக்கும் தம்பலத்துக் காரிகையே! — வையகத்தில்
என்றும்பொன் மாரியினால் இன்பம் நிறைந்துவிட
என்றென்றும் எம்பால் இரு.

5. தானியலட்சமி

இருக்கும் இடமெங்கும் இன்கனியும் பூவும்
பெருக்கி மகிழ்வுதவும் பெண்ணே! — பருக்கரும்பை
ஏந்தும் திருமகளே! எங்கள் கழனியெல்லாம்
சேர்ந்து வளங்கொழிக்கச் செய்.

6. விஜயலட்சுமி

செய்யும் செயலனைத்தும் சீரோங்க வெற்றிமழை
பெய்தளித்துக் காக்கும் பெருமாட்டீ! — கையில்
வலத்(து)ஆழி சங்(கு)இடத்தாய் வாழ்வில் நிறைவே
நிலைத்திருக்க என்றும் நினை.

7. மகாலட்சுமி

நினைத்துத் தொழுதெழுந்தோம் நேயத் திருமால்
மனைக்கு விளக்கே! மலரால் — உனக்கடிமை
செய்ஆனை போலுயர்ந்து சீர்கொண் டிலங்கவே
கையால்நீ ஈவாய் தரம்.

8. வீரலட்சுமி

தரமுயர்ந்த வீரம் தருக்கரினை மாற்றக்
கரமருவு போர்க்கருவி காட்டி — வரமளிப்பாய்!
வாகை வழங்கிவரும் வல்லி!நீ எம்மனையில்
சேர்க எனப்பணிந்தோம் சேர்ந்து.

9. தொகை (பயன்)

சேர்ந்து சுவைகொழிக்கச் செய்வாய் திருமகளே!
ஏந்துபுகழ் நானான்கும் எய்தியாம்— வேந்தரென
மன்னுலகில் வாழ மலர்மகளே! மாயனுடன்
நின்னருளைப் பெய்வாய் நிறைந்து.

வாழ்த்துப் பாடல்கள்

கற்பக விநாயகர்

கற்பக மூர்த்தி வாழ்க!
காவலந் தெய்வம் வாழ்க!
அற்புதத் துணைவன் வாழ்க!
ஆனையின் முகத்தன் வாழ்க!
விற்பனம் தருவான் வாழ்க!
வெற்றிகள் குவிப்பான் வாழ்க!
பொற்பதம் வாழ்க! வாழ்க!
போற்றுவார் எண்ணம் வாழ்க!

கொப்புடையாள்

கொப்புடை யம்மன் வாழ்க!
குறையெலாம் தீர்ப்பாள் வாழ்க!
வைப்புயர் நிதியே வாழ்க!
வரம்பிலா ஆற்றல் வாழ்க!
மெய்ப்பொருள் கருணை வாழ்க!
மேன்மைகள் குவிப்பாள் வாழ்க!
மைப்படி கண்ணின் இன்ப
மாமழை வாழ்க! வாழ்க!

துன்னம்பெய் கோவணம்

டாக்டர். ந. மாணிக்கம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராாசர் கல்லூரி, மதுரை – 625 009.

முன்னுரை

சைவ சமயம், சிவபரம் பொருளின் அருட்சிறப்புக்களைப் பல்வேறு முறைகளில் எடுத்துரைக்கும் வகையில், தத்துவப் பொருள்கள் பொதிந்து விளங்கும் புராண நிகழ்ச்சிகளையும், கதைகளையும் பெற்றுள்ளது. இறைவன் திருவுருவ வருணனைகள் பலவும், தடத்த நிலையில் அமைந்து, அரிய வரலாறுகளையும் உண்மைகளையும் உணர்த்தி நிற்கின்றன. மாணிக்க வாசகர் இயற்றியருளிய திருவாசகத்தில் அமைந்துள்ள 'திருச்சாழல்' என்னும் பகுதி, புராண வரலாறு பற்றிப் பௌத்தர்கள் எழுப்பிய தடைகளுக்கு விடை கூறும் முறையில் பாடப்பெற்றது என்பர். கந்த புராணத்தில் தட்ச காண்டப் பகுதியில் அமைந்துள்ள ததீசி உத்தரப்படலம், தக்கன் வினவிய 22 வினாக்களுக்கு விடை கூறும் முறையில் அமைந்துள்ளது. புராணக்கதை நிகழ்ச்சிகளின் அடிப்படையில், இறைவன் பெருமைகளையும், சிறப்புக்களை யும் எடுத்துரைக்கும் பாங்கில் விளக்கங்கள் இருப்பதோடு, சாத்திர நுட்பங் களை உட்கொண்டனவாகவும் இருத்தல் உணர்த்தப்படும். சிவபெருமான் முப்புரங்களை எரித்த நிகழ்ச்சி கதைப்போக்கில் இறைவனுடைய பேராற் றலை உணர்த்துவதோடு, மும்மலங்களை இறைவன் போக்கும் சாத்திர உண்மையையும் உள்ளடக்கி நிற்பதைத் திருமந்திரம் சுட்டிக் காட்டும்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"[1]

இவ்வகையில், இறைவன் கோவணதாரியாக விளங்குதல் பற்றிப் பேசும் திருச்சாழல் பாடல் ஈண்டுச் சிந்தனைக்குரியதாக அமைந்துள்ளது-

திருச்சாழல் துன்னம்பெய் கோவணம்

"என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாகக் கொள்ளுமது என்னேடீ?
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ"

(– திருவாசகம், திருச்சாழல் 2)

என்பது பாடல். எல்லா ஐசுவரியங்களையும் உடைய ஈசுவரன் – பொன்னும் மெய்ப் பொருளும் தருபவன் – பொன்னாகவும், மணியாவும், முத்தாகவும் திகழ்பவன் – துன்னம்பெய் கோவணத்தைக் கொண்டுள்ளான். அரசக் கோலத்திலும், ஆண்டிக் கோலத்திலும் முருகப் பெருமானைக் காணுதல் போல், இறைவன் கோவணம் தரித்துள்ளான் என்பதிலும் பொதுவாகக் காணத்தகும் எளிவந்த தன்மையை உணர்த்தும் குறிப்பாகக் கொள்ளத்தகும். ஆயின், மாணிக்கவாசகர், கோவணத்தைக் குறியீடாகக் கொண்டு விளக்கி யுள்ள கருத்து பாடலின் பிற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. நிலைபெற்ற

நூல்களில் பொருந்திய பொருள்களையுடைய நான்கு மறைகளையும் இறைவன் தன் அரையில் கட்டும் கயிறாகவும், வேதப் பொருள்களைக் கோவணமாகவும் கொண்டுள்ளான் என்பது அவர் தரும் விளக்கம். இவ்வாறு வேதங்களை அரைக்கயிறாகவும், வேதப் பொருள்களைக் கோவண மாகவும் கொள்ள வேண்டும் என்று உணர்த்தியுள்ள நிலையில், 'துன்னம் பெய் கோவணம்' என்று தடைப்பகுதியில் கூறியுள்ள தொடர் ஈண்டு அணுக்கமான ஆய்வுக்கு உரியதாகிறது.

கீளொடு தைத்த கோவணம்

"துன்னம்பெய் கோவணம் – கீளொடு பொருந்தத் தைத்த கோவணம் ———————————. சரடு–கயிறு. அஃது இங்கு துறவர் கட்டும் கீளினைக் குறித்தல் 'வான் சரடு' எனச் சிறப்பித்ததனால் பெறப்படும்"[2]

"இழையார்ந்த கோவணமும் கீளுமெழிலா ருடையாக"
(திருஞானசம்பந்தர், 194:5)

"உடைமலிந்த கோவணமும் கீளுந் தோன்றும்" (திருநாவுக்கரசர், 18:4)

"கீளார் கோவணமும்" (சுந்தரர், 240)
என்று அருளாளர்கள் பாடல்களில் கீளுடன் பொருந்திய கோவண உடை இறைவனுக்குக் கூறப் பெறுகிறது.

எனவே, 'இடையில் கயிறாக அமையும் கீளொடு பொருந்தத் தைத்த கோவணம்' என்பது ஒரு கருத்தாக அமைகிறது. இவ்வகையில் வேதம் கீளாகவும், வேதப் பொருள் கோவணமாகவும் அமைவதால், வேதத்தையும் வேதப்பொருளையும் பொருந்தும் வகையில் இணைத்துக் கொண்டுள்ள குறிப்புப் புலனாகிறது எனலாம். "மறை பற்றுக்கோடும், பொருள் அதனைப் பற்றி நிற்பதும் ஆதல் பற்றி, அவை முறையே சரடும், கோவணமும் ஆயின"[3] என்ற விளக்கம் ஈண்டு நினைக்கத்தகும்.

கிழிந்து தைத்த கோவணம்

ஆயின், 'துன்னம்பெய் கோவணம்' என்பதற்குக் கீளொடு பொருந்தத் தைத்த கோவணம் என்று பொருள் கொள்வதற்கு மாறாகத் தைத்த கோவணம் – அதாவது கிழிந்துபோன நிலையில் அதனை விட்டு விடாமல் மீளவும் கிழிந்த பகுதியை இணைத்துத் தைத்து விளங்கும் கோவணம் – என்று பொருள் கொள்வற்கும் இடம் உண்டு என்று தோன்றுகிறது.

"தைத்த துணியினைத் தானணியும் கோவணமாகக் கொள்ளுகின்ற அத்தன்மையன்"[4] என்று கூறும் உரை இப்பொருளை உட்கொண்டது என்று கருத இடமுண்டு.

தைத்த ஆடை என்பது புதிதாகத் தைத்த ஆடையைக் குறிப்பதோடு, பொதுவாக உலக வழக்கில், கிழிந்து தைத்த ஆடையைப் பெரும்பாலும் குறிப்பதாகும்.

"வேற்றிழை நுழைந்த துன்னற் சிதாஅர்" (பொருநராற்றுப்படை: 80–81)
"துன்னற் சிதாஅர்" (ஷை 154)
"வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்" (புறநானூறு, 69)

என்ற பகுதிகள் இவ்வகையில் ஈண்டுக் கருதத்தக்கவை.

எனவே, கிழிந்துவிட்ட நிலையில் மறுபடியும் அக்கிழிசலைத் தைத்து ஒழுங்கு செய்துள்ள கோவணம் என்று பொருள் கொள்வதற்கும் இடமிருப்ப தால், இப்பொருளுக்கேற்பவும் வேதப் பொருள் தொடர்பாக எண்ணிப் பார்க்க வாய்ப்பு உள்ளது. (கிழிந்ததைத் தைக்கும்போது தைத்தமை தெரியத் தைத்தலும், தைத்தமை (அதிகம்) தெரியாத வகையில் இழையாடுதலும் இக் கால நிலையில் அறியத்தகும்).

கிழிந்த காரணம், தைத்த காரணம்

கோவணம் என்பது வேதப்பொருள் என்று கொள்வதால், கோவணம் கிழிந்ததற்கான காரணமும், கிழிந்ததை எறிந்துவிடாமல் தைத்துப் பயன் படுத்துவதற்கான காரணமும் ஆராயத் தக்கனவாகின்றன.

வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டு தோன்றிய சமயங்கள், இந்திய நாட்டில், வைதிக சமயங்கள் என்று வழங்கப் பெறுகின்றன. அகச்சமயங்கள் ஆறும் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என்னும் அகப்புறச் சமயங்கள் ஆறும். தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் வைணவம் ஆகிய புறச் சமயங்கள் ஆறும் ஆகப் பதினெட்டுச் சமயங்களும் வேதத்தை ஒப்புக்கொள்ளும் வைதிக சமயங்கள் எனப் பெறுகின்றன. வேதப் பொருளை விளக்கும் முறையில் கருத்து வேறுபாடுகள் பெருகி இத்துணைச் சமயங்களா யின என்பது சுருக்கமான, வெளிப்படையான உண்மை. இச்சமயங்களுக் கெல்லாம் மூலம் வேதமே என்பதும் உண்மை. பல்வேறு சமயங்களாக, வேறு பட்டு நிற்றற்குக் காரணம், வேதப்பொருள்களை விளக்கும் நிலையில் எழுந்த கருத்து வேறுபாடுகளே. ஆதலால், இந்த விரிசலை உணர்த்தும் குறிப்பாகக் கோவணம் கிழிந்தநிலை கருதத்தகும் எனலாம். எனினும் இவ்வேறுபாடு களை வளரவிடாமல் அமைதிப்படுத்தி அனைவரையும் ஒன்று படுத்தும் முயற்சி தேவையானதாகும். பிரம்ம சூத்திரம், இவ்வகையில் வேத உபநிடதக் கருத்துக்களின் மாறுபட்ட கருத்து விளக்கங்களை அமைதிப்படுத்தி ஒருங் கிணைத்து ஏற்ற விளக்கங்களை எடுத்துக்கூற எழுந்தது என்பர்.

ஆயின், பிரம்மசூத்திரத்துக்கும் பற்பல சமயத்துவ விளக்கங்களுடன் கூடிய உரைகள் எழுந்துள்ளன என்பது சுட்டத்தகும். பாதராயணர் எனப் பெறும் வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரத்துக்குச் சங்கரர் ஏகான்மவாத சமயக் கொள்கையாக அத்வைத தத்துவத்தை விளக்கும் உரை கண்டார். இராமானுசர் விசிஷ்டாத்துவைதத்தை விளக்கும் உரை கண்டார். மத்துவர் துவைதத்தை விளக்கும் உரை கண்டார். நிம்பாக்கர் என்பவர் துவைதாத்து வைதம் என்னும் கொள்கையை விளக்கும் உரை கண்டார். நீலகண்டர் சுத்தாத்துவைதம் என்னும் சைவசித்தாந்தபரமான உரை கண்டார்.

வேறுபட்ட கருத்து விரிசல்களால் வேதப்பொருள் இழக்கப்பட்டு விடக் கூடாது. சிதறுண்டு அழிந்துபோய் விடக்கூடாது. ஒருங்கிணைத்து முழுமை யாகக் கட்டிக் காக்க வேண்டும். வேதப் பொருள் விளக்கம் வேண்டாம் என்று நீக்கி விடவும் முடியாது. ஆதலால், கிழிந்த கோவணத்தைத் தைத்துச் சரி செய்து இறைவன் அணிந்துள்ளான் என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

வேதத்தை ஒப்புக்கொள்ளும் சமயங்களிலும் சாங்கியம், மீமாஞ்சை முதலிய கடவுளை ஒப்புக் கொள்ளாத சமயங்களும் உள்ளன என்பது குறிப் பிடத்தக்க ஒரு நிலையாகும்.

எனவே, பரம்பொருளைப் பற்றிய கருத்து வேறுபாடுகளால் பிளவுகள் தோன்றினாலும், அமைதிப்படுத்தி, ஒருங்கிணைத்து, மூலப்பொருளை விட்டு விடாமல் கைக்கொள்ள வேண்டும் என்பதைக் கிழிந்த கோவணத்தைத் தைத்துச் சரிசெய்து இறைவன் அணிந்துள்ளமை குறிக்கிறது எனலாம்.

"உடைதனில் நால்விரல் கோவண ஆடை"

(திருஞானசம்பந்தர் – திருவேட்களப்பதிகம். 2)

"ஐவிரற் கோவண ஆடை"

(திருஞானசம்பந்தர், பதிகம் 44)

என்று கோவணத்தின் அகல அமைதி தோன்ற நால்விரல், ஐவிரல் என்று குறித்துள்ள இடங்களில் முறையே நால்வேதங்களையும், நால்வேதங்களோடு வேதாந்தம் எனப்பெறும் உபநிடதங்களையும் சேர்த்து ஐந்து என்ற வகை யிலும் குறிப்புப் பொருள் அமைந்திருத்தல் உணரத்தக்கதாகும்.

இவ்வித்து மேலும் விரிவாகக் கருதி ஆராயத்தக்கது.

குறிப்புகள்

1. திருமந்திரம் : 343
2. திருவாசகம் – திருக்கோவையார் ஆகிய எட்டாம் திருமுறை, சி. அருணை வடிவேல் குறிப்புரையுடன், தருமையாதீன வெளியீடு, 1966, பக்.373
3. மேற்படி, பக். 373
4. திருவாசகம், புலியூர் கேசிகன் தெளிவுரையுடன், கேசிகன் பதிப்பகம், 1979, பக். 173,

---

ஆத்தாள் என்னும் செட்டிகள் சொல்லும் அவளைச் சொல்லும் – ஒரு சொல்லே
காத்தாள் இந்தக் காசினி எல்லாம் காவல் விளைத்தது செந்நெல்லே
பூத்தாள் அன்பிற் பொலிந்தாள் இன்பப் போதையில் நிற்கும் மகராணி
பார்த்தால் போதும் பரவச மாகும் பாரத சக்தி அபிராமி!

– கவியரசு கண்ணதாசன் –

திரு நீறும் பெரு வாழ்வும்

புலவர் மாமணி மா.முத்துராமன், எம்.ஏ., எம்.எட்.சி.ஜி.டி.,
தலைமைத் தமிழாசிரியர்,
அ.செ.மேநிலைப்பள்ளி, பள்ளத்தூர்.

மனைக்கு விளக்காக ஒளி தருபவர்கள் மங்கையர்கள். மாநிலத்தில் அறத்தை வளர்ப்பவர்களும் அவர்களே! "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" —அறம்பேணி வீட்டுடன் நாட்டுக்கு நலத்தையும் தொண்டையும் செய்தால் ஏட்டிலேயும் இடம் பெறுவார்கள்...ஆம்....

சேக்கிழார் பெருமகனின் செந்தமிழ்க் காப்பியமாம் பெரியபுராணத்தில் சிறந்த இடத்தைப் பெண்களே பெறுகிறார்கள்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறளுக்கு இலக்கியமாகவும் "பெண்ணின் பெருந்தக்க யாவுள?"எனும்குறளாசானின் கேள்விக்கு விடையாகவும் விளங்குகிறார்கள்.

"நகரத்தார் செய்த கோவில் பணிகளுக்குக் கணக்கே இல்லை" என்று காஞ்சிப் பெரியவர்களால் புகழப் பெற்றவர்கள். சைவமும் தமிழுமே வாழ்வு என்று நாளும் வாழ்பவர்கள் நகரத்தார்கள்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பெயரைப் பாடினாலும்
உலகெ லாமுணர்ந் தோதற்கரிய ஈசன் புகழ் பேசினாலும்
இருதரப் பெற்ற கோவில்களை எழிலாய்க் கட்டினாலும்
இதரக் கடவுளர் வழிபாடுகள் உடன்பாடே யானாலும்
இன்றுவரை சைவமன்றிப் பிறமதம் சார்ந்ததே இல்லை.

பக்திச் சுவை தந்தே முக்திக்கு வழி வகுக்கும் சக்திப் பெருங்காப்பியமாம் பெரியபுராணத்தில் ஆண்களில் சிலர் சூழல்கள் காரணமாய் மனம் மாறியே பிறமதம் சார்ந்ததுண்டு. ஆனால் பெண்கள் "பிறமதம் சாராப் பெருமக்களாம் நகரத்தவர் போல்" நிலைத்த மனமுடன், வலுவான கொள்கை பேணி, வாழ்வில் மதமெனும் திசைமாறிய ஆண்களைத் திசை திருப்பி வாழ்வித்திருக்கிறார்கள். சைவத்தைத் தழைக்க வைத்திருக்கிறார்கள்.

"ஆடவர் தடம் புரண்டாலும் பெண்டிர் தடம் புரளாது, நெறியில் நின்றொழுகி வாய்மை வரலாற்றை வளப்படுத்தியிருக்கிறார்கள்" என்று இப் பெரியபுராணப் பெண்களை, தவத்திரு அடிகளாரவர்கள் தமிழ் மேடைகளிலே போற்றி வருகிறார்கள்.

வாழ்த்திப் போற்றி வணங்குதற்குரிய பெரியபுராணப் பூவையர் மூவர்.

கணவன் கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாய் மாற்றிய பாண்டிமா தேவியெனும் மங்கையர்க்கரசி என்பவரொருவர்.

தெய்வக் காட்சிக்கு மாங்கனி பெற்றுச் சாட்சியாக்கி "அம்மையே"என்று ஆண்டவனையே அழைக்கச் செய்த புனிதவதியாரெனும் காரைக் காலம்மையார் மற்றொரு மாதராவார்.

மருள் நீக்கியார் என்றிடும் தம்பியை நாவுக்கரசாக மாற்றிட ஆற்றுப்படுத்திய திலகவதியார் என்பார் அடுத்தொரு அணங்காவார்.

மாதர் மூவருள்ளே, திருவாளன் திருநீற்றைத் தம்பிக்கு அளித்த திலகவதியாரையும் அவர்தம் தியாகத் திருப்பணியையும் காண்போம் இங்கே....

"ஆஸ்திக்கொரு ஆணும்–ஆசைக்கொரு பெண்ணும்" என்பார்கள். ஆனால் அக்கா திலகவதியாரும், தம்பி மருள்நீக்கியாரும் "சைவத்துக் கிருவர்" என்று அவதரித்தார்கள் திருவாமூர் என்றிடும் திருவூரிலே.

மணப்பருவம் வந்ததால் மகள் திலகவதியார்க்குத் தந்தை புகழனார் மணம் பேசி முடித்தார். அரசனிடம் பணிபுரியும் தளபதி கலிப்பகையார் என்பவரே தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையாவர். மணம் காண மகிழ்ந்திருந்தார் தந்தையார். விதிவலியால் மரணத்தைத் தழுவினார். மரபிற்கேற்ப மனைவி மாதினியாரும் உடன் மாய்ந்தார்.

நினைக்காத நிகழ்ச்சிகள் நிகழ்ந்து விடுகிறது. என் செய்வது? தாயையும், தந்தையையும் இழப்பதே இறைவன் நியதி என்றால், இதற்குத் திலகவதியாரும் மருள் நீக்கியாரும் விதி விலக்காகிட முடியுமா? நாட்கள் நகர்ந்தன.

வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தது போல் அடுத்தொரு செய்தி வந்தது. மணம் பேசியிருந்த மாப்பிள்ளை கலிப்பகையார் போருக்குச் சென்றவிடத்துப் புகழுடம்பு எய்தினார் என்பதுவே அது...

செய்தி கேட்ட திலகவதியார்

"எந்தையும் அனையும் அவர்க்கென்னைக் கொடுக்க இசைந்தார்கள்
அந்த முறையால் அவர்க்கே உரியது நான் ஆதலினால்
இந்த உயிர் அவருயிரோ டிசைவிப்பன்" என உயிர் விடத் துணிந்தார்.
ஓடி வந்த தம்பி மருள்நீக்கியார் அக்காவின்அடியிணைமேல் விழுந்தார்.

"அன்னையும் அத்தனும் அகன்ற பின்னையும் நான்
உமைவணங்கப் பெறுதலினால் உயிர் தரித்தேன்"என்றார்.
இதனையும் மீறி என்னை நீர் விடுத்துச் சென்றீர் என்றால்
"யானும் முன்னம் உயிர் நீப்பன்"

என்று திடமாய்ச் சொன்னார்.

மென்மை மனம் தானே பெண்மை மனம்..தியாகத்தின் மறுவடிவம்தானே பெண்வடிவம். ஆதலினால் "தம்பியர் உளராக வேண்டுமென" இம்பர் மனைத்தவம் புரிந்து" திலகவதியார் இருந்தார்...

பாடலிபுரத்தில் சமண மதம் பரவியிருந்த நேரம் அந்த நேரம். பாடலிபுத்திரம் சென்றிடவும், சமணம் சார்ந்த கல்வி கற்றிடவும் மருள்நீக்கியார் மனம் நினைந்தது.

தேவர்கள் செய்த தவத்தால் கைகேயியின் "தூய சிந்தை திரிந்தது"என்று கம்பர் பேசுவார். இங்கு அதுபோல் திலகவதியாரின் தியாகம் உலகிற்குத் தெரிய வேண்டுமென்று தம்பியின் மனம் திரிந்ததுவோ...!

மருள்நீக்கியார் அங்கு "தருமசேனர்"என்ற பட்டத்தையும் பெற்றார். செய்தியறிந்தார் தமக்கையார். "எதற்காக வாழ்ந்தோமோ...அதுவே பொய்யாகிப் போகிறதே"என்று துடித்தார். தம்பி, "தூய சிவ நன்னெறியே சேர்வதற்கு நாதன் தாளை " வணங்கினார்.

உள்ளம் உருகி ஒன்றித் தொழுதால்
நலமே புரிய நாதன் எழுவார்.......எழுந்தார்...

இறைவன் ஆட்கொள்ளத் தருமசேனர் வயிற்றில் சூலை என்னும் நோயைக் கொடுத்தார். சமணர்கள் நோய் தீர்க்க முனைந்தார்கள். அவர்களின் மந்திரங்கள் பலிக்கவில்லை. மாயங்கள் வெல்லவில்லை. வயிற்றுவலி குறையவே இல்லை.

"உயிர்த்துடிப்பு வரும்போது தானே உறவின் அருமை தெரியும்" யாரும் அறியாத நள்ளிரவில் அக்கா திலகவதியாரை நாடி வந்து காலில் விழுந்து கருணை காட்டுமாறு வேண்டி நின்றார்.

தமக்கையார் திருநீற்றைக் கொடுத்தார். ஆண்டவன் தம்பியின் சூலை நோயை எடுத்தார். அகத்திருளும், புறத்திருளும் நீங்கி உவகை மிகக் கொண்டார்.

"திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்த தெனப் பெருந்தகையான் பணிந்தான்"

சமணத்திலிருந்து மீண்டும் சைவம் திரும்பிய மருள்நீக்கியார் பின்பு பதிகங்கள் பாடத் தொடங்கினார்.

பரமனும் "நாவுக்கரசு என்றுல கேழினும் நின் நன்னாமம்
நயப்புர மன்னுக" என்று அருளிச் செய்தார்.

நாவுக்கரசரோடு அப்புரெனும் பெயரையும் மருள்நீக்கியார் பின்னாளில் பெற்றார்.

தப்பாது இந்த நாடு எப்போதும் வாழ்ந்திட
ஒப்பரிய செல்வமாம் "அப்பர் தேவாரம்" வந்ததென்றால்
அக்கா திலகவதியாரின் அரிய செயலால் என்பதனை
அகிலம் மறக்குமா....?

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

முருகன் என்ற பெயரிலொரு
முருகப்பா – தமிழ்
முத்து என்ற பெயரிலொரு
முத்தையா

குமரன் என்ற பெயரிலொரு
குமரப்பா – எம்போல்
கூப்பிட்டவர் உலகத்திலே
எவரப்பா.

செட்டி என்னும் ஒரு பெயரைச்
சுமந்தவன் / கந்தன்
தேவியையே அதன் வழியே
மணந்தவன்.

– கவியரசு கண்ணதாசன் –

"கோலத் தமிழ்கொண்ட நீலமயில்"

கவிஞர் பெரி. சிவனடியான், எம்.ஏ.

நீலநிறக் கோலமயில் கொண்ட கந்தா!
நின்பெற்றோர் வைத்தபழப் பந்த யத்தில்
ஞாலமதை மயிலேறிச் சுற்றி வந்த
ஞானவடி வேலவனே! பிரண வத்தை
சீலமுடன் தந்தைக்கே உபதே சித்த
சித்தர்களின் வித்தகனே! சிவன டிக்கே
மூலமுதல் நீயென்றால் மயிலின் கோலம்
முற்றுணர்ந்து சிறிதெழுத அருள்வா யப்பா!

ஆடுகிற நீலமயில் அழகு கண்டால்
அமைந்திருக்கும் 'ஓம்'வடிவம் அதற்குள் தோன்றும்
கூடியுள்ள தோகையுடன் நிற்கக் கண்டால்
கோலமயில் 'உ'கரஉருக் கொண் டிருக்கும்
போடுகிற துணையெழுத்துக் கால்க ளாகும்
புள்ளியெலாம் ஒற்றெழுத்தைப் புலப்ப டுத்தும்
சூடியுள்ள கொண்டைப்பூ குறி 'வியப்பு'
சுழிக்கின்ற அதன் கழுத்து 'வினாக்' குறியாம்
தமிழ்எழுத்தை நீலமயில் வடிவிற் காட்டித்
தலையெழுத்தை மாற்றுகிற சக்தி பெற்றாய்!

அமிழ்தமென மக்கட்குப் பஞ்சா மிர்தம்
அன்றன்றும் வழங்குகிறாய் உண்ப வர்க்குத்
தமிழ்ச்சுவையை ஊட்டுகிறாய் எதிலும் இன்பத்
தன்மையையும் அழகையுமே கூட்டு கின்றாய்
இமைப்பொழுதும் உனைமறவா பக்தர் கட்கு
என்றென்றும் நல்லருளை நாட்டு கின்றாய்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

பளிங்கில் பவளம்

டாக்டர் சுப. அண்ணாமலை

சாலை அமைக்க வேண்டுமானால், தரையை முதலில் மேடு பள்ள மற்றதாகச் செய்ய வேண்டும். சோலை வளர்க்க வேண்டுமானால் முட்புதர் களையும், காட்டுச் செடிகளையும் முதலில் அகற்ற வேண்டும். வீட்டை அழகு படுத்த வேண்டுமானால், குப்பை கூளங்களை அகற்றி, தூசி துடைத்து, மெழுகி, கோலமிட்டு விளக்கேற்ற வேண்டும். மனிதனுடைய வாழ்வு சீரும் சிறப்பும் பெற வேண்டுமானால், ஆசைகளும் பொறாமையும் ஆத்திரமும் கோபமும் எனப் பலப் பல தீமைகள் நிறைந்த அவன் மனம் செம்மையுற வேண்டும். மனம் எப்படியோ, அப்படியே மனிதனும். அவனை அளக்கும் அளவுகோல் மனம்தான். மற்ற பொருள் எதுவும் அன்று.

சிலந்தி தன்னைச் சுற்றி ஒரு வலை பின்னிக் கொள்வதைப்போல, தேனீ தனக்கு ஒரு கூடு அமைத்துக் கொள்வதைப் போல், மனிதனுடைய எண்ணத்தின் நிலைக்களமாகிய மனமும், தன்னைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைந்து கொள்கின்றது. அவனுடைய தனிப்பட்ட செயலைப் பொறுத்தவரை இந்த வட்டம் சிலந்தி வலை. சமூகச் சார்பான செயலைப் பொறுத்தவரை இந்த வட்டம் தேன்கூடு. சிலந்தி தனது வலையில் சிக்கிய சிறு பூச்சியை அதன் போக்கில் போக விடாமல், தன்னிடம் இழுத்து இரையாக்கிக் கொள்ளும். தேனீ எங்கெங்கோ இருந்து தேனைக் கொண்டு வந்து தன் கூட்டில் சேர்க்கும். வேறு யாரும் தன் கூட்டை நெருங்க விடாது. மக்களுள் பெரும்பாலோர் தன் வீடு, தன் குடும்பம், தான் என்ற நோக்கம் கொண்டி ருக்கின்றனர். சமூகக் செயல்களில் ஈடுபடும் சிலர், தன் சமூகம், அதன் நன்மை என்ற நோக்குடன் செயல்படுகின்றனர்.

இவை இரண்டும் குறுகிய நோக்குகளே. இவற்றால் நாட்டு நன்மை, சமுதாய நன்மை ஆகியவற்றை ஏற்படுத்த இயலாது என்பதுடன், மனிதனின் மன வளர்ச்சி, பண்பாடு, ஆன்மிக வளர்ச்சிக்கு இவை தடையாகும்.

குட்டைத் தண்ணீரை வெள்ளம் அடித்துச் செல்வது போல், புழுக்கத்தை யும் வெப்பத்தையும் தென்றல் போக்குவதுபோல், இந்த **'தன் மைய மிட்ட'** எண்ணப் போக்கை ஒரு பெரிய அறிவு விளக்கத்தால் மட்டுமே மாற்ற முடியும்.

இறைவன் ஞான வடிவம் உடையவன். அவனது ஞானம், பேரறிவு. அதனுடைய விளக்கமாக உள்ளது அருள். அதாவது, நமது சிற்றறிவினால், இறைவனது பேரறிவை அறிய முடியாது. கிணற்றுத் தண்ணீரை, அக் கிணற்றின் உள்ளே இறங்கிப் பருக முடியாது போயினும், வாளியொன்றால் முகந்து பருகுவதைப் போல, இறைவனை நாம் விளங்கிக் கொள்ளும் வண்ணம், அவன் தன் கருணை காரணமாக வெளிப்படுகின்றான். அவை தாம் அவனுடைய அருள் வடிவங்களும் அருட் செயல்களும்.

அவற்றை நினைத்து, கூறி, பாடி, உணர்ந்து வழிபடும் வழக்கமும், நினைவை அவனிடமே ஊன்றி நிற்கச் செய்யும் பழக்கமும் (யோகம்) கை வந்தால், அவனிடம் நமக்கு அன்பும், உருக்கமும் உண்டாகும். இறைவன் பேரறிவு உடையவன். ஆதலால், சிறிய நமது சிறிய அன்பைக் கூட உணர்ந்து, அவனும் அன்பு காட்டுவான்.

இறைவன் யாரோ ஒருவன் அல்லன். நம் வாழ்விற்குக் காரணமாவன். நம்மைப் படைத்தவன். ஆதலால் நம் தலைவனும் தந்தையும் ஆவான். அவன் வடைத்த மக்கள் இனம், உயிரினங்கள் யாவும் நம் சகோதரர்கள். நம் அன்புக்கு உரியவர்கள். ஆனால் இந்த எண்ணம் எளிதாக உண்டாவதில்லை. காரணம் நமது அறியாமையும் "தம்மை மையமிட்ட" எண்ணப் போக்கும் ஆகும். இவற்றைப் போக்ளள வேண்டும் என்று அடிக்கடி இறைவனிடம் முறையிட்டுக் கொள்ள வேண்டும்.

தத்துவ நூல்களில் இந்த மனப்போக்கை 'ஆணவம்' என்பர். இது ஓர் அழுக்கு என்பர். செம்பில் களிம்பு இருப்பதைப் போல நம்மிடம் இது இருக் கிறது என்பர். ஆகவே இதனுடன் நாம் கொண்டிருக்கும் தொடர்பு 'பல பிறவித் தொடர்பு'. இது எளிதாக நீங்காது.

முதலில் சில பேரிடமாவது கருணை காட்ட வேண்டும். அன்பும் கருணையும் நமக்கு இயற்கையாக உள்ள குணங்கள். ஆனால் அவை நம்மிடம் முழுமையாக வெளிப்படவில்லை. இவற்றைப் பெற வேண்டும் என்பது, நம் உள்ளத்தில் இவற்றை மலரச் செய்வதுதான். இது ஒரு பரிணாம வளர்ச்சி (Evolution) அந்த வளர்ச்சிக்காக நாம் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். நமது கண்ணீருக்கு அவன் உறுதியாக இரங்குவான். அதன் பயனாக, மற்றவர்களுக்காக, அவர்களின் வறுமையும், நோயும், துன்பமும் நீங்குவதற்காக இறைவனைப் பிரார்த்தனை செய்யும் மனநிலை நமக்கு வரும். நாமே அத் துன்பங்களை இறைவனின் திருவருளால் நீக்க வேண்டும் என்ற முயற்சி வரும்.

இவ்வாறு நமது அன்பும், கருணையும் செயல்களாக வெளிப்பட்டு, மக்களின் துன்பங்கள் நீங்கும் பொழுதுதான் அன்பும் கருணையும் ஓர் அநுபவம் ஆகின்றன. உருக்கம், மனநெகிழ்ச்சி, தன்னைச் சற்று மறந்து அழுதல், மக்களிடம் பரந்த அளவில் ஈடுபாடு, நட்பு என்ற அநுபவங்கள் ஏற்படுகின்றன. இவற்றைப் பலகாலம் தொடர்ந்து பெற்றால், நமது "தன்மையங் கொண்ட எண்ணமும் அறியாமையும், அவற்றின் மூலக் கருவான ஆணவமும் படிப்படியாக நீங்கும்."

நம் மனமும் படிப்படியாகப் பண்படுகின்றது. தூசும் தும்பும் உலோகத் தூளும் கலந்து கல்போல இருந்த மனம், தூய்மை அடைந்து, பளிங்கு போலாகின்றது. ஆணவமலம் நீங்க மனம், கருணையை நிரம்பக் கொண்டு விளங்குகின்றது. அந்தக் கருணைக்கு எல்லைக் கோடுகள் இல்லை. பளிங்கின்மேல் வைத்த எந்தப் பொருளையும், நிறத்தையும் அது பிரதி பலிக்கும். அதுபோல் நமது அறிவு, குறுகிய வரம்புகளைக் கடந்து, பொது நிலையை அடையும். இதைத் தத்துவ நூல்களில் 'வியாபகம்' என்பர்.

அடுத்து, இறைவன் இந்த மனிதனை மேலும் தூய்மை பெறச் செய்வ தற்காக, அவனுடைய 'நான்' என்ற எண்ணத்தையும் மாற்றுவான். ஆணவம் ஓர் அழுக்கு. "நான்" என்ற எண்ணம் மற்றோர் அழுக்கு. இதனைத் 'தற்போ தம்' என்பர். இது நீங்கும் நிலையில் இறைவனுடைய அருளில் உயிர் முழுவதும் முழுமையாக ஈடுபட்டு, தன் செயல் எல்லாம் இறைவன் செயல் என்றுஉணரும். இந்த மன நிலையில் நின்றே அப்பரடிகள், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்று பாடுகின்றார். வள்ளலார் "பாட்டுவித்தால்

பாடுகின்றேன்" என்று பாடுகின்றார். இந்த நிலையில் இறைவன் நிறை ஞானம் அளிக்கின்றான். தனது பேரொளியைக் காட்டுகின்றான். முதலில் அவனது அருளில் கலந்து நின்ற உயிர், இப்பொழுது இறைவனிடமே கலந்து நின்று ஆனந்தத்தை அனுபவிக்கின்றது.

மாசு நீங்கி மகிழ்ச்சி அடையும் உயிரின் இந்த அனுபவத்தை திருமூலர்,

களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருட்கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிரொளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே"

என்று பாடுகிறார். இதில் முதலில் உள்ள களிம்பு, ஆணவமலம், அடுத்து உள்ள களிம்பு தற்போதம். மூன்றாவது, இவ்விரண்டையும் குறிக்கும். பளிங்கு என்பது உயிருக்கும் பவளம் சிவ அனுபவத்திற்கும் உவமை.

☆ ☆ ☆ ☆ ☆

பண்டிருந்த தமிழர்களின் பெருமை வாய்ந்த
பழக்க வழக்கங்கள் பல இன்னும் பார்க்கக்
கொண்டிருந்து காத்துவரும் குலத்தின் மக்கள்
கோடானு கோடி பணம் செலவு செய்து
பெண்டிருந்த சரிபாதிப் பெருமான் கோலப்
பெருங் கோயில் திருப்பணிகள் பெரிதும் பேணும்
தொண்டு மிகும் தனவணிகர் வாழ்க ! வாழ்க !

- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை -

ஒப்பற்ற தலைவன்

சி. என். நாச்சியப்பன்

செயற்கரிய செய்யும் பெரியவர்களுக்குக் கோவில் கட்டி வைத்துக் கும்பிடுகிறோம் என்று சொல்லுவதுண்டு. இந்த வகையில்தான் ராமனுக்குக் கோவில் கட்டி வைத்துக் கும்பிடுகிறோம்.

இராமன் அப்படி என்ன செய்து விட்டான்? அவன் அவதாரம் என்பதை விட, சாதாரணமான மனிதன் என்ற கண்ணோட்டத்திலேயே அவனுடைய நடைமுறைத் தர்மங்களை நோக்கினால், இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கும்.

தந்தையும்–மகனும்

"தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை!" என்ற வார்த்தையை வேதமாகக் கடைப்பிடித்தான் இராமன். தந்தை செய்ததைப்போலச் செய்ய வில்லை. தந்தை சொன்னதைப் போலச்செய்தான்.

தந்தை தசரதன் சந்தர்ப்பவசத்தால் பரசுராமனுக்குப் பயந்து, அறுபதி னாயிரம் பெண்களை மணந்து கொண்டான். ஆனால் இராமன் ஏகபத்தினி விரதன் என்பதை உலகம் அறியும்.

"காட்டுக்குப் போ!" என்று தந்தை சொன்னதாகச் சிற்றன்னை சொன்னதும், அன்றலர்ந்த செந்தாமரையை ஒத்தது அவன் முகம்.

பட்டாபிஷேகம் என்றாலும் பரவசப்படவில்லை. "நாடு இல்லை, நட கானகம்!" என்றாலும் கவலை கொள்ளவில்லை.

"நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை, விதியின் பிழை இது, இதற்கு நீ என்ன வெகுண்டனை?" என்று தம்பி இலக்குவனை வினவினான் இராமன்.

இலக்குவன் எதிலும் சீக்கிரமாக உணர்ச்சி வசப்படுபவன்.

"அண்ணனுக்குப் பட்டம் இல்லையா? அகிலத்தையே அழிக்கிறேன்!" என்று கிளம்புவான்.

சூர்ப்பணகை தகாத முறையில் நடந்து கொண்டாளா? மூக்கை அறுக் கிறேன் என்று புறப்படுவான்.

அங்கதனைத் தூது அனுப்பக் கூடாது என்று அங்கலாய்ப்பான்.

இப்படியாகத் துடிப்பான ஒரு பாத்திரம் இலக்குவன். காவியத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இலக்குவனை இந்தக் கண்ணோட்டத்தி லேயே நோக்கினால் அவன் செயல்கள் துடிப்பு மிக்கவை என்று தெரியும்.

சாந்தமே நிறைந்த பரதனைச் சண்டைக்கு வருவதாகத் தப்புக் கணக்குப் போட்டான்!

பரதன் சாந்தமே உருவான பாத்திரம் – தியாகத்தால் நிறைவான பாத்திரம். பொறுமை பூத்த பொன்னான மனம் பரதனுக்கு. அதனால்தான் "ஆயிரம் இராமர் நின்கேள் ஆவாரோ?" என்றான் குகன்.

குரு வும்–சிஷ்யனும்

குரு வாக்கியமே தர்மம் என்று கருதினான் இராமன். போரில் கூடப் பெண்ணைக் கொல்லக்கூடாது என்பது அறமாகும். ஆனால் விஸ்வா மித்திரர் தாடகையைக் கொல்லும்படி பணித்தார். அவள் பெண்ணேஅல்ல என்றும் பேசினார்.

"உங்கள் மொழியே எனக்கு வேத வாக்கியம்"! என்றான் தாடகையைக் கொன்றான் இராமன். அதுவே அவனுக்குக் கன்னிப் போரும் கூட!

கல்யாண ராமன்!

மிதிலையில் சீதையைக் கன்னி மாடத்தில் கண்டதும், காதல் கொண்டான் இராமன். அந்த வினாடி முதல் மனதில் வேறொரு பெண்ணை எண்ணாத ஒப்பற்ற ஒழுக்கமுடையவன் இராமன். சீதை பூமிக்குள் சென்ற பின்னும் பல ஆண்டுகள் இராமன் தன்னந் தனியனாய் வாழ்ந்தான். ஆனாலும் சீதாராமனாக அவன் கானகத்தில் இருந்தால், கம்பனுக்குக் களிப்பு உண்டு! அவ்வாறு நாம் அவனைக் கற்சிலையில் கண்டால் பக்திக்குப் பரவசமுண்டு!

ஆணவத்தை அடக்கினான்!

ரிஷியாய் இருந்தாலும், பரசுராமனின் கர்வத்தை அடக்கினான் இராமன். ஆணவமாய் யார் இருந்தாலும் அது தவறு என்று உணர்த்துவதே இதன் நோக்கமாகும். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டல்லவா? இந்தப் பழமொழியை மெய்ப்பித்தான் இராமன். தந்தை தயரதனின் தீராத கவலையையும் போக்கினான்.

பேயா? தாயா?

கைகேயிதான் இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள். அவளுக்குத் தாயாருக்குள்ள முதல் மரியாதை கொடுத்தான் இராமன். அவளே பெற்ற பரதன் அவளைப் பேயே, பிசாசே என்று திட்டினான். தன் அண்ணனுக்கு அல்லல் தந்தாளே என்ற ஆவேசத்தில் அவ்வாறு பேசினான் பரதன்.

சகோதர தத்துவம்

உடன் பிறந்தோர் நால்வர். ஆனால் இராமனுக்கு உலகமே சகோதர தத்துவம் வாய்ந்ததுதான். வேட்டுவக் குகனை ஐந்தாவது சகோதரன் என்றான். குரங்கினச் சுக்கிரீவனை ஆறாவது சகோதரன் என்றான். அரக்க னான விபீஷணனை ஏழாவது சகோதரன் என்றான். பறவையான ஜடாயுவைத் தந்தைக்கு ஒப்பானவர் என்றான்.

இப்படி மிருகங்களையும், பக்ஷிகளையும், குரங்குகளையும், தனக்கு எளியவர்களையும் இதய பூர்வமாக ஏற்றுச் சகோதர தத்துவம் கொண்டாடி னான் சக்கரவர்த்தித் திருமகன்.

"உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்"

என்றான் பாரதி.

"ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்!" என்றார் இராமலிங்க வள்ளலார்.

"எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே! என்றார்

தாயுமானார்.

எல்லா உயிர்களிலும் ஆண்டவனைக் காணும் தத்துவம் மிக உயர்ந்த நோக்கமாகும்.

"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா
உயிரும் கைகூப்பித் தொழும்!" என்பார் திருவள்ளுவர்.

இந் நெறிகளையே கடைப்பிடித்தான் இராமன்.

வாழ்க்கையில் சிக்கல் ஏற்படும்பொழுது அதை மானுடத் தன்மையுடன் சமாளிப்பதே அறமாகும். ஒரு தவறை நிவர்த்தி செய்ய இன்னொரு தவறு பரிகாரமாகாது. முதல் தவறு சந்தர்ப்ப வசத்தால் நிகழ்ந்து விடலாம்.

சூர்ப்பணகை வந்ததும், சூழ்ச்சி செய்ததும், மூக்கறுபட்டதும், இராவணன் சீதைமேல் ஆசைப்பட்டு மாயமானை ஏவி, மாதாவைச் சிறையெடுத்ததும், எல்லாமே சந்தர்ப்ப பேதங்களால் நிகழ்ந்தவையே.

ஒரு மனிதனுக்கு இதைவிட வேறு என்ன துன்பங்கள் வர வேண்டும்? தந்தை சொல்லுக்காகச் சக்கரவர்த்திப் பதவியை விட்டுக் கொடுத்தான் இராமன். மனைவியை மாற்றான் தூக்கிச் சென்றான். கானகத்தில் காய் கனி கிழங்குகளைத் தின்று அனாதரவாக அலைந்தான்.

ஆனாலும் அறத்தைத் துறக்கவில்லை.

சரணாகதி தத்துவம்

சரணடைந்தோரைக் காப்பதே என் தர்மம் என்றான் இராமன். சரணடைந்த சுக்கிரீவனைக் காப்பாற்றி, அரசுரிமை பெற்றுக் கொடுத்தான்.

சரணடைந்த விபீஷணனை ஏற்றுச் சோதரன் என்றான்.

தன் நலத்தைவிடப் பொது நலமே பெரிதென்று எண்ணினான் இராமன்.

முனிவர்களையும், ரிஷிகளையும், தவசிகளையும் அரக்கர்களின் கொடுமையிலிருந்து காப்பது என்று உறுதி பூண்டான்.

விபீஷண சரணாகதியின் போது இராமனின் பெருந்தன்மை நன்கு புலனாயிற்று.

"இந்த விபீஷணன் என்ன? அந்த இராவணனே வந்து சரணடைந்தாலும் ஏற்பது என் கடமை!" என்றான்.

"இன்று போய் நாளை வா!" என்று இராவணனை முதல் நாள் போரில் விடை கொடுத்தான்.

உலகத்தில் வேறெந்த வீரனும் நிகழ்த்தாத சாதனை இது. அருங்குணச் செல்வன் அவன்.

அறத்தின் மூர்த்தி; சாந்த சொரூபி; பண்பாளர்களைக் காக்க வந்த பரம்பொருள். தீயவர்களைத் தண்டிக்கச் சிறிதும் தயங்காத வீரன்.

தாடகை வதம்; கவிந்தனுக்குச் சாபவிமோசனம் கொடுத்தது; வாலியைத் தண்டித்தது; சமுத்திரராஜனைக் கோபித்தது; இராவணனைத் தண்டித்தது; இவைகளிலிருந்து அவனுடைய அவதார நோக்கத்தின் இரகசியங்களை உணரலாம்.

ஏன், சீதையையே கோபித்து அக்கினிப் பிரவேசம் செய்ய வைத்தான்.

யார் தவறு செய்தாலும் கண்டிக்கும் துணிவும், ஆற்றலும் மிக்க வீர புருஷன் இராமன்.

இந்திரனின் பிள்ளை ஜெயந்தன், சீதையின் அழகில் மயங்கி காக்கை உருக் கொண்டு அவளை வந்து தொந்தரவு செய்தான். வனவாச சமயத்தில் இது நிகழ்ந்தது. அங்கு படுத்திருந்த இராமன் பூமியில் முளைத்திருந்த ஒரு புல்லைப் பிடுங்கி, மந்திரம் சொல்லி ஏவினான். அது அஸ்திரம் போன்று அவனைத் துரத்த; அவன் ஓடிவந்து இராமனிடம் சரணடைந்தான்.

சரணடைந்தவர்களைக் காப்பதுதான் நம் இராமனின் கடமையா யிற்றே!

அன்றிலிருந்துதான் தோன்றியதோ என்னவோ, "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்"! என்ற பழமொழி!

மகாகவி கம்பன், ஸ்ரீ இராமனின் குணாதிசயங்களையும் அழகையும் சிறப்பையும் பண்பையும் பல அற்புதமான பாடல்களால் போற்றுவான்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் கம்ப இராமாயணத்தைப் படிக்க வேண்டும்.

கம்பனின் கவி நயம், உணர, இராமனின் அருங்குணச் செல்வத்தைப் போற்ற!

நிறைந்த செல்வத்தை உண்மையான செல்வம் என்று காவியங்கள் போற்றவில்லை.

இராமன் முதலிலேயே முடிசூட்டிக்கொண்டு சக்கரவர்த்தியாக இருந்திருப்பானேயானால், அவனுடைய வீரமும் தீரமும் கானகத்தில் மிளிர்ந்திருக்குமா?

குகனை அணைத்திருப்பானா?

குரங்கைப் போற்றியிருப்பானா?

அரக்கனை ஆதரித்திருப்பானா?

தவசிகளுக்குத் தன்மை வழங்கியிருப்பானா?

இராமாயணத்தில் இல்லாத பொருள்களே இல்லை. அது ஒரு நவரச நாடகம்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்படும் சிக்கலுக்கெல்லாம் இராமாயணத்தில் விடிவும் முடிவும் காட்டப்பட்டுள்ளன.

காரணம், அதில் வரும் பாத்திரங்கள் அனைத்தும், அனைத்துப் பிரச்சினைகளையும் அனுபவிக்கின்றன.

கதாநாயகனும், கதாநாயகியும் காணாத துன்பமா?

சீதை சிறையிருந்த செல்வியாய்ச் சிந்தாகுலம் அனுபவித்தாள்.

கோதண்ட ராமன் அறத்தையும் வீரத்தையும் நம்பி, கானகம் நடந்து பகை முடித்துப் பழி தீர்த்தான்.

தொண்டுக்கு அனுமன்,

தியாகத்திற்குப் பரதன்,

சேவைக்கு இலக்குவன்,

அன்புக்குக் குகன்,

ஆதரவிற்கு விபீஷணன்,

எல்லாவற்றிற்கும் மேலாகச் சரணடைந்தவர்களைக் காத்துக் கருணை பொழியக் காவியத் தலைவன் இராமன்.

கவி நயத்திற்குக் கம்பன்.

பாடத் தமிழ்!

கேட்க நாம்!

எல்லா வல்லமையும் உள்ள ஸ்ரீ இராமன் இராவணனைக் கொன்ற தோஷம் நீங்க, இராமேஸ்வரத்தில் நீராடி லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டான்.

இராமன், இலக்குவன், சீதை, அனுமன் நால்வரும் வழிபட்ட லிங்கம் தான் இன்று இராமேஸ்வரத்தில் உள்ள இராமலிங்கமாகும்.

இராமன் பிரதிஷ்டை செய்ததால், இராமலிங்கம் ஆயிற்று!

தீமைகளை வென்று (ஜெயித்து), நன்மைகளை ஆக்குவதால் நமது கோவில் குல தெய்வமும் ஜெயங்கொண்டார் ஆனார்.

சௌந்தரம் என்றால் அழகு, இளமை, பொலிவு, செல்வம் என்றெல்லாம் பொருள்.

ஜெயங்கொண்ட சோழீஸ்வரர்; சௌந்தர நாயகி அம்பாள் திருவருளால் இராமனின் அருங்குணங்களை உணர்வோம். இராமாயணத்தைப் படிப் போம். அவற்றில் ஒன்றிரண்டு நீதிகளையாவது கடைப்பிடிப்போம்.

யார் யாரையோ தலைவன் என்று போற்றாமல், அந்த ஒப்பற்ற தலை வனின் உயர்ந்த பாதையில் நடப்போம்.

இதுவே, இராமாயணம் தோன்றியதின் நோக்கமும், ஆக்கமும் ஆகும்.

★ ★ ★ ★ ★

வட்டியிலே சோற்றை உண்டு வந்த மிச்சமெல்லாம்
கட்டிவைத்துக் கோவிலாகக் கட்டிவைத்தோர் யாரு?
ஆளுயரம் அண்டா நூறில் சாம்பார்ரசம் கூட்டு
அதற்குத் தகுந்த காய்கறிகள் உப்புக்காரம் போட்டு -உண்ண
அழைச்சிடுவார் அஞ்சு ஊரு கேட்கும் அதிருவேட்டு -கும்ப
அபிசேகமாம் நடக்குதிப்போ பேப்பரிலே போட்டு
செட்டிமார்கள் நம் கலையைக் கட்டிக் காக்காவிட்டால்
சிற்பத் தச்சு சிலைகள் சீரழிந்திருக்கும்
ஆச்சிமார்கள் நம்தமிழை ஆதரிக்கா திருந்தால்
அய்த்தை அப்பன் ஆண்டி-டாடி ஆகிப்போயிருக்கும்.

-கொத்தமங்கலம் சுப்பு -

ஞான குரு
மாணிக்கவாசகர்.

கவிச்செம்மல் டாக்டர் ரெ. முத்துக்கணேசன்
காரைக்குடி

1.

திருவிளக்கே! அறியாமை இருளகற்றும்
சித்தாந்த தத்து வத்தைத்
தருவிளக்கே! தவமுடையார் சிந்தையுளும்
புகுந்துவிடும் தன்மு னைப்பின்
கருவகற்றிக் காக்கின்ற கலைவிளக்கே!
மெய்யடியார் காத லிக்கும்
உருவிளக்கே! சிவமுணர்த்தும் மாணிக்க
வாசகப்பேர் உடையாய் போற்றி!

2.

அரும்பாகித் தொடுங்காலம் மலரவிழ்ந்து
மணம்பரப்பும் அழகி னைப்போல்,
கரும்பான பாவகையால் கன்மவினை
களைந்தொதுக்கி ஞானம் மேவ,
பெரும்பாவ ஆசையெலாம் பேர்ந்தேக
மனம்மலர்ந்து சிவம ணக்கத்
தரும்பாடல் வாசகத்தேன் அளித்தருளும்
தாமரையாம் தலைவ போற்றி!

3.

மண்ணுக்குள் சுண்ணாம்புக் கற்களெலாம்
மறைவாக அழுத்தத் தாலே
விண்ணொளிரும் கதிரொப்ப விளங்குகின்ற
சலவைக்கல் ஆவ தேபோல்
எண்ணங்கள் பற்றற்றுப் பாசமிலா
இன்பமெனும் சிவத்தைக் கூடப்
பண்ணொளிரும் பாவையொடு அம்மானை
பாடியநற் குருவே போற்றி!

ஓம்

தெய்வம் நீ என்றுணர்

புலவர் மெய்யாண்டவர், அரியக்குடி

தோற்றுவாய்

உலகம் தோன்றிய நாள்தொட்டு இற்றைநாள் வரை உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும், நுகர்ச்சியும் இறுதியில் தளர்ச்சியும் இருந்து வருகின்றன. ஊர்வன, பறப்பன, நடப்பன, இயல்வன எனப் பல்லுயிரினங்கள் இப் பாரில் வாழ்வன. இப் பல்லுயிரினங்களில் மனிதப் பிறப்பே மகத்தானது. இதையே "அரிது அரிது மானிடர் ஆதல்அரிது" என்றார் ஔவை மூதாட்டி. "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்பார் அப்பர் அடிகள். "மானுடம் வென்றதம்மா" என்பார் கம்பர். இவ் வரிகள் எல்லாம் மனிதப் பிறப்பின் மாண்பைத் தெற்றென விளக்குகின்றன.

நல்லதன் நன்மையும், தீயதன் தீமையும் பகுத்துணர்ந்து அறிபவன் மனிதன், உணர்ந்து அறிந்த கருத்தைப் பிறர்க்கு உரைக்கும் சொல்லாற்றல் பெற்றவன் மனிதன் ஒருவனே. இத்தகு மனிதன் மற்ற உயிரினங்கள் போல் உண்பதும் உறங்குவதும் மட்டுமே செய்து வாழின் மனிதனாகான், வையத்துள் வாழ வேண்டும் வழியறிந்து வாழ்பவனே வானுலகத் தெயவத்துக் கொப்பாய்க் கருதப்படுவான். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் குறிக்கோளுடன் வாழ்பவனே மாந்தருள் தெய்வமாய்ப் போற்றப்படுகிறான். இந்தக் கருத்தையே "தெய்வம் நீ என்றுணர்" எனும் மகாகவி பாரதியார் வாக்கு வலியுறுத்துகின்றது. தெய்வமாகும் பெற்றி எவ்வாறென்பதே ஈண்டு நாம் உணரவேண்டுவது, உணரச் சான்றோர் வாழ்வே சான்று. அத்தகு சான்றோர் வாழ்வின் சாரமே நாம் காணப் புகுவது.

பாரதநாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த காலம். பாரத மக்கள் மண்புழுக்களாய், மன உணர்விழந்து வாழ்ந்த காலம், ஆங்கிலேயரைக் கண்டு அஞ்சி அஞ்சிச் செத்த காலம். இதனால் வெகுண்ட தெய்வக் கவிஞர் தேசீயக் கவிஞர் பாரதி, "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என முழங்கினார். "ஒளி படைத்த கண்ணினாய் வா வா" உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா" என ஒளி படைத்த பாரதம் வருவதாய்க் கனவு கண்டார். "இந்தியனே நீ சாதாரண மனிதனில்லை. தெய்வம் நீ என்பதை உணர். தேசம் காக்கப் புறப்படு" என்றார். "கொத்தித்திரியும் கோழி எத்தித் திருடும் காக்கை, பாலை நல்கும் பசு, வாலைக் குழைக்கும் நன்றிமிகு நாய், வண்டி இழுக்கும் குதிரை, வயலில் உழும் மாடு, நமை அண்டி வாழும் ஆடு இவற்றை ஆதரிக்க வேண்டும். இந்த உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்" என்றார். "சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய். வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" எனத் தான் இந்த உலகத்திற்குப் பயன்பட்டு வாழ அருள் தருமாறு, அன்னை பராசக்தியை வேண்டுகிறார். தன் தெய்வீகக் கவிதை

களால் பாரத நாட்டின் விடுதலைக்கு வித்திட்டார். "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல். இமைப்பொழுதும் சோராதிருத்தல்" எனத் தன் குறிக்கோளால் இந்திய மக்கள் இதயம் புகுந்தர். "கஞ்சி குடிப்பதற் கிலார். அதன் காரணங்கள் இவை எனும் அறிவு மிலார்" என்று இந்தியாவில் அறியாமையால் வாழும், பசியால் வாடும் இந்தியரைக் கண்டு கண்ணீர் விட்டார். இவ்வாறு பிறர்க்காகவே தான் வாழ்ந்து தெய்வப் பிறவியானார். நம் எல்லோரையும் "தெய்வம் நீ என்றுணர்" என உணர்த்தினார். மகாகவி பாரதியின் மானசீக குரு சகோதரி நிவேதிதை யாவார். சகோதரி நிவேதிதை மார்கரெட் நோபிளாய் இருந்து இலட்சியத்துறவி, வீரத்துறவி விவேகானந்தர் அமெரிக்காவில் நிகழ்த்திய இந்து சமயத் தெய்வீகச் சொற்பொழிவால், விவேகானந்தர் சீடப் பெண்மணியாகி இந்தியா வந்தவர். தன் பெயரைச் சகோதரி நிவேதிதை என ஆக்கிக்கொண்டார். மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதைவிட, எவ்வாறு வாழ்ந்தான் என்பதே இன்றியமை யாததாகும். வாழும்போதே வாழாமற் போகின்றவர் பலர். சிலர் மட்டுமே தெய்வப் பிறவிகளாய் வாழ்ந்து தம் நிலைத்த செயல்களால் அழியா அமர வாழ்வை அடைவர். பாரதியார் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். ஆனால் அவர் கவிதைகளில் இன்றும் வாழ்கிறார். சுவாமி விவேகனாந்தர் முப்பத்தொன்பது ஆண்டுகளே வாழ்ந்தார். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக் குரிய மகத்தான பணிகளைச் செய்து உலகம் முழுவதும் நம் இந்து சமயத் தின் பெருமையைப் பரப்பியவர். அவரின் சிகாகோ நகரச் சொற்பொழிவு கள் உலகப் புகழ் பெற்றவை. "ஏழை ஒருவனிடம் மதபோதனை செய்யாதே. அவன் பசியைப் போக்க வழி காட்டு. அதுவே முதல் மத போதனை" என முழங்கிய புரட்சித் துறவி விவேகானந்தர் ஆவார். இவ்விரு தெய்வச் சான்றோரும் தெய்வம் தாமே என உணரச் செய்த பெற்றியர். "தெய்வம் நீ என்றுணர்" எனும் வாக்கின் இலக்கியமாய் வாழ்ந்தவர் அண்ணல் காந்தியடிகள். வெறும் மனிதர்களை "ஆத்மா" என்போம். பிறர்க்குத் தீங்கு செய்ய முயல்பவரைத் துராத்மா என்போம். பிறர்க்காகத் தன்னை அழித்துக் கொள்பவரை மகாத்மா என்போம். எவன் ஒருவன் ஏழைக்காகத் தன் இதயத்திலிருந்து இரத்தக் கண்ணீர் வடிக்கின்றானோ அவனை நான் மகாத்மா என்பேன்" என்றார் விவேகாநந்தர். அந்தப் பொன் மொழிக்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்தவர் மகாத்மா காந்தியடிகள். இங்கிலாந்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். ஆனால் இந்திய நாட்டின் அவலம் கண்டு ஆடம்பரம் விடுத்து, சட்டையை நீக்கினார். இடுப்பிலே மூன்றரை முழத் துண்டு, மார்பைப்போர்த்திய துண்டு கையில் தடி ஒன்று. இதுவே அவர் கொண்ட வறுமைத் திருக்கோலம். இந்திய மக்கள் என்று வறுமை நீங்கி நல்லாடை உடுப்பரோ, அன்றே நல்லாடை நான் உடுப்பேன் என உறுதி பூண்டு, இறுதிவரை வாழ்ந்த ஏந்தல். "காடெல்லாம் சுற்றிச் சுற்றிக் கடுந் தவம் செய்தாரில்லை. நாடெலாம் சுற்றிச் சுற்றி நலிந்தவர் துயரம் தீர்த்தார்" பகவத்கீதையை "சத்தியமான ஞானத்தைப் போதிக்கும் சிறந்த நூல்" எனக் கருதிப் பயின்று அதன்படி வாழ்ந்தவர்.

பகவத்கீதையில் மனத்தவம், வாக்குத் தவம், உடல் தவம் மூன்றும் தெளிவுறுத்தப்படுகின்றன. இதில் மனத்தவம் மேலானது. சொல்லையும் செயலையும்விடச் சிந்தனையில் அடக்கம், பழகியவனுக்கு வாயடக்கமும் (சொல்), மெய் (உடல்)யடக்கமும் தாமே வந்து அமைகின்றன. இந்த மனத் தவத்தால் மாநிலம் போற்றும் பேறு பெற்றவர் அண்ணல் காந்தியடிகள்.

"ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு" என்னும் கருத்தைத் திருமூலர் எனும் ஞானி தெளிவுறக் கூறுகின்றார். அப் பாடல் இதோ,

"படமாடக் கோவில் பரமார்க் கொன்றீயின்
நடமாடக் கோவில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோவில் நம்பர்க் கொன்றீயின்
. படமாடக் கோவில் பரமர்க் கங்காமே"

ஏழை வழிபாடே இறைவழிபாடு என்பது இதனால் விளங்கும். இக் கருத்தையே, "அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" எனத் தாயுமானவர் கூறுகின்றார். இராமலிங்க வள்ளலாரும் "ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று இறைவனை வேண்டினார். அதன்படி வடலூரில் சத்திய பரிபாலன தரும ஞானசபை எனும் அறச்சாலை நிறுவி, பசியால் வாடி வருவோர்க்குப் பசி நீக்கினார். இன்றுவரை அப்பணி இடையறாது நிகழ் கின்றது.

நிறைவுரை :

"எவ்வுயிரும் எம்முயிர் போல் எண்ணி இருக்கவும் நின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே" எனும் தாயுமானவர் வாக்கின்படி, எல்லா வுயிர்களையும் தன் உயிர் போலக் கருதி வாழ வேண்டும். "நீயும் அவையும் வேறில்லை" என எண்ணத் தொடங்கும் நிலையே நீ தெய்வம் ஆகும் நிலை. இதையே அருணகிரியாரும் "யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே" என்றார். ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் வேறில்லை. நீயே பரம்பொருள்" எனும் ஆதிசங்கரர் அத்வைத தத்துவத் தையே மகாகவி பாரதியார், "தெய்வம் நீ என்றுணர்" எனும் சொல்லில் அடக்கினார். இதையே வான்புகழ் வள்ளுவரும்

யான்என தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" என்றார்.

எனவே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வம்போல் தெய்வப் பெற்றி பெற முயல்வோமாக

– ஓம் சிவம் திருச்சிற்றம்பலம் –

"ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
உலகின் பக்கேணி"

–மகாகவி பாரதியார் –

கொள்கைக்கோர் இதழ்

டாக்டர். பழ. முத்தப்பன் எம்.ஏ.பிஎச்.டி.,
முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி

இந்த நூற்றாண்டு பாரதிதாசன் நூற்றாண்டு, பாவேந்தரின் சிந்தனை களில் சமுதாயச் சிந்தனைகள், இன்றைய நூற்றாண்டுத் தலைவராக அவரைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. கேட்பாரற்றுக் கிடக் கின்ற பெண்மை நலத்தைக் கண்டு உளம் துடி துடித்துக் கவிமழை பொழிந் தவர் அவர். ஆம். பாவேந்தர் விதவைக் கோலத்தைக் கண்டு வருந்தியவர். கைம்மை என்ற பெயரில் பெண்மையை இழிவு செய்யும் போக்கைச் சாடியவர். விதவைமணம் தேவை என்பதைத் தமிழினத்திற்கு வாழ்வியல் கோட்பாடாகத் தந்தவர். விதவை மணக் கொள்கையைப் பத்தொன்பதின் தொடக்கத்தில் செட்டிநாடும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

செட்டிநாடு இதழியல் துறைக்கு ஆற்றியிருக்கும் – ஆற்றிவரும் பணிகள் தமிழ்மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். செட்டிநாடு இதழியல் பணியில் 1936ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் தொடங்கிய (தாது வருடம் ஆவணிமாதம்) 'மாதர் மறுமணம்' என்ற திங்கள் இதழ் நினைவுகூரத் தக்கதாகும். பாரதிதாசன் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க, விதவை மறு மணக் கொள்கையை வலியுறுத்தி–அக் கொள்கைக்கென்றே தோன்றிய இதழ் தான் 'மாதர் மறுமணம்'. கைம்மை என்றோ – விதவை என்றோ கூறுவது தவறு என்று கொண்டு, மறுமணம் என்ற சிறப்பால் இதழ் தொடங்கப் பெற்றிருப்பதிலிருந்தே அவ்விதழின் சிறப்பை உணரலாம். அவ்விதழின் முதல் ஒரு வருட இதழ்களின் ஓர் அறிமுகமே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

நகரத்தாரின் புரட்சி வேந்தரும் – குமரன் பத்திரிக்கை ஆசிரியருமாகிய சொ. முருகப்பா அவர்களின் துணைவியார், மு. மரகதவல்லியம்மையார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, காரைக்குடியிலிருந்து வெளிவந்தது 'மாதர் மறுமணம்' இதழ். இதழின் வருடச் சந்தா–இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு ரூ. 1–00. மலேயா, சைகோன், தென்ஆப்பிரிக்கா ஆகிய வெளிநாட்டுக்கு ரூ. 1.8.0 (1 1/2 ரூபாய்) தனிப்பிரதி ஒன்றரை அணா. (இப்பொழுதைய மதிப்பு 9 பைசா) முதல் இதழ் முதலே அட்டைப்படம் காந்தியப் பெருமான், விதவைப் பெண் ஒருவருக்கு ஆசி வழங்குவது போன்ற ஓவியத்தைக் கொண்டுள்ளது. ஓவியம் வரைந்தவர் கே. ஆர். சர்மா. பெரும் பாலும் ஒவ்வொரு இதழும் 48 பக்கங்களைப் பெற்று விளங்குகிறது.

முதல் இதழ் காந்தி, நேரு, சத்தியமூர்த்தி, டி.கே.சி. அவிநாசி ஆகிய பெருமக்களுக்கு அனுப்பப் பெற்று, அவர்களிடமிருந்து அபிப்பிராயம் பெற்று இரண்டாம் இதழில் வெளியிடப் பெற்றுள்ளது. எனவே, இவ்விதழ் தேசிய அளவில் வெளியிடப் பெற்றமை உணர முடிகிறது.

இதழில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், பத்திராதிபர் குறிப்பு (ஆசிரியர் பக்கம்), செய்திகள் என்ற அமைப்புகளில் செய்திகள் வெளியிடப்

பெற்றுள்ளன. அத்துணை பகுதிகளும் பால்ய விவாஹக் (குழந்தை மணம்) கண்டனம், விதவை மணம், மாதர் மறுமணம் ஆகிய கருத்துக்களைக் கொண்டே விளங்குகின்றன. படைப்புக்களைத் திறனாய்வு செய்தால், குழந்தை மணத்தால் விதவையாகிய பெண்களுக்கு, மறுமணத்தை வலியுறுத்தும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, படைப்புக்கள் அமைந்துள்ளன என்பது பெறப்படும். இத்தகைய படைப்பு தவிர, வேறு எக் கருத்தையும் இதழ் ஆசிரியர் ஏற்கவில்லை என்பதும் வெளியாகிறது.

பன்னிரண்டு இதழ்களிலும் முப்பதுக்கும் மேலான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. கவியோகி சுத்தானந்த பாரதியாரின் கவிதைகள் கவிதைப் படைப்புகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

"வெள்ளி வெளுக்குது பெண்மணியே – பட்ட
வேதனை தீருது பெண்மணியே
உள்ளம் விழித்தெழு பொன்மணியே – பிறப்
புரிமை கேட்கத் துணிந்திடுவோம்." இதழ் – 2.

"கொண்க னிறந்தால் கொழுந்திளமை இன்பத்தைப்
புண்ணாக்கி மண்ணாக்கிப் புன்கொடுமை செய்குவதேன்?
முட்டாக்குப் போட்டி ருட்டு மூலையிலே காவல் – வைத்தால்
கட்டுக்கடங் காதமனக் கள்வன் அடங்குவனோ?" இதழ்.6

இப்பகுதிகள் போல் கவிதைகளில் பெண்மையின் மறுமணக் கொள்கைகள் வலியுறுத்தப்பெற்று, லெ. மணி, உ. அரு. அருணாசலம் செட்டியார், ஸ்வாமி சோமசுந்தரன், வி. சுடலைமுத்து பிள்ளை, காந்திதாசன் உள்ளிட்ட கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. முதல் வருடக் கவிதைகளைப் பற்றிய திறனாய்வைத் தனி ஒரு கட்டுரையாகவே எழுதலாம்.

சிறுகதைகளும் குழந்தை மணத்தால் கணவனை இழந்த பெண்களின் மறுமணம் பற்றியே அமைந்துள்ளன. சிறுகதை இலக்கணங்களுக்கு ஏற்ப – அனைத்துச் சிறுகதைகளும் குறைந்த பக்கங்களையும், சிறு நிகழ்ச்சிகளை யும், சில பாத்திரங்களையும் பெற்றுத் திகழ்கின்றன. இரண்டாம் இதழில் பழிக்குப் பழி என்ற மொழிபெயர்ப்புக் கவிதையும் இடம் பெற்றுள்ளது. எட்டாம் இதழில் க. சி. அழகப்பன் என்பவர் எழுதிய 'தங்கையின் துயர் களைந்த தமயன்' என்ற சிறுகதை அந்தணர் மரபுக் கதையாகும். அம் மரபில் விதவைகள் படும்பாட்டை வேதனையோடு ஆசிரியர் குறிப்பிட்டு, விதவை மணத்தோடு கதையை முடித்துள்ளமை நினைவு கூறத் தக்கதாகும்.

ஏழாம் இதழில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் சிறுகதை இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பாவேந்தரின் கட்டுரை, நாடகம் ஆகியவை இன்று தனித் தனியே வெளியிடப் பெற்றுள்ளன. பாவேந்தர் கவிஞர், உரைநடை ஆசிரியர் என்ற பெருமையோடு, அவர் ஒரு சிறுகதை எழுத்தாளர் என்பதையும் மாதர் மறுமண இதழ் நிறுவுகிறது. அவரின் சிறுகதை, 'விதவைகள் ஷேமம்' என்பதாகும். தேவகி என்ற விதவையின் வாழ்வியலை உள்ளம் ஈர்க்கப் பாவேந்தர் கதையாகப் படைத்துள்ளார். "நம் நாட்டிலுள்ள விதவைகள் அனைவரும், நமது சுந்தரன் சொல்வது போல வெளிப்பார்வைக்கு ஷேமமாகவே இருக்கிறார்கள் என்று சொல்லிக் கண்ணீ ரோடு டாக்டர் சென்றார்" என்ற தொடரோடு கதை நிறைவுறுகிறது.

சிறுகதைகள் சுமார் 40க்கு மேலாக இடம் பெற்றுள்ளன. அனைத்தும் மறுமணத்தை வரவேற்று எழுதப் பெற்றுள்ளன. கட்டுரைகள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்றுள்ளன. இதழ்தோறும் சிறுகதைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது போல், கட்டுரைகள் முக்கியத்துவம் பெறவில்லை என்றே தோன்றுகிறது. 12 இதழ்களில் ராஜாராம் மோகன்ராயின் வாழ்க்கைக் குறிப்பு கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் இதழில் சங்கிலியாரின் திருமணம் பற்றிய, ஒரு மிகச் சிறந்த கட்டுரை இடம் பெற்றுள்ளது. கட்டுரையாளரின் பெயர் ஆராய்ச்சியாளன் என்று குறிக்கப் பெற்றுள்ளது. புராணச் செய்தியை மிக அற்புதமாகத் திறனாய்வு செய்துள்ள அவ்வாசிரியரைப் பாராட்டவே வேண்டும். இன்னும் குறிப்பாகச் சொன்னால், இன்றையச் சமய இதழ்களில் இக்கட்டுரை மறு பதிப்பாக வெளியிடப் பெறலாம். சங்கிலியாரின் திருமணம் மறுமணமா – விதவை மணமா என்பது பற்றிய கருத்து மோதலை வெளிப் படுத்தி, விதவை மணமே என்ற முடிவைக் கட்டுரையார் தருவது ஆய்வுக் குரியதாக அமைகிறது. இதழ்களில் வெளிவந்துள்ள பல கட்டுரைகள் இருட்டில் கிடக்கும் விதவைகளை, வெளிச்சத்திற்குக் கொண்டுவர ஏற்படும் முயற்சியாக அமைந்துள்ளன எனலாம். சொக்கநாதபுரம் சி. சோம. கண்ணப்பன் அவர்கள் எழுதிய 'எல்லாம் தலைவிதியா'? (இதழ். 12) என்ற கட்டுரை மனதில் நிற்கிறது.

இதழில் மிகச் சிறப்பிடம் பெறுவது இதழ்களின் இறுதியில் இடம் பெறும் பத்திராதிபர் குறிப்புப் பகுதியாகும். இது இன்றைய இதழ்களில் காணப்பெறும் ஆசிரியர் பக்கத்தின் முன்னோடி என்றே குறிப்பிட வேண்டும். இப்பகுதியில் இதழாசிரியர் எங்கெங்கு மாதர்களுக்காகப் புரட்சிகள் நடந்திருக்கின்றன, பெண்கள் எங்கெங்கு உயர் பதவிகள் பெற்றிருக்கிறார் கள் எப்பகுதிகளில் பெண்களைக் கொடுமை செய்தவர்கள் தண்டிக்கப் பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியைக் குறிப்பிட்டுத் தன் கருத்தை ஆசிரியர் வெளிப்படையாகத் துணிவுடன் வெளியிட்டுள்ளார். நாடு அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில் எழுத்துரிமையும், பேச்சுரிமையும் மறுக்கப்பட்டிருந்த காலத்தில் இதழாசிரியர்ந்த குறிப்புகள் பெண்மையின் உயர்வுக்குச் சான்றாக விளங்குகின்றன.

இதழின் மற்றொரு பகுதியான 'செய்திகள்' என்ற பகுதியில், அவ்வப் போது நடைபெற்ற மாதர் மறுமணம் பற்றிய புள்ளிவிவரங்கள், மாதர் மறு மணம் பற்றி நடைபெற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றிய செய்திகள் ஆகியவை இடம்பெற்று வரலாற்றுப் பகுதியாக அப் பகுதி அமைந்து சிறக்கிறது. இவ்வாறு ஒவ்வோர் இதழிலும் வெளியாகியுள்ள செய்திகளைப் பற்றிய திறனாய்வை வெளியிட்டால் அதுவே தனி ஒரு நூலாகிவிடும்.

இவ்வாறு விதவை மறுமணம் என்ற கொள்கைக்கென்றே தனி இதழ் தொடங்கப் பெற்று – அக்கொள்கை தொடர்பான எழுத்துக்கள் ஆதரிக்கப் பெற்று – செட்டிநாடு அப்பணியை நாடு அடிமையுண்ட காலத்தில் துணி வோடு – உணர்வோடு செயலாற்றியதை எண்ணும்போது, செட்டிநாட்டு உள்ளங்கள் ஒவ்வொன்றும் பெருமைப்படவே செய்யும். இக்கட்டுரை ஓர் அறிமுகமே தவிர – திறனாய்வு நிலை தனி நூலாக வெளியாகலாம். அத்தகைய அளவிற்கு மாதர் மறுமணம் இதழ் சிறப்புற்று விளங்குகிறது எனலாம்.

பாடுவார் முத்தப்பர் வணக்கப் பதிகம்

சிவநெறிக் கவிஞர்இராகவன் முத்து,
13.14, கொட்டமடக்கியார் தெரு
காரைக்குடி

பதிகம் (எண்சீர் விருத்தம்)

1) நேமம் எனும் உயர்கோயில் நகரத் தாரின்
நிமிர்புகழாம் திருவிளக்குச் சுடராய் வந்தாய்!
நாமம்எனும் நலத்தாலும் முத்தாய் ஆனாய்!
நாயகனாம் முருகனையும் ஏவல் கொண்டாய்!
சேமம்எலாம் வழங்கிடவே வாழ்த்துத் தந்தாய்!
செட்டி மக்கள் குலம் ஓங்கும் "விலாசம்" வைத்தாய்!
ஓமம் அதை முறையாக வளர்க்கும் பாங்கில்
உன்பெயரே ஓதுகிறோம்! வாழ வைப்பாய்!

2) அசையாத மலையினையும் அசைத்து வைப்பாய்!
ஆழ்கடலை மலைபோல உயர்த்தி வைப்பாய்!
இசையாரும் கந்தனருள் சேர்த்து வைப்பாய்!
எண்ணம்போல் வளமனைத்தும் கோர்த்து வைப்பாய்!
நசையாரும் சுகமெல்லாம் எய்த வைப்பாய்!
நலிவுறுத்தும் தீர்கிளை கொய்து வைப்பாய்!
விசையாரும் சொற்பலித முத்தப் பய்யா
வித்தகரே! உம்மடிக்கு வணக்கம் கோடி!

3) ஏமாற்றுக் காரர்களின் இடுப்பொ டிப்பாய்!
எத்தர்களின் முகத்திரையைக் கிழித்து வைப்பாய்!
பூமாலை சூட்டியவர் வாழ வைப்பாய்!
பொன்னாரும் செந்தமிழின் இனிமை தேர்வாய்!
பாமாலை சூட்டியவர் தமை உ யர்த்திப்
பனிவெள்ளி இமயம்போல் நிமிர வைப்பாய்!
கோமானாய் வாழ்விக்கும் முத்தப் பய்யா!
குறைநீக்கிக் குலம்காப்பாய்! வணக்கம் கோடி!

4) தேவைக்குத் தான்ஓடி வந்து நிற்பாய்!
திரண்டபெரும் செல்வமலை உவந்த ளிப்பாய்!
பார்வைக்கு மன்மதனாய்த் தோன்ற வைப்பாய்!
பண்புக்குச் சான்றாக வாழ வைப்பாய்!
வேர்வைக்குப் பரிசாக ஈட்டும் செல்வம்
வீணரிடம் சிக்கிவிடில் மீட்டு வைப்பாய்!
சேவைக்கு முன்நிற்கும் மன்னன் ஆவாய்!
செவ்வேளின் அருள்விளக்கே! வணக்கம் கோடி!

5) முன்னவன்காண்! முழுப்புலமை கொண்டான் தான்காண்!
முருகனருள் தனதுரிமை ஆக்கிக் கொண்ட
மன்னவன்காண்! சொற்பழுது புரிந்தி டாத
மரபினன்காண்! நகரத்தாரின் மணியா னான்காண்!
அன்னையன்காண்! அருள்வழங்கும் ஆல யம் காண்!
அறுமுகவன் தன்கருணை பருகு விக்கும்

தொன்னையன்காண்! முத்தப்ப அய்யா என்னும்
சுடர்ப்பேரோன் காண்என்று சொல்லாய் நெஞ்சே!

6 பெரியானைப் பெரும்சிறப்பு வாக்கி னானை
பேசரிய பண்புநலம் தனதாக் கொண்ட
நெறியானை வம்பரையும் நல்ல ராக்கும்
நெஞ்சானை என்றென்றும் நிற்கும் வாக்குக்
குரியானை அஞ்சாத வாய்மை பூணாய்க்
கொண்டானை பாவலர்கள் துன்பம் கொள்ளத்
தரியானை அவர்க்குதவும் தகைமை யானைத்
தமிழ்மணக்கும் பெருமானை வணங்கி வாழ்வாம்!

7 நெஞ்சகத்தான்! நினைவகத்தான்! நீதி மிக்கான்!
நிறைமொழியான்! கருணைவள நிதியம் ஈவான்!
தஞ்சமென வணங்கிடுவார் உறவே ஆவான்!
தன்செயலால் முருகனருள் கூட்டி வைப்பான்!
வஞ்சமெலாம் போய்ஒழியும் வாக்குத் தந்தான்!
வாசலுக்குள் திருமகளை வரவே வைத்தான்!
கொஞ்சுதமிழ்த் திருமுகத்தால் விலாசம் தந்தான்!
கொற்றவனாம் முத்தப்பன் பாதம் போற்றி!

8 எம்பெருமான் புன்னகையால் புரங்கள் மூன்றும்
எரித்தருளும் சீர்த்தியினை விதந்து சொன்னான்!
தன்பெருமை உணர்ந்தாலும் ஆண வத்தால்
தலைதூக்கித் தடுமாறாப் பெருமை பூண்டான்!
அன்புடனே தன்இனத்தார் வாழ என்றே
அணிதிருவைப் பணிவாக வேண்டி நின்றான்!
கொம்புத்தேன் கவிதையினால் குடை நி ழற்றும்
கோன்ஆனான் முத்தப்பன் தாள்கள் வாழ்க!

9 பாவாணர் வளங்காண முருகப் பெம்மான்
பரிந்தருளும் நேர்த்தியினைக் குறிப்பாய்ச் சொன்னாய்!
நாவாரச் சுவைக்கவியாம் தேனால் பாலால்
நாடோறும் கந்தனுக்கு முழுக்குச் செய்தாய்
பூவாரும் செல்வியரைப் புரிந்து வைத்தாய்!
பொன்னான நெஞ்சாலே பார்அ ளந்தாய்!
தேவாரம் நிகர்சீர்த்தி விலாசம் தந்தாய்!
சீமானாம் திருவாளா! பாதம் போற்றி!

10 அறுந்ததலை ஆட்டுடலில் பொருந்த வைத்தாய்!
அறுமுகனார் அருள்பெருமை விருந்து வைத்தாய்!
பெருந்திருவாம் தமிழாலே பிணிகள் தீர்த்தாய்!
பிழையறியாப் புராணத்து நுணுக்கம் சொன்னாய்!
திருந்துபெரும் தகைமைக்கு வாழ்த்துச் சொன்னாய்!
தீதறியா நெஞ்சினர்க்குக் காவல் தந்தாய்!
இருந்தமிழாம் முடிவேந்தே! முத்தப் பய்யா!
என்றென்றும் உம்மடிகள் வணங்கு வோமே!

மூவர் தேவார முதற்பதிகத் தொன்மைக் கூறுகள்

பொற்கிழிக் கவிஞர்
டாக்டர் ச. சவகர்லால்
ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி

முன்னுரை :

தொன்மை என்ற சொல் இங்கே Myth என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகக் கையாளப்படுகிறது. தொன்மையின் பல்வேறு விளக்கங்களையும் அது பற்றிய விதிகளையும் புதுமைக் காலத்தில் தொன்மை பெற்ற தாக்குதல்களையும் இந்திய நாட்டுத் தொன்மைத் தோற்ற வளர்ச்சிகளையும் மூவர் தேவார முதற்பதிகங்களில் இடம் பெற்றுள்ள தொன்மைகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

தொன்மை விளக்கம் :

கற்றோர் ஏற்கும் வண்ணமும் மற்றோர் புரிந்து கொள்ளும் வண்ணமும் தொன்மைக்கு ஒரு விளக்கங்காண்பது அரிதான ஒன்றே![1]

தொன்மைகள் ஒரு வகையில் அறிவியற் கண்டு பிடிப்புக்களின் கற்பனையான முன்னோடி எனலாம்.

பண்மை மாந்தர் தம்மைச் சுற்றி நிகழும் இயற்கை நிகழ்வுகளைக் கூர்ந்து பார்த்தனர். பல வினாக்களை எழுப்பினர். இயற்கை நிகழ்ச்சிகள் ஒரு வரையறைக்குள் அதை மீறாமல் ஒழுங்காக நடக்கின்ற செயலைக் கண்டு வியந்தனர். இவைகட்கு முதன்மைக் காரணம் என்னவெனத் தமக்குள்ளே வினவினர்.

கதிரவன் காலையில் எழுவதும் பகல் முழுவதும் ஒளிவீசி மாலையில் மறைவதும் ஒழுங்காக நிகழ்கின்றன. சந்திரனும் விண்மீன்களும் இரவிலே ஒளி சிந்துகின்றன. முழு மதி ஒவ்வொரு நாளும் ஒளி குறைந்து கொண்டே வந்து பதினைந்தாவது நாளில் முழு ஒளியையும் இழந்து விடுகிறது. பின் பிறை பிறையாக வளர்ந்து மறு பதினைந்தாவது நாளில் முழுமதியாகிறது.

இன்னும் எத்துணையோ இயற்கை நிகழ்ச்சிகட் கெல்லாம் காரணங்களை வினவிப் பார்த்தவர் பொருத்தமான நம்பக்கூடிய காரணங்களைக் கண்டு சொல்ல அவர்கள் மத்தியில் எல்லாம் அறிந்த மேதைகளும் இல்லை. எதையும் விளக்கும் நூல்களும் இல்லை.

எனவே, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் சடங்குக் கூறுகட்கும் அவர்களே தடையெழுப்பி விடையுங்கண்டு அதற்கேற்ற முறையில் கதைகளைப் பின்னிச் சொல்லத் துவங்கி விட்டனர்.[3] அழகாகவும் அருமையாகவும், விந்தையாகவும் அவைகள் அமைந்தன வாதலால் அவைகள் நிலை பெற்றன. வழிவழியாக வந்து சில படி வளர்ச்சிகளைப் பெற்று நின்று நிலவுகின்றன.

தொன்மை அன்றிலிருந்து இன்று வரை மானுட உலகில் மாபெரும் சிறப்புப் பெற்று விளங்குகிறது. சமயச் சடங்குமுறை விளக்கமாகத் திகழ்ந்த அன்றும் மனிதமன ஆழ உணர்வைக் காணும் முயற்சிக்குக் கருவியாகப் பயன்படும் இன்றும் அது சிறந்த இடத்தைப் பெற்று நிலவுகிறது.[4]

---

1. Encyclopaedia Britanica Vol. 15
2. Encyclopaedia Americana Vol. 19
3. The World Book. Encyclopaedia Vol. 13 1970
4. LILLIAN FEDER. Ancient Myth in Modern Poetry 1971-P.4

தொன்மைத் தோற்ற விதிகள் :

கடவுளரும் அவர்களைப் பின்னிய தொன்மைகளும் தோன்றிய தோற்றம் பற்றி நான்கு விதிகள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு விதியும் தொன்மையைக் கற்பதன் இன்றியமையாமைக்கும் கற்பதனால் ஏற்படும் இன்பத்திற்குமாக ஒவ்வொரு காரணத்தைத் தருகின்றன.

முதல் விதி :

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க அறிஞர் ஊகிமீரஸ் (Euhimerus)ஒரு காலத்தில் உயிரோடு வாழ்ந்த மன்னர்கள், வீரர்களின் அடிப்படையிலேயே பழங்கடவுளர்கள் படைக்கப்பட்டனர் என்று நம்புகிறார். ஊகிமீரஸ் விதி என இது அழைக்கப்படுகிறது.

இரண்டாவது விதி :

இரண்டாவது விதி மொழி வளர்ச்சி பற்றி ஆய்ந்த மொழியியல் வல்லுநர்கள் படைத்ததாகும்.

காலம் அனைத்தையும் விழுங்குகிறது (Time eats up everything) என்று வழங்கிய வழக்குப் பின் காலத்திற்கோர் கடவுளைப் படைத்து விழுங்கும் செயலை அக்கடவுளுக்கேற்றிப் பிறகு பூதம் குழந்தைகளை விழுங்குகிறது (Chrono (Saturn) densours children) என வந்து கதைகள் மலர்ந்து விடுகின்றன என்பது இவ்விதியுடையார் கருத்தாகும்.

மூன்றாவது விதி :

இயற்கைப் பொருட்களின் தோற்றக் காரணத்தை விளக்குவதற்காக அவைகளை உயிருருவாகஉருவகப்படுத்திய முறையால் (Personification) தொன்மை தோன்றியிருக்கலாம் என்பது இவ்விதி. இது தொல்லியல் ஆய்வாளர்களாலும் (Anthropologists) மானிய இன வரலாற்றாய்வாளர்களாலும் துணைக் கொள்ளப்படுகின்றது.

நான்காவது விதி :

எமிலி டர்க்கின் (Emili Durkein)என்ற பிரெஞ்சு சமூகவியலறிஞர் தொன்மைகளைச் சமூக அடிப்படையில் விளக்குகிறார். சமூகச் சடங்கு முறைகள் விழாக்கள் இவைகளை இவர் ஆதாரமாகக் கொள்கிறார்.

புதுமைக் காலத்தில் தொன்மை :

19 ஆம் நூற்றாண்டில் தொன்மை என்றாலே உண்மைக்கு மாறானது என்ற கருத்து நிலவியது.

தொன்மை பற்றிய அறிவியல் முறை ஆராய்ச்சிகள் (Karl Otfried Muller (1825) யிலிருந்து துவங்கின. ஆனால் (Max Muller (90) ன் அருமையான ஏராளமான ஆராய்ச்சிகளின் விளைவாகவே தொன்மை பற்றிய கல்வி 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செல்வாக்குப் பெற்றது.

*மாக்ஸ் முல்லரின் கருத்துப்படி தொன்மையியல் என்பது மொழி நோயின் ஒரு விளைவாகும். (According to Max Muller Mythology is the result of a disease of language).

பேரறிஞர் பலர் சமயச் சடங்கு முறைகளே தொன்மைக்கு மூலம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். சமயச் சடங்கு நிகழ்ச்சிகளின் விளக்கமாகவே தொன்மைகள் விளங்குகின்றன என்பது அவர்கள் கருத்து.

---

5. The World Book. Encyclopaedia. Vol. 13.1970

இந்தியத் தொன்மைகள்

இந்திய நாட்டுத் தொன்மைத் தோற்றக் காலம் வரையறுக்க இயலாமல் உள்ளது.

* Cited : Encyclopaedia Britanica Vol. 15

[6]இந்திய நாட்டு இலக்கியங்களுள் புராணங்கள் ஒரு பெரும் பகுதி அவற்றைப் பற்றி அறிஞர்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆராய்ச்சி செய்தும் நம்பக் கூடிய எந்த முடிவுகளும் தோன்றவில்லை. ஆயினும் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

எது தொன்று தொட்டு இன்று வரைக்கும் பரவியிருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயு புராணம் கூறுகிறது.

இந்தியக் கடவுளரையும் அவர் பற்றிய தொன்மைகளையும் முந்தித் தருவன மிகப் பழைய இலக்கியமாகக் கருதப்படும் வேதங்கள் தாம். ஆனால் வேதங்களின் படைப்புக் காலம் இன்னும் யூகமாகவே உள்ளது. அறிஞர் கோல் புரூக் கி.மு. 14 ஆவது நூற்றாண்டில் வேதங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறார்.

Cited : Encyclopaedia Britanica Vol. 7

வேதங்கள் பற்றிய காலக் கணிப்பில் வேறுபாடுகள் நிலவுகின்றனவெனினும் மிகப் பழமையானவை அவை என்பதில் உடன்பாடே.

வேதங்களில் பாராட்டப் பெறும் கடவுளர்க்கு உருவங்கள் இல்லை. பின் வந்த அடியவர்களே கடவுளர்க்குத் தம் கற்பனையில் உருவங்களைக் கொடுத்தார்கள் எனப் பேராசிரியர் வில்லியம்ஸ் கூறுகிறார்.[7]

பேராசிரியர் மாக்ஸ் முல்லரும் இக்கருத்தை உடன்பட்டு வேத காலச் சமயத்தில் உருவ வழிபாடு இல்லையென்றும் உண்மைக் கடவுள் வழிபாட்டின் சிதைந்த மாறுதலே உருவ வழிபாடு என்றும் கூறுகிறார்[8].

எப்படியோ வேதங்களில் துவக்கப்பட்ட கடவுட் செய்திகள் தொன்மைகளாக வளர்ந்து கிளைத்தன. ஒவ்வொரு கடவுளர்க்கும் புராணங்கள் பல்கிப் பெருகின.

புரணாங்களில் காலத்தைத் தெளிவாக வரையறுத்துக் கூற இயலாவிடினும் அவைகள் கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியிருக்க இயலாது என்கிறார் அறிஞர் வில்கின்ஸ்.[9]

தொல் சிறப்புக் காவியங்களில் மனிதராகவும் வீரராகவும் குறிக்கப்பட்டவர்கள் புராணங்களில் தெய்வங்களாக்கப்பட்டுள்ளனர் என்பதே அவர் கூற்றுக்கு ஆதாரம்[10].

வேதங்கள் இந்துக்கள் அனைவருக்கும் ஒரே சமயத்தையும் கடவுளரையும் குறிக்கும்போது பின் வந்த புராணங்கள் தனித் தனியாகக் கடவுளரைப் பிரித்து அவர்கட்குள்ளே உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கத் துவங்கி விட்டன.

எந்தக் கடவுளைப் பற்றிப் புராணம் எழுகிறதோ அந்தக் கடவுளைத் தன்னேரிலாதவர் என்றும் மற்றையவர் அவர்க்குக் கீழ் என்றும் தொன்மைக் கதைகள் கட்டப்பட்டன.[11]

---

6. Encyclopaedia Britanica Vol – 7
7. Prof : Williams Indian Wisdom P-15
   Cited : Woilkins Hindu Mythology
8. Prof : Max Miller : Chips from a German Workshop P-9
   Cited : Wilkins : Hindu Myhtology P -9
9. Wilkins W.J. Hindu Mythology ...1 P-77
10. Ibid
11. Ibid

கடவுள் பற்றிய தொன்மைக் குறிப்புக்கள் விளக்க முடியாத சிறப்புச் செய்திகட்கு விளக்கமாகவும் உணர்வோடு கலந்து பதிகின்ற உயிரோட்டமுடையவையாகவும் திகழ்ந்தமையால் பின் வந்த இலக்கியங்கள் இத்தொன்மைகளைத் தவறாமற் கையாண்டன. அதுவும் வழிபாட்டு இலக்கியங்கள் கடவுளரின் தொன்மைக் கூறுகளைக் குறிப்பிடாமல் அமைவதில்லை.

தேவாரத் தொன்மைகள் :

இவ்வகையில் தான் தமிழ் பக்தி இலக்கியங்களும் அமைந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடினார்கள்.

'கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரும் சிவத்தலந்தோறும் சென்று பரமனுக்குப் பதிகமாகப் பாமாலை சூட்டினார்கள்.

இம் மூவர் பாடிய பதிகங்கள் தேவாரம் எனப் போற்றப்பட்டன.

முழுக்க முழுக்கப் பரமனையே பாடி மகிழும் பாக்கள் ஆதலினால் தொன்மைக் கூறுகள் நிறைந்துள்ளன. மூவருடைய முதற்பதிகங்களில் விரவிக் கிடக்கும் தொன்மைகளை எடுத்து ஆராயலாம்.

மூன்று பதிகங்களிலும் குறிக்கப் பெற்ற தொன்மைகள் பதினான்கு. அவை

1. சிவபெருமான் மதியணிந்தது
2. சிவபெருமான் விடையேறியது
3. சிவபெருமான் சடையணிந்தது
4. சடையிற் புனல் கொண்டது
5. சுடலைப் பொடி பூசியது
6. மண்டையோட்டில் பலி தேர்ந்தது
7. யானைத் தோல் போர்த்தியது
8. திரிபுரம் எரித்தது
9. உமையொரு பாகங் கொண்டது
10 மழுவேந்தியது
11. அரவணிந்தது
12. இராவணன் கைலையைப் பெயர்த்தது
13. பிரமன் சிவனை வழிபட்டது
14. பிரமனும் மாலும் முடி அடி தேடியது

மேற்கண்ட தொன்மைக் கூறுகள் பதினான்கும் வருகின்ற இடங்கள் முப்பத்தேழு.

மூவரும் அவரவருடைய முதற்பதிகத்தில் மேற்கண்ட இந்தத் தொன்மைக் கூறுகள் ஒவ்வொன்றையும் எத்துணை முறை கையாண்டுள்ளனரெனக் கணக்கிட்டால் கீழ்க்கண்ட வண்ணம் அமைகிறது.

எண்	தொன்மை	கையாண்ட இடங்கள்		
		சம்பந்தர்	நாவுக்கரசர்	சுந்தரர்
1.	மதியணிந்தது	2	1	2
2.	விடை யேறியது	3	1	1
3.	சடையணிந்தது	1	1	-
4.	சடையிற் புனல் கொண்டது	1	1	-
5.	சுடலைப் பொடி பூசியது	1	1	-

6.	பலி நேர்ந்தது	3	2	-
7.	யானைத் தோல் போர்த்தது	1	1	-
8.	திரிபுரம் எரித்தது	1	-	1
9.	உமையொரு பாகங்கொண்டது	1	-	1
10.	மழுவேந்தியது	1	-	1
11.	அரவணிந்தது	2	-	-
12.	இராவணன் கைலையைப் பெயர்த்தது	1	1	
13.	பிரமன் சிவனை வழிபடல்	1		
14.	பிரமனும் மாலும் முடி அடி தேடியது	1		

முதற் பதிகங்களில் கையாளப் பெற்ற இந்தப் பதினான்கு தொன்மைகளையும் இவ்வண்ணம் கணக்கிட்டுப் பார்த்ததில் திருஞான சம்பந்தர் பதினான்கு தொன்மைகளையும் திருநாவுக்கரசர் ஏழு தொன்மைகளையும் சுந்தரர் ஐந்து தொன்மைகளையும் கையாண்டுள்ளமை தெரிகிறது.

தொன்மைகளைக் கையாள்வதில் திருஞான சம்பந்தர்க்கு ஈடுபாடு அதிகமாகவும் திருநாவுக்கரசர்க்கும், சுந்தரருக்கும் அது குறைந்தும் இருப்பது புலனாகிறது.

மதியணிந்த கூறும் விடையேறிய கூறும் மூவராலும் கையாளப் பெற்ற சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. அப்படி அதிலுள்ள சிறப்பு என்னவென்பது நுணுக்கமான ஆய்வுக்குக் களமாகிறது.

சடையில் புனல் கொண்டது அரவணிந்தது, பிரமன் சிவன் வழிபட்டது. பிரமனும் மாலும் முடி அடி தேடியது இந்த நான்கும் திருஞானசம்பந்தரால் மட்டுமே கையாளப் பட்டுள்ளன மற்றைய இருவரும் அந்தக் கூறுகளைத் தொடவில்லை. (இது முதற்பதிகங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டது) இதற்கும் ஏதேனும் காரணம் உள்ளதாவென்பது தொடர்ந்து வரும் ஆய்வில் வெளியாகலாம்.

ஒவ்வொரு தொன்மைக் கூறும் கடவுளோடு தொடர்புடைய கதைகளோடு திகழ்கின்றன. ஒரே கூறு ஒன்றுக்கு மேற்பட்ட வேறுபட்ட கதைகளோடு விளங்குவது ஆராய்ச்சி விரிவிற்கு இடந்தருகிறது.

சிவபெருமான் மதியணிந்த தொன்மையை ஆராய்ந்தால் வேறுபட்ட செய்திகள் கிடைக்கின்றன.

[12]தட்சன் மக்களாம் அசுவினி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தெழுவரையும் சந்திரன் மணக்கிறான். உரோகினியிடம் மட்டும் குரு சார்பான முழு அன்பு செலுத்துகிறான். அன்புப் பங்கீட்டு முறைத் தவறு பற்றித் தட்சனிடம் சந்திரனின் ஏனைய மனைவியர் முறையிடுகின்றனர். ஆற்றல் படைத்த தட்சன் சந்திரனின் கலைகள் குறையுமாறு சாபமிடுகிறான். கலை குறைந்து வருந்துகிறான் சந்திரன். பிற தேவர் அறிவுரைப்படி சிவனை வணங்கி அவரால் காக்கப்பட்டுப் பதினைந்து நாட்கள் கலைகள் வளரவும், பதினைந்து நாட்கள் கலைகள் தேயவுமாக அருள் வழங்கப் பெறுகிறான்.

சிவபுராணத்தில் வரும் இந்தக கதையில் சந்திரனைச் சிவபெருமான் தலையில் அணிந்து கொண்டாரா என்பது தெளிவாகவில்லை.

[13]அதே சிவபுராணத்தில் மற்றொரு செய்தி கிடைக்கிறது. தட்சனின் யாக நெருப்பில் தேவி உடல் விட்டு விட்டு மலையரசன் மகளாகப் பிறக்கிறாள். சதி தேவியைப் பிரிந்த வருத்தம் சிவனின் உள்ளத்தை நெருப்பாகத் தகிக்கிறது. இறைவனைத் தகித்த வெப்பம்

சகல லோகங்களையும் தாங்க முடியாமல் தகிக்கிறது. தேவர்கள் பிரமனிடம் விரைகின்றனர்.

சிவன் தலையில் சந்திரனைத் தங்கச் செய்தால் அதன் குளிர்ச்சியால் அவருள்ளம் சாந்தமடையும். நம்மைத் துன்புறுத்தும் வெப்பமும் தணியும் என்று கூறுகிறார் நான்முகன்.

தேவரனைவரின் வேண்டுகோட்கிணங்க ஈசன் சந்திரனைத் தமது தலையிலே சூடிக் கொண்டார் என்று இன்னொரு செய்தி கிடைக்கிறது. இதில் தலையில் சூடினார் என்பது தெளிவாக உள்ளது.

[14]மற்றுமொரு செய்தி அறிஞர் வில்கின்சு என்பாரால் தரப்படுகிறது. பாற்கடலைக் கடையும்போது கிடைத்த பொருள்களில் தமக்குரிய பங்காகப் பெற்ற பிறைச் சந்திரனைச் சிவன் நெற்றியில் சூடியுள்ளார் என்று அவர் கூறுகிறார். (இதற்கு இலக்கியச் சான்றுகள் கிடைக்கலாம்)

சிவபெருமானின் தலையில் அமைந்துள்ள மதி எப்போதும் எங்கும் பிறை வடிவமாகவே காணப்படுகிறது. தன் உடல் வெப்பம் குறைவதற்காக அணியப் பெற்றதனால் முழுமதியாக இருக்கலாம். தட்சனின் சாபத்திலிருந்து விடுதலையளித்துத் தலையிலணிந்தார் என்று கொண்டால் தேய்ந்து வளரும் தோற்றங்கள் தலையில் அமையலாம். பாற்கடலைக் கடைந்த போது பங்காகக் கிடைத்த பிறைமதி எனக் கொண்டால் பிறையாகவே இருக்கலாம்.

மூன்று வேறுபட்ட தோற்றங்கள் கொண்டு மூன்று கதைகளிருக்கும் போது சூடியிருப்பது பிறையாக இருத்தல் ஆராய்ச்சிக்கு இடருகிறது.

துன்பப்படுவோரை தாங்கிக் காப்பான் என்ற கருத்தை விளக்கச் சந்திரனைத் தலையில் தாங்கச்செய்திருக்கலாம். முழுமதியாகவே தலையில் காணப்பட்டால் வளர்ந்து தேயும் இயல்பு தெளிவாகாமற் போகக் கூடும் என்ற கருத்தில் பிறைமதி சூட்டப்பட்டிருக்கலாம்.

திரிபுரமெரித்த தொன்மைக்குச் சித்தாந்த விளக்கம் மறைமலை அடிகளாரால் தரப்பட்டுள்ளது.

[15]உயிர்களைப் பொதிந்து வருத்தும் ஆணவம் மாயை வினை என்னும் மும்மலங்களும் இறைவனது அருள் நெருப்பால் எரிக்கப்படுதலையே பொதுமக்கள் எளிதில் உணர்ந்து கொள்ளும் பொருட்டு வானத்திற் பறந்து செல்லும் மூன்று தீய அரக்கர் தம் பட்டினங்கள் இறைவனது நெற்றிக் கண் நெருப்பால் எரிந்தனவாக வைத்து ஒரு புராணக் கதை எழுதப்பட்டது, என்கிறார். அதற்குச் சான்றாக,

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே

திருமந்திரம் 329

என்ற திருமூலர் வாக்கைக் காட்டுகிறார்.

[16]சிவபெருமானையும் அம்மையையும் பற்றி எழுந்த ஏனையக் கதைகளும் எல்லாம் உண்மையில் நிகழ்ந்தனவல்ல. அக்கதைகளெல்லாம் சைவ சித்தாந்த

---

12. இராமநாதன் எஸ் (கார்த்திகேயன்) சிவபுராணம் பி. 119
13. Ibid P/ 296
14. WILKINS WJ. Hindu Mythology P. 225

நுண்பொருள்களை உள்ளடக்கிப் பருப்பொருளறிவினாரைத் தெருட்டுதற் பொருட்டுப் புனைந்து வைக்கப் பட்டனவாகும் என்ற ஆழ்ந்த சைவ அறிஞரான மறைமலை அடிகளார் தம் கூற்று நம் ஆய்வுக்குப் புதிய வழி காட்டுகிறது.

எல்லாத் தொன்மைச் செய்திகளையும் இந்த வழியில் ஆய்வதே ஆய்வின் நோக்கமாயினும் அளவு கருதி இந்த இரண்டு செய்திகளோடு இந்த ஆய்வு அமைகிறது.

முடிவுகள் :

தொன்மைகள் அனைத்தும் முன் வாழ்ந்தோர் தமக்குத் தாமே அளித்துக் கொண்ட விடைகளேயாம்.

கடவுளின் தன்மைகளை விளக்க வந்த தொன்மைக் கூறுகள் கதைகளை விளக்குவன.

கடவுள் பலரானதும் அவர்கட்குள்ளே உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கும் தொன்மைகள் எழுந்தன.

மூவர் பதிகங்களில் தொன்மைக் கூறுகள் விரவிக் கிடக்கின்றன.

தொன்மைகளைக் கையாள்வதில் திருஞான சம்பந்தர் அதிக ஈடுபாடு காட்டுகிறார்.

வைச சித்தாந்தக் கருத்துக்களைப் பொதுமக்கட்கு விளக்கவே சிவன் பற்றிய தொன்மைகள் எழுந்தன.

---

15. மறைமலையடிகள் மாணிக்கவாசர் வரலாறும் காலமும் பி. 444
16. Ibid P. 446

துணை நூற் பட்டியல்
ஆங்கில நூல்கள்

1. Encyclopaedia Americana Vol. 19
2. Encyclopaedia Britanica Vol. 15
3. LILLIAM FEDER Ancient Myth in Modern Poetry Princeton New Jerscy 1971
4. MAX MULLER : Chips From A German Workshop
5. The World Book : Encyclopaedia Vol. 13 U.S.A. 1970
6. WILKINS. W.J. Hindu Mythology (Vedic and Puranic) Delhi Book Store 1969 Nai Sarak Delhi 6 1972
7. WILLIAMS : Indian Wisdom

தமிழ் நூல்கள்

8. கலைக்களஞ்சியம் பகுதி 7
9. சதாசிவ செட்டியார். கயப்பாக்கம், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் க,உ.ங திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1.140 பிரகாசம் சாலை, சென்னை. 1 1073
10. சதாசிவ செட்டியார் கயப்பாக்கம் திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் 4,5,6,7 1.140 பிரகாசம் சாலை, சென்னை.1 1973
11. மறைமலை அடிகள் மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, சென்னை .1
12. ராமநாதன் எஸ். கார்த்திகேயன், சிவபுராணம் வாசுபிரசுரம், 185, லாயிட்ஸ் ரோடு, சென்னை 14, 1970.

மணியும் மாணிக்கமும்

டாக்டர் ச. மெய்யப்பன்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திருவாசகத்திற்கு உரை எழுதிய பெரும் பேராசிரியர். நீத்தல் விண்ணப்பம், திருச்சதகம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்கும் இவர் எழுதிய பேருரை, கதிர்மணி விளக்கம் என வழங்கப்பெறுகிறது. திருவாசகத்தின் செழுமையை, சிறப்பை, ஆழத்தை உணர்த்தும் அரிய, பெரிய உரைகளாக அவை திகழ்கின்றன.

கணியன் பூங்குன்றன் பிறந்த மகிபாலன்பட்டியில் பண்டிதமணி பிறந்தார். இவர் ஊரில் இவரது திருவுருவச் சிலையை நிறுவியுள்ளனர்.

வ.சுப.மாணிக்கனார் முயற்சியினால் பண்டிதமணி நூற்றாண்டு விழா நாடெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பண்டிதமணியின் அனைத்து நூல்களையும் செம்பதிப்புகளாக வ.சுப.மா.பதிப்பித்தார். சிறந்த திறனாய்வு நூல்கள் வெளிவர வழிவகுத்தார். பண்டிதமணி வாழ்க்கை வரலாற்றை சோம.லெ.மிக விரிவாக எழுதியுள்ளார். கவியரசு முடியரசன் பண்டிதமணி அவர்களுடைய வரலாற்றை **'ஊன்றுகோல்'** என்னும் தலைப்பில் காப்பியமாக வடித்துள்ளார். பண்டிதமணி மேலைச்சிவபுரி சன்மார்க்க சபைக்கு ஊற்றுக் கண்ணாக அமைந்தார். தானே தமிழ் பயின்ற பெருமகனார். கூர்த்த மதிநலமும், புலமை வளமும் வாய்க்கப் பெற்றவர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றை நயமுடன் யாத்தவர். இருமொழிப் புலமையால் ஏற்றமும் பெருமையும் பெற்றவர்.

மகாமகோபாத்தியாய எனவும் முதுபெரும் புலவர் எனவும் புலவர் குழாம் இவரைப் போற்றுகிறது. சொற்பொழிவுகளில் தலைமை ஏற்பதில் தனித்திறம் சான்றவர். இவருக்கு நிகர் இவரே. நகைக்சுவையோடு பேசவும் எழுதவும் வல்லவர். சிரிக்கவும் சிந்திக்கவும் செய்யும் தனிச்சுவை மிக்க நகைச்சுவை எண்ணி எண்ணி, நினைந்து நினைந்து இன்புறத்தக்க நல்ல நகைச்சுவை.

கவிமணி, ரசிகமணி, பண்டிதமணி எனத் தமிழ் அறிஞர்கள் மும்மணிகள் எனப் போற்றி மகிழ்வர். இவர் சிறந்த உரைநடை ஆசிரியர் என இலக்கிய வரலாற்று ஆசிரியர் அனைவரும் கொண்டாடுவர். உரைநடைக்கோவை எனும் இவர்களின் இரு நூல்கள் உரைநடை வரலாற்றின் திருப்புமுனைகள் மைல்கற்கள். உரைநடைக்கோவை உரைநடைவளர்ச்சியில் தனிச்சிறப்பிடம் பெறுவது. பண்டிதமணியால் மேலைச்சிவபுரி தமிழ்க் கல்லூரி வளர்ந்ததும், தமிழ்க்கல்லூரியால் பண்டிதமணி சிறப்புற்றதும் நம் நாட்டு இளைஞர்கள் அறிய வேண்டியவை.

பெரும்புலமை மிக்க இவரது தலைமை பெருமிதத் தலைமை. பேரறிவு படைத்த பெரும் பேச்சாளர். நயமாகப் பேசும் நல்லறிவாளர். சிந்தனைத் தெளிவோடு நுட்பமாக விளக்கும் திறன் இவர்கள் தனித்தலைமைக்குத் தனிச்சிறப்பு நல்கும். இவர் தலைமையில் பேசப் பெரும்புலவரும் அஞ்சுவர்.

பண்டிதமணி இல்லையென்றால் சபை இல்லை. பண்டிதமணியின் பணிகள்தாம் சபையை மிகச் சிறந்த சிறப்பு மிக்க நிலையாக உயர்த்தியது. செட்டிநாட்டில் ஆதியில் தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கம், புலவரைப் போற்றிய பொதுமன்றம், கவிஞர்களை உருவாக்கிய கவிதைச் சோலை, தமிழ் வீரவாள் உருவாக்கிய பட்டறை. தமிழ் காக்கும் புலவர் படையைத் தொடர்ந்து அளிக்கும் பாசறையாக சன்மார்க்க சபை திகழ்கிறது.

'விழாத் தலைமைப் பேருரை'என்னும் தலைப்புக்கு ஏற்ப பேருரையாகவே இவர்கள் உரை திகழும். இலக்கிய மன்றங்கள், அமைப்புகள், நிறுவனங்களில் வெள்ளி விழா, பொன் விழா, மணி விழாக்களில் இவர்கள் நிகழ்த்திய பேருரைகள் அறிஞர்களை ஆழ்ந்து சிந்திக்க வைப்பன. புலவர்களுக்கு உள்ளக் கிளர்ச்சி நல்குபவை. செஞ்சொற்கவி இன்பம் நல்கும்

இவர்கள் உரை இலக்கியப் பேருரை என்னும் வழக்கினைத் தமிழ் வழங்கும் நிலத்தில் வழக்கில் கொண்டு வந்தது.

இவர் தமிழ்ப்பாடல்களுக்குச் சொல்லிய, எழுதிய மிக நயமான பகுதிகளின் நயங்களை உணர்ந்த மாணிக்கனார் இவர்களை நயத்தந்தை எனப் போற்றி மகிழ்வார்கள். நயஉரை எழுதுவதில் நனிபுகழ் பெற்றவர்கள் நம் பண்டிதமணி. புலமை நலத்தால் நயவுரைகள் புதுமைப் போலிவோடு பூத்துக் குலுங்கும் நயம்பட உரைக்கும் நாவினர்.

'வடமொழி மிருச்ச கடிகம்' என்னும் நாடகத்தை 'மண்ணியல் சிறுதேர்' என்னும் அழகிய திருப்பெயரில் தமிழில் மொழி பெயர்த்து, நாடக ஆக்கத்திற்கு வழி வகுத்து, மொழி பெயர்ப்பு இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்துத் தமக்கும் புகழ் குவித்துக் கொண்டார். மிகச்சிறந்த மொழிபெயர்ப்பு, இலக்கிய வளங்கள் மலிந்த மொழிபெயர்ப்பு எனத் திறனாய்வாளர் போற்றுவர்.

19ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் உரைநடை எழுத வல்லவர். பதின்மர் பெயரில் பண்டிதமணி திருப்பெயரும் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்று விட்டது. தனித்தன்மை சான்ற உரைநடை கொடுத்து தமிழ் உரைநடைக்கு வலிமை சேர்த்தவர். தொடர் அமைப்பால் புகழ் சேர்த்தவர். புதிய நயங்களால் வளம் சேர்த்தவர். புலமைத்திறத்தால் புத்தாக்கம் செய்தவர் என அறிஞர் உலகம் ஏற்றிப் போற்றுகிறது.

புதுக்கோட்டைத் தமிழ் நிலையம் வெளியிட்ட பண்டிதமணியின் மணிவிழா மலரும், வ.சுப.மாணிக்கனார் சிறப்பாக எடுத்த நூற்றாண்டு விழாவும் வெளியிட்ட அரிய பெரிய நூல்கள். பண்டிதமணி அவர்கள் மொழி பெயர்த்த கௌடில்ய நூலும், வகுத்த திருவாசக உரைகளும், அவர்கள் ஆய்வுத்திறன் பற்றி எழுந்த திறனாய்வு நூல்களும், சன்மார்க்க சபையும், மதுரைப் பல்கலைக் கழகப் பண்டிதமணி அரங்கமும், முதுபெரும் புலவர்க்கு என்றும் புகழ்பாடும் நினைவுச் சின்னங்கள். காலவெள்ளம் கரைக்க முடியாத நினைவகங்கள், நிலைத்த கல்வெட்டுகள், உ.வே.சா., ராகவையங்கார், கா.சுப்பிரமணியப் பிள்ளை, நாவலர் பாரதியார், வையாபுரிப்பிள்ளை, திரு.வி.க.முதலிய அறிஞர் பெருமக்கள் உவந்து போற்றிய உத்தமப் பேராசிரியர் பெரும்புலவர் பண்டிதமணி.

நான்காவது தமிழ்ச்சங்கமாகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணாமலை அரசர் அழைத்து வந்து செய்த சிறப்புக்கள் பல. பெருமைமிகு தமிழ்த்துறைக்குப் பெருமை சேர்த்த பெரும் பேராசரியர். பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் புகழ் பரப்பிய தமிழ்ச் சுடர்மணி. தமிழால் பல்கலைக் கழகம் புகழ்பெற உழைத்த சொல்லேர் உழவர். பெரும்புலமையால் புகழ் சேர்த்த பேராசிரியர் பெருமக்கள் வரிசையில் முதல் வரிசையர். முதல் தமிழ்ப்பல்கலைக் கழகம் என ஊரும், நாடும், மக்களும், அறிஞர்களும் பல்கலைக் கழகத்தை அடிநாள் தொட்டுப் பாராட்டக் காரணமாக இருந்த முதல் அணியினர் நம் பண்டிதமணி.

இவர்கள் புகழ்பெற்று விளங்கத் தொடங்கும்போது இவர்கள் வரலாற்றை முதன் முதலில் மிகச் சுவையாக, உயிரோவியமாக இவர்கள் நன்மாணாக்கர் புலவர் விசு.திருநாவுக்கரசு எழுதி இவர் புலமை நலம் தமிழ் கூறும் நல் உலகு எங்கும் பரவும் வகை செய்தார்கள்.

சிறந்த உரைநடை ஆசிரியராய், மிகச் சிறந்த உரையாசிரியராய், ஆற்றல் மிக்க மொழி பெயர்ப்பாளராக, சிறந்த நாவலராக, புகழ் பெற்ற பேராசிரியராக விளங்கியவர், முதுபெரும் புலவர் பண்டிதமணி அவர்கள். அண்ணாமலை அரசர், கருமுத்து தியாகராசர் கருதிப் போற்றிய புலமை வாழ்வினர். மாணிக்கனார் போன்ற மாமணிகளை தமிழுலகுக்கு அளித்த பண்டிதமணி.

வ.சுப. மாணிக்கம்

புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் 1917இல் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர், எம்.ஓ.எல் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராய், முதல்வராய் இருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழிப்புல முதல்வராய் விளங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் புகழ்மிக்க துணைவேந்தராய் ஒளி வீசினார். டாக்டர் மு.வ.வைப் போல தமிழாசிரியராய் வாழ்வைத் தொடங்கி துணைவேந்தராய் உயர்ந்தவர்.

மதிநுட்பம், நூலோடுடையவர். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் முதலியவற்றில் தேர்ச்சி மிக்கவர். உள்ளார்ந்த தமிழ் மரபினை உணர்ந்து போற்றிக் காத்தவர்.

வள்ளுவம், தமிழ்க்காதல், கம்பர் என்னும் முப்பெரும் நூல்கள் இவர்தம் புலமை நலத்தை, அறிவாற்றலை விளக்குவன. திரு.வி.க.வின் எளியநடையும், மறைமலை அடிகளின் ஆராய்ச்சி வன்மையும் ஒருங்கே அமையப்பெற்றவர். நல்ல தமிழ்நடையில் எழுதுவதில் வல்லவர். இவரது உரைநடை தனித்தன்மை சார்ந்தது. மூன்று வரிகளைப் படித்த அளவிலேயே மாணிக்கனார் நடையின் தனி நடையை எளிதில் உணரலாம். தமிழ் அறிஞர்களில் இவரைப்போல புதிய சொற்களை (சொல்லாக்கங்களை) உருவாக்கியவர் இலர். இவர து சொல்லாக்கத்தைப் பற்றி த் தனி ஆய்வு நூலே வந்துள்ளது. இவர் படைத்த பல சொற்கள் இன்று பெருவழக்கில் வந்துள்ளன.

கோடி கொடுத்த கொடைஞர் வள்ளல் அழகப்பரைப் பற்றி மிகச்சிறந்த புகழ் மாலையை, நளவெண்பாவைப் போல வெண்பாயாப்பில் இயற்றியுள்ளார். வள்ளல் அழகப்பரின் வளர் கொடையை வளமான தமிழில் காப்பியம் போல் செய்துள்ளார்.

ஆராய்ச்சித்திறன் சார்ந்த இவரது கட்டுரை ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு புதுச் செய்தியை உலகுக்கு அறிவிக்கும். இவர் கண்ட ஆராய்ச்சிக்களங்கள் பல. புதிய ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார், சிறந்த தீர்வுகளை வழங்கியுள்ளார். எழுத்தும் பேச்சும் ஆராய்ச்சி இயல்பின. இலக்கிய நுண்கூறுகளை, இலக்கண நுட்பங்களைக் கண்டு தெளிவாக விளக்குவது இவர் இயல்பு.

தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்கத்தின் கொடுமையில் இருந்து தமிழை மீட்பதற்காகவும் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டும் என்பதற்காகத் 'தமிழ்வழிக்கல்வி ' என்னும் இயக்கம் கண்டார். மிகச்சிறந்த கொள்கைகளை உருவாக்கி அவ்வியக்கத்திற்கு வலிவூட்டினார். எழுத்து, பேச்சு மூலம் கொள்கையைப் பரப்பினார். பல மாநாடுகளைக் கூட்டி மக்களுக்கு கொள்கைகளை விளக்கினார். தம்மைப் பின்பற்றி செயல்பட வலிமை மிக்க அறிஞர்களை உருவாக்கினார். தமிழ்வழிக்கல்வித்தந்தை எனத் தமிழுலகம் இவரைப் போற்றுகிறது. தமிழ் நலமும், தமிழர் நலமும் காப்பதற்கு இயக்கம் தவிர வழியில்லை என்பது மூதறிஞரின் உறுதியான கொள்கை.

தில்லையம்பலத்தில் திருமுறை அம்பலம் ஏறுவதற்கு ஓர் இயக்கம் கண்டார். அம்பலத்தில் நாளும் திருமுறை ஓதப்படுவதற்கு வழிவகுத்தார். எண்ணம், சொல், செயல், யாவற்றிலும் தூய்மை காத்தார். வாய்மையை தலையாய அறமாக மேற்கொண்டு ஒழுகினார். பொய் சொல்லா மாணிக்கம் எனப் பொதுமக்கள் கொண்டாடுவர், புலவர் உலகம் இவரைப் போற்றும்.

புலவர் குழுவின் தலைவராக அமைந்து குழுவின் செயல்பாட்டிற்கு கொள்கைகளை வகுத்தவர். புலமையால் தலைமையில் சிறந்த இவர் புலவர் குழுவிற்குப் பெருமை சேர்த்தார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக வீற்றிருந்து இவர் ஆற்றிய பணிகள் மிகப்பல, செய்த சீர்திருத்தங்கள் பல. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்தார். நேர்மைப் பண்பால் சீரிய செயல்திறத்தால், பல்கலைக்கழகம் பல நிலைகளில் பெருமைபெறச் செய்தார். காட்சிக்கு எளியவர், ஆட்சித்திறம் வல்லவர்.குறைந்த பேச்சும் நிறைந்த செயலையும் உடைய துணைவேந்தராகத் திகழ்ந்தார். தமிழ்ப் பேரவைச் செம்மல் என்னும் சிறப்பினை தமிழ் அறிஞர்களுக்கு வழங்கினார். தமிழுக்கு உழைத்த தமிழ்ப் பெருமக்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கினார். நிதி ஆதாரத்தைப் பெருக்கினார், செலவினங்களைச் சுருக்கினார். பதிப்புத்துறையை உருவாக்கி பல நூறு நூல்கள் வெளிவர வழி வகுத்தார். தொலைநோக்குத் திட்டங்களை வகுத்தார். பல புதிய துறைகளைத் தோற்றுவித்தார். தமிழ் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் பல்கலைக்கழகத்தின் பல்துறை வளர்ச்சிகளுக்கும் வழிவகுத்து 'பல்கலைக் கழக நல்கைக்குழு'வின் பாராட்டையும் பலகோடித் தொகைகளையும் பெற்று பாரில் காமராசர் பல்கலைக்கழகத்தை முதன்மைபெறச் செய்தார்.

பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக இவர் திகழ்ந்த காலம் மன்றத்தின் பொற்காலமாகும். கொள்கைகளை வகுத்து செயற்பாட்டை ஒழுங்குபடுத்தி மதிப்புமிகு அமைப்பாக மாற்றிய பெருமை இவரையே சாரும். ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு அரங்குகளில் புத்தம் புதிய கருத்துக்களை அரங்கேற்றுவார். அமைப்புக்கு புதிய நோக்கும் போக்கும் அளித்தவர்.

தமிழ்ப்பல்கலைக் கழக உருவாக்க குழுவின் தலைவராகத் திகழ்ந்து 5 புலன்களாக அமைத்தவர். 1000 ஏக்கர் நிலம் பெற்றுத் தமிழர் கனவுகளுக்கு எல்லாம் நம்பிக்கை நல்கும் மாபெரும் தமிழ்க் கழகமாக நிறுவனமாக அமைத்த பெருமை இவரையே சாரும்.

வாழ்நாள் முழுதும் தமிழுக்காக வாழ்ந்தார். தமிழ் மரபு காத்தார். புலவர்களைப் போற்றினார். இறுதி மூச்சு வரை தமிழுக்காக உழைத்த வ.சுப.மாணிக்கனார் 1988 ஏப்பிரல் 24ஆம் நாள் புதுவையில் இயற்கை எய்தினார். யாரும் ஈட்டாத தமிழ்ப் புகழை ஈட்டிக் கொண்டார்.

தமிழ்ப் பேராசிரியர்
கல்லூரி முதல்வர்
தமிழ்ப்புல முதன்மையர்
தமிழ் வழிக்கல்வித் தந்தை
தமிழக புலவர் மன்றத் தலைவர்
தமிழாசிரியர் மன்றத் தலைவர்
தொல்காப்பியத் தகைஞர்
தொல்காப்பிய உரையாசிரியர்
தமிழ்ச் சொல்லாக்க வல்லுனர்

புகழ்மிக்க துணைவேந்தர் எனப்பத்துக்கு மேற்பட்ட உயர்நிலைகளில் பட்டொளி வீசிப் பல நிலைகளில் உயர்ந்து விளங்கினார்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

நேமங்கோவில்
செயங்கொண்ட சோழீசர் திருத்தசாங்கம்

டாக்டர் அர. சிங்காரவடிவேலன், எம்.ஏ. பி.டி., பி.எச்டி., சி.ஜி.டி.,

1. பெயர்

சீராரும் நேமத் திருநகரக் கோவிலிலே
ஏராரும் கண்ணி இடனுடையார் – பேரென்ன?
செப்பாய் கிளியே! சிரித்துச் செயங்கொண்டார்
ஒப்பிலாச் சோழீசர் ஓது.

2. நாடு

ஐயன் செயங்கொண்டார் அம்மை சவுந்தரியாள்
வையம் தழைக்க வளர்நாட்டை – ஐயமின்றிச்
சொல்லாய் இளங்கிளியே! தொன்மை நலம்சான்ற
நல்ல தமிழ்கூறு நாடு.

3. நகர்

வாய்பவழம் பல்முத்து வான்மதியில் மலர்விழிகள்
தாய்தவழும் பேரழகைத் தாம்பார்த்து – வாய்திறந்தே
சிற்பங்கள் பேசுநகர் செப்பாய் பசுங்கிளியே!
நற்பதியாம் நேம நகர்.

4. ஆறு

குலையோ இதுவென்று கூர்ந்துசிலை தோறும்
தலைசாய்த்து நிற்கும் தனிக்கிளியே! கூறிடுக
சான்றோர் புகழ்நேமம் சார்ந்தோடும் ஆறெதுவோ?
ஆன்றோர் நியமம்தான் ஆறு.

5. மலை

கந்தன் மலைமேலான் கற்பிளந்தான் மூத்தமகன்
தந்தையவர் சோழீசர் தங்குமலை சொல்கிளியே!
சேமம் தழைக்கத் திருப்பணிகள் செய்யுமந்த
நேமத்தார் கோவிலவர் நெஞ்சு.

6. ஊர்தி

காளைத் தவிசுடையார் கண்ணுதலார் செயங்கொண்டார்
வேளை தவறாமல் வீடுவர ஊர்திஎது!
சொல்லாய்நீ அஞ்சுகமே! சொர்ணத்தில் வெள்ளியிலே
பல்வேறு வாகனங்கள் பார்.

7. படை

கொள்ளை அழகுடைய கோயிற் சிலைகளினைக்
கொள்ளையிட்டார் மீண்டும் கொடுக்கவைத்த – வல்லபடை
பாய்வேலா? அம்பா? பகர்கிளியே! சவுந்தரமாம்
தாய்நம்மேல் வைத்த தயை.

8. முரசு

தேவாரம் ஓதத் திருவனந்தல் கொள்விழிகள்
பூபாளம் பாடப் புலர்வதனை –நாவார
கூறு முரசைக் குலவு பசுங்கிளியே!
மாறி முழங்கு மணி.

9. தார்

அன்றாடம் அன்பர் அளிக்கும் மலரோடு
மன்றாடி மார்பணியும் மாலையெது? – நன்றுரையாய்
செந்தார்ப் பசுங்கிளியே! செம்மேனி பூணும்தார்
கொந்தாரும் கொன்றையெனக் கூறு.

10. கொடி

கல்வியுடன் செல்வம் கலைகள் சிவஞானம்
எல்லார்க்கும் நல்கிவரும் எம்பெருமான் –எல்லைக்கண்
நாட்டுகொடி என்கிளியே நல்லார் நகரத்தார்
ஏட்டில் வளரும் இருப்பு.

நமசிவாய

பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
இராமசாமி தமிழ்க்கல்லூரி

நகரத்தார்கள் பூசும் வெண்ணீறு போல் உள்ளும் புனிதர்கள். அஞ்செழுத்தை நெஞ்செழுத்தாய்க் கொண்டவர்கள். பண்டிதமணி கதிரேசன் செட்டியாரைப் பாராட்டும் கவிமணி 'நெற்றி நிறைந்த நீறுடையான் நெஞ்சில் பஞ்சாக்கரமுடையான்' என்று கூறுவது நகரத்தார் அனைவருக்கும் பொருந்துவதே. நகரத்தார் வாயிதழ்கள் சிவந்திருக்கின்ற காரணத்தைக் கண்ணதாசன் "நமசிவாயம் என்று நாள்தோறும் சொல்லுமவர் நயமான சிவந்த இதழே", என்று பாடுவார்.

இளமை முதலே இறைப்பணியில் ஈடுபடும் இயல்புடைய நகரத்தார் சிவபூசனை செய்யும் சிந்தையாளர். சிவபூசனை செய்ய ஓராண்டளவு ஐந்தெழுத்தைப் பயில வேண்டும். திருநீறிடுதல், கண்மணியணிதல், அருட்பா ஓதல், திருக்கோயில் வழிபாடு, சிவனருளமுது கோடல் என்னும் ஐந்தறமுங் கடைப்பிடித்தல் வேண்டும்.

> வாலறிவன் நற்றாள் தொழுதலே கற்றதனால் ஆய
> பயன். ஐந்தெழுத்தின் பொருளே எல்லா நூற் பொருளும்.
>
> அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
> பொருள் நூல் தெரியப் புகின்
>
> (திருவருட் பயன் 81)

என்பது அருட் பயன் வாக்காம்.

> நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
> நமச்சிவாயவே நானறி விச்சையும்
> நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
> நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

என்பது அப்பர் பெருமான் பாடல்.

சைவ நெறியிலே திருவைந்தெழுத்து வீடுபேறடைவதற்கு மேலான உபாயமாகும்.

> சாத்திரங்கள் ஓதிச் சகலகலை உணர்ந்தும்
> நேத்திரம் போற்சிவனை நேர்காணார்–பாத்திரத்த
> பஞ்சாக் கரசித்தி பாலிக்கும் பாலிக்கும்
> துஞ்சாக் கரநிலையைத் தூய்து

என்பது தருமைச் சிவாநந்த முனிவர் சம்பிரதாயதீபத் திருவெண்பா.

ஐந்தெழுத்து மறைகூறலே முதல் பயிற்சி. சிவபூசனை செய்ய விரும்பிய பட்டினத்தார்க்கு, அவர்தம் தாயார் ஞான கலையம்மை ஐந்தெழுத்தைக் கூறிப் பயிலவே முதலில் உபதேசித்தனர் என்பது பட்டினத்தார் வரலாறு. ஐந்தெழுத்தை நாள்தோறும் பன்முறை கூற வேண்டும். ஒருநாளில் 12,000 முறை நமசிவாய என்று கூற வேண்டும் என்பது நெறி.

"நமசிவாய என்னும் பஞ்சாட்சரத்தின் ஐந்து எழுத்துக்களும் சிவனே. அச்சிவனை நான் வணங்குகிறேன். அவன் நாகேந்திரனை மாலையாகக் கொண்டவன், முக்கண்ணன், வெண்ணீறு பூசுபவன், மகேசுவரன், நித்தியன், திசைகளை ஆடையாக உடையவன், மந்தாகினி நதியின் நீரும் சந்தனமும்

அவனைப் பரிசுத்தமாக்குகின்றன. நந்தியின் நாதன் அவன். பூதேசுவரன் அவன். மந்தாரை மலரும், இதர மலர்களும் அவனை அணி செய்கின்றன", என்பர் ஆதி சங்கரர்.

நமசிவாயத் திருப்பதிகம் பாடியருளிய ஞானசம்பந்தர்,

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே

என்றும்,

திருநாவுக்கரசர்

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே

என்றும்,

சுந்தரர்

ஓவுநாள் உணர்வழியு நாள்உயிர்போகு நாள்உயர் பாடைமேல்
காவுநாள் இவையென் றலாற்கரு தேன்கி ளற்புனற் காவிரிப்
பாவுதண் புனல்வந் திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனைநான் மறக்கினும் சொல்லும் நாநமச் சிவாயவே.

என்றும் ஐந்தெழுத்தின் உயர்வைக் கூறுவர்.

நாள்தோறும் இந் நமசிவாயத் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்வோர் ஞானசம்பந்தரின் 'துஞ்சலும்', 'காதலாகி' எனத் தொடங்கும் பதிகங்களைக் காலையிலும், திருநாவுக்கரசரின் 'சொற்றுணைவேதியன்' பதிகத்தை மதியத்திலும், சுந்தரரின் 'மற்றுப்பற்றெனக்கின்றி' பதிகத்தை மாலையிலும் ஓதி வழிபடல் முறை.

அதனால்தான்

பெற்றதாய் தனைமக மறந்தாலும் பிள்ளையைப் பெறும்தாய் மறந்தாலும்
உற்றதே கத்தைஉயிர் மறந்தாலும் உயிரைமே வியஉடல் மறந்தாலும்
கற்றநெஞ் சகம்கலை மறந்தாலும் கண்கள்நின் றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்த வர்உள் ளிருந்தோங்கும் நமச்சிவாயத்தை நான் மறவேனே

என்று வள்ளலார் ஐந்தெழுத்தை மறவாத நிலையைப் பாடினார்.

நமசிவாய	– ஸ்தூல பஞ்சாக்கரம்	–மூலமந்திரம்	–திருவடியுணர்வு
சிவாயநம	– சூக்கும பஞ்சாக்கரம்	–சிவவேதம்	–திருவடிப்பேறு
சிவாயசிவ	– காரண பஞ்சாக்கரம்		
சிவ	– மகாகாரண பஞ்சாக்கரம்		
சி	– மகாமனு		

சிவபிரான் பேரின்ப நிலையும் பேருணர்வு நிலையும் அளிக்கும் நலத்தைச் 'சிவ' என்றதால் நினைவு கொள்ளல் வேண்டும்.

ஜீவ போதம் நீங்காத நிலையில் சிவத்யாநம் அறாத நலத்தைச் 'சிவய' என்றதால் நினைவு கொள்ளல் வேண்டும்.

பந்த நிவர்த்தியை வேண்டி வீடுபேற்றை நோக்கிய நலத்தைச் 'சிவாயநம' என்ற ஐந்தாலும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

பிரவிருத்தியில் ஆசை அறாதவராய், அந்நிலையில் வழிபட்டு வந்து, சிறிது சிறிதாகக் கட்டு நீங்கி வீடுபெறத் தக்க நலத்தை 'நமசிவாய' என்னும் ஐந்தாலும் நினைவிற் கொள்ளல் வேண்டும். தத்தம் நிலைக்குத் தக்கவாறு திருவைந்தெழுத்து வாயிலாகச் சிவநிலையை நினைவு கூர்தல் வேண்டும்.

'நமசிவாய வாழ்க' எனத் தூல பஞ்சாக்கரத்தில் தொடங்கி, 'நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நமவெனப் பெற்றேன்' என இடையில் சூக்கும பஞ்சாக்கரத்தைக் கொண்டிலகுவது திருவாசகம்.

'சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை'

என்பது ஔவை வாக்கு.

'சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்'

என்பர் திருமூலர்.

நமசிவாய என்ற ஐந்தெழுத்தும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றை முறையே உணர்த்துகின்றன. இறைவன் படைத்த உயிர்கள் இவ்வழியே அருள்பெற நிற்றலே முறை. பிறவிப் பெருங்கடல் நீந்த விரும்புவார்க்கு இறைவன் திருவடியே புணையெனத் தமிழ்மறை கூறும். திருவடிப் பேறடைய அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேன்' என்பது மணிவாசகர் வாக்கு.

அஞ்செழுத்தின் வெவ்வேறு நிலையும், பொருளும் உணர்ந்து ஓதுதல் எல்லோர்க்கும் எளிதன்று. சேரவாரும் செகத்திரே யென அனைவர்க்கும் ஓத எளிய நெறி நமசிவாய. நெஞ்சு நினைந்து தம் வாயாற் பிரானென்று, துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரணென்று அஞ்செழுத்தோத வேண்டும்.

அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்ஆம்
மோனந்த மாமுத்தியும்

(உண்மை விளக்கம் –45)

அஞ்செழுத்தென்றது தூல சூக்கும காரண பஞ்சாக்கரங்கள்.
ஆனந்த தாண்டவம் ஆன்மாவிற்காக நிகழ்வது மோனந்தமாமுத்தி
நிகழ்தற் பயன்.

ஜெயங்கொண்டார் சதக அரங்கேற்றத்தின்போது திருமகள் அருள் வேட்டலோடு, சதகத்தைப் பாடுவார் முத்தப்பர் அரங்கேற்றினர். "என்ன ஜெயங் கொண்டாரிவர்" என்ற ஊனையூர்ப் பாரதியாருக்கும் விடையிறுத்தனர். அவ்வமயம் வயது முதிர்ந்த தனவணிகர் ஒருவர், நமசிவாயத்தை மறவாத நன்னெஞ்சராய், நகரத்தார் நன்மை கருதி முத்தப்பையா பஞ்சவர்க்க பூஷணம் பாடவேண்டுமென வேண்டினர். முத்தப்பர் அவ்வாறே பாடல்களின் முதலெழுத்துக்களைக் கூட்ட நமசிவய என்னும் ஐந்தெழுத்து மூல மந்திரமாய் அமையப் பின்வரும் பாடல்களைப் பாடியருளினர்.

1. "நன்றே பெருக! நவிலும் குபேர நகர் வணிகர்
என்றே உலகம் புகழ ! அவர்க்(கு) ஈண்(டு)

இருநிதியம்
நின்றே நிலவ! அறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றே சோழீசர் செயங்கொண்டார் பாதம்
துதிக்குதுமே!"

2. "மன்னும் பெருமை பெருகிக் குபேர நகர் வணிகர்
என்னும் மகிமை உறவும் வறியவர்க்(கு) ஈந்திடவும்
பொன்னும் பொருளும் புவியும் முப்போகமும்
பொருந்திடவும்
துன்னும் சோழீசர் செயங்கொண்டார் பாதம்
துதிக்குதுமே!"

3. "சிவன் ஆலயமும் திருமால் பணியும்
சிறப்புறத்தான்
நவ(ம்)ஆய்ப்புதுக்கியும் ஆக்கியும் மேலோர்
நவிலு(ம்) நல்ல
தவம் ஆம் இ(து) எனத்தரணியில் ஓங்கவும்
தாங்கு மகத்
துவமா(ர்) சோழிசர் செயங்கொண்டார் பாதம்
துதிக்குதுமே!"

4. "வந்தார்க்(கு) உதவும் வணிகர் குபேரனாம் வளமையற்கும்
பிந்தார் தனத்தில் இவரே உலகில் பெரியர் எனச்
சிந்தார் புர(ம்) இளையாயற்றங்குடியார் சிறப்புறவும்
சொந்தார் சோழீசர் செயங்கொண்டார் பாதம்
துதிக்குதுமே!"

5. "யவனம் கலிங்கம் தமிழ் சிங்களம் யாண்டும்
உள்ள
புவனம் எலாம் இவர் வர்த்தகம் ஓங்கவும்
புண்ணியம் சேர்
தவமும் திருவும் தங்க வணிகர் தரம் பெறவும்
துவச(ர்) சோழீசர் செயங்கொண்டார் பாதம்
துதிக்குதுமே!"

நகரத்தார்க்கு நன்மை பெருக, இருநிதியம் நின்று நிலவ, அறம் நெடிது பெற, பொன், பொருள், புவி முப்போகம் பொருந்திட, ஆலயப்பணி சிறப்புற, குடி சிறப்புற, தவமும், தருமமும் தங்க, வணிகர் தரம் பெற வாழ்த்தாய் அமைந்தது. சொல்லும் பொருளும் எளிதாய் நயம் அமைந்த இனிய பாடல்கள் இறைவன் திருவடியுணர்வு மறவாது போக போக்கிமயமைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் நகரத்தார் நெறிகாட்டும் பாடல்கள்.

மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழும் அடியவர் நகரத்தார். ஆலயப் பணியை நல்ல தவமெனக் கொண்டவர்கள். நகரத்தார் வாழும் ஊர்தோறும் சிவன் கோயில் நகரச் சிவன் கோவிலாகவே அமைந்திருக்கும். பெருமாள் கோயில்கள் பெரும்பாலும் தனியார் திருப்பணியாகவே அமைந்திருக்கும். சிவன்கோயிற் பணி, திருமால் பணி இரண்டையும் ஒன்று போலவே செய்தல் நகரத்தார் இயல்பு. முத்தப்பர் இவ்வியல்பை

அஞ்செழுத்தை உட்செபிப்போர் அல்லும் பகலுமெனை
நெஞ்சில்விட்டு நீங்காத நின்னயத்தார் ரஞ்சிதமாய்த்

திருமாற் கடிமை செய்வோர் தெய்வமெல்லாம் ஒன்றென்று
ஒருமையுடன் போற்றிவளர் வுற்றோர்

எனத் தம் திருமுக விலாசத்தில் பாடுவார்.

வரகவி முத்தப்பரின் பாடலில் வாக்குப் பலிதமே சிறப்பு. திருமகள் அருள்வேட்டலில் திருமகளை என்றைக்கும் நீங்காதிரு என்று முத்தப்பர் பாடியதே நகரத்தார் செல்வ நிலைக்குக் காரணம் என்பது நம் நம்பிக்கை. நமசிவய பாடலிலும் அஃதமைந்திருத்தலை நாம் இன்றைக்குக் காணுகின்றோம்.

சிவனாலயப் பணியில் உள்ள கோயில்களைப் புதுப்பித்தலை, "நவமாப்புதுக்கியும்" என்று பாடும் முத்தப்பர் இன்று புதிதாகப் படைப்பதனை, "ஆக்கியும்" என்று பாடுகின்றார். நேமம் ஜெயங்கொண்ட சோழீசருக்கு ஆலயம் முன்பிருந்தது. அதனைப் புதுப்பித்திருக்கின்றோம். இராச கோபுரம் இதுவரை இல்லாதிருந்த குறை நீங்கப் புதிதாக ஐந்து நிலைகளோடு சுதைச் சிற்ப வேலைப்பாட்டு வனப்பமைந்த இராசகோபுரத்தைப் புதிதாக உருவாக்கி இருக்கின்றோம். ஜெயங்கொண்டார் சதகத்தோடு, பாடுவார் முத்தப்பர் பாடியருளிய பஞ்சவர்கக பூஷணம் ஜெயங்கொண்டாருக்கே பலிதமாகியிருப்பதனையும், பாடுவார் முத்தப்பர் வாக்கு என்றைக்கும் பலிதமுள்ள வாக்கு என்பதனையும் நினைந்து மகிழ்கின்றோம்.

நமசிவாய வாழ்க.

ஒன்று கண் டேனிவ் வுலகுக் கொருகனி
நன்று கண் டாயது நமச்சிவா யக்கனி
மென்று கண் டாலது மெத்தென் றிருக்குந்
தின்று கண் டாலது தித்திக்குந் தானன்றே.

(திருமந்திரம் 2649)

போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

உ
சிவமயம்

என்ன ஜெயங்கொண்டார்?

அழகாபுரி இளங்கோவன் B.Lit., B.Ed., Dip-in-teach.,
கோகுலம் 24. தெற்குச் சந்து No.2, செக்காலை காரைக்குடி.

தமிழ்

**அண்ணா மலையின் சின்னக் குயில் நான்
அன்னைத் தமிழை அடிபணிகின்றேன்!**

அறிமுகம்

பாடுவார் பாட்டையா உள்ளத்துள்ளார்
பாடுகவி **கு.செ.ரா.** உச்சிமேலார்
ஒடுகிறார் குருதியெனக் **கண்ணதாசன்**
உருக்காட்டும் விழிமலரோ இரண்டு பேர்கள்
நாடுபுகழ் நல்லகவி **அரசியோடு**
நான் விரும்பும் **சொ.சொ.மீ.** எனது கண்கள்
பாடுகிறேன் சிறுவன் நான் என்று சொன்னால்
பாட்டேஎன் மூச்சுத்தான் வேறொன்றில்லை!

பாடுவார் போலே பாவலர் பலரைப்
படைத்த ஜெயங்கொண்டார்!
கூடுவார்க் கின்பம் குறைவிலாதென்றும்
கொடுத்தருள் ஜெயங்கொண்டார்!
தேடுவார் கூட அடிமுடி காணாச்
செல்வர் ஜெயங்கொண்டார்!
நாடுவார்க் கருளை நன்னயமாக
நல்குஞ் ஜெயங்கொண்டார்!

உற்சவ மூர்த்திகள் ஒருசிலவற்றை
உலுத்தர் கவர்ந்திடினும்
கற்றவர் போற்றநம் கைவசமாகக்
களிக்க அளித்தவர்யார்?
அற்புத மாக அற்றையநாளில்
சிரித்து எரித்தவராம்
பொற்பத முடையார் நற்றவமணியாய்ப்
பொலியுஞ் ஜெயங்கொண்டார்!

வெற்றிகள் நாளும் வந்துகுவிந்திட
வீடு விளங்கிடவே
கற்றிடு கல்வியும் கலைபலநாளும்
களிப்பினை நல்கிடவே
பற்றினை வைத்துப் பாதமலர்களைப்
பணிந்து வணங்கிவிடில்
சுற்றிவ ரப்பதி னாறுநலங்களும்
சொல்லுஞ் ஜெயங்கொண்டார்!

திருப்பணியாளர்களுக்கு சிவத்திரு சொக்கலிங்க ஐயா அவர்களின் வாழ்த்து

கட்டுரையாளர்:– **நா.வெ. நாராயணன், எம்.ஏ., பி.டி.,**
சிதம்பரம், இராமசாமி செட்டியார் மேல்நிலைப் பள்ளி
முன்னாள் தலைமை ஆசிரியர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவமும், தமிழும் தழைத்தினிதோங்கத் தனவணிகர் குலவிளக்காய் காரைக்குடி நகரில் அருளாளர் சொக்கலிங்க ஐயா அவர்கள் அவதரித்தார்கள். அவர் தமது பதினேழாவது வயதில் தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களிடமும், பின்னர் தேவகோட்டை அருள்திரு வன்றொண்டச் செட்டியார் அவர்களிடமும், காரைக்குடி தவத்திரு மெய்யப்ப சுவாமிகளிடமும் கற்றார்கள். ஐயா அவர்கள் தில்லையம்பதியில் மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை நிறுவி, அதன்வழி மாணவர்களுக்கு நல்லறிவு புகட்டினார்கள். எம்பெருமான் நடராஜரிடத்து இடையறா அன்பு கொண்டிருந்தார்கள். சீரிய ஒழுங்குடனும், சிவவேடப் பொலிவுடன் சிவபூசை செய்தும், சிவனடியார் உறவு பூண்டும், சைவ உலகில் நடுநாயகமாய் விளங்கி சைவசித்தாந்த விரிவுரைகள் ஆற்றி, சிவமே பரம்பொருள் என்ற கருத்தைப் பரப்பினார்கள்.

ஐயா அவர்களின் தூண்டுதலினால் நகரத்தார் பெருமக்கள் பல இடங்களில் சிறப்பாகத் திருப்பணிகள் பல செய்துள்ளார்கள். ஐயா அவர்கள் காரைக்குடி அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் இருந்து பலருக்கு மிகச் சிறந்த முறையில் தமிழ் துவக்கக் கல்வி முதல் இலக்கணம், இலக்கியம், புராணம், சைவ சித்தாந்தம் முதலியவற்றை விரிவாகப் பாடம் சொல்லியிருக்கிறார்கள். சிவநெறி பரப்புவதற்காக ஐயா அவர்கள் 108 நூல்கள் இயற்றியுள்ளார்கள்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் எனது பாட்டனார் தர்மநாராயணன் செட்டியார் அவர்கள் திருக்கழுக்குன்றத் திருப்பணி செய்த காலத்தில் ஐயா அவர்கள் 'திருக்கழுக்குன்ற மகிமாசங்குரகஸ்தவம்' என்ற நூலை இயற்றினார்கள். அந் நூல் 1906–ல் எனது பாட்டனரால் வெளியிடப்பட்டது. அந் நூலில் திருப்பணி செய்கின்றவர்கள் அடையக்கூடிய நன்மைகளைக் கீழ்க் கண்டவாறு சொக்கலிங்க ஐயா அவர்கள் கூறுகிறார்கள்.

"தலப்பெருஞ் சிறப்புணர்ந் துனக்காந்
தகுதிருப் பணிசெய் தட்டபந் தனமா
சாந்தியா தியபுரி பெரியோர்க்
கிருநிதி மகப்பே றட்டபோ காதி
யிட்டகா மியமெலா மளித்தே
யின்பவீ டதுவும் பின்புறத் தருவா
யென்பது மியம்பவேண் டுவதோ.

பொருள்:– இறைவனே! நினது தலத்தின் பெருஞ்சிறப்பை அறிந்து, உனக்கேற்ற தக்க திருப்பணிகளைச் செய்து, கருங்குங்கிலியம், வெண் குங்குலியம், சுக்கான், தேன்மெழுகு, செம்பஞ்சு, உலந்தாலிங்கம், கொம்பரக்கு, காவிக்

கல் முதலியவற்றுடன் வெண்ணெய் கூட்டி இடித்துப் பந்தனம் செய்யும் பெருஞ்சாந்தி முதலியவற்றை செய்யும் பெரியவர்களுக்கு மிகுதியான செல்வம், நன்மக்கட்பேறு, செல்வம், கல்வி, தானியம், அஞ்சாமை, வெற்றி, வீரம், சந்தானம், இன்ப நுகர்ச்சி என விரும்பி வேண்டிய அனைத்தையும் வழங்கிப் பின்பு பேரின்ப முத்தியும் அருளுவாய் என்பதும் சொல்ல வேண்டுமா!

இப்பொழுது நகரத்தார்களின் சிறப்புக் கோயில்களில் ஒன்றான நேமங் கோவிலில், நகரத்தார் பெருமக்கள் சிறப்பாகத் திருப்பணி பாரோர் வியக்கும் வண்ணம் நிறைவேற்றியுள்ளனர். இப் பெருமக்கள் அனைவரும், சைவ சித்தாந்தச் செல்வர் சொக்கலிங்க ஐயா அவர்கள் கூறியவாறு அனைத்து நன்மைகளையும் பெறுவார்கள் என்பது உறுதி.

தொண்டு செய்வதே குலதர்மமாகக் கொண்ட நகரத்தார் சமூகத்தினர் என்றும் இன்பம் தழைக்க இருக்கவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் அம்பலத்தாடும் நடராஜப் பெருமானின் திருவருளைப் பணிவுடன் வேண்டு கிறேன்.

❀ ❀ ❀

"நான்மறையும் ஒரு மதிலாம் நாட்டுக் கோட்டை மதில்
நா மணக்கும் திருமுறைகள் ஆகமங்கள் ரெண்டு
நாதசுரம் வீணைகுழல் நாட்டியமும் மூன்று
நாணயமும் பா நயமும் நாவடக்கம் நான்கு
வெள்ளைக்கார நாகரீகம் விஷத்தைப் போலப்பரவி
உள்ளகலைகள் சொல்லிக்காமல் ஓடிப்போன நாளில்
பிள்ளைதாயைக் காப்பதுபோல் பேணிக்கலையைக் காத்த
வள்ளல்களைக் கோடித்தரம் வணங்கிவாழ்த்து கின்றேன்"

– கொத்தமங்கலம் சுப்பு –

"குலம் வாழ ஆடீர் ஊஞ்சல்"

காப்பியக் கவிஞர், கவிஞர் கோ.நா.மீனவன், எம்.ஏ.பி.எட்., எம்.பில்.,

திருவளர்க்கும் பாண்டியனார் கண்ட கோயில்
திகழ்கின்ற பெருமானே! தெய்வக் கோவே!
உருவளரும் பேரொளியே! உயிரே! என்றும்
உன்னிருதாள் மனம்வைத்தே உவந்து வாழும்
பெருவணிகர் குலமுதலே! நிதியே! செல்வப்
பெட்டகமே! தமிழ்வடிவே! ஆடாய் ஊஞ்சல்!
மருவளரும் குழல்வள்ளி சௌந்த ரத்தாய்
மருங்கிலுறை பங்காளா! ஆடாய் ஊஞ்சல்!

ஆடுவாய் தில்லையிலே, கொன்றை மாலை
அணிவாயுன் சென்னியிலே, உனது பாதம்
தேடுவார் திருநெடுமால், தெரிய மாட்டாய்
திகழ்சைவச் செழும்பொருளே! திசைகள் எட்டும்
கூடுவார் வானவர்கள், கோடி சூழ்ந்து
கும்பிடுவார், பண்ணிசைப்பார், அகலா தென்றும்
நாடுவார், மனம்மகிழ ஆடாய் ஊஞ்சல்!
நல்நேமச் சோழீசா! ஆடாய் ஊஞ்சல்!

பூவாடும் சோலைபல சூழ்ந்த தெய்வப்
பூம்பதிகள் சிறப்புறவே நால்வர் பாட்டுத்
தேவாரம் உண்டென்பர், புனல்கொ ழிக்கும்
தேனாற்றுப் பெருமானே! உனக்கும் பாட்டுப்
பூவாரம் சூட்டினான் எங்கள் செல்வப்
புலவனாம் பாடுவார் முத்தப் பன்தான்
நாவாரத் துதித்தவனே! ஆடாய் ஊஞ்சல்!
நகர்வாழக் குலம்வாழ ஆடாய் ஊஞ்சல்!

பொன்மாலை தோளசைய, முத்து மாலை
புரண்டசையக் காதணிகள் குலுங்கி யாட,
மின்னலிடை ஒசிந்தசைய, மேக வண்ண
மென்கூந்தற் பூவிருந்த வண்டு பாட,
கன்னலெனும் மொழியரசி எங்கள் அன்னை
கருணைவிழிக் கமலங்கள் கண்டு கண்டு
புன்னகைக்கும் சோழீசா! ஆடாய் ஊஞ்சல்!
பொன்மலையை வளைத்தவனே ஆடாய் ஊஞ்சல்!

கங்கைநதிப் புனல்வழிய நிலவு கொன்றைக்
கவின்மாலை தலையசையப் படம்வி ரித்த
பொங்கரவம் கருஞ்சடைமேல் பொலிந்து நிற்கப்
பொன்மேனி இடங்கொண்டு பொலியு மங்கை
மங்கலையாள் திரிசூலி மணிபோல் நீல
மலர்விழியால் பார்த்துமனம் மகிழ்ந் திருக்கத்
திங்களணி சோழீசா! ஆடாய் ஊஞ்சல்!
திகழ்நேமப் பெருவாழ்வே! ஆடாய் ஊஞ்சல்!

மென்மதுரச் சொல்லழகி, மதுரை யாண்ட
மீனாட்சி மகிழ்சொக்க லிங்க மாகித்
தென்மதுரை யாண்டவனே! தேவ தேவே!
திகழ்நேம நகரத்தார் நாளும் கூடி
நல்மதுர வாழ்த்துக்கள் நாவாற் பாடி
நயந்துபணி நிலைகண்டு நாளும் காக்கும்
பொன்மதுர சௌந்தரத்தாய் போற்று செல்வப்
புகழ்கொண்ட சோமீசா! ஆடாய் ஊஞ்சல்!

தனவணிகர் குலமுதலே! அறங்கள் செய்து
தழைத்தகுலம் எங்கள்குலம், வாயில் தோறும்
கனவயிரம் இழைத்தபல தூண்கள் நாட்டிக்
கலிங்கமுதல் பலதேசங் கண்டு வந்தோர்
இனம்வளரக் குடிவளரச் சமைத்த கோயில்
எழில்சார்ந்த நேமத்தில் இருக்கும் ஈசா!
கனகமணிச் சௌந்தரியாள் கலந்த பொன்னே!
கவின்நேமச் சோமீசா! ஆடாய் ஊஞ்சல்!

மன்மதனை எரித்துலகில் வெற்றி கண்டாய்,
மலைநிகர்த்த திரிபுரங்கள் அழித்து வென்றாய்,
பொன்மயிலை இடங்கொண்டாய், கங்கை என்னும்
புகழ்மயிலைத் தலையேற்றாய், புலவர்க் காகத்
தென்மதுரைச் சங்கத்தில் தலைமை கொண்டாய்,
திகழ்நேமச் சோமீசா! மகிழ்ந்து பாடும்
என்மதுரச் சொல்மாலை இசைந்து கேட்க
இருசெவியும் நீதருவாய் ஆடீர் ஊஞ்சல்!

ஏருலவு வயிரக்கால் இரண்டு நாட்டி,
எழிற்பவழ விட்டமதில் இசைத்துச் சேர்த்திச்
சீருலவும் இரத்தினப்பொற் பலகை யார்த்துச்
செய்யமணிச் சங்கிலிகள் சேர்த்துப் பூட்டிக்
காருலவு குழல்மாதர் களிப்புற் றாட்டக்
கண்ணுதலே! அன்னையுடன் ஆடாய் ஊஞ்சல்!
தாருலவு நேமநகர் நகரத் தார்கள்
நலம்பாடக் கண்காட்டி ஆடாய் ஊஞ்சல்!

வந்தவர்க்கு விருந்திட்டு முகமன் கூறி
வரவேற்கும் குலம்வாழ ஆடாய் ஊஞ்சல்!
கந்தனது தாள்மறவாச் செட்டி மக்கள்
கருணையுடன் வாழ்கவென ஆடாய் ஊஞ்சல்!
சந்தனப்பொன் திருமேனி ஐயா! எங்கள்
சத்தியமே! சோமீசா! ஆடாய் ஊஞ்சல்!
செந்தமிழும் சைவமுமே தழைக்க வாழும்
செட்டிமக்கள் குலம்வாழ ஆடாய் ஊஞ்சல்!

❀ ❀ ❀ ❀ ❀ ❀ ❀

செயங்கொண்டார் பதிகம்

சொ. தேவராஜன்.
5. ரதவீதி. காரைக்குடி.

காப்பு

காமக் கனலும் நீறுபடக் காணும் ஞானக் கண்திறக்கும்
நேமப் பதியான் செயங்கொண்ட நிமலன் மீதோர் தமிழ்ப்பதிகத்
தாமம் புனைய இனிதருளும் தறுகட் சிறுகட் புகர்முகத்துச்
சேமக் கரிமா முகவனிரு செந்தா மரைச் சீறடிமலரே.

நூல்

1. அரியமா தவங்கள் செய்த அருச்சுனன் முன்னர் வேட
உருவிலே தோன்றிப் பன்றி உருவில்வந் தவனை வீழ்த்திப்
பெருவிவா தப்போர் செய்து பேரருள் விசயற் கீந்த
திருநகர் நேமம் மேவு செயங்கொண்ட சிவமே! போற்றி

2. பூமலர் வாளி தொட்டுப் பொன்னவிர் மேனி எய்த
காமனை நோக்கி நெற்றிக் கண்ணினால் காய்ந்த தேவே!
ஏமுறு இரதி வேண்ட இன்னருள் புரிந்த வள்ளால்!
தேமரு நேமம் மேவு செயங்கொண்ட சிவமே! போற்றி

3. இருபது தோள்க ளாலே இலங்கையர் கோனெ டுத்த
ஒருபெருங் கயிலை வெற்பில் உறையுமை அஞ்சக் கண்டே
ஒருவிரல் ஊன்றி யன்னான் செருக்கினை ஒடுக்கும் ஈசா!
திருவளர் நேமம் மேவு செயங்கொண்ட சிவமே! போற்றி

4. பாலன்மார்க் கண்ட னுக்கப் பாசமாம் கயிறு வீசு
காலனைக் கடிந்து காலால் உதைத்தருள் கனிந்த மூர்த்தி!
கோலமார் சவுந்த ரப்பேர்க் கோதையாள் குலவு பங்க !
சீலமார் நேமம் மேவு செயங்கொண்ட சிவமே! போற்றி

5. ஆணவம் கொண்ட தக்கன் அரற்கவி கொடாது வேள்வி
காணவும் கலந்து கொண்டோர் கலங்கியே ஓட வேள்வி
வீணுறச் சிதைக்கும் வண்ணம் வீரபத் திரரைத் தந்த
மாணுறு நேம வாழ்வே! செயங்கொண்ட மன்னே! போற்றி

6. வானவர்க் கிடுக்கண் செய்த வலிமிகும் அரக்கர் கோட்டை
யானமுப் புரமும் தீயால் அழிந்திடச் சிரிக்கும் தேவே!
தானதர் மங்கள் செய்யும் தனமிகு வணிகர் போற்றும்
தேனலர்ப் பொழில்சூழ் நேமச் செயங்கொண்ட சிவமே! போற்றி

7. ஆசைகள் குறைய வேண்டும் ஆணவம் அகல வேண்டும்
மாசிலா மனத்துக் கன்நின் மலரடி இருத்தி நாளும்
பூசனை புரிய வேண்டும் புனிதநின் கருணை வேண்டும்
நீசனேற் கருள்கி லாயோ நேமமார் சிவமே! போற்றி

8. நல்லறம் ஓங்க வேண்டும் நானிலம் செழிக்க வேண்டும்
புல்லன நீங்க. வேண்டும் புண்ணியா கண்ணி யாநீ
அல்லொடு பகலும் என்றன் அகத்தமர்ந் தருள வேண்டும்
எல்லொளி தருவாய் ஈசா இளநேமச் சிவமே! போற்றி

9. போட்டியில் வந்த வெண்பாப் புலிக்கவி ராயர் கொட்டம்
பாட்டுரைத் தடக்கி வென்ற பாடுவார் முத்தப் பய்யா
வேட்டுரை சதகம் கொண்ட விமலனே! செயங்கொண் டாரே!
கூட்டுசீர் நேமம் மேவும் குழகனே! போற்றி போற்றி

10. அத்தனே! போற்றி என்னை ஆளுடை ஐய! போற்றி
முத்தனே! போற்றி தில்லை மூதூரம் பலவ! போற்றி
பத்தியால் நின்னைப் பாடிப் பரவும்மிப் பாடல் பத்தும்
நத்தியேற் றருள்வாய் நேம நாதனே! போற்றி போற்றி.

(அமரர் சொ. தேவராஜன், பி. அளகாபுரி மெ.மு.கரு.மு. மறைமலை திருமணத்தின்போது 3-2-1984 ல் பாடியது.)

அச்சிட்டோர் : கிராபிக் சிஸ்டம்ஸ், 67, T.H. ரோடு, சென்னை–600 005. தொலைபேசி : 84 69 48